தமிழ்ச் சதக இலக்கியம்

ச. சிவகாமி

உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்
பதிவு அலுவலகம்
33, திருமலை நகர் இணைப்பு, பெருங்குடி, சென்னை-600096.
இருப்பிடம்
தமிழூர், அத்தியூற்று-627808.

திருமதி.ச. வே. இராமலட்சுமி அம்மாள் நினைவு
அறக்கட்டளைச் சொற்பொழிவு—வெளியீடு 1

உலகத் தமிழ்க் கல்வி இயக்க அறக்கட்டளைச்
சொற்பொழிவு—வெளியீடு 3

வெளியீடும் உரிமையும் : உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்,
33, திருமலைநகர் இணைப்பு
பெருங்குடி, சென்னை-96.

முதற்பதிப்பு : டிசம்பர் 1985.

விலை ரூ. 15-00

Tamilc Cataka Ilakkiyam
Tamil
S. SIVAGAMI
First Edition
21×14 cms.
10pt. letters
Pages V+172
Jayasree Printers 1, Sundareswarar Koil Street,
Royapettah, Madras 600014.

"'உள்ளம் உடைமை உடைமை'

உலகத் தமிழ்க் கல்வி இயக்கம

தலைவர்,

33, திருமலைநகர் இணைப்பு,

பெருங்குடி, சென்னை-600 096.

பதிப்புரை

உலகத் தமிழ்க் கல்வி இயக்கத்தின் மூன்றாவது அறக்கட்டளைச் சொற்பொழிவு இந்நூல். காலஞ்சென்ற திருமதி இராமலட்சுமி அம்மாள் நினைவு அறக்கட்டளை வழிஇச்சொற்பொழிவு நிகழ்கிறது. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களின் தாயின் பெயரால் இந்த அறக்கட்டளை நிறுவியமைக்காக உலகத் தமிழ்க் கல்வி இயக்கம் அவருக்கு நன்றி கூறுகின்றது.

தமிழ்ச் சதக இலக்கியம் பல அறச்செய்திகளை கூறுவதால் முழுப் பயனுடையது எனக் கருதி, அவற்றைச் சமுதாயத்திற்குத் தெரிவிக்கலாம் என்று நோக்கத்தோடும், தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்தலில் முதல் நிலையாகவும் சதக இலக்கியம் என்ற தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது.

டாக்டர் ச. சிவகாமி தன்னுடைய கடுமையான முயற்சியால் 217 சதகங்களைத் திரட்டி நுணுகிப் பார்த்து நன்கு ஆய்ந்து நூலை ஆக்கித்தந்துள்ளமைக்காக அவருக்கு மிக்க நன்றி உடையோம்.

உரிய காலத்தில் அச்சிட்டுத்தந்த ஜெயஸ்ரீ பிரிண்டர்ஸ் உரிமையாளர்க்கும் எங்கள் நன்றி.

சென்னை
24-12-1985

அன்புள்ள
சு. ஆவுடைநாயகம்

முன்னுரை

உலகம் உள்ளளவும் தமிழே உலக முதன்மைச் சிறப்புடை மொழியாக விளங்க வேண்டும் என்பதில் தணியாத வேட்கை கொண்டுத் தமிழ்ப் புயலாகச் செயலாற்றி வருகின்றனர் உலகத் தமிழ்க் கல்வி இயக்கத்தினர். அவர் தம் செயற்பணிகளுள் ஒன்று அறக்கட்டளைச் சொற்பொழிவுகள். நூலாக்கத்துடன் சொற் பொழிவினை நிகழ்த்தும் அவர் தம் தமிழ்ப்பணி, தமிழ்ப் பற்றாளருக்குப் பெருமகிழ்வளிப்பதாம். சொல் வீரமின்றிச் செயல் வீரத்தைத் தம் இயல்பாகக் கொண்டுள்ள பெருந் தொண்டுள்ளம் தமிழ்ப் பாதுகாவலரால் பெரிதும் போற்றப் படுவதாம்.

இந்நிறுவனம் நிறுவியுள்ள அறக்கட்டளைகளுள் ஒன்றான 'திருமதி. ச. வே. இராமலட்சுமி அம்மாள் நினைவு அறக் கட்டளை'யின் வழி இச் சொற்பொழிவு நிகழ்கிறது. தமிழ் இலக்கிய வகைகள் ஒவ்வொன்றினையும் பற்றிய ஆய்வு வெளி வரல் வேண்டும் எனும் இயக்கத்தாரின் நோக்கில் இங்குச் சதக இலக்கியம் பற்றிய ஆய்வு அமைகிறது. எண்ணற்ற ஆய்வறிஞர் இடையே எளியேனுக்கும் வாய்ப்பளித்துள்ள இயக்கத்தாருக்கு என்றென்றும் என் இதயங்கனிந்த நன்றி. நூலுருவாக்கத்திற்குத் தேவையான நூல்களை வழங்கி உதவிய மறைமலையடிகள் நூலகப் பொறுப்பாளர் உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கட்கும் என் நன்றி.

இவண்
ச. சிவகாமி
24-12-85

உள்ளுறை

சதக இலக்கியம்

தமிழ்

''ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.''

என்று தமிழின் சிறப்பைப் பாடினான் ஒரு புலவன். தமிழ் தன் தாய்மொழி என்பதனால் மட்டும் உயர்வு நவிற்சியாக இதனைப் பாடவில்லை. அதன் சிறப்பை முழுமையாக உணர்ந்த ஒருவன், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னு மாப்போலத் தமிழின் இயல்பை, பெருமையை உலகிற்கு உணர்த்த விழைந்ததன் வெளிப்பாடே இப்பாடல். தமிழ்மொழியின் திருக்குறள் ஒருநூல் போதும்—இப்பாடலின் உண்மைக்கு உரைகல்லாக. இன்று வறுமையிலும், அறிவியலின் கொடுமையிலும், பொருளாதாரச் சீரழிவிலும் தன்னைச் சிறிதுசிறிதாக அழித்துக்கொண்டு வரும் உலகின் பார்வையில் திருக்குறள் பட்டு அதன்படி நடக்கத் தொடங்கினால் விண்ணவர் உலகினை இம்மண்ணுலகிலே காணலாம் என்பதில் ஐயமில்லை. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்' எனும் பாரதியின் கூற்றுப்படி இனிமையில் மட்டுமன்று— பண்பாட்டிலும் இலக்கிய வளத்திலும் முன்னிற்பதாக, உலக மொழிகளுள் மிகப்பழமையானதொன்றாகத் தமிழ் திகழ்கிறது. அன்றுமுதல் இன்றுவரை தோன்றிய, தோன்றியுள்ள இலக்கியங்கள் இதனை நன்குப் பறை சாற்றுகின்றன. தன்னை ஒரு தமிழ் மாணவனாகப் பிறரும் கூறுவதில் பெருமைகண்ட ஜி. யு. போப் முதலாகப் பல பிறநாட்டினரின் பாராட்டுதல்கட்கும் உரிய பெருமையுடையது.

'இருந்தமிழே யுன்னாலிருந்தேனிமையோர் விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன்' என்ற துணிவுடன் தமிழைத் தம் படைப்பால் அன்றும் இன்றும் வளப்படுத்தி வருகின்றனர்

தமிழ்ச்சான்றோர். எண்ணற்ற இலக்கியக் கருவூலங்களைப் பெற்று தனக்கு நிகர் தானே எனச் செம்மாந்து நிற்கிறது தமிழ். ‘பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்துத் துடைக்கினும் ஒர் எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது’போல் சிதையா சீர் இளமைத்திறம் பெற்றுத் திகழ்தற்குக் காரணம் அதன் இலக்கிய இலக்கணங்களே.

இலக்கியம்

‘இலக்கியம் என்பது ஒரே வகையானதும், இயல்பு மாற்றம் அற்றதுமாக அமையின் சுவை குன்றி, உயிர்குன்றி, சலிப்புத் தருவதாகவே அமையும். இயற்கையின் பலவித மலர்கள் போன்றும், வண்ணங்கள் போன்றும் வியப்பூட்டுவனவாக, பல்வகையினவாக, இலக்கியம் அமையும்போது அதனை அணுகிக் கற்போர்க்கு வகைவகையான சுவைகளை வாரி வழங்குகின்றது. படைப்பாளியின் கரங்கள் புதுவது செய்யும் திறனுடனும் புதுமை விளைக்கும் விழைவுடனும் இணைந்து செயற்பட்டுப் புதுப்புது வடிவங்களை, மாதிரிகளைப் படைப்பது, இறைவனின் இயற்கை யின் வகைவகையான படைப்புக்கு ஓரளவு ஒத்ததாக அமைகின்றது. இலக்கியக் கலைஞனும் இறைவனைப் போன்றும் பிற படைப்புக் கலைஞரைப் போன்றும் விதவிதமான இலக்கி யங்களை இயற்றியளிக்கின்றான். புதுச்சுவையும், புது எழுச்சியும், புதுநோக்கும், புதுப்போக்கும், புதுப்பாங்கும், புதுப்பொலிவும் கொண்டு வகைவகையான இலக்கியங்கள் வண்ணப் பறவையாக இலக்கிய வானில் பவனி வருகின்றன.[1] இதனைத் தொன்று தொட்டுவரும் இலக்கியங்களில் காணலாம். தமிழ் இலக்கியப் பரப்பு மிக விரிந்தது. அன்னைத் தமிழுக்கு வகைவகையான புத்தாடைகளை எண்ணற்ற அளவில் அணிவித்துப் பார்ப்பதில் தமிழ்ப்புலவர்கள் தம் விழைவையும் திறமையையும் நன்கு வெளிப்படுத்தியுள்ளனர். இது உலகில் வேறெந்த மொழிக்கும் கிடைக்காத தனிப்பெரும் பேறாகும்.

சிற்றிலக்கியம்

தனிப்பாடல்களாகத் தோற்றம் கண்ட இலக்கியம் காலப் போக்கில் காப்பியங்களையும் தன்னுள் கொண்டது. மிகச்சுருக்க மான, மிக விரிந்த எனும் இவற்றிற்கு இடைப்பட்ட அளவில் பல் வகையான புத்திலக்கியங்கள் தொடர்ந்த காலத்தில் தோன்றலாயின. அவற்றைப் பிரபந்தங்கள் என்றும் சிற்றிலக்

1. ச. வே. சுப்பிரமணியன்; தமிழ் இலக்கிய வகையும் வடிவும்; தமிழ்ப்பதிப்பகம், சென்னை 1934; ப.9.

கியங்கள் என்றும் ஆன்றோர் அறைந்தனர். இயல்பால் பெரிய காப்பியங்கள், புராணங்கள் போன்றவற்றினின்றும் அளவில் சிறியன என்ற அளவில் சிற்றிலக்கியங்கள் எனக்கொள்ளலாம். தமிழ் இலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்களின் பயணம் மிக நீண்டது. இடைக்காலத்தில் மிகுந்த செல்வாக்கு பெற்று அதனைத் தனது பொற்காலமாகப் பெற்றுச் சிறந்தது. இன்றும் மரபுக்கவிதைப் படைக்க விழைவோரின் சிந்தையைத் தன் பால் ஈர்க்கும் வலிமை கொண்டிலங்குகின்றது. தமிழ் இலக்கிய வகைகளின் பெருக்கத்திற்குச் சிற்றிலக்கியங்களின் பங்கு மிகப் பெரியதாம்.

அகப்பாடல்கள், புறப்பாடலகள, அறங்கூறும் வாழ்வியற் பாடல்கள், பக்திப்பாடல்கள் எனும் ஏதேனும் ஒன்றை மட்டும் தம் பாடற் பொருளாகக்கொள்ளாது, ஒன்றுக்கு மேற்பட்டவற்றை இணைத்துப் புதியன படைக்க விரும்பியபொழுது காப்பியங்கள் அதற்குக் கைகொடுத்தன. காப்பியங்களின் விரிவும், மிக நீண்ட படைப்புக்காலமும் புலவோர் அனைவருக்கும் ஏற்புடைத்தாயில்லை. இந்நிலையில் சிற்றிலக்கியப் படைப்பு பொருத்தமானதாக அமைந்தது. மக்களிடமும் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

ஒரே பொருளைப் பல்வேறு வடிவங்களில் வெளியிடற்தும் பல்வேறு பொருண்மைகளைக் குறிப்பிட்ட வடிவத்தில் வெளியிடற்கும் சிற்றிலக்கியப் புலவருக்கு வாய்ப்புக் கிட்டியது. பக்திப் பொருண்மையை—இறைவனைப் போற்றிப் பாடவேண்டுமென்றால் புலவர் அந்தாதியாகவும் அதனை அமைக்கலாம். மாலையாக்கியும் சூடலாம். உலா ஆகவும் உலவவிடலாம். பதிகமாகவும் பாடலாம். தூதும் அனுப்பலாம். சிந்தும் செப்பலாம். தமது மொழிப்பற்றை, நாட்டுப்பற்றை, பக்தியை, புறப்பொருளை — சிறப்பிக்கவேண்டுமா? பரணி, சதகம் போன்றவற்றில் இப்பொருண்மைகளைக் கையாளலாம். குறிப்பிட்டதொரு பொருண்மையைச் சில அடிகளில் பாடுதற்கே திணை, துறை மற்றும் எத்தகு மொழிகள் யார் கூற்று என்பது போன்ற பல வரையறைகளைக்கொண்ட சிறையிலிருந்து மீள்வதற்குச் சிற்றிலக்கியங்கள் பெரிதும் பயன்பட்டன. ஒவ்வொரு சிற்றிலக்கியமும் தனக்கெனத் தனிப்பட்ட விதிமுறைகளைக் கொண்டுள்ளபோதிலும் சங்க இலக்கியம் போன்ற கடினமான கட்டுப்பாடுகள் இங்கில்லை. எனவே சிற்றிலக்கியங்களின் பெருக்கம் இயல்பாயிற்று.

சங்கப்பாக்களின் தனித்துறைகள் தனியிலக்கியமாகவும் (கைக்கிளை, ஆற்றுப்படை, துயிலெடை. மடல், தூது) பல துறை

களின் இணைவில் புத்திலக்கியமாகவும் (கலம்பகம், பரணி, கோவை) மலர்ந்ததைச் சிற்றிலக்கியங்களில் காண்கிறோம். பத்துப்பாட்டில் காணப்படும் ஐந்து ஆற்றுப்படைகள், தனித்தனி நூலாகக் கருதும் வகையில் நீண்டு காணப்படுகின்றன. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டளவில் அந்தாதி, பதிகம் எனும் வகைகளின் வழி தமிழ் இலக்கிய வரலாற்றில் இது வளம் பெறலாயிற்று. ஒட்டக்கூத்தர், சிவப்பிரகாசர், குமரகுருபரர் போன்ற பெரும் புலவர்களின் கைவண்ணத்தாலும், சிற்றரசர், வள்ளல்களின் தமிழ்ப்பற்றாலும் ஓங்கி வளரலாயிற்று.

"ஆசிரியரின் ஆக்கத்திறனும் படைப்பாற்றலும், காலத் தாக்கமும், சமுதாயச்சூழலும் புதுப்புது இலக்கிய வகைகள் தோன்றக் காரணமாகி, பிரபந்த எல்லையை விரித்து, எண்ணிக்கையைப் பல்கச் செய்கின்றன. ஒவ்வொரு பெயரில் அல்லது வகையில் ஓரிரு நூல்கள் உருவாகிச் சுருக்கம் காட்ட, வேறு சிலவற்றில் நூற்பெருக்கம் அமைந்து செல்வாக்கும் பயிற்சியும் புலப்படுத்தல் அமைகின்றது. இதனால் ஒன்று அல்லது சில நூலே சான்றாகுவனவற்றைத் தனியிலக்கியமாகக் கருதுதலில் கருத்துவேறுபாடு அமையலாம்.

இத்தகு பிரபந்த வகைகள் பல்நிலையினவாகவும் பல் இயல்பினவாகவும் அமைகின்றன. அகப்பொருட்கோவை, ஆற்றுப்படை என்பன போன்று (1) பொருள் நிலையால் பாகுபடுவன உள. அன்றியும் (2) சிலேடை போன்ற அணிவகையும், (3) கீர்த்தனை போன்ற இசைவகையும் (4) ஆத்திச்சூடி போன்ற எழுத்து வகையும் (5) பஞ்சகம் போன்ற எண் வகையும் (6) ஊசல் முதலிய நாட்டுப்புற வகையும் (7) மஞ்சரி (8) மாலை போன்ற தனிவகைகளும் (9) அந்தாதி போன்ற யாப்பு வகைகளும் காணப்படுகின்றன.

பொருளாலோ, இத்தகு அமைப்புகளாலோ தனிப்படாது, ஒரு சில இயல்புகள் விரவி வரும் வகைகளும் அமைகின்றன. யாப்பும் எண்ணும் இணையும் ஒரு பா ஒருபஃது, எழுத்தும் மாலையும் இயையும் வருக்கமாலை போன்றன சான்றாகின்றன. இந்நிலை எண்ணிறந்து பல்கும்.

நூற்பெயரால் மட்டும் வகைகளைக் கணிக்க முடியுமா, கூடுமா என்பது சிந்தனைக்குரியது. பெயர் வேறுபடினும் வகை ஒன்றாகவே அமைவன காணப்படுகின்றன. ஒரே பெயரிருப்பினும் பண் பொருமை காட்டாது அமையும் வகைகளும் உள. ஒரு வகைக்குள் துணை வகைகள் பல அமையுமாற்றை மாலை,

அந்தாதி போன்ற பகுதிகள் காட்டும்'' என்பன சிற்றிலக்கியம் பற்றியதொரு பொதுவான கண்ணோட்டமாகும்.[2] இத்தகைய சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகச் சிறப்படைந்துள்ளதே சதக மாகும்.

சதகம்

எண்ணற்ற இலக்கிய வகைகளைப் பாட்டியல்கள் சுட்டினும் வாதோரண மஞ்சரி, வாயுறை வாழ்த்து, விளக்கு நிலை, மங்கல வெள்ளை என மிகப் பல பெயரளவில் மட்டுமே அறியப் படுகின்றன. உலா, அந்தாதி, பரணி, தூது எனச் சிறுபான்மையினவே செல்வாக்குப் பெற்றுள்ளன. இத்தகையனவற்றுள் சதகமும் ஒன்றாகும். குறிப்பிட்டதொரு பொருண்மையிலின்றிப் பல பொருண்மைகளையும் சதகம் தன் பாடுபொருளாகக் கொண்டுப் பலவற்றினின்றும் தனித்தச் சிறப்புடையதாகிறது.

நூறு என்று பொருள்படும் வடமொழிச் சொல்லான சதம் என்பதன் அடிப்படையில் தோன்றிய சதகம் என்னும் சொல்லும் அவ் எண்ணிக்கை அடிப்படையில் அத்தனை பாடலுள்ள இலக்கியத்தைக் குறிக்கின்றது என்பது பொதுவான கருத்து. சதம் எனும் சொல்லிற்கு, என்றும் நிலைத்திருப்பது, இறுதி என்ற பொருண்மைகளும் உண்டு[3]. முதன் முதலில் எழுந்த சதக இலக்கியம் இறைவனைப் பாடுவது; அவனுள் ஒன்றுபடுதலை வேண்டுவது. இதனை நோக்கும் பொழுது என்றும் நிலைத்திருப்பதான இறைவனைப் பாடி, மனிதன் இறுதி நிலையான அவனை அடைதலை உணர்த்துவதாகிய இலக்கியத்திற்கு மாணிக்கவாசகர் திருச்சதகம் எனப் பெயரிட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

''தமிழ் மொழியில் சதக இலக்கியம் தோன்றாத காலத்திலேயே, வடமொழியில் சதகம் என்ற பெயரில் பல்வேறு நூல்கள் வளர்ந்திருந்தன என்பதை வடமொழி இலக்கிய வரலாற்றால் அறிகிறோம். புதுவகை இலக்கிய அமைப்பைத் தோற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபட்ட தமிழ்க் கவிஞர்களைச் 'சதகம்' என்ற வடமொழிப் பெயர் எவ்விதமோ கவர்ந்த காரணத்தால், தமிழ் மொழியிலும் இலக்கியவாணர்கள் 'சதக' இலக்கியங்களைத் தோற்றுவித்தனர் போலும்!'' எனும் கூற்றும்[4] இவண்

---

2. ச. வே. சுப்பிரமணியன்; முன் சுட்டிய நூல்; பக். 294-295.
3. Tamil Lexican; vol: III; Madras University; Madras 1928; p. 1255
4. ந.வீ. செயராமன்; சதக இலக்கியம்: மணிவாசகர் நூலகம்;சிதம்பரம்: நா. ப. செ. 1978; ப.9

எண்ணற்பாலது. அந்தக் காலத்தில் தமிழ்ச் சமுதாயத்திடையே சமய வாணர்களால் புகுத்தப்பட்ட வடமொழி ஈர்ப்பின் விளைவே தமிழிலக்கியம் வடமொழிப் பெயர் பெற்றது எனலாம்.

பாடல்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பெயரிடும் மரபு தமிழில் மிகப் பழமையானதாகும். அதிலும் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு, நாலடிநானூறு பழமொழி நானூறு என நூறு மற்றும் நூறின் மடங்குகளில் இலக்கியங்கள் பல அமைந்துள்ளன. பதினெண் கீழ்க்கணக்குகளில் பலவும் இவ்வாறமைந்துள்ளமையும் நோக்கற்பாலது. சிற்றிலக்கிய வகைகளிலும் பதிகம், அட்டகம், நயனப்பத்து, இருபா இருபஃது, மும்மணிக் கோவை, நவமணி மாலை என எண்ணற்றவை அமைந்துள்ளன.

''சத் + அகம் > சதகம்; என்றால் உண்மை; உண்மைப் பொருளாகிய இறைவனைப் போற்றும் பாடல்களைக் தன்னகத்தே கொண்ட இலக்கியம்-சதகம்; மெய்யுணர்தல், அறிவுறுத்தல், சுட்டறுத்தல், ஆத்ம சுத்தி என்பனவாக அமையும் அதன் உட்தலைப்புகளும் இதனை எண்ணச் செய்கின்றன'' என்பர் ஆ. சிவலிங்கனார்.

இவற்றை நோக்கும் பொழுது இலக்கியத்தின் பெயர் வடமொழியிலமைந்தாலும் அதன் மரபு வடமொழி மரபாக, அதனைப் பின்பற்றியதாகத் தோன்றவில்லை. மணிவாசகரைத் தொடர்ந்து ஆறைக்கிழாரின் மண்டல சதகம் அமைகிறது. இவ்வமைப்பு அங்குள்ள சதகங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. பக்திச் சதகங்களும், வாழ்வியல் சதகங்களுமே தமிழில் சிறப்புற்றிருக்க அங்கு அகப் பாடலாக அமையும் சிருங்காரச் சதகங்களும் பெருமை பெற்றுள்ளன. எனவே வடமொழிச் சதகங்களே தமிழ்ச் சதகங்களுக்கு முன்னோடி என்பது பொருந்தாது. இதனைப் பிறரும் ஏற்றுக் கொள்வர்.[5]

---

5. வடமொழியில் காணப்படும் சதக இலக்கியங்களே தமிழ் மொழியில் காணப்படும் சதக இலக்கியங்களுக்கு மூலம் என்று சிலர் கூறுவர். அது பொருந்தாது. தமிழ் இலக்கியத்தில் எழுந்த சதகங்களுள் முதல் நூல் என்று கருதத் தக்க கார்மண்டல சதகம் ஒரு நாட்டின் வரலாற்றை விரித்துரைப்பதே குறிக்கோளாகக் கொண்டுள்ளதைக் காண்கிறோம். ஆனால் வடமொழிச் சதகங்களின் குறிக்கோள் வேறு வகையாகும் என்பதை (அறம், இன்பம், வீடு) முன்பு கண்டோம். எனவே வடமொழிச் சதகங்களின் குறிக்கோளும் தமிழ்ச் சதக இலக்கியங்களின் குறிக்கோளும் ஒன்றையொன்று ஒவ்வாதனவாய் உள்ளன. ஆயினும் எண் அடிப்படையில் மட்டும் இருமொழிச் சதகங்களும் ஒன்றுப்பட்டுள்ளன. மேற்படி, ப. 22

அக, புறப் பாடல்களுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர், காலப் போக்கில் இலக்கியங்களின் போக்கும் மாறுபடற்குரியது; அது தவிர்க்க இயலாததுஎன்ற கணிப்பில், தொடர் நிலைச் செய்யுட்களுக்குரிய வனப்பு எட்டனுள் 'விருந்து' என ஒன்றையும் சுட்டுவர்.

'விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' (பொருள்: 540) என்று அதனை விளக்குவார். இதற்கு இளம்பூரணம் 'விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறி போய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது என்றவாறு. புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல் வழியன்றித் தானே தோற்றுவித்தல்' என்று பொருளுரைப்பர். 'புதுவது கிளந்த யாப்பின் மேற்று என்றதென்னையெனின், புதிதாகத் தாம் வேண்டியவற்றாற் பல செய்யுளும் தொடர்ந்து வரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க. கலம்பகம் முதலாயினவும் சொல்லுப என்று பேராசிரியர் இதற்கு மேலும் விளக்கமளிப்பர். இவற்றின்படிப் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டதாகவும், பல செய்யுட்கள் தொடர்ந்து வருவதாகவும் அமையும் சதகம் தொல்காப்பியர் கருதிய விருந்துள் ஒன்றாகச் சிறக்கிறது.

சதகத்தின் இலக்கணம் வரையறுக்கப்பட்டக் காலத்தைத் தெளிவாகக் குறிக்க இயலவில்லை. சுரசுவதி மகால் இலக்கண விளக்கப்பதிப்பில் 'சயமாம் மிகுபொருள் ஒன்றின் பா நூறு சதகமதே'—நவ. 10 என்ற குறிப்பினைக் காண்கிறோம். ஆயின் பதினான்காம் நூற்றாண்டைச் சார்ந்த இக்குறிப்பை நவநீதப் பாட்டியலில் காண இயலவில்லை. பிறரும் இதனைச் சுட்டவில்லை. பதிப்பாசிரியரான தி. வே. கோபாலையர் எங்கிருந்து, எப்படி இக்குறிப்பினைப் பெற்றார் என்பதும் விளங்கவில்லை. இக்குறிப்பின்படி, வெற்றி பொருந்திய, மிகுதியாகப் பாராட்டப் படும் ஒருபொருள் மீது நூறுபாடல் யாப்பது சதகம் என்பது பெறப்படுகிறது.

பதினாறாம் நூற்றாண்டில் எழுந்த பிரபந்த மரபியல் தரும் விளக்கம் பிறரால் சுட்டப்படவில்லை.

கருது பொருள் இடம் காலம் தொழிலின்
முப்பான் நாற்பான் எழுபான் தொண்ணூறு
நூறான் வெண்பாக் கலித்துறை யினாத(ல்
மன்னுமவ் வெ)ண்ணான் மாலை மஞ்சரி

காஞ்சி மாலை முல்லைக்கலி சதகமென்று
இயலும் செய்யுட் கேற்ற பெயரே (16)

என்று பொது நிலையில் சதக இலக்கணத்தைக் கூறிச்செல்கிறது. பொருள், இடம், காலம், தொழில் எனும் இந்நான்கில் ஒன்றை வெண்பா அல்லது கலித்துறையால் நூறு பாடல்களில் பாடல், சதகம் என்பது இதன் கருத்து போலும். இங்குப் பொருள் (பக்தி வாழ்வியல் சதகங்கள்) இடம் (மண்டல சதகங்கள்) மட்டுமே பாடுபொருளாக அமைந்த சதகங்களைக் காண்கிறோம். மற்றும் வெண்பா, கலித்துறையை விட விருத்தமே சதகப் புலவர்களின் விருப்பப்பாவாகவும் நிற்றலைக் காண்கிறோம். சதக இலக்கணம் உரைக்கும் பிறநூற் கருத்துகளிலிருந்து இது முற்றிலுமாக மாறுபட்டு நிற்கிறது.

அந்த நூற்றாண்டில் தோன்றிய இலக்கண விளக்கம் தரும் விதியே சதக இலக்கியத்திற்கு முதன்மையாகப் பொதுவாகக் கருதப்படுகிறது.

'விழையும் ஒரு பொருள்மேல் ஒரு நூறு
தழைய உரைத்தல் சதகம் என்ப' (847)

என்பது அதன் விளக்கம். (விழையும் எனுஞ்சொல்லை விளையும் என்று ந.வீ. செயராமன் தம் நூலுள் பக். 19, 25 இல் சுட்டுவார். ஆயின் முன்னதே புலவர் விழைகின்ற என்ற பொருளில் பொருத்தமாகத் தோன்றுகிறது.) பொருள், யாப்பு என்ற கட்டுப்பாடு நீக்கப்பட்டு எண் வரையறை மட்டும் இங்கு அமைதலைக் காண்கிறோம். இதனைப் பிரபந்த தீபமும், முத்து வீரியமும் அவ்வாறே மொழிகின்றன.[6] சுவாமிநாதம் மட்டும் 'பயிலும் ஓர் பாட்டாய் நூறு உரைப்பதுதான் சதகம்' (168) என்று சிறிது கட்டுபாட்டினைப் பாடப்படும் பாவில் விதிக்கிறது. நூறுபாடலும் ஒரே யாப்பில் அமைந்திருத்தல் சிறப்பு என்பது இதன் கருத்தாகிறது. ஆயின் பல சதகங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட

---

6. சதகம் என்பதுவே சதச் செய்யுளாலே
அகப்பொருள் புறப்பொருள் இரண்டில் ஒன்று
அறைதலே
—பிரபந்த தீபம். 81

அகப்பொருள் ஒன்றன் மேலாதல் புறப்பொருள்
ஒன்றன் மேலாதல் கற்பித்து ஒரு நூறு
செய்யுள் உரைப்பது சதகமாம் என்ப.
—முத்துவீரியம். யா. ஒ: 156

யாப்பினைத் தம்முள் கொண்டுள்ளன. இவ்விதிகளை இணைத்து நோக்குங்கால் 'நூறுபாடல்களில் ஏதேனும் ஒரு பாவால், புலவர் தமக்கு விருப்பமான பொருளில் பாடுதல் சதக இலக்கியம்' என்பது பெறப்படுகின்றது.

நூறு செய்யுள் என்னும் அடிப்படை தேவையானமை பற்றிப் போலும் பொருட்பகுப்புக்கு மிக்க சிந்தனை அளிக்கப்படவில்லை என்பர்.[7] தமிழ் இலக்கியத்தில் பொது நிலையில் தொல்காப்பியரைப் பின்பற்றிப் பொருண்மையை அகம், புறம் என்று பிரித்தல் மரபாதலின் பிரபந்த தீபமும் முத்து வீரியமும் இரண்டிலொன்று என்று இதனைச் சுட்டுகின்றன எனலாம். பொதுவாக, மிக எளிதான விதிமுறையினைக்கொண்ட இலக்கிய மாக இஃதமைகிறது.

சதுரகராதியில் 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகச் சதகத்தைச் சுட்டும் வீரமாமுனிவர், தம் தொன்னூல் விளக்கத்தில் பிற பல சிற்றிலக்கியங்களை விளக்குகையில் இதனை ஒழித்திருப்பது எண்ணற்பாலது. சதுரகராதியினை இயற்றியவர் இவரன்று என்ற கருத்திற்கு இஃது வலுசேர்ப்பதாய்த் தோன்றுகிறது.

சதகம்-பிற சிற்றிலக்கியங்கள்

ஒரு சில சிற்றிலக்கியங்களுடன் சதக இலக்கியம் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதை இலக்கண இலக்கியங்களின் வழிக் காணமுடிகிறது.

அந்தாதித் தொடர்புடன் வெண்பா அல்லது கலித்துறை யாப்பில் நூறு செய்யுட்கள் வருவது நூற்றந்தாதியாகும்.[8] பத்துப்பாடல்களுக்கு ஒரு சந்தமாக அமைவது பதின்பத்தந்தாதி என்பதாகும்.[9] இவற்றிற்கும் சதகத்திற்கும் நூறு பாடல்கள்

---

7. ச. வே. சுப்பிரமணியன்; முன்சுட்டிய நூல்; ப. 464

8. வெண்பா நூற்றினாலேனும் கலித்துறை
நூற்றினாலேனும் அந்தாதித்து உரைப்பது
நூற்றந்தாதியாம் நுவலுங் காலே.

—முத்துவீரியம். யா.ஒ 123

9. நூறு, சார்ந்து பப்பத்து ஓர் இசையாம் பதின்பத்து
அந்தாதி—சுவாமிநாதம் 170

எனும் அடிப்படை விதியும், பொருள் வரையறையின்மையும் உணர்தற்பாலது. அந்தாதித் தொடையைத் திருச்சதகம் முதலான சிலவற்றில் காண்கிறோம். எனவே நூறுபாடல்களில் வெண்பா அல்லது கலித்துறையில் (இரண்டிலும் சதகங்கள் பாடப்பட்டுள்ளன) அமையும் நிலைக்குச் சதகம் என்றோ நூற்றந்தாதி என்றோ நாம் கொள்வது புலவர் தம் விருப்பத்தைப் பொறுத்ததாக அமைகிறது.

மாலை வகையில் ஒன்றாகக் காணப்படும் சதமணி மாலை எண்ணற்பாலது. இங்கும் சதம் எனும் நூறுபாடல்கள் பாடப் படுகின்ற நூலே சதமணி மாலையாக அமைவதைச் சிவப்பிரகாசரின், சைவசித்தாந்தத்தை விளக்கும் சதமணிமாலையில் காணலாம். இதனோடு தொடர்புடைய மற்றொரு நூலாக அமையும் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளையின் கோமதி சதரத்ன மாலை கலி விருத்தத்தில் அமைவதுடன், கோமதியே எனும் மகுடம் கொண்டமைவதும் சுட்டற்பாலது.

'சுப்பிரமணியர் நூறு' என்றொரு நூல் ஏட்டுச்சுவடியிலிருந்து ச. ராஜராஜன் என்பவரால் பதிக்கப்பட்டுள்ளது. இந் நூல் தட்டச்சுப் பிரதியாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்தில் உள்ளது. சுப்பிரமணியர் எனும் புலவரால் பாடப் பெற்ற நூறு என்ற நிலையில் பெயர் பெறும் இந்நூல் சைவ சமயத் தத்துவத்தினை நூற்றியொரு பாடல்களில் விளக்கி, தத்துவச் சதகங்களை நினைவூட்டுகிறது. காப்பு இன்றி நூல் நேரிடையாகத் தொடங்கி நூலின் இயல்புடன் நிறைவுறுகிறது. நூலாசிரியர் தம் தமிழ்ப்பற்றின் காரணமாக இந்நூலைச் சதக மென்னாது நூறு என்று நவின்றார் போலும்.

''நூறு எனும் எண்ணும் நூறு பாடல்களுடைய இலக்கியமும் இவ்வாறு குறிபெறுகின்றன. தனிநூலும் தொகுப்புநூலும் இவ்வாறு எண்ணிக்கையால் பெயர் பெறலாம் என்பதனைத் தமிழ் இலக்கியங்கள் காட்டுகின்றன. நூறு எனும் எண்ணின் பல மடங்குகளும் கருதப்பட்டு இதற்குத் தனி தொகுப்பு நூல்கள் பெயர் பெறுதலை, ஐங்குறுநூறு அகநானூறு, புறநானூறு, நாலடி நானூறு, பழமொழி நானூறு போன்றவற்றில் காண முடிகின்றது''[10] எனும் கூற்றினையும் இவண் இணைத்துப் பார்க்கலாம்.

'பாட்டுடைத் தலைவன் ஊரும் பெயரும்
பத்துமுதல் ஆயிரம் அளவும் பாடி
எண்ணால் பெயர் பெறல் எண் செய்யுள் ஆகும்'
—(முத்துவீரியம் யா.ஒ. 119)

---

10. ச. வே. சுப்பிரமணியன்; முன்சுட்டிய நூல்; ப. 467

என இலக்கணிகள் நவிலும் எண் செய்யுளும் எண்ணற்பாலது. நக்கீரரின் திருவீங்கோய்மலைஎழுபது போல்வன இதனுள் அமைகின்றன. நூறு பாடல்களால் அமையும் சதகங்கள் சில இவ்விலக்கணத்துடன் ஒத்துச் செல்வதைப் பார்க்கமுடிகிறது. திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் அருணாசலத் தேவரைப் போற்றித் துதிப்பதாக அமையும் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரின் அருணாசல சதகம், திருவேங்கடம் பிள்ளையின் மாந்தை நகராதிபதி சதகம் போன்றன இதற்குச் சான்றுகளா கின்றன.

எண், மற்றும் பொருள் நிலையில், எண் செய்யுளுடன் சத கங்கள் தொடர்பு கொள்வது போன்று பொருள் நிலையில் பிற சதகங்களுடன் இணைவு பெறுவதையும் காணமுடிகிறது. சதகத் திற்குரிய பொருள் வரையறையின்மையால், எழுந்துள்ள சத கங்கள் இவ்வாறு அமைகின்றன. பாட்டுடைத் தலைவனின் ஊர் அல்லது பெயரைச் சிறப்பித்துப் பாடுதலைத் தனித்தனி இலக்கிய வகையாக வெண்பாப்பாட்டியல் (செ. 14) முதலா னவை தருகின்றன.

முதல்வன் ஊரின் பேரான் மொழிவன வெண்பா
அதனைத் தொண்ணூறு எழுபான் ஐம்பான்-மதர்
விழியாய்
இன்னிசை வெண்பாவிற்கும் ஒக்கும்; இயற்பெயர்
அன்னவற்றாற் கட்டுரைத்தார் ஆய்ந்து.

என்பது அவற்றின் இலக்கணமாகும். எண், யாப்பு இவற்றால் அமையும் சிற்றிலக்கிய வகைகள் பலவற்றின் பொதுப் பண்பாக இஃதமைதல் கண்கூடு. இவ்வாறே பாட்டுடைத் தலைவரின் ஊர், பெயர் இவற்றிற்குச் சிறப்பளிக்கும் சதகங்களும் உள்ளன என்பதற்கு முன் சுட்டிய சான்றுகளே போதுமானது. 'வெண் பாவால் சிறப்பித்து ஊர் ஒருபான் பா விரித்துரைக்கும்' ஊர் வெண்பாவும் (முத்து வீரியம் யா. ஒ. 135) இங்கு நோக்கற் பாலது.

பிள்ளைத் தமிழ், கலம்பகம் போன்றனவும் நூறு பாடல் எனும் சதக விதியைக் கொண்டிலங்குகின்றன. பொருண்மை இவற்றைச் சதகத்தினின்றும் பிரிக்கின்றது. பல் சந்தமாலை, இணை மணிமாலை போன்றனவும் எண்ணிக்கையளவில் சதகத் துடன் தொடர்பு கொள்கின்றன. பிள்ளைத் தமிழ், கலம்பகம் தவிர ஏனையவற்றிற்குப் பொருள்வரையறை இல்லாவிடினும் எழுந்துள்ள இலக்கியங்களைக் காண்கையில் சதகத்தில் பல்

வேறு பொருண்மைகள் அமைவது போன்று அவற்றில் அமை யாமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பல சிற்றிலக்கிய வகைகள் தம்முள் நெருங்கிய தொடர்பு கொண்டமைவது எண்ணற்பாலது. ஊரின்னிசை, பெயரின்னிசை போன்றவற்கு இலக்கியங்கள் இன்மையும் உடன் நினைக்கத் தக்கது. பாட்டியல்கள் தரும் சிற்றிலக்கியப் பட்டிய லும், அவைகளுக்குள் ஒருமைத் தன்மை முழுமையாக அமை யாமையை உணர்த்துகின்றன. எண்ணிக்கையிலும், சிற்றிலக் கிய வகைகளைக் குறிப்பிடுவதிலும் மிகுந்த வேறுபாடு அமை வதைக் காணலாம்.[11] பாட்டியல்கள் தம் காலத்தே தோன்றி யுள்ள சிற்றிலக்கியங்கள் பலவற்றிற்கு இலக்கணம் வகுக்காமை யும் உணர்த்தற் பாலது.

இவற்றை இணைத்து நோக்குகையில் சில எண்ணங்கள் வெளிப்படுகின்றன. தமிழில் இலக்கிய வகைகளைப் பல்கிப் பெரு கச் செய்வதில் பாட்டியலார் தணியாத விழைவு கொண்டிருந்த னர். எனவே சிறு சிறு நுட்பமான வேறுபாடுகளைக் கூடத் தனித்த இலக்கியமாகக் கொண்டனர். மேலும் ஒன்றிலிருந்து பல தோன்றுதற்கு வாய்ப்புள்ளமையால் 'இலக்கியம் கண்டவற் றிற்கு இலக்கணம்' அமைத்ததுடன் நின்றுவிடாது தங்கள் புலமை யைப் பயன் படுத்திக் கொண்டு இவ்வாறும் இலக்கியம் எழலாம் என்ற நினைவில் பல புத்திலக்கிய வகைகளுக்கு விளக்கம் அளித் திருக்க வேண்டும். முன் சுட்டியுள்ள பாட்டியலார் முரண்பாடு களுக்கு இவையும் காரணங்களாகும் எனத் தோன்றுகிறது. காப் பிய காலத்திற்குப் பின், உரை நடையிலக்கியங்களின் தோற்றம் வரையிலும் சிற்றிலக்கியங்களின் செல்வாக்குத் தமிழில் முதன்மை பெற்றிருந்தமையும் இக்கருத்தை வலியுறுத்துகிறது. பாட்டியிலார் கற்பனைக்கு எட்டாதவற்றையும் தம் புலமை யால் புலப்படுத்திப் பல புத்திலக்கியங்களைப் படைப்பாளரும் உருவாக்கினர்.

சதகம்-பிறமொழிகளில்

தற்காலத்தில் அறிவியல் முன்னேற்றம் நாடுகளிடையே நெருக்கத்தை அதிகப்படுத்தியுள்ளது. இலக்கியத் துறையிலும் இதனைக் காண முடிகிறது. இன்று புதினம், சிறுகதை, நாட கம், வாழ்க்கை வரலாறு, பயண இலக்கியம் எனப் பல உரை நடைகள் உலக மொழிகளுக்குப் பொதுவான இலக்கியங்களாக இருக்கின்றன. இது போன்றே உலக நாடுகளிடையே தொடர்பு

11. மேற்படி. பக். 50-60

குறைவாக இருந்த காலத்திலும் உலகமொழிகளில் சில இலக்கிய வகைகள் பொதுவாக இருந்தமையைக் காப்பியங்கள் கொண்டுணரலாம்.

அவ்வகையில் சதக இலக்கியம் தமிழ் தவிர வேறு உலக மொழிகளில் உள்ளதா என நோக்கும்பொழுது ஒரு சில இந்திய மொழிகளில் உள்ளமை வெளிப்படுகிறது. தமிழில் இவ்வகை தோன்று முன்பே வடமொழியில் புகழ் பெற்றுள்ளமையை அறிகிறோம். கன்னடம், மலையாளம் ஆகிய திராவிட மொழிகளில் சதகங்கள் காணப்படினும் தெலுங்கு மொழியில் மிகுதியான செல்வாக்குடன் விளங்குகிறது, ஒரு சில தெலுங்குச் சதகங்கள் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

வடமொழி

வடமொழியில் கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதலே சதக இலக்கியங்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கி விட்டன. நூறு பாடலால் ஆகுவதால் சதம் என்ற சொல்லடிப்படையில் எழுந்த இவ் இலக்கிய வகை, முதலில் தொகுப்பாகவும் பின்பு தனி நூலாகவும் அமைகின்றது என்பர். ''வேத காலத்திலே ஐதரேய பிராமணத்திலுள்ள சுபச்சேபன் கதையிற் பல நீதியுரைகளுண்டு. நீதி சாத்திரங்களிலும் வர்ம சாத்திரங்களிலும் இவை பெருவரவாயிருக்கின்றன. இத்தகைய நல்லுரைகளை நூறு நூறாகத் தொகுத்து சதகம் என்று பெயரிட்டனர். பிற்காலத்தில் புலவர்கள் சதகமாகவே பாடத் தொடங்கினர்'' என்பர்.[12] மற்றும் ''வடமொழியில் காணப்பெறும் நீதிச் சதகங்களும் வைராக்கிய சதகங்களும் மகாபாரதத்தில் உள்ள சாந்திபர்வத்தையே விளக்குவனவாக அமைந்துள்ளன என்பது பி. எஸ். சுப்பிரமணிய சாத்திரியாரின் கருத்தாகும். சாந்திபர்வத்தில் உள்ள ஒவ்வொரு சுலோகத்தையும் மூலமாகக் கொண்டு புருடார்த்தங்களுள் ஒன்றை விளக்குவனவாக நூறு சுலோகங்களால் அவை இயன்றுள்ளன என்றும் அவர் கருதுகிறார்'' என்றும் எடுத்துக் காட்டுவர்.[13]

இவற்றை நோக்கும் பொழுது, தமிழில் முதன் முதலாகப் பக்தியும், தொடர்ந்து வரலாறும் சதகங்களின் பொருண்மையாக அமைந்தது போல் அல்லாது வாழ்வியல், தத்துவம், அகம்

12. நாவலியூர் நடராஜன்; வடமொழி இலக்கிய வரலாறு சங்கீதாபதிப்பகம், சென்னை, 1979, ப. 231.

13. ந. வீ. செயராமன்; சதக இலக்கியம்; மணிவாசகர் நூலகம்; சிதம்பரம்: மூ.ப. 1978; ப. 20.

முதலான வடமொழிச் சதகங்களின் பொருண்மையாக அமைந்ததை உணர முடிகிறது. கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில் தோன்றிய பர்த்ருஹரியே நீதி சதகம், வைராக்கிய சதகம், சிருங்கார சதகம் எனும் மூன்றையும் பாடிச் சதக வரலாற்றைத் தோற்றுவித்ததாக உணர முடிகிறது.

பர்த்ருஹரியின் இந்தச் சதகங்கள் தொகை நூலெனவும் கர்ண பரம்பரையாய் வந்த இப்பாடல்கள் பர்த்ருஹரியின் பேரில் வழங்கப்பட்டன என்ற கருத்தும் உண்டு. இது தவறான கருத்து என வடமொழி இலக்கிய வரலாற்றிலக்கிய ஆசிரியர் நாவலியூர் நடராசன் கருதுகிறார். இச்சதகங்களிலே ஒரு புலவரால் இயற்றப்பட்ட தனித் தன்மை காணப்படுகிறது. காதலும் துறவும் இன்பத்தையடைவதற்கு இரண்டு வழிகள் என்பதே பர்த்ருஹரியின் சித்தாந்தம். ஒன்று பிரவருத்தி மார்க்கம்; மற்றும் நிவிருத்தி மார்க்கம் என்று அதற்கு விளக்கமும் அளிக்கிறார் (ப. 233). ஐரோப்பாவில் முதன் முதலாகப் புகழ் பெற்ற வடமொழிப் புலவர் பர்த்ருஹரியே. இவருடைய சதகங்கள் 1651 ஆம் ஆண்டில் டச்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட பெருமையுடையது என்பதையும் அறிகிறோம்.

''நெருப்பைத் தண்ணீரினால் அணைக்கலாம். வெய்யிலை மறைக்கக் குடையுண்டு. மதங் கொண்ட யானையை அங்குசத்தாற் படிய வைக்கலாம். மாட்டையும் கழுதையையும் அடித்து அடக்கலாம். மருந்துகளால் நோயைத் தீர்க்கலாம். விஷத்தை மந்திரத்தாற் போக்கலாம். எல்லாவற்றுக்கும் சாத்திரங்களிலே மாற்று உண்டு. ஆனால் மடைமையைப் போக்க மலையிலும் மருந்தில்லை.''

''தெளிந்த ஆற்றிலே நறும் புனலைக் குடிப்பேன். உணவுக்குப் பழங்கள் உண்டு. உடுக்க மரவுரி உண்டு. படுக்கப் பூமியுண்டு. இவை எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. புதுப்பணம் என்ற மதுவைக் குடித்து வெறிகொண்டு, புத்தியையிழந்த செல்வர்களின் முன்னால் பணிந்து நிற்க வேண்டிய அவசியமில்லையே.''

''சாதுக்கள் மனத்தில் விவேகம் என்ற ஒளி ஒளிர் விடுகிறது எதுவரை? பெண்ணின் பார்வையென்ற புழுதி அதனை மறைக்கும் வரை.''—என்பன முறையே பர்த்ருஹரி தம் நீதி, வைராக்கியம், சிருங்கார சதகங்களில் மொழிந்துள்ளவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக் காட்டாகும்[14] இவைகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

---

14. நாவலியூர். நடராசன்; முன் சுட்டிய நூல்; பக்.233-236

கி. பி. 8ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 'அமரு' எனும் புலவரின் 'அமருசதகம்' மிக்கப் புகழ் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இது சிருங்கார வகையைப் பாடும் அகப்பொருண்மையின் பாற்பட்டது. காதல் வாழ்க்கையில் அனுபவம் பெறாத மடவராகிய 'முக்தா' பற்றி இந்நூலமைகிறது. காளிதாசருக்கு அடுத்த நிலையில் புகழ்பெறும் இப்புலவரின் பாடல்கள் அணியிலக்கண நூல்களுக்கு மேற்கோளாகவும் பயன்படுகின்றன. 'அமரு எழுதிய ஒவ்வொரு கவிதையும் ஒரு பெரிய காவியத்துக்கு நிகர்' எனப் பாராட்டுவர் ஆனந்த வர்த்தனர்.[15]

இவற்றிற்குப் பின் தமிழ்ப் பக்தியிலக்கியங்கள் போன்று வடமொழியிலும் சதகங்கள் பக்திப் பொருண்மையைக் கையாளுவதைக் காண முடிகிறது. தோத்திரப் பாடல்கள் பெரும்பாலும் சதகமாக இருப்பது வழக்கம். ''இத்தகைய சதகங்களுள் முந்தியது சண்டீ சதகம். இதை இயற்றியவர் பாணர். இப்பாடல்கள் துர்க்கையின் பெருமையைக் கூறிப் போற்றுவன. மகிடாசுரவதத்தைச் செய்த சண்டியின் கமலப் பாதங்களைப் புலவர் வணங்குகிறார். ஒவ்வொரு பாடலிலும் 'சண்டி உங்களைக் காப்பாற்றுவாளாக' என்று வாழ்த்துதல் காணப்படுகிறது. இவர் காலத்தவராகிய மயூரர் என்பவர் தமக்குண்டான தொழு நோயைத் தீர்ப்பதற்காகச் 'சூரிய சதகம்' என்ற நூலை இயற்றினார். இதில் சூரியன், கிரணம், குதிரைகள், சாரதி, தேர் என்பன முறையே போற்றப்படுகின்றன. 'கிரணங்கள் மக்களைப் பிறவிக் கடலிலிருந்து கரை சேர்க்கும் கப்பல்கள், சூரியனே பிரம்மா, அதுவே விஷ்ணுவும் சிவனும் தேவர்களையும் மனிதரையும் காப்பது' என்பது அவர் எண்ணம்.[16]

இவை தவிர காஷ்மீரத்துப் புலவர் பல்லடரின் பல்லட சதகம் வைராக்கிய சதகம் போன்றது. நாகராஜ கவியின் 'பாவ சதகம்' என்பது அகப் பொருண்மை கொண்டது. புதிர், விடுகதை முறையிலமைந்த புதுமையுடையது என்பர். உருவகம் எனப் பொருள்படும் அன்னியோக்தியைப் பயன்படுத்திப் பாடப்பட்ட 'அன்யாபதேச சதகம்' என்ற நூல் சமயத் தொடர்பான அறங்களைக் கொண்டதாக அறிகிறோம். குசும தேவரின் 'திருஷ்டாந்த சதகமும்' சுட்டத்தக்கது. இதில் முதல் வரியில் ஒரு பொது இலக்கணம் கூறப்படும். இரண்டாவது வரியில் அதற்கு விளக்கம் (திருஷ்டாந்தம்) கூறப்படும்...''துன்பத்தை உயர்ந்தோர் தான் தாங்கும் சக்தியுடையவர். எளிய மக்களுக்கு

15. மேற்படி. பக். 226—230
16. மேற்படி. பக். 243

அச்சக்தி கிடையாது. உயர்ந்த இரத்தினக் கல்லுதான் உரை கல்லில் உரைக்கப் படுகிறது. சாதாரணக் களி மண் அன்று.'' என்பது போன்றதாக அது அமைந்துள்ளது.[17]

கோஸ்வாமி நார்த்தன பட்டரின் வைராக்கிய சதகம், நரஹரியின் சிருங்கார சதகம், ஆறந்த வார்த்தனாவின் தேவீ சதகம், அவதாரகவியின் ஈசுவர சதகம், சுந்தராசார்யரின் நீதி சதகம்,கோகுல நாதரின் சிவ சதகம், இராமபத்ர தீக்ஷிதரின் இராமபத்ர சதகம், உத்ப்ரேஷா வல்லபரின் சுந்தரீ சதகம் போன்றனவும் வடமொழியின் சிறப்பு வாய்ந்த சதங்களாக அறியப்படுகின்றன.[18]

தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் எனும் நான்கிற்குமுரிய இலக்கிய வகைகளுள் ஒன்றாகச் சதகம் அமைதல் திராவிட மொழிகளுக்குரிய இலக்கியப் பொதுச் சிறப்பாகும். தமிழைப் போன்றே இவற்றிலும் குறிப்பிடத்தக்க செல்வாக்கை அறிய முடிகிறது.[19]

தெலுங்கு

தமிழ் உள்பட பிற திராவிட மொழிகளை விடத் தெலுங்கில் சதகம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. சுமார் 900 சதகங்கள் இம்மொழியில் எழுந்திருப்பதாக அறியப்படுகிறது. தமிழில் அமைந்துள்ளது போன்று இங்கும் இராமாயணக் கதை கூறும் சதகங்களைக் காணலாம்.

பாடல் தோறும் அடிப்பகுதிகள் தம்முள் ஒப்புமை கொண்டு அமைதல் இச்சதகங்களின் பொதுப் பண்பாகும். பெரும்பாலும் இவ்வாறு வரும் முன்னிலைத் தொடரின் அடிப்படையிலேயே இச்சதகங்கள் பெயர் பெறுகின்றன. இந்நிலையைப் பொதுவாகத் தமிழ்ச் சதகங்களிலும் நாம் காணலாம். சைவ அல்லது வைணவக் கடவுளை அழைத்துக் கூறும் நிலையில் இத்தெலுங்குச் சதகங்கள் அமையினும் வேறு நிலை கொள்வனவும் உள. ஆசிரியன் தன்னையே முன்னிலைப் படுத்துதல் 'வேமன சதகம்,' 'கவி சௌடப்ப சதகம்', சரபாங்க சதகம்' போன்றவற்றில் அமைகின்றது. முன்னிலைப் படுத்தும் விளித்தொடர் இன்றியும் சில

17. மேற்படி பக். 237—238
18. ந. வீ. செயராமன்; மேற்படி; ப. 21
19. ச. வே. சுப்பிரமணியன்; திராவிட மொழி இலக்கியங்கள்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1983; பக். 194—199

சதகம் வருவதனை மத்துரி அப்பாவு மொதலியின் மாத்ரு சதகமும் நாரல வெங்கடேஸ்வரராவின் 'வாஸ்தவமும் நர்லவரி மாதா சதகமும்' காட்டுகின்றன. கலைக் கடவுளான கலை மகளைச் சரஸ்வதி எனவும், பாரதி எனவும் முன்னிலைப் படுத்தும் சதகமும் உண்டு. அன்றியும் கிரகங்கள் முதலியனவற்றை முன்னிலைப் படுத்தும் நிலையும் அமைவதைச் சூரிய, சூரிய நாராயண, பாஸ்கர, சாயா புத்ர சதகங்கள் காட்டுகின்றன. தம்மை ஆதரித்த வள்ளல்களை விளித்து மொழிவனவாகச் சிலவும் உள. மனதை முன்னிலைப் படுத்தும் நூல்களாகச் சித்த, மானச பரமாத்ம சுமதி சதகங்கள் அமைகின்றன. இச்சுமதி சதகம் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

கனபவரபு வெங்கடகவி (1674) யமக சதகம் ஒன்று இயற்றியுள்ளார். ஆதிசேஷ கவியின் (1835) கொச்சேர்லதம்மா எனும் சதகநூல் மிறைக்கவிகளுடைமையால் தனித்தன்மை காட்டுகின்றது. இதன் பாடல்கள் பலவும் 'கர்பகவிதை' எனும் நிலையில் தம்முள் பிறிதொரு யாப்பின் கவிதை ஒன்றையும் உட்கொண்டு 'காதைகரப்பு, கரந்துறைப் பாட்டு' என்பனபோல் அமைகின்றன. சித்திரக்கவிகளில் சிறந்து நிற்கும் தமிழ்மொழியில் சதகவகையில் இத்தகு சித்திரக்கவிகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவில்லை. தெலுங்கில் மிகப்பழமையானதாகப் பல்குரிகி சோமநாதரின் (1200) விருஷதீப சதகம் என்பதையும் யாதவக்குல அன்னமய்யாவின் (1240) சர்வேஸ்வர சதகம் என்பதையும் சுட்டுவர். பொப்பிலிக்கு அருகிலுள்ள பல தெரு என்னுமிடத்தினரான அமலபிரபு சன்யாசி கவி என்பவர் (1820—1860) நூற்றிற்கும் மேற்பட்ட சதகங்கள் இயற்றியவராகவும் அவற்றுள் 32 வரை கிடைப்பதாகவும் தெரிகிறது. இவரை அடுத்து அதிக அளவில் சதகம் பாடியவராகப் பார்வதீஸ்வர சாஸ்திரி 30 சதகங்கள் இயற்றிப் பெருமை கொள்கிறார்.

பெரும்பான்மையான சதகங்கள் பக்திச் சதகங்களாக அமையினும் பிற நிலையினவும் காணப்படுகின்றன. அடிடம் சூரணாவின் ராமலிங்கேச சதகம் அங்கதத் தன்மையுடையது. ஆசிரியரின் காலத்தில் காணப்பட்ட தவறான பழக்கங்களையும் தீமைகளையும் வெளிப்படுத்திக் கடிவதாக அமைகின்றது. அகப்பொருட் சார்பு காட்டும் சதகங்களும் இருந்ததை வங்கயலபதி வெங்கடகவியின் (1800) மதனகோபால சதகம் காட்டுகின்றது. அறிவுறுத்தற்பொருட்டும் சதகநூல்கள் அமைந்தமைக்குச் சான்றாக வேமன, சுமதி, குமாரி, புத்ர சதகங்கள் காணப்படுகின்றன. தமிழில் இந்நூற்றாண்டில் பார்த்தசாரதி முதலியார் படைத்துள்ள மதலைச் சதகம் இவற்றின் தாக்கத்தால் எழுந்தது

இ—2

போலும். சீதாபதியின் பாரதி சதகம் (1940), மொழியின் கலை, அறிவியல் நிலை பற்றியும் பேச்சுமொழியைப் பற்றியும் 145 பாடலில் அமைந்து வேறுபாடு காட்டுகிறது. தமிழிலும் இவ்வாறு சதக எண்ணிக்கை நூறைத்தாண்டியும் அமைதலை அ. பொன்னுசாமி முதலியாரின் அர்ச். தேவ மாதா பேரிற்சதகம் போன்றவற்றால் அறியலாம். கஸ்தூரிரங்க கவியின் (1750) சிசாயாப்பில் 'சம்பா' என்ற தொடர்ப்பயிற்சி பாடல்தோறு முடைய நூறு பாடலான சதகநூல் தெலுங்குச் சொற்களின் அகராதியாகிப் புதுமை கொள்கிறது.

கன்னடம்

இதிலும் பலவகைப்பட்ட சதகயிலக்கியத்தைக் காண முடிகிறது. ஹரிஹரன் (12நூ) இயற்றியனவாகப் பம்ப சதகம், ரக்ஷா சதகம் என்பன அறியப்படுகின்றன. இவையிரண்டும் நூறு பாடலுடைய சிறு நூல்களாய், பக்தனின் ஆன்மகதை வடிவைப் பெற்றுள்ளன. ஹம்பியிலுள்ள விரூபாக்ஷரிடம் இவர்கொண்ட பக்தி இந்நூல்களில் அமைகிறது. இல்லறச்சுமை, அரசத்தொண்டு போன்றவற்றிலிருந்து நீங்கி, பக்தி நெறிக்குட்பட்ட நிலை இதில் காட்டப்படுகின்றது. பம்பசதகம், கவிஞனின் இலக்கிய நோக்காகச் சிவனைப் பாடுதல், பிற கடவுளரையோ மனிதரையோ பாடாமை என்பனவற்றைத் தருகின்றது. வீர சைவ இலக்கியக் கோட்பாடும், வீர சைவ சித்தாந்தக்கடவுள் இயல்பும் இச்சதகத்தில் விளங்குகின்றன. தமிழ்ப்பக்தி யிலக்கியங் களின் பொதுப்பண்பை இவை நினைவுறுத்துகின்றன.

வீர சைவ இலக்கிய மறுமலர்ச்சிக் காலத்திலும் தத்துவம், நீதி பற்றிய சதகங்கள் எழுந்தமை குறிக்கப்படுகின்றது. பின்பு விஜயநகர வீழ்ச்சிக் காலத்தில் (16 நூ) ரத்னாகர வாணி, திரிலோக சதகம், அபராஜிதேஸ்வர சதகம் என்பவற்றை இயற்றினார். முன்னதில், நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களில் ஜைன சமயத்திற்குரிய படைப்பிலக்கணம் விளக்கப்பட்டுள்ளமை நினைத்தற்குரியது. அபராஜிதேஸ்வர சதகத்தில் நீதி, வைராக்கியம், ஆன்ம சிந்தனை ஆகியவற்றின் விளக்கம் அமைகின்றது என்பர். சிக்கதேவராஜன் காலத்தில் (17நூ) திருமாலாரியன் படைப்பாகச் சிக்கதேவராஜ சதகம் என்பது அறியப்படுகின்றது. தமிழின் பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த 'திருவேங்கட சதகம்' போன்று இந்நூலும் மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளது.

மலையாளம்

மலையாளச் சதகஇலக்கியம் தனக்கு முன்னோடியாகக் கேரளத்திலெழுந்த வடமொழி சதகங்களைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. நம்பூதிரியின் (17) ஆஸ்லேசா சதகம், தேவ தேவ ஈசானுபூதி என்பவரின் இதே காலத்தின் ராமசதகம், கிருஷ்ணசதகம், வாசுதேவ சதகம் போன்றன வடமொழியில் அமைந்தன. வடமொழி மலையாளத்தில் பெற்றிருக்கும் மிகுதியான செல்வாக்கை இது உணர்த்துகிறது. ஆசிரியர் அறிய்ப் படாத அத்வைத சதகம் (18 நூ) வடமொழி நூறு அனுஷ்டுப் ஸ்லோகங்களால் இயன்றதாகும். அத்வைத வேதாந்தமே பொருள்; மலையாள உரையுடன் இந்நூல் அமைகின்றது. இதே நூற்றாண்டில் தேவராஜ பட்டனுடையதாக ராமாயண சதகம் அமைகின்றது. ராமப்பணிவரதன் எனும் குஞ்சன் நம்பியாரினுடையதாக இரு முகுந்த சதகம் அறியப்படுகின்றன. இரண்டும் விஷ்ணுதோத்திரமாகும். முன்னது, கொச்சியிலுள்ள மணக்குளத்து ராமவர்மராஜாவின் விருப்பப்படி இரிஞ்ஞாலக்குட என்னும் ஊரின் இறைவனைப் பாடியதாகும். இவர், சிவசதகம் ஒன்றும் இயற்றியுள்ளார்.

வீரகேரளவர்ம மகாராஜா இயற்றியதாகப் பூரணத்ரயீச சதகம் சுட்டப்படுகின்றது. இடமன கணபதி போற்றியின் (19நூ) சதக்த்ரய பூஷணம் மூன்று சதகங்களைக் கொண்டது. பர்த்ருஹரியைப் பின்பற்றி ஒருமைப்பாடு, சிருங்காரம், அத்வைதம் என்பன பாடுபொருளாகும் நூல் இது. கேசவபிள்ளையின் கவி சமாஜ யாத்ரா சதகம், ஆசன்னமரண சிந்தா சதகம் போன்றன புதுமையுடையனவாகத் தோன்றுகின்றன. இவை முறையே பயணச்செய்தி நூலாகவும், இறப்பவன் ஒருவனின் மன எண்ணத் தொகுப்பாகவும் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழும் வடமொழியும் தொன்மைச் சிறப்புடைய சமகாலத்தில் ஒன்றி வளர்ந்தமையாலும், திராவிடமொழிகளின் சில இலக்கியப் பொதுமரபுகளாலும் சதக இலக்கியவகை இவற்றுள் அமைந்துள்ளன எனலாம். பாடு பொருளும் இவற்றில் ஒன்றாக அமைந்திருத்தல் நோக்கற்பாலது. மொழிகளின் நெருங்கிய தொடர்பும் இந்தியா முழுமையும் பரவியிருந்த பக்தியியக்கமும் இதற்குரிய காரணங்களாகலாம்.

இயல்பு

தமிழ் இலக்கியப்பரப்பில் எண்ணற்ற வண்ணமலர்கள் புதிது புதிதாகத் தோன்றி மணம் பரப்பிக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்றாகச் சதகமும் விளங்குகின்றது. அந்தாதி, பிள்ளைத்தமிழ், பதிகம் என்பன போன்று மிகப்பேரளவில் அமையாவிடினும் குறிப்பிடத்தக்கச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகச் சிறப்புறுகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் இதன் இடமும் இவ்வகையில் எழுந்துள்ள இலக்கியங்களின் பொதுவான இயல்புகளும், தனித்த சிறப்புகளும் இவண் நோக்கப்படுகின்றன. சதக இலக்கியம் பற்றியதொரு பொதுவான கண்ணோட்டமாக இஃது அமைகிறது.

சதகத்தொகை

கி. பி எட்டாம் நூற்றாண்டில் தோற்றம் காட்டிய இவ் வகையுள் இன்றுவரை இலக்கியங்கள் தோன்றிக்கொண்டிருக் கின்றன. இதுவரையில் சுமார் இருநூற்றிற்கும் மேற்பட்ட சதகங்கள் மலர்ந்துள்ளன. இவ்வெண்ணிக்கையில் கருத்து வேறுபாடுகளும் உள. ந. வீ. செயராமன் தம் தொகுப்பில் 114 நூல்களைச் சுட்டியுள்ளார்.[1] மு. சுப்புலெட்சுமியின் தொகுப்பில் பதிப்பிக்கப்பட்டவை, சுவடியில் உள்ளவை, பெயரளவில் அறியப் பட்டவை என முறையே 41, 26, 50 என்று 117 நூல்களைக் குறிப்பிட்டுள்ளார்.[2]

சில நூல்கள் பற்றிய தெளிவு இன்மையின் இவண் கிடைத் துள்ள சதகங்களின் எண்ணிக்கையை ஐயமறத் தெரிவிக்க இயல

1. ந.வீ, செயராமன்; சிற்றிலக்கியப் புலவர் அகராதி; பாரி நிலையம், சென்னை மு. ப. நவ. 1983; பக்- 119—126
2. மு. சுப்புலெட்சுமி; நோக்கமும் பயனும்—சதக இலக்கி யம் தமிழ்இலக்கியக்கொள்கை கருத்தரங்கு-126; உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்; சென்னை; 16-3-1985; பின்னிணைப்பு

வில்லை. 'அப்துறகுமான் அறபிச் சதகத்தைப் பவானிப்புலவர் என்னும் செய்யது புகாரிப்புலவர் இயற்றியதாக பீ. மு. அஜ்மல் கான் சுட்டுவர்.[3] ஆனால் சாயபு மரைக்காயர், இப்பெயர்களை இருவராகக்கொண்டு, ஒரே பெயரில் இரு சதகங்கள் உள்ளன என்பர்.[4] மற்றும் ந வீ. செயராமன் அரபிச்சதகம் என்றொன்றை அப்துல்ரகுமான் என்பவர் பெயரில் சுட்டுவர்.[5] இந்நூல் முன்னவர் சுட்டுவதினின்றும் வேறுபட்டதா அல்லது ஒன்றா என்பதும் வினாவிற்குரியதாகிறது. 'அப்துறகுமான் அரபிச் சதகம்' என்பதில் அப்துல்ரகுமானை இவர் நூலாசிரியாக எண்ணியுள்ளாரோ எனத் தோன்றுகிறது.

மஸ்தான்சாகிபு பெயரில் நந்தீசர் சதகம் என ஒன்றையும் செயராமன் தருகிறார்.[6] 51 கண்ணிகளால் இயன்ற நந்தீஸ்வரர் கண்ணியே இவர் பாடற்றொகுப்பில் உள்ளது சதகம் பற்றிய விபரத்தினைப் பிறர் அளிக்காமையாலும் மஸ்தான் சாகிபு பாடற் பதிப்புகளில் இதுபற்றிய குறிப்பின்மை யாலும் இதன் எழுச்சி பற்றிய ஐயம் எழுகின்றது. 'நியாயச் சதகம்' என ஒன்றையும் மஸ்தான் சாகிபு பெயரில் சுப்புலெட்சுமி சுட்டுகிறார்.[7] முன்னதைப் போன்றே இதுவும் ஐயத்தைத் தருகிறது. சரசுவதி மகால் ஓலைச் சுவடிகளில் நியாயவிம்சதி வியாக்யானம், நியாய திலகம், நியாயதசகம் எனும் மணிப் பிரவாள நடையில் அமைந்த நூல்களை வேதாந்தாசாரியார் என்பவர் இயற்றியுள்ளதாக அறியமுடிகிறது.[8] எனவே 'நியாய சதகத்திற்கும்' இவருக்கும் தொடர்பு உண்டா என்ற கேள்வியும் பிறக்கிறது. இந்நூல்களின் படிகள் கிடைக்கும் பொழுதுதான் இவற்றிற்கு விடை காணஇயலும். தமிழில் இதுவரை வெளி வந்துள்ள படைப்புகளைப் பற்றிய விளக்கங்களை அறிதற்குரிய

3. பீ. மு. அஜ்மல்கான்; இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள்; பாவலர்பதிப்பகம்; கம்பம்; மு. ப. டிச. 1982 ப.31
4. மு. சாயபு மரைக்காயர்; தமிழ் இலக்கியக்கொள்கை—8; உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை; மு.ப. 1 3 பக். 315
5. ந.வீ. செயராமன்; முன்சுட்டிய நூல்; ப. 174
6. மேற்படி.
7. மு. சுப்புலெட்சுமி; முன் சுட்டியது; ப. 22.
8. L. Olaganatha pillai (ed); A descriptive catalogue of the Tamil Manuscripts in the Tanjore Maharaja Sarafoji's Saraswathi Mahal library, Tanjore vol 2; 1964; P. 18.

வாய்ப்புகள் போதுமானதாகவில்லை. எனவே இங்குத் தொகுத்தளிக்கப்பட்டுள்ள வரிசையிலும்[9] சில விடுபட்டிருக்கலாம். பல நூல்கள் பெயரளவில் மட்டுமே அறியப்படுகின்றன.

தோற்றம்

திருத்தசாங்கம், திருவுந்தியார், திருத்தெள்ளேணம் என்பன போன்று பல புத்திலக்கியப் பாதைகளைக் காட்டிய மணிவாசகர் திருச்சதகம் பாடி இதற்கும் மூலவராக விளங்குகின்றார். 'பத்தி வைராக்கிய விசித்திரமாகத் திருப்பெருந்துறை இறைவன்மீது பாடிய, அந்தாதித் தொடையில் அமைந்த நூறுபாடல்களைக் கொண்டது இச்சதகம். சதகம் என்னும் சொல்லாட்சியையே முதன்முதலில் கொணர்ந்தவர் எனும் பெருமைக்கும் உரியவரா கிறார். எனினும் சதக இலக்கிய வகையின் முதல் நூலாக இதனைக் கொள்ளாது அடுத்து கி.பி. பதினோராம் நூற்றாண்டில் தோன்றிய 'கார் மண்டல சதகத்தை' முதலாவதாகக் கொள்வர்.[10] இஃது பொருந்துமாறில்லை. பல சிற்றிலக்கியங்களின் தொகுப்புதான் திருவாசகம். எனவே திருவாசகத்திற்கு ஒரு பகுதி திருச்சதகம் என்பதைவிட அதனுள் ஒரு சிற்றிலக்கியம் 'திருச்சதகம்' என்பதே பொருந்தும் எனத் தோன்றுகிறது. ஒவ்வொரு திணைக்குமெனத் தனித்தனி நூறு பாடலமைந்த ஐங்குறுநூறு மாணிக்கவாசகருக்கு இச்சதகம் பாடத் தூண்டுதலாய் இருந்திருக்கலாம். எண் வரையறையை இந்நூல் தர, இறைவனைப்பாடவேண்டும் என்ற உணர்வு இவ்விலக்கியப் பொருண்மையை அவருக்குத் தந்தது எனலாம்.

'திருச்சதக'த்தைத் தொடர்ந்த 'கார்மண்டல சதகம்' பொருண்மையமைப்பில் தமிழ் இலக்கிய உலகில் புதுமையைப் புகுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நிலப்பரப்பில் வாழ்ந்த, வாழ்கின்ற பல துறைகளிலும் பெருமைக்குரியோரைச் சிறப்பிப்பதை இத்தகு மண்டல சதகங்களில் காண்கிறோம். புறநானூற்றில் உள்ள அரசர், சிற்றரசர், வள்ளல்களின் சிறப்புரைக்கும் பாடல்கள், தமிழ்ப்புலவர்களைப் போற்றவேண்டும் என்ற விளைவு போன்றன இவ்வாறு ஓரிலக்கியம் படைக்கவேண்டும் என்ற உணர்வை ஆறைக் கிழாருக்கு அளித்திருக்கும் என எண்ணலாம். தொடர்ந்து சில மண்டல சதகங்கள் எழுந்து, கார்மண்டல சதகத்தைத் தமக்கு முன்னோடியாகக் கொண்டுள்ளன. இவைபோன்று தமிழ்

---

9 காண்க—பின்னிணைப்பு—சதகவரிசை

10. ந.வீ. செயராமன்; சதக இலக்கியம்; ப. 11.

நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் எழுந்திருப்பின் தமிழக வரலாறு பற்றிய பல அரிய உண்மைச் செய்திகளைப் பெற்றிருக்க இயலும்.

சதக இலக்கியங்களுள் வாழ்க்கையைவளம்படச்செய்யும்அறச் சதகங்களாகிய வாழ்வியல் சதகங்கள்சிறப்பிடம் கொள்கின்றன. அவற்றுள் முதலாவதாகப் படிக்காசுப்புலவரின் தண்டலையார் சதகம் அமைகிறது. பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்த இந் நூலின் மற்றொரு சிறப்பு பாடல்தோறும் வழக்கில் வழங்கும் பழமொழிகளை இணைத்திருப்பதாகும். அப்பழமொழிகளின் விளக்கமாகவே பாடலின் முன்பகுதி அமைந்து தண்டலையார் சதகம், பழமொழி விளக்கம் என்னும் சிறப்பினையும் பெற்றுள்ளது. இறைவனைப் போற்றுதல், உலகியல் அறம் கூறுதல், பழமொழி பகர்தல் எனும் மூன்றையும் இணைத்து அமைப்பதற்கு இவருக்கு வழிகாட்டியவர் திருநாவுக்கரசர், திருமங்கையாழ்வார்[11] எனலாம். இவரைத் தொடர்ந்து வாழ்வியல் நெறிபகரும் பல சதகங்களும், பழமொழியுடன் இதே அமைப்பினை மேற்கொள்வனவாகச் சிலவும் எழுந்து பெருமைப் படுத்தியுள்ளன.

சதக இலக்கிய வகையை மாணிக்கவாசகர் தொடங்கி வைக்க, அதனுள் புதுமைகளைப் புகுத்தி வழிகாட்டியவர்களாக ஆறைக்கிழாரும், படிக்காசுப் புலவரும் திகழ்கின்றனர்.

வளர்ச்சி

எட்டாம் நூற்றாண்டில் தோற்றம் காட்டினும் அடுத்து மூன்று நூற்றாண்டுகள் கடந்த பின்தான் மீண்டும் மலரக் காண்கின்றோம். எனினும் விரைந்த வளர்ச்சியைப் பதினேழாம் நூற்றாண்டின் பின்தான் காண்கிறோம். அதிலும் சதகங்களின் பொற்காலம் எனக் கூறத்தக்கதாகப் பத்தொன்பதாம நூற்றாண்டே அமைகிறது. இந்நூற்றாண்டில் மட்டும் ஏறக் குறைய 80 சதகங்கள் எழுந்துள்ளமையை அறியமுடிகிறது. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வரராமயோகியின் திருச் செந்தூர்சண்முகசதகம்திருக்குறுங்குடிநம்பிசதகம்என்னும்இவற் றின் பின் பதினேழாம் நூற்றாண்டில் தான் சதகங்களைக் காண் கிறோம். இடைப்பட்ட நூற்றாண்டுகளில் சதகங்களின் இன்மை

11. 'மெய்யெல்லாம் வெண்ணீறு சண்ணித்தமேனியான்' எனத்தொடங்கும் திருவாரூர்ப் பதிகம்—திருநாவுக் கரசர். திருமங்கையாழ்வார்- பத்தாம்பத்து, ஒன்பதாந் திருமொழி.

வியப்பைத் தருகிறது. இதற்குரிய காரணமும் புலப்படுமாறில்லை. இக்கால கட்டத்தில் ஒரு சில சதகங்கள் தோன்றி மறைந்தோ, ஆய்வாளர்களுக்குக் கிட்டாமலோ இருக்கலாம். மற்றும் தோற்ற காலத்தை உணரவியலாது இன்றிருக்கும் சதகங்களுள் சில இக் காலத்தைச் சார்ந்ததாகவும் இருக்கலாம். இது எவ்வாறிருப் பினும் சதகம் எண்ணிக்கையில் தன் வளர்ச்சி நிலையை மிக நீண்ட இடைவெளிக்குப் பின்பே பெற்றுள்ளது என்பது வெளிப் படை.

சதக இலக்கிய வகையுள் எப் பொருண்மையையும் பாட லாம் என்ற நிலையால் மருத்துவம், தத்துவம், வாழ்க்கை வர லாறு போன்றவை கூட இடம் பெற்றிருக்கக் காண்கிறோம். அந்தாதி அமைப்பும் மகுடமிடலும் இதற்கு வாய்ப்பாக இருந் தன போலும். ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் நிற்காது அனை வரிடமும் செல்வாக்கு பெறுதற்கு இது சிறந்த உத்தியாகப் பயன்பட்டு, சதக இலக்கியத்துள் ஒரு வளர்ச்சி நிலையாகவும் அமைகிறது.

செம்மையிலக்கியங்கள் பாமரருக்கும் சென்றடைய வேண் டும் என்ற உணர்வினைச் சதக இலக்கியம் கொண்டிருந்தமையை வாழ்வியலைக் காட்டும் சதகங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பாவலருக்கு மட்டுமின்றிப் பாமரரும் இலக்கிய இன்பம் பெற, வேண்டும் என்ற உணர்வு வளர்ச்சிக்கு வடிகாலாக இச்சதகங் கள் செயல்பட்டுள்ளன எனலாம். 'பொது அறிவுக்காகச் சில நூற்றாண்டுகளுக்கு முன் சதகங்கள் தோன்றின. இச்சதகங்கள் வாயிலாக மக்கள் அக்காலத்துக்கு வேண்டுவனவாகக் கருதப் பட்ட பொது அறிவைப் பெற்றார்கள்' எனும் கூற்றும்[12] இங்கு இணைத்துக் காண தக்கது.

மக்களுக்கு அறங்கூறும் நூலாக அமைந்த பழமொழி நானூற்றைப் பின் பற்றி எழுந்ததாகக் கருதக் கூடிய பழமொழி விளக்கம் எனும் தண்டலையார் சதகம் இறைமையையும் உடன் இணைத்து வளர்ச்சி காட்டுகிறது.

வைதிடினும் வாழ்த்திடினும் இன்ப துன்பம்
வந்திடினும் வம்பு கோடி
செய்திடினும் தண்டலை நீள் நெறியார் தம்
செயலென்றே தெளிவ தல்லால்
மெய் தவிர அவர் செய்தார் இவர் செய்தார்
என நாடி வெறுக்க லாமோ!

---

12. அ. கி. பரந்தாமனார், வாழ்க்கைக் கலை; பாரி நிலையம்: சென்னை, ஏ. ப. 1970; ப. 124.

எய்தவர்தம் அருகிருக்க அம்பை நொந்த
கருமம் என்ன? இயம்பு வீரே! (50)

எனும் இப்பாடலைக் காட்டாகக் கொள்ளலாம். ஒருவர் தம் முடைய வாழ்வில் நிகழும் இன்ப துன்பங்களுக்குப் பிறரைக் காரணம் காட்டுதல் தேவையற்றது. பிறர் தம்மை இகழ்ந்தாலும். வாழ்த்தினாலும், தடை பல இடினும் அதற்காக அவர்களை நோகாது. அனைத்திற்கும் இறைவனே பொறுப்பு என எண்ணு தலே இவற்றால் ஏற்படும் மனத் துயரங்களுக்கு வடிகாலாகும் புகழ்ப் போதையில் மயங்காது வாழ்வில் முன்னேறவும் இயலும் எய்தவன் இருக்க அம்பை நோவானேன்? என்பது இப்பாடற் பொருள். இங்கு வாழ்வில் கடைப் பிடிக்க வேண்டிய நெறி யினை வழக்கில் வழங்கும் பழமொழியைச் சுட்டி அறிவுறுத்தல் அமைகிறது. உடன் இறைப் பற்றினையும் இணைத்திருக்கக் காணலாம். வாழ்வியல் நெறி பறையும் சதகங்கள் பல இந்நிலை யிலேயே அமைந்து தமிழ் இலக்கிய வரலாற்றுள் ஓர் வளர்ச் சியைக் காட்டுகின்றன.

'நீதிகள் பல நல்ல உவமைகளோடு உணர்த்தப் பட்டமை யால், சுவை குன்றாமல் இருந்தன. பலரும் கற்பதற்கு உரிய வகையில், அந்த நூல்களின் நடை எளிமையும் ஓட்டமும் உடைய தாக உள்ளது. எதுகை மோனைகள் மனப்பாடம் செய்வதற்கு உதவியாக அமைந்துள்ளன. தமிழ்ச் செய்யுள்களின் நடை படிப் படியாக எளிமை பெற்று வளர்ந்த வளர்ச்சியை அந்த நூல்களில் காணலாம்' என்று மொழி நடையிலும் சதகங்கள் வளர்ச்சி நிலை காட்டியுள்ளதைச் சுட்டுவர்.[3]

சமுதாயத்தில் செல்வாக்கு பெற்றோரின் வரலாறுகளை முறைப்படி உணர்த்த வேண்டும் என்ற உணர்வினைப் பிற இலக் கிய வகைகளில் காணலரிது. இவ்வுணர்வினை உட்கொண்ட நிலையில் மண்டல சதகங்கள் எழுந்து தமிழ் வரலாற்றில் வளர்ச் சியைக் காட்டியுள்ளன எனலாம். புறப்பாடல்களில் காணப்படும் நாட்டு வளம், நகர் வளம் பகுதிகளும், காப்பியங்களில் இடம் பெறும் நாட்டு, நகரச் சிறப்புகளும், பாட்டியல்கள் சுட்டும் ஊர் வெண்பா போன்றனவும் இவ்வகை சதகங்களின் தோற்ற எழுச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்திருக்கலாம்.

இவ்வாறாகச் சதகங்கள் தம்முள் காட்டும் வளர்ச்சி நிலை. தமிழ் இலக்கிய வளர்ச்சியாகவும் வரலாற்றில் அமைந்து நிற்றல் குறிப்பிடற்பாலது.

---

13. மு. வரதராசனார்: தமிழ் இலக்கிய வரலாறு; சாகித்திய அக்காதெமி; புதுதில்லி; நா. ப. 1980; ப. 220.

வகைகள்

சதகங்கள் தம் இயல்பால் சில வகைப்பாடுகளைக்கொள்கின்றன. விருத்தப்பாவில் அமைவன, வெண்பாவாலமைவன, கலித்துறையாலமைவன என யாப்பு நிலையிலும் பிரிக்க இயலுமாயினும் பொருளடிப்படையில் வகைப்படுத்தல் இங்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது. வரலாற்று நூல்கள், துதி நூல்கள், நீதி நூல்கள் என்று பகுத்து இவற்றின் கீழ் சில உட்பகுப்புகளையும் தருவர்.[14] அது எல்லாச் சதகங்களையும் உள்ளிணைக்கும் முழுமை பெற்றதாக அமையவில்லை. சான்றாக அகப்பொருள் அமைந்துள்ள சிருங்கார சதகங்கள் அப்பகுப்பு முறையுள் அடங்கவில்லை. மண்டல வரலாறும், தொண்டர் வரலாறும் ஒரே பிரிவின் கீழடங்குதலும் பொருத்தமானதாகத் தோன்ற வில்லை. வரலாற்றிற்கும் வாழ்க்கை வரலாற்றிற்கும் வேறுபாடுண்மையின் அவற்றை இணைத்தல் வினாவிற்குரியதாகிறது. ஆகவே இங்கு மற்றொரு முயற்சி மேற்கொள்ளப் படுகிறது.

பக்தி, வாழ்வியல், தத்துவம், வரலாறு, மருத்துவம், அகம், பாடாண், வாழ்க்கை வரலாறு எனச் சதகங்கள் தம் பொருண்மை அடிப்படையில் வகைப்படுகின்றன. இவற்றின் மிகுதி குறித்து இங்கு வரிசைப் படுத்தப் பட்டுள்ளன. இறைவனைப் போற்றி வழிபடுவதாக அமைவன பக்திச் சதகங்களாகின்றன. வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும், எப்படி அமைந்திருக்கிறது என வாழ்நெறியைச் சுட்டுதல் வாழ்வியல் சதகங்களாகின்றன. சமயக் கொள்கைகளை விளக்குவன தத்துவத்தின் பாற்படுகின்றன. இங்கு இதனைப் பக்திச் சதகங்களுடன் இணைத்துக் காணலாமே என்ற வினா எழலாம். இரண்டும் சமயம் சார்ந்த நிலையில் ஒன்று படினும் முன்னது

---

14. சதக இலக்கியங்கள்

வரலாற்று நூல்கள்	துதி நூல்கள்	நீதி நூல்கள்
அ) மண்டல வரலாறு	அ) தனியே அமைந்த துதி நூல்கள்	அ) நீதி கூறுவன
ஆ) தொண்டர் வரலாறு	ஆ) வள்ளல் பெயர் இணைந்த துதி நூல்கள்	ஆ) உலகியல் கலைச்செய்தியுடன் நீதி கூறுவன
	இ) பழமொழி அமைத்த துதி நூல்கள்	
	ஈ) பழமொழி, உதாரணக் கதை அமைத்த துதி நூல்கள்	

ந. வீ. செயராமன்; சதக இலக்கியம்; ப. 16

இறைவனைப் போற்றுதலாகவும், பின்னது அவ்வவ் சமயத்தின் கொள்கைகளை விளக்குவதாகவும் நிற்றலின் தனித்தனியே பிரிக்கப்பட்டுள்ளன. சமய நூல்களைத் தோத்திர நூல் என்றும் சாத்திர நூல் என்றும் பகுத்துரைத்தலையும் இங்குக் காணலாம்.

குறிப்பிட்ட நிலப்பகுதியின் பெருமை பேசுவனவரலாற்றுச் சதகங்களாகின்றன. உடல்நலம் பேணும் மருத்துவத்திற்கு முக்கியத்துவம் தரும் சதகங்கள் மருத்துவச்சதகங்களாகும். அகப் பொருளைப் போற்றும் சிருங்கார சதகங்களை அகச்சதகங்கள் என்றும், தன்னைப் புரந்த வள்ளலைப்போற்றி நிற்பனவற்றைப் பாடாண் சதகங்கள் என்றும்—ஒருவரின் வாழ்க்கையைவிவரித்துச் செல்வதை வாழ்க்கை வரலாற்றுச் சதகங்கள் என்றும் மொழிய லாம். இவ்வகைகள் சதகங்களில் மிகக்குறைவாகவே காணப்படு படுகின்றன.

பக்திச் சதகங்களும் அதனை அடுத்து வாழ்வியல் சதகங் களுமே சதக இலக்கியங்களில் பெரும்பான்மையாக அமை கின்றன. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை தமிழ் இலக்கியவரலாற்றில் பக்திப் பொருண்மையே மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்த மையைக் காண்கிறோம். உரைநடை யிலக்கியங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிவிட்ட போதிலும், பக்தியிலக்கியங்கள் தம் சிறப்பிற் குன்றாதே இருந்தன. எனவே சதகங்களுள் பெரும்பான்மையாகப் பக்திச் சதகங்கள் அமைதல் இயல்பாயிற்று.

திருக்குறள், நாலடியார், பழமொழிநானூறு போன்று எக்களுக்கு அறங்கூறவேண்டும் என்ற நோக்கமும் அதனை அன்றைய சமுதாயத்திற்கு ஏற்ப மொழியவேண்டும் என்ற விழைவும் வாழ்வியல் சதகங்களின் பெருக்கத்திற்குக் காரணமாக லாம். மற்றும் இதில் பக்தியையும் அறத்தையும் இணைத்துக் காட்டும் வாழ்வியலைக் காண்கிறோம். பக்தியிலக்கியங்களில் ஆங்காங்கே காணப்பட்ட அறவுரைகள், இங்குத் தனித்த இலக்கியங்களாக உருப்பெற்றுள்ளதாகவும் கொள்ளலாம்.

1. கடவுளை முன்னிலைப்படுத்தி உலக இயல்புகளையும் அறவுரைகளையும் அறிவுநெறிகளையும் பாடுவது. 2. நன்றி பாராட்ட எண்ணி வள்ளலின் பெயர் கூறி அறநெறிகளையும் உலக இயல்புகளையும் கூறுவது. 3. நீதிநெறிகளையேயன்றிச் சோதிடம், அசுவ சாத்திரம் முதலிய கலைகளையும் கலந்து இயற்றுதல். 4. கடவுளின் அருட்செயல்களையும் புகழ்ப்பெருமை களையும் பாராட்டிப் பாடுதல். 5. பழமொழிகளை அமைத்துக் கருத்துக்களைத் தெளிவுபடுத்திக் கடவுளைப் போற்றுதல். 6. ஒரு

நாட்டைச் சிறப்பித்துப் பாடுதல், எனப் பாடுபொருள்—நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆறுவகையாகச் சதகங்களைப் பிரித்தலும் உண்டு.[15]

சதகத் தலைப்புகள்

சதகங்கள் பெரும்பாலும் தம் பாட்டுடைத் தலைவர் பெயராலேயே அவையாம்பிகை சதகம், பழனியாண்டவர் சதகம் என்பன போன்று அமைகின்றன. ஊர்ப்பெயர் இணைவுடன் 'திருப்புகழி விசயராகவ சதகம்' என்றாவதுமுண்டு. வரலாற்றுச் சதகங்களும், வாழ்வியலறம் உரைக்கும் சதகங்களுள் சிலவும் தம் தலைப்பிலேயே 'பாண்டிமண்டல சதகம்' 'மனுநீதிச் சதகம்' என்று அதனை உணர்த்திவிடுகின்றன. மருத்துவம் மற்றும் அகப்பொருட் சதகங்களும் இவ்வாறே வைத்தியநாடி சதகம், பூவைச் சிங்காரசதகம் எனப்பெயர் பெறுகின்றன. நூலாசிரியரின் பெயரும் இணைந்தமைவதை தட்சிணாமூர்த்தி நாடி சதகத்தில் காண்கிறோம். கதை கூறும் சதகங்கள் அவ்வவ் கதையின் பெயராலே 'கந்தபுராண சதகம்' என்பது போன்று அமைகின்றன. நூலின் இயல்பையும் உணர்த்தும் வகையில் 'காதல் அருவி' என்பதுபோன்றும் அமைவதுண்டு. மகுடம் பெறும் நூல்கள் அதனையே தம் நூற்பெயராகக் கொள்கின்றன. (குமரேசசதகம்) ஏனைய சிற்றிலக்கியங்கள் பெயர் பெறுநிலையுடன் ஒத்தே சதகங்களும் அமைந்துள்ளன.

அமைப்பு

நூறுபாடல்களைக் கொண்டது சதகம் என்பது பொதுவான நிலையாகும். காப்பு, அவையடக்கம், பாயிரம், வாழ்த்து, நூற்பயன் முதலான தமிழிலக்கியப் பொதுக்கூறுகளைப் பல சதகங்கள் மேற்கொண்டுள்ளன. நூறு எனும் பாடற்றொகையை மீறிய நிலையிலும் பல சதகங்கள் காணப்படுகின்றன. பொன்னுசாமி முதலியாரின் 'அர்ச். தேவமாதா பேரிற்சதகம்' 117 பாடல்களைக் கொண்டு, தமிழ்ச்சதகங்களில் மிகப்பெரியதாக அமைகிறது. அடுத்த நிலையில் 112 பாடல்களையுடைய கஞ்சகிரி சித்தேசர் சதகம் அமைகிறது. சிவலிங்க சதகம், மதலைச்சதகம், கழுகாசல சதகம் என்பன முறையே 35, 41, 41, பாடல்களுடன் நூல் முழுமைபெறாத நிலையில் அமைந்துள்ளன. இவைமட்டுமே பாடப்பட்டவையா அன்றிப் பாடி இழக்கப்பட்டனவா என்பது தெரியவில்லை.

---

15. ச. வே. சுப்பிரமணியன்; தமிழ் இலக்கியவகையும் வடிவும்; பக். 465

பொதுவாகச் சதகங்கள் தனித்தனி பாடல்களின் இணைவாக அல்லது பத்துப்பத்துப் பாடல்களின் இணைவாக அமைகின்றன. இவற்றிற்கேற்றாற்போல் நூல் உட்தலைப்புகளைப் பெறுகிறது. முன்னதற்குத் திருப்புல்வயல் குமரேச சதகத்தையும், பின்னதற்கு மஸ்தான் சாகிபுவின் அகத்தீசர் சதகத்தையும் சுட்டலாம். மச்சரேகை சித்தரின் சதகங்களின் உட்தலைப்புகள் பதிகங்களாகவே குறிக்கப்படுவது தனித்த அமைப்புடையதாகிறது. காட்டாக வேதாந்த சதகம், ஏகப்பதிகம், மித்தைப் பதிகம், நமக்குப்பதிகம், திருவருள் பதிகம், நிவர்த்திப் பதிகம், சுகப்பதிகம், நித்திரைப் பதிகம், பாரேன் பதிகம், பொதுப்பதிகம், நிரங்குசப்பதிகம் என்று பெயர் பெற்றுள்ளமையைத் தரலாம்.

மஸ்தான் சாகிபு தம் இரு சதகங்களிலும் பத்துப்பத்துப் பாடற் பகுப்பு முறையைக் கையாண்டுள்ளதுடன் அவற்றின் பொருண்மையை,

'அப்பொருள் தானே எப்பொருட் குணமும்
ஒப்பியு மொப்பா தாகிய வுண்மையைப்
பிரியாது தெரிசிக்கப் பிரியமா யெனக்கும்
கருணைகூர்ந் தருள்கெனக் கனிந்துநின் றிரத்தல்'
(முகியித்தீன் சதகம்)

என்பதுபோன்று முதற்கண்ணொரு விளக்கமமைத்தல் நவிலற்பாலது. அகத்தீசர் சதகத்தில் இத்துடன், மற்றுமோர் படி மேற்சென்று ஒவ்வொரு பாடலுக்குமே, மனமிடை யாமலென்னை யெற்குமாளாக அயர்ந்து நடனமிட நயனமிட வரவேண்டும்' (46) என்பது போன்றுரைத்தலும் நோக்கத்தக்கது. பிறர் 'தெய்வத்திறம், அந்தணர் சிறப்பு, அரசரியல்பு......' என்றமைத்துள்ளமையை இலக்கிய நயம் மற்றும் புதுமை கருதி இவ்வாறு மாற்றியுள்ளார் எனலாம்.

தண்டபாணி சுவாமிகளின் சடகோபர் சதகத்தந்தாதி, மூத்த பிள்ளையார் திருச்சதகம் போன்ற பக்திச் சதகங்கள் பல தனித்தலைப்புகள் அற்றநிலையில் அமைந்துள்ளன. இந்நூல்கள் கொள்ளும் பாவால் பகுக்கப்பட்டு நிற்றல் சுட்டத்தக்கது. அழகு முத்துப்புலவரின் மெய்கண்ட வேலாயுத சதகம் போன்று ஒரே யாப்பின்கீழ் உட்தலைப்புகள் ஏதுமின்றி அமைதலும் உண்டு.

இவற்றினின்றும் தனித்த நிலையில் அமலகுரு சதகம் அமைந்துள்ளமை சுட்டற்பாலது. இங்கு நூலிடையே பகுப்புகள் உண்டு. ஆயின் அவை குறிப்பிட்ட விகிதத்தில் அமையவில்லை. சுத்தஜீவியம் 1—32, குழந்தைக்கிருத்தவர்கள் 33—38, ஆச்சரிய

அன்பு 39—41, உபதேச மயக்கம் 42—43, தெளிதல் 44, அகோசர அன்பு 45—51, விசுவாச வாழ்க்கை 52—100 எனும் ஏழுபிரிவாக நூலமைந்துள்ளது. இங்கு ஒரிரு பாடல்கள் கூடத் தனிப்பகுதியாக நிற்றல் காணத்தக்கது. மற்றும் இதன் எல்லாப் பாடல்களுமே 'இறைவனின் குணம் தொண்டரிடம் மலரவேண்டுதல்' (1) என்பதுபோன்று தலைப்பும் கொள்கின்றன.

விநாயகர் மட்டுமின்றிப் பிறதெய்வங்களையும் காப்பாகக் கொண்டு காப்பு பாடுதலைச் சதகங்களில் காணலாம். யோகேஸ்வரியைக் காப்பாகக் கொண்டுள்ள மீனாட்சி சதகத்தைக் காட்டாக்கலாம். நபிகள் புகழ்பாடும் தக்கடி ஷெய்குபஸீரின் 'மெய்ஞ்ஞான சதகம்' பத்துப்பாடல்களைக் காப்பாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சார்ந்த சமயத்திற்கேற்ப காப்புத் தெய்வங்களும் அமைகின்றன.

நூலின் இறுதி, அருணாசல சதகத்தின், வாழ்த்துப் பகுதி போன்று,

படியாளு மன்னவர் வாழவும்
பரிவோடு மன்னுயிர் வாழவும்
முடியா மறைதான் வாழவும்
முதலான சைவம் வாழவும்
கடியா நெறித்தமிழ் வாழவும்
கவிவாணர் யாவரும் வாழவும்
அடியார்கள் வாழவும் நன்கருள்
அருணாசலா? அருணாசலா? (101)

என்று நிறைவுறுதலும் உண்டு. "...பாடலொரு நூறு நாடி நன்னயமதாகப் படித்தபேர், கேட்டபேர் நாடொறுங் கற்றபேர்கள் ஞானயோகம் பெறுவர்; பதவியாவும் பெறுவர்; நன்முத்தியும் பெறுவரே' என்று குமரேசசதகம் போன்று பயன்காட்டி நிற்றலும் உண்டு. இவ்வாறு வாழ்த்தோ, பயனோ இன்றித் தண்டலையார் சதகம் போன்று நூற்கருத்துடன் மட்டும் நின்றுவிடுதலையும் காணலாம்.

தண்டபாணி சுவாமிகள் தம் சடகோபர் சதகத்தந்தாதியில் பத்துப் பாடல்களுக்கொருமுறை,

களவில் சிந்தைக் கவின் சடகோபனை
அளவளாவி அமைவதைத் தான் சொல் நூற்(று)
உளவராம் இவ்வொருபது பாடலும்
துளவ மாயன் மெய்த் தொண்டரில் கூட்டுமே (22)

என்று நூலின் பயன் பாடிப் புத்தமைப்பைத் தருகிறார்.

அகத்தீசர் சதகத்தின் இறுதியில் அந்நூல் பற்றிய அறிமுக உரை ஒன்றும் மதிப்பீடு போல் விருத்தத்தில் அமைந்து நிற்றல் நவிலத்தக்கது. இதனை அடுத்தே நூலின் பயன் அமைந்துள்ளது

ஒரு சில சதகங்கள் தமக்கு இருபெயர்களைக் கொண்டுள்ளன. இதற்குப் பாட்டுடைத்தலைவர் பொறுப்பேற்கிறார் எனலாம். இதற்கு நாராயண பாரதியின் மணவாள நாராயண சதகம் என்னும் திருவேங்கட சதகத்தைக் காட்டாக்கலாம். நூலாசிரியர் இறைமையைப் பாடும்பொழுது தமக்குப் பெருமையளித்த புலவரையும் உடன்போற்றக் கருதிப் பாடல் தோறும் திருமாலை முன்னிறுத்துவதுடன் அவரையும் இணைக்கிறார். 'மணவாள நாராயணன் மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே வரத வேங்கடராயனே' என்பது போன்று அஃதமைந்துள்ளது. இதன் காரணமாக நூலும், பாட்டுடைத் தலைவர் யார் என்ற ஐயப்பாட்டு நிலையில் இரட்டைத் தலைப்பைப் பெறுகிறது. கோவையிலக்கியங்களில் அமையும் பாட்டுடைத் தலைவன், கிளைவித்தலைவன் இயல்பினை இங்கு இவை நினைவூட்டுகின்றன எனலாம்.

மற்றும் இறைத் தத்துவத்தை விளக்கும் சதகம் அருண் மொழி விளக்கம் என்னும் திருநசரையார் சதகம் என்றும் க. வேற்பிள்ளையின் ஈழமண்டல சதகம், சந்திரமௌலீசர் சதகம் என்றும் பெயர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கன.

செம்மையிலக்கியங்களில் பெருந்தெய்வங்களே பெரும்பாலும் பாட்டுடைத் தலைவராக அமைதல் இயல்பு. நாட்டுப்புற இலக்கியங்கள்தான் சிறு தெய்வங்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டமையை மிகுதியாகக் காண்கிறோம். இம் மரபு மாற்றத்தை ஒரு சில சிற்றிலக்கிய வகைகளிலும் காண்கிறோம். இங்குச் செல்லாண்டியம்மன், வேலங்குடி கறுப்பண சாமி எனும் சிறு தெய்வங்களின் பேரில் முறையே செல்லாண்டியம்மன் சதகம், சிவகங்கை சீமை பூங்கொன்றை வேலங்குடியில் எழுந்தருளியுள்ள கறுப்பண்ணசுவாமி சதகம் போன்றன மலர்ந்துள்ளன. அரசியற்றலைவர் மீது சிற்றிலக்கியம் பாடும் மரபு தற்காலத்தில் வளர்ந்திருக்கக் காண்கிறோம். அவ்வகையில் 'காந்தி சதகம்' அமைகிறது.

சதகயிலக்கியத்தைப் பிற சிற்றிலக்கியங்களிலிருந்து பிரித்துக் காட்டுவதாக, பாடல்களின் ஈற்றடி அல்லது ஈற்றுப்பகுதி நூல் முழுமையும் ஒன்றி வருவதான மகுடமமைத்தலும் அமைகிறது. இது 'எம்பிரானே' (எம்பிரான் சதகம்); 'தொண்டை மண்டலமே' (தொண்டைமண்டல சதகம்), 'அருமை மதவேள் அனுதினமும்

மனதில் நினை தரு சதுரகிரி வளர் அறப்பளீசுர தேவனே" (சதுரகிரி அறப்பளீசுர சதகம்) என்பன போன்று, ஒருசொல், இருசொல் மற்றும் நீண்ட தொடராகவும் அமைதலைக் காண்கிறோம். ஆனால் இவ்விதியை எல்லாச் சதகங்களும் பின்பற்றவில்லை. முதல் நூலானத் திருச்சதகத்தில் இம்மகுட அமைப்பில்லை. எனவே இதனைப் பிற்கால வளர்ச்சியாகவும் கொள்ளலாம். கார்மண்டல சதகத்தின் வழி இடையே தோன்றிய இது பிற்காலத்தில் படிக்காசுப் புலவரின் தண்டலையார் சதகம், கே.பி. அறிவானந்தத்தின் மூத்தபிள்ளையார் திருச்சதகம் போன்றவற்றில் போற்றப்படவில்லை. சொல்லவரும் கருத்துகளை முழுநிலையில் உணர்த்த இது தடையாக இருப்பதாகப் புலவர் நினைத்துத் தவிர்த்திருக்கலாம்.

தண்டலையார் சதகத்தின் ஒவ்வொரு பாடலும் இறுதியில் ஒவ்வொரு பழமொழியுடன் நிறைவுறுதல் குறிப்பிடத்தக்கது. பழமொழிகளுக்குச் சிறப்புதரும் மற்றொரு நூலான கோவிந்த சதகம் 'அச்சுதாநந்த கோவிந்தனே' எனப் பாடல்தோறும் முடிவுற்றிருப்பதும் இவண் சுட்டத்தக்கது. முத்தப்பச் செட்டியாரின் செயங்கொண்டார் சதகம் மூன்றாம் அடியில் பெரும்பாலும் 'செயங்கொண்டாரே' என ஈறொப்புமை பெற்றிருப்பதும் நவிலற்பாலது. இம்மகுட அமைப்பில் பெற்றுள்ள நூல்கள் அதனையே தம் பெயராகவும் கொண்டுள்ளமை முன் குறிக்கப்பட்டுள்ளது.

மணிவாசகர் பின்பற்றியுள்ள அந்தாதி அமைப்பு சடகோபர் சதகத்தந்தாதி, வைராக்கிய சதகம், மூத்த விநாயகர் திருச்சதகம் எனச் சிலவற்றில் மட்டுமே காணப்படுகின்றது. பாடலிறுதியிலமையும் மகுடம், இவற்றில் இன்மைக்கு இதுவும் காரணமாக அமையலாம்.

பக்திச் சதகங்கள் ஏனைய பிற பக்தியிலக்கியங்களைப் போன்றே அமைகின்றன. பக்திச் சதகங்களுக்கு வழிகாட்டிய மணிவாசகர்,

> யானேதும் பிறப்பஞ்சேன்
> இறப்பதனுக் கென்கடவேன்
> வானேயும் பெறில் வேண்டேன்
> மண்ணாள்வான் மதித்து மிரேன்
> தேனேயு மலர்க் கொன்றைச்
> சிவனே யெம் பெருமானெம்
> மானேயுன் னருள் பெருநாள்
> என்றென்றே வருந்துவனே (12)

என்று இறையருளுக்கு ஏங்கிப்பாடியுள்ளதுபோன்றும், இறைவன் பெருமை, அவன் அடியாருக்கு அருளும் தன்மை, புராணக் கதைகள் போன்றவையும் இங்கு இடம் பெறுகின்றன. இராமாயணம், கந்தபுராணம், பாரதம் இவற்றின் கதைகளும் சதகங்களாக வடிவம் கொண்டுள்ளமையும் இதன் பாற்படு கின்றன. வைகுந்த சதகத்தில் இராமாயண, பாரதக்கதைகளின் இணைவினைக் காணலாம். இறைவன் பெருமையைப்போற்றும் நிலையில் இவை அமைகின்றன எனலாம். இக்கதைகளுள் இராமயணம் பெருஞ் சிறப்புப்பெறுவதை அதன்மீது நான்கு சதகங்கள் எழுந்துள்ளமை தெளிவாக்குகிறது. கேசவ சுப்பராயரின் இராமாயண சதகம் முழுநிலையில் கம்பனைப் பின் பற்றிக் கம்பராமாயணச் சுருக்கமாக அமைகின்றதோ என்று வியக்கும் வகையில் உள்ளது. சான்றாக ஒரு பாடல்:

தண்ணறுங் கமலத் தணங்கெழுந் தேகலுந்
தனதுள் மருண்ட னுமனச்
சானகியெனுங் கற்ப னற்றீண்ட வஞ்சியெந்
தசரத னருந்த வத்தோங்
கண்ணலே ஸ்ரீராம ராமவென் னாவிளித்
தங்கை கணை யாழி தரலும்
அகமகிழ்ந் தெனதுநா யகன்றிங்க ளொன்றிலிங்
கடைந்திலா னேலென் னுயிர்
நண்ணிலே னாற்றனது நாயகிக் குக்கடன்
நடத்து மென் றும்மீண் டுமேல்
நான்பிறந் தவர்மேனி யைத்தீண்டு மோர்வரம்
நல்குமென் றும்புக லெனாக்
கண்ணீ ருகச்சொலித் தந்த சூடாமணி
கையேந்தி யனும னேத்துங்
கங்கையுறு மதிபாத சங்கையறு நீதிசீத
கங்கைதரு பதி நாதனே (22)

கோயிலில் நடக்கும் சிறப்பு விழாக்களும் சதகமாக உருவெடுப்பதைச் 'சுப்பிரமணிய சுவாமி பிரபாவ சதக'த்தால் அறியமுடிகிறது. இந்நூல் மு. அனந்தபத்மநாப பிள்ளையால் பாடப்பெற்றது. இது கீலக ஆண்டு (1909) மார்கழிமாதம் 17ஆம் நாள் நடைபெற்ற செந்தில் நகர்வாழ் குகப்பெருமானின் பிரதிட்டை வைபவம் பற்றி உரைக்கிறது. அறிவு ஆனது கலக்கம் கொள்வதற்கான காரணங்களையும், அவற்றிலிருந்து விடுபட்டு இறைவனை அடைதற்குரிய வழிகளையும் சுட்டும் மச்சரேகை சித்தரின் சதகம் 'காரண சதகம்' என்றே பெயர் பெற்றுள்ளதும் கூறத்தக்கது.

திருவாய்மொழியின் ஆரம்பத்திலுள்ள 'உயர்வற' என்னும் பாடலின் விரிவான விளக்கமே (விவரணம்) மற்ற ஆயிரம் பாடல்களும் என்று அதற்கேற்ப ஒவ்வொரு பாடற்கும் பொருள் பொருந்த, மணிப்பிரவாள நடையில் அமைந்ததே திருக்கோனேரி தாஸ்யையின் 'திருவாய்மொழி வாசகமாலை எனும் விவரண சதகம்' என்பர்.

மெய்யப்பச் செட்டியாரின் திருவருள் சதகம், சிவன், சுப்பிரமணியர், திருமால் ஆகிய மூவரையும் போற்றிப் பாடுவதாக அமைந்திருத்தல் சுட்டத்தக்கது. இதனைப் பின்பற்றி நா. கனகராஜையர் தம் காசி விசுவேச சதகத்தில் இந்தியாவில் சிறப்பாகத் தமிழகத்தில் உள்ள புகழ்வாய்ந்த இறைவனின் உறைவிடங்களைச்சமயக் காழ்ப்பின்றிச் சமண ,புத்த தலங்களை யும் தொகுத்துள்ளமை சிறப்பாகும். பல தலங்களின் சிறப்புகளை யும் ஒருங்கே காண்பதற்குரிய பெருமைபெற்ற இந்நூல் இன்னும் அச்சிடப்படாமலிருப்பது பெருங்குறையாகும். ஈழத்துத் திருப்பதி களும் இங்குப் பேசப்பட்டுள்ளன.

வாழ்வியற் சதகங்கள் தனிமனித வாழ்க்கையைச் சீர் செய்ய உதவிடும் அதே வேளையில் குறிப்பிடத்தக்கவளவு சமுதாய வாழ்வினையும் காட்டுகின்றன. வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல பழக்கவழக்கங்கள், விடவேண்டிய தீயகுணங் கள் எனச் செம்மையான நெறிமுறைகளையும், சமுதாயத்தில் நல்லவர் யார், தீயவர் யார் என்று இனங்காட்டுதலையும், ஒவ்வொருவரின் கடமைகளைச் சுட்டுதலையும், நான்கு சாதி யினரின் இயல்பினைப் பேசுதலையும் காணமுடிகிறது. மற்றும் அச்சமுதாயத்தில் நிலவிய நம்பிக்கைகள், சோதிடம், இறை வழிபாடு, கலைகள் போன்ற பலவும் எடுத்துரைக்கப்படுகின்றன. மனித வாழ்வோடு இணைந்துள்ள யாவற்றையும் அவற்றின் நன்மை தீமை சுட்டி மேற்கொள அல்லது விடுவிக்க வேண்டி யதன் தேவையை வலியுறுத்துவதில் இவை முனைந்துள்ளன எனலாம்.

இச்சதகங்களில் எவ்வித வரன்முறையும் பின்பற்றப்படுவ தாகத் தெரியவில்லை. கூறுமுறையிலும் தொடர்பினைக் காணுதல் அரிது. ஒவ்வொரு பாடலும் ஏதேனும் ஒரு கருத்தைச் சிறப்பித்துரைக்கிறது. பெரும்பாலும் பக்திச்சதகங்கள் போன்று இறைவனை முன்னிறுத்தி இவை மொழிந்துள்ளமை நோக்கற் பாலது. பக்தியையும் அறத்தையும் இரண்டறக் கலந்துரைக்க வேண்டும் என்ற விழைவே இச்சதகங்கள் என எண்ணத் தோன்றுகிறது.

செத்தும் சாகாதவர்
அனைவர்க்கு முபகார மாம்வாவி கூவமுண்
டாக்கினோர் நீதி மன்ன
ரழியாத தேவால யங்கட்டி வைத்துளோ
ரறங்கள் செய்த பெரியோர்
தனையொப்பி லாப்புதல் வனைப்பெற்ற பேர்பொருது
சமர் வென்ற சுத்தவீரர்
தரணிதனி னிலைநிற்க வெந்நாளு மாறாத
தருமங்கள் செய்த பேர்கள்
கனவித்தை கொண்டவர்க ளோயாத கொடையாளர்
காவியஞ் செய்த கவிஞர்
கற்பினின் மிகுந்தவொரு பத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்தோர் களிம்
மனிதர்கள் சரீரங்கள் போகினுஞ் சாகாத
மனிதரிவ ராவ ரன்றோ?
மயிலேறி விளையாடு குகனே! புல்வயனீடு
மலை மேவு குமரேசனே! (31)

என்று குமரேச சதகத்தில் குருபாததாசர் பாடியிருப்பது போன்றே இவை அமைகின்றன. தண்டலையார் சதகம், கோவிந்த சதகம் போன்றன இவ்வாழ்வியலை விளக்கப் பழமொழிகளைத் துணைகொண்டுள்ளன. ஒவ்வொரு பழமொழி யின் கருத்தையும் பாடலாக்கித் தந்துள்ளனர். பொதுநிலை யிலும் பழமொழிகள் சதக இலக்கியங்களில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளன. பாமரருக்கும் புரியும் வண்ணம் படைக்கப்பட்ட இச்சதங்களில் அவர்களுக்குக் கூறவந்த கருத்தை அவர்களறிந்த ஒன்றின் வழி விளக்குதல் நன்று என்ற நோக்கில் இங்குப் பழமொழிகள் கையாளப்பட்டிருக்கக் கூடும் என எண்ணத் தோன்றுகிறது. செயங்கொண்டார் சதகம் பழமொழிகளின் விளக்கத்திற்குப் புராண, இதிகாசக் கதைகளைக் கொண் டிருப்பதும் இவண் இயம்பற்குரியது. சமயஞ்சார்ந்த இலக்கியங் களே வளம்பெற்றிருந்த அக்காலத்தில் வாழ்வியலைப் பேசுகை யில் கூட இறைச்சார்பு இருந்தால்தான் மக்களிடையே செல்வாக்கு பெறும் என்ற எண்ணமும் இதற்குக் காரண மாகலாம்.

கிடைக்கும் சதகங்களுள் தத்துவம் சார்ந்தன சிறுபான்மை யினவே ஆயினும் சாந்தலிங்க முனிவரின் வைராக்கிய சதகம் போன்றன சிறப்புடன் திகழ்கின்றன. இதன் முன்பகுதி சைவ சமயக்கொள்கைகளின் விளக்கமாகவும், பின்பகுதி இறை

வழிபாடு புரிவதாகவும் அமைகிறது. சமயங்களுக்கிடையே நடந்த பூசல்கள் இலக்கிய வகைகளிலும் ஏற்றங்கண்டன என்பதைக் 'கிறிஸ்து மதகண்டன சதகம்' எனும் நூல் காட்டுகிறது.[16] பெரும்பாலும் அவரவர் சமயங்களின் கொள்கைகளைப் பொது மக்களிடையே பரப்புவதற்குச் சதகம் போன்ற இலக்கிய வடிவங்கள் ஏற்புடையன என்ற எண்ணத்தின் விளைவே இத்தகு தச் [illegible] சதகங்கள் என்றும் கருதலாம். மாலை, அந்தாதி, க[illegible]லம்பகம் போன்ற சிற்றிலக்கிய வகைகளிலும் கிறிஸ்துமதக் கண்டன நூல்கள் எழுந்துள்ளன.

வரலாறு காட்டும் மண்[illegible] சதகங்கள் தல[illegible]ப சதகங்களான வரலாற்றுச் குறிப்[illegible]ராணங்களை நினைவுபடுத்துகின்றன. [illegible] ஊரில் கோயில் கொண்டிருக்கும் இறைவனின் பெருமையைப் பகர்வதாகத் தலபுராணங்கள் அமைந்திருக்கின்றன. இவற்றின் ஒருபுறச் சார்பினின்றும் மாறிப் பன்முகச் சார்பினை இவ்வரலாற்றுச் சதகங்கள் காட்டுகின்றன. சமயச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, சமுதாயத்தில் சிறப்பு, வரலாற்றில் சிறப்பு எனப் பல நிலைகளில் பெரியோரை இவை அவர்களின் சிறப்புடன் அறிமுகம் செய்கின்றன. எனவே மெய்க்கீர்த்தியும் இங்கு முகங் காட்டுவதாகக் கொள்ளலாம். ஒரு ஊர் என்பது இங்கு ஒரு மண்டிலமாகவும் விரிவு பெற்றுள்ளது.

பாடல் இடம்பெறும் மண்டலத்தின் எல்லைகள் கூட இங்குத் திட்டமாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஆங்காங்கே விரிந்த நிலையில் காணப்படும் பலரின் வரலாறுகள் இங்குச் சுருக்கமாக உரைக்கப்படுகின்றன. மற்றும் பரவலாக அறியப்படாதார் பற்றி

---

16. ''About 20 years ago, several events which roused the Hindus to defend their system and attack christianity...... In addition to other efforts, the Hindus published several works aganist christianity. They have nearly all been out of print for a number of years and are now rarely to be met with. Still a few are in circulation, and are read by person who wish to dispute with catechists when preaching and by some advanced scholars in Missionary Institutions. who try to preplex their teachers by then objections John Murdock; classified catalogue of Tamil Printed Books with introductory notices Tamil development and research Council, Government of Tamil nadu. Re. P. 1968; P. 134

யும் இம்மண்டலச் சதகங்கள் அறியச்செய்கின்றன. ஆனூர்ச் சர்க்கரை என்னும் வள்ளல்பற்றிக் கொங்கு மண்டல சதகம்,

'முகஞ்சோர்ந் தகன்றிடுமேகாலிப் பாவலன் முன்னநின்றே
யிகழ்ந்தே னிலையைய வென்று சுடுநெ யினிற்கையைவிட்
டுகந்தே யுணுமெச்சில் வாயைக் கழுவி யுவப்பியற்றி
மகிழ்ந்தே புகழ்பெறு சர்க்கரையுங் கொங்குமண்டலமே (52)

என்று வியந்திருப்பதைக் காட்டாக்கலாம். இச்சதகங்களிலும் அவ்வம் மண்டிலத்துள் சிறப்புப் பெற்றிருக்கும் திருப்பதிகள் பற்றியும் ஓதியிருப்பது எண்ணத்தக்கது.

குறைபாட்டுடன் காணப்படும் மிழலைச் சதகம் வேளாண்மைத் தொழிலை வெகுவாகச் சிறப்பித்துப் பாடியிருப்பதும் இவண் குறிப்பிடத்தக்கது. வேளாண்மைத் தொழில் பற்றிய முழுச்செய்திகளையும் தொடக்கமுதல் இறுதிவரை இந்நூல் தருகிறது. கம்பரின் ஏரெழுபதின் பின் வேளாண்மைக்கு இந்த அளவு சிறப்பளித்த நூல் இஃதேயாகும். மிழலை நாட்டின் முதன்மைத் தொழிலாக இது சிறப்புறுதல் பற்றியும், சதக இலக்கியங்களில் வேளாளர் சிறப்பு விதந்தோதுதல் பரவலாகக் காணப்படுதலின் அவர்களுக்குரிய தொழிலாக வேளாண்மை அமைதல் பற்றியும், நூலாசிரியர் சர்க்கரைப் புலவர் அவ்வினத்தாராக இருப்பதுபற்றியும், இந்நூலுள் வேளாண்மை முதன்மை பெறுகிறது எனலாம். இந்நூலுள் நமக்குக் கிடைக்கும் பாடல்கள் 43. அவற்றுள் 10 முதல் 37 வரையிலான பாடல்கள் இதனைச் சிறப்பிக்கின்றன.

இன்னும் அச்சில் வாராத கானாட்டுச் சதகமும் பிற வரலாற்றுச் சதகங்களினின்று மிகுதியும் வேறுபட்டு நிற்கக் காண்கிறோம். இதன் கண் 42 பாடல்களே உள்ளன. அவை பாடலுக்குரிய இலக்கியச் சுவையோடு அமையாததுடன் உரை நடைப் பகுதியும் இதில் மிகுதியாகக் கலந்துள்ளது குறிப்பிடற்பாலது. இதனுள் நூற்றெட்டு நாடுகளுக்கு எல்லைச் சுட்டப்பட்டுள்ளது. கானாடு என்ற பெயரில் மற்றொன்று இருப்பினும் இந்நூலுள் சுட்டப்படும் ஊர்கள், ஆறுகளின் பெயர் கொண்டு புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளே இங்குச் சுட்டப்படும் கானாடு என்பர்.[17] வேளாளரைச் சிறப்பிக்கும், சதகங்களுள் ஒன்றாகவும் இஃதமைகிறது.

17. இராதா. செயலக்குமி (பதிப்பு): கானாட்டுச் சதகம் கையெழுத்துப் பிரதி: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை

வேளாளரின் பழமைச் சிறப்பும் அவர் தம் வரலாற்றுச் செய்திகள் பலவும் இதனுள் காணப்படுகின்றன. ஊர்ப் பெயராய்விற்கும், வரலாற்றாய்விற்கும் இந்நூல் பேருதவிபுரியும்.

உ. வே. சா. நூலகத்தில் இதே நூல் காகிதச் சுவடியாக, 'கானாட்டு வரலாறு' என்ற பெயரில் உள்ளதாகச் சுட்டுவர்.[18] ஏனைய மண்டல சதகங்கள் போலல்லாது மிகுதியும் நாட்டு வரலாற்றிற்கே சிறப்பிடம் நல்கியிருத்தலின் கானாட்டு வரலாறு என்றும் பெயர் பெற்றது போலும். ஆசிரியர் பெயர் அறியப்படாத நிலையில் உள்ள இவ்விரு சுவடிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மேலும் சில விளக்கங்கள் கிடைக்கலாம். எவ்வாறிருப்பினும் இதனுள் பல புதிய செய்திகள், வரலாறுகள் புதைந்திருப்பது உண்மை.

அகப்பாடல்களைச் சதக வடிவில் காணவிழைந்தோர் சிருங்காரச் சதகங்களைப் படைத்துள்ளனர். வடமொழிச் சிருங்காரச் சதகங்களைப் பின்பற்றியும், மொழிபெயர்த்தும் இவை அமைகின்றன. தமிழில் சங்க அகப்பாடல்கள், பின் எழுந்த கோவையிலக்கியங்கள் பெற்ற சிறப்பினை இவை பெற இயலா நிலையில் தம்முள் பெருக்கம் காட்ட இயலவில்லை போலும். வடமொழி மரபு தமிழ் மரபிற்குப் பொருந்தாமையும் ஒரு காரணமாகலாம். "சிருங்கார சதகம் பெயரால் காமச் சார்பான நூல் போலத் தோற்றம் தருகிறது. சிருங்காரச் சார்பான பாலுணர்விற்கு இடனான செய்திகளைக் கூறுவதானாலும் முடிந்த முடிபாக விவேகத்தையும் வைராக்கியத்தையுமே சுட்டி நிற்கிறது. காமத்தின் இயல்பெல்லாம் கூறி இறுதியில் மனித வாழ்வின் தலையாய நியமம் எது என்பதை இச்சதகம் வலியுறுத்துகின்றது," என்றிவற்றின் இயல்பு சுட்டப் படுகிறது.[19] மாணிக்கவாசகம் பிள்ளை தம் பர்த்ருஹரி சிங்கார சதகம் மொழி பெயர்ப்பில் பாடற் பொருண்மைக்கேற்ப மன்மதனைக் காப்பாக வைத்துப் பாடியுள்ளார்.

ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும் அளியும் என்றிவற்றை ஆய்ந்துரைக்கும் பாடாண் பாட்டுடன் ஒப்பமைந்ததாக 3 சதகங்கள் அமைகின்றன. தம்மைப் போற்றியப் புரவலருக்கு இலக்கிய ஏற்றத்தை இச்சதகங்களின் வழிப் புலவர்கள் நல்கியுள்ளனர் திருவேங்கடம் பிள்ளையின் மாந்தை நகராதிபதி சதகம், எஸ். கே. முகமது காதிர் பாவா ராவுத்தரின் 'ஸலவாத்து சதகம்'

18. மேற்படி

19. காதல் அருவி; அரங்க. சீனிவாசன் (மொழி); முன்னுரை

ஆகியன பாட்டுடைத் தலைவரின் புகழ் மாலைகளாகக் காணப் படுகின்றன. 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருவேங்கட சத கமும் இது போன்றதே. பெயரறியப்படாத இதன் படைப்பாளர் திருவேங்கட நாதன் என்னும் வள்ளலின் மீது மற்றும் பிள்ளைத் தமிழ், தூது, தனிப்பாடல்கள் எனப் பல பாடியுள்ளார். இச்சிற் றிலக்கியங்கள் பதிப்பில் வந்துள்ள போதிலும் இச்சதகம் இன் னும் வெளிவர வில்லை. இப்புலவர் தம் புரவலரை இறைவ னாகவே கொள்வதை,

பொன்னாரும் படைத்திகிரிவலவனடி போற்றும் பூ ரணனே
நினது மலர்ச்சே வடிகள் வாழ்த்தி
நின்னாமந் திகழ் சதக விசைத்தமி ழந்தாதி நிகழ்த்துவான்
விருப்புற்றே னீசனே னதனா
லென்னார்வம் நன்கினிது முடிந்தருள வேண்டு மெனை யுடையாய்
தமிழ்த் திருவேங் கடநாத தேவே
சொன்னாவ லோர்க்கரசே யெனதுளத்து ளுறை யுஞ்சுந்
தரனே யென்றொன்று துணையேயென் திருவே (2)

எனும் பாடல் வழிக் காணலாம். இவர், தம் புரவலர் மீது மிக ஆழ்ந்த பற்றுள்ளம் கொண்டவர் என்பதையும், மிக நெருங்கிய தொடர்புடையவர், நீண்டகால நட்புடையவர் என்பதனையும் பிற சிற்றிலக்கியங்களின் வழி அறிகிறோம்.

பேகம்பூர் அப்துல் காதரின்முகையித்தீன் சதகமும், சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயரின் முனாசாத்து சதகமும் இசுலாமிய சமயத் தலைவரான முகியித்தீன் என் பாரின் வாழ்க்கை வரலாற்றை நவில்வனவாகும். த. அமிர்த லிங்கத்தின், 'தலைவர் ம. பொ. சி. ஆற்றுபடை', சி. அன்பானந் தத்தின் 'மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ்' எனப் பிற சிற்றி லக்கிய வகைகளிலும் வாழ்க்கை வரலாறுகள் அமைதல் போன்று சதகவடிவிலும் இசுலாமியப் புலவர்கள் அதனை அமைத்துப் பெருமை கொள்கின்றனர். ஒருவர் மீதே இருவரும் பாடியுள் ளமையும் நவிலற் பாலது.

வாழ்வியற் சதகங்களுள் சில மருத்துவம பற்றிப் பேசினும் (குமரேச சதகம் 30, அண்ணாமலைச் சதகம் 91) அதனை முழுவதுமாக விரிக்கும் நிலையில் மருத்துவச் சதகங்கள் அமை கின்றன. 'நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப் பச் செயல்' (குறள். 948) என்பதாக இந்நூல்கள் உள்ளன. இச் சதகங்களை இலக்கியமாக எண்ணவியலுமா என்ற வினா இங் கெழுகிறது. சென்ற நூற்றாண்டு வரை அதாவது உரைநடை

தமிழில் வளர்ச்சி பெறுதற்கு முன் வரை மருத்துவம், சோதிடம், கூவம், இசை, சிற்பம் எனும் எவ்வகை நூலும் செய்யுளில் தான் இயற்றப்பட்டன. மனனம் செய்து கொள்வதற்கும், பாடல்கள் விடுபடாதிருத்தற்கும் ஏற்ற எளிய உத்தியாக அந்தாதித் தொடை இவற்றில் பெரும்பாலும் பின்பற்றப்பட்டன. இவற்றை நாம் அவ்வவ் கலைகளாகத் தான் கொள்கின்றோமேயன்றி இலக்கியமாகக் கொள்வதில்லை.

யூகிமுனிவர் பிடிவாதம் ஆயிரம், திருமூலர் வைத்தியம் (கருக்கிடை—600), அகஸ்திய முனிவர் அருளிச் செய்த தைல முறைகள்—100, தேரையர் வெண்பா எனப் பல மருத்துவ நூல்கள் எண்ணாலும், பாவாலும் பெயர் கொண்டமைவதைக் காண்கிறோம். இவற்றையும் இலக்கியமாக அணுகுவதில்லை. எனவே இங்குச் சதகம் என்ற பெயரில் அமைந்துள்ள மருத்துவ நூல்கள், நூறு பாடல்கள் என்ற நிலையில் சதகம் என்று பெயர் பெற்றுள்ளனவே தவிர அவற்றிற்கும் சதக இலக்கியத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

ஜான்மர்டாக் தம் தொகுப்பில் தவச் சதம் என்றொரு நூலைக் குறிப்பிடுகிறார். இங்குச் சதகம் என்பதில் ககரம் விடுபட்டுள்ளதா? அல்லது சதம் என்றால் நூறு எனும் அடிப்படையில் ககரம் தேவையில்லை சதம் போதுமானது என்று நூலாசிரியர் சதம் என்றே பெயரிட்டாரா? மற்றும் சதகத்திற்கும் இதற்கும் எவ்வகையில் தொடர்பு என்பன போன்ற வினாக்கள் எழுகின்றன. நூலின்மையால் விடைகாண இயலவில்லை. 1865 இல் கிறித்தவக் கல்விக் கழகம் இந்நூலை வெளியிட்டுள்ளது என்ற செய்தி மட்டுமே அறிய வருகிறது.

இவ்வகையின் எல்லா நூல்களும் சதகம் என்றே பெயர் பெற்றிருக்கத் தெலுங்குச் 'சுமதி சதகத்தை' மொழி பெயர்த்த எம். ஆர். சீனிவாச ஐயங்கார் தம் மொழி பெயர்ப்பிற்கு, நூலின் யாப்பினை முன்னிறுத்தி நன்மதி வெண்பா என்று பெயரிட்டிருப்பதும் சுட்டத்தக்கது.

யாப்பு

சதக இலக்கியத்தினை இந்த யாப்பில் தான் பாட வேண்டும் என்று இலக்கணத்தார் எந்த விதியையும் விதிக்க வில்லையாயினும் பெரும்பான்மையான சதகங்கள் ஆசிரிய விருத்தத்தால் இயன்றுள்ளன. சிறுபான்மை கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை, வெண்பா இவற்றில் அமைகின்றன.

நூல் முழுமையும் ஒரே யாப்பில் அமைதலே பெரும்பான்மை யாயிருக்க, மூத்த விநாயகர் திருச்சதகம், சடகோபர் சதகத் தந்தாதி, மச்சரேகை சித்தரின் பூரண சதகம் என மிகச் சில பல் வகை யாப்புகளில் பாடப்பட்டுள்ளன. பத்துப் பாடல்களுக்கு ஒரு யாப்பு எனும் நிலையில் இவை அமைகின்றன.

குறிப்பிட்ட யாப்பினைச் சுட்டாவிடினும் ஒரே யாப்பினால் சதகம் இலங்க, சுவாமி நாதம் விரும்புவகை பயிலும் ஓர் பாட்டாய் நூறு உரைப்பதுதான் சதகம் [168) என்பதால் பெறலாம். ஆனால் சதக இலக்கியப் புலவர்களுக்கு இவ்விதி உடன் பாடில்லை என்பதை மேற்சுட்டிய நூல்கள் உணர்த்துகின்றன. கொச்சகக்கலி, கலித்தாழிசை, கலி விருத்தம், ஆசிரிய விருத்தம் எனப் பலவும் விரவும்பொழுது பலவித ஓசை நயத்தால் நூல் மேலும் சிறக்கும் என்பது இவர் தம் நோக்கமாகலாம்.

பிற சிற்றிலக்கியத் தொடர்பு

எந்த வகை இலக்கியமும் இலக்கணிகள் உரைக்கும் கட்டுக் குள் முழுமையாக நின்று செயல்படுவதில்லை. புலவரின் கற் பனைத் திறனும் புலமைத் திறனும் இக்கட்டுப் பாடுகளை மீறு வதில் தனி இன்பம் காண்கின்றன. எல்லா வகை இலக்கியங் களிலும் ஆங்காங்கே இம்மரபு மீறல்களைக் காண்கிறோம். சதக இலக்கிய வடிவிலும் பல இத்தகு மரபு மாற்றங்கள் அமைந்துள் ளன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவாக அமைவது பிற சிற்றிலக்கிய வகைகளுடன் கொண்டுள்ள தொடர்பாகும். பல சிற்றிலக்கிய வகைகளின் இணைவினை இவற்றில் காண முடிகிறது.

தண்டபாணி சுவாமிகள் இந்நிலையில் குறிப்பிடத் தக்க வராகிறார். தமிழ் இலக்கிய உலகில் பல புதுமைகளைப் படைத்த இவர் சதகத் தந்தாதி, பதிக சதகம் எனப் புதுவகைச் சதகங்களைப் படைத்துள்ளார். இவர் தமது சடகோபர் சதகத் தந்தாதியில்,

வாரிவ ளைந்தபு வித்தலை யேநேர்
    மாணுறு தென்குரு கைப்பதி ஆளோர்
காரிம கன்கரு ணைத்துணை யாலே
    கார்நிற விண்டுவி னைத்தொழு வான், வேய்
ஊரிடை வந்ததி ருப்புக ழான் (ஓது)
    ஓர் சத கம்புகு பத்திவை ஓர்வார்
சீரிய இந்திரன் முற்பகர் மேலோர்
    சேருல கம்புகழத் திகழ் வாரே (88)

என்று தம் நூலைச் சதகம் என்றும் குறிப்பிட்டிருப்பது எண்ணத் தக்கது. அந்தாதி அமைப்பினைப் பிற பல சதக இலக்கியப் புலவர்கள் புறக்கணித்த நிலையில் தாம் அதனை ஆட் கொண்டிருப்பதால் 'சதகத் தந்தாதி' எனப் பெயரிட்டுள்ளார் போலும். 'அந்தாதி' எனும் சிற்றிலக்கிய வகை நூறுபாவால் ஆனது என்பதும்; பதின்பத்தந்தாதி என்ற பெயரில், பத்துப் பாடலுக்கு ஒரு சந்தமாகப் பத்துச் சந்தம் பெறும் இலக்கியத்தைச் சுவாமிநாதம் காட்டுவதும் இணைத்து நோக்கற்பாலது. பின்னதுடன் ஒன்று படும் வகையில் 'சடகோபர் சதகத் தந்தாதி' அமைந்துள்ளது, முன்பே சுட்டப் பட்டது. மற்றும் 'மறுவில் சீர்ப் புளிக் கீழ்' வாழும் மாமுனி தனக்கு நெல்லைச் சிறுவன் ஓதிய பா நூற்றுள் (44) என்பது போன்று கூறியிருப்பதினின்றும், நூறு பாடல்களால் அந்தாதித் தொடையுடன் அமைத்த நூலாகையால் ஆசிரியர் இதனைச் சதகத் தந்தாதி என்றழைத்தார் எனவும் கொள்ளலாம்.

இவரே திருவாமாத்தூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது 'திருவாமத்தூர் அழகிய நாதர் பதிகச் சதக நூல்' என ஒன்றையும் இயற்றியுள்ளார். இன்னும் வெளிவராத நூலாகும் இது. பதிகம் என்பது பத்துப் பாடல்கள் கொண்ட சிற்றிலக்கியமாகும். இவர் பத்துப் பத்துப் பாடல்களாக நூறு பதிகங்களை ஒரே இறைவன் மீது பாடி பதிகச் சதகம் எனப் பெயரிட்டுள்ளார். ஒவ்வொரு பத்தும் தனித்த மகுடம் பெற்றிருத்தல் இந்நூலின் மற்றொரு சிறப்பாகும். ஆமாத்தூரின் சிறப்பு, புராணச் செய்திகள், இறையடியார்கள் பெருமை, இறைவன் சிறப்பு—அருட் செய்திகள் முதலியன அமைந்து சிறந்த பக்தியிலக்கியமாகத் திகழ்கிறது. இவர் ஆமாத்தூர் இறைவன் மீது அளவிடற்கரிய அன்பு பூண்டவர் என்பதனைத் 'திருவாமாத்தூர் தல புராணம்' கொண்டும் அறியலாம். எனினும் பிற சமயத்தாரையும் மதித்துப் போற்றும் இயல்பினர் என்பதை இவரின் பிற நூல்கள் கொண்டும் அறியலாம்.[20] ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வஞ்சி விருத்தம், தாழிசை, வண்ணம், கட்டளைக் கலி எனப் பல யாப்புகள் இந்நூலுள்பயின்று வருகின்றன. கேரளத்தில் வாழ்ந்த நாராயண பட்டர் என்ற முனிவரால் 1587இல் எழுதப் பட்ட 'நாராயணீயம்', பாகவதக் கதையைப் பத்துச் சதகங்களாற் கூறுவது.[21] என்பதனையும் இப்பதிக சதகத்துடன் ஒப்பு நோக்கலாம்.

---

20. ஊர்ப் பெயரும் நூற்றொகையும், திருவாமாத்தூர் கௌமார சபை வெளியீடு. 1964.
21. நாவலியூர் நடராஜன்; முன் சுட்டிய நூல்; ப. 245

நீர் மருவு சென்னி நில வெறிப்ப நீள் விடையில்
கார் மருவு கன்னியொடு காட்சி தரல் எந்நாளோ
பேர் மருவும் நாவினரைப் பேரின்ப வீட்டுள்
உய்ப்பாய்
ஆர் மருவு செஞ்சடையாய் ஆமாத்தூர் அம்மானே [1]

என்பது போன்ற எளிய பாக்களால் இயன்ற இந்நூல், இதனைப் 'படிக்கின் றோர்க் கெல்லாம் அதிகப் பெருமை உண் டாமாம்' என்று நிறைவுறுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிக அதிகமான நூல்களை இயற்றியவராகப் பெருமை பெறும் இவ்வண்ணச் சரபம் தண்ட பாணி சுவாமிகளின் 'திருவரங்கத் திருவாயிரம்' நூலின் ஒரு பகுதியே 'சீரங்க நாராயண சதகம்' ஆகும். பல சிற்றிலக்கியங் களின் இணைவில் ஆயிரம் பாடல்களில் திருவரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் திருமாலைப் போற்றிப் பரவுவதே திருவரங்கத் திருவாயிரமாகும். திருவரங்க வெண்பா மாலை, சீரங்க நாயக மாலை, பசு காப்பு மாலை, அந்தாதி, கட்டளைக் கலித்துறை யந்தாதி, பதிற்றுப்பத் தந்தாதி, ஒருபா ஒரு பஃது, இரட்டை மணி மாலை, மும்மணிக் கோவை, நான் மணி மாலை, ஆயுத பஞ்சகம், சமயசட்கம். சுத்த சத்தகம், மந்திராட்டகம், நவமணி மாலை, காட்சிப் பத்து, புகழ்ப் பத்து, பொன்னாசைப் பத்து, பெண்ணாசைப் பத்து, புவியாசைப் பத்து, வயின தேயப் பத்து, அன்னப் பத்து, கிளிப் பத்து, மாங்குயிற் பத்து, மணி வண்டுப் பத்து, திரிபு மஞ்சரி, யமக மஞ்சரி, ஏகபாதம், மாலை மாற்று, எழு கூற்றிருக்கை, ஒருவருக்கப்பா, சதுரங்க பந்தம், மடக்குத் தாழிசை, கலவி மகிழ்தல் வண்ணம், திருப்புகழ், வகுப்பு, வண்ண விருத்தம் இவற்றுடன் சீரங்க நாராயண சதகமும் இணைய 38 பிரிவுகள் கொண்டதாக நூலமைந்துள்ளது. இரட்டையாசிரிய விருத்தத்தால் சதகமமைந்துள்ளது. முன் னூல் இரு சிற்றிலக்கிய விதிகளின் இணைவாக அமைய இந்நூல் பலவற்றின் கலப்பாக அமைந்துள்ளது.

'புகழ்ச்சி, வணக்க மொழி ஆகியன தோத்திரம் எனும் சொல்லால் குறிக்கப் பெறுகின்றன. தோத்திரப் பாட்டாகிய துதிப் பாசுரத்தையும் இது குறிக்கின்றது......தோத்திரம் என் பது இறைவனைப் புகழும் பக்தி நூல்களின் பொதுப் பெயராய் அமைகிறது' என்பர்.[22] இதனடிப் படையில் இறைவனைப் போற்றுதலாக அமையும் சதகங்கள் 'சொக்க லிங்கக் கடவுள்

22. ச. வே. சுப்பிரமணியன்; தமிழ் இலக்கிய வகையும் வடி வும்; ப. 372

தோத்திர சதகம்' 'மதினமாநகர் தோத்திர சதகம்' எனப் பெயர் பெற்றன போலும். இவற்றை முறையே சோம சுந்தர சுவாமிகளும், கருணை அகமது நாஸ் என்பவரும் இயற்றியுள்ளனர்.

பார்த்தசாரதி வருக்க சதகம் எனும் நூலொன்றையும் பெயரளவில் அறிய முடிகிறது. அகர வரிசை அடிப்படையில் இலக்கியங்களைப் படைத்தலை வருக்கக் கோவை, வருக்க மாலை, வருக்க வெண்பா போன்றவற்றில் காணலாம். எல்லா மொழி முதலெழுத்துகளுமன்றித் தனியுயிர் மட்டும் இடம் பெறும் நிலையில் உயிர் வருக்க மாலை, உயிர் வருக்கக் கோவை எழுகின்றன. இவற்றை உட்கொண்டு நோக்குகையில் இவ்வருக்க சதகம் மொழி முதலெழுத்துகளின் அகர வரிசையில் பாடல்களைப் பெற்றிருக்க வேண்டும் என ஊகிக்கலாம். பக்தியும், அறமும், அகமும் இவ்வருக்கங்களில் அமைந்திருத்தலின் இவ்வருக்க சதகத்தின் பொருண்மை யாது எனும் ஊகத்திற்கும் இடனில்லை.

வெண்பா யாப்பில் இடம் பெறும் சிதம்பரமென்னும் திருப்புலியூர் வெண்பா, திருமுருகன் வெண்பா, நன்னெறி வெண்பா, நல்லுரை வெண்பா எனும் நூல்கள் தனி வகைச் சிற்றிலக்கியங்களாக நிற்றலைக் காண்கிறோம். இங்கு 'நன்மதி வெண்பா' என்று தம் சுமதி சதக மொழி பெயர்ப்பிற்கு எம்.ஆர். சீனிவாச ஐயங்கார் பெயர் சூட்டியிருப்பதைக் காண்கிறோம். அற நூல்கள் பல வெண்பா என்று பெயர் பெறுதலாலும், அருகிய நிலையிலேயே சதகங்கள் வெண்பாவால் பாடப் படுவதாலும், தம் நூல் மொழிபெயர்ப்பாதலாலும் புலவர் தம் நூலை வெண்பா என்றழைத்தார் போலும்.

காமாட்சி தாசனின் 'தேவீ கிளித் தூது சதகமும்' இவண் எண்ணற்பாலது. தமிழிலக்கியத்தில் சங்கம் முதல் காணப்படும் இத்தூதுப் பொருண்மை பதினான்காம் நூற்றாண்டளவில் தனியொரு சிற்றிலக்கியமாக வளர்ச்சி பெறக் காண்கிறோம். தேவியிடம் தம் தூதாகக் கிளியை இச்சதகத்தின் வழிப் புலவர் அனுப்பியுள்ளார் போலும். அவ்வகையில் சதக இலக்கிய வரலாற்றில் இஃது ஓர் புதுமையாகவே புலப்படுகிறது. நூலைப் பற்றிய பிற செய்திகள் அறிய இயலவில்லையாதலின் இதன் பெருமை உணருமாறில்லை.

ஒன்றற்கு மறுப்புரைக்கும் நிலையில் அமையும் நிராகரணம் எனும் தனித்த இலக்கிய வகையை முன் எடுத்துக் காட்டியுள்ள கிறிஸ்து மத கண்டன சதகத்துடன் ஒப்பிட்டு நோக்கலாம்.

நூலினை மேலும் சிறப்பிக்கப் பிற சிற்றிலக்கியக் கூறுகளை யும் உட்படுத்துதலை மாத்ரூபூதையரின் 'நந்த மண்டல சதகத் தில்' காண முடிகிறது.

'கோவர்த்தனம் யமுனா நதி கோகுலங் கூறு புகழ்
மேவக் கருடக் கொடி யெற்று பேரிகை மென்றளவப்
பூவெற்றி வேழங் கவனப் பரியொளிர் பொற் கமல
மா வுற்ற மார்பர் சொல்லே வலுள்ளார் நந்த
மண்டலமே

என்பதில் அரசர்க்குரிய தசாங்கத்தைச்[23] சிறப்பித்தலைக் காண முடிகிறது'.

பதிப்பு

ஒன்பதாம் நூற்றாண்டில் தோற்றம் காட்டினாலும் பத் தொன்பதாம் நூற்றாண்டின் இடையில் தான் அச்சேறுதற்குரிய வாய்ப்பினைப் பெற்றுள்ளன. அறிந்த வரையில் 1838 ஆம் ஆண்டில் சுப்பராயவையரால் வெளியிடப்பட்ட அறப்பளீசுர சதகம் முதலாவதாக அமைகிறது. இராமசாமி நாயுடுவின் உரையும் அமைந்திருப்பது நவிலற்பாலது. தொடர்ந்து 1838இல் மகாலிங்கையரால் தண்டலையார் சதகமும், 1839இல் வேங்கடா சல முதலியாராலும் ராமசாமி நாயகராலும் எம்பிரான் சதக மும் பதிப்பிக்கப் பட்டுள்ளன. படைக்கப்பட்ட சதகங்கள் அனைத்தும் அச்சாக்கம் பெறாமையைச் சதகவரிசை சுட்டும்.

பெரும்பான்மையான வாழ்வியற் சதகங்கள் பதிப்பிக்கப் பட்டு வெளிவந்துள்ளன. ஒரு சிலவே இன்னும் ஏட்டில் உள் ளன. ஒரே சதகம் பல பதிப்புகளைப் பெற்றமையிலும் இவையே முன்னிற்கின்றன. குமரேச சதகமும், அறப்பளீசு சதகமும் சுமார் முப்பதிற்கும் மேற்பட்டுள்ள பதிப்புகளைப் பெற்றுள்ளன என்பது வியப்பை அளிக்கிறது. திருவேங்கட சதகமும், எம்பிரான் சதகமும் இவற்றிற்கு அடுத்த நிலையில் அதிகமாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளன. இவற்றை நோக்குகை யில் மக்களிடையே வாழ்வியற் சதகங்களே பிறவற்றை விட மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்தமை புலனாகிறது.

---

23. புல்லும் மலை யாறு நாடு ஊர் புனை தார் மா
கொல்லுங்களிறு கொடி முரசம்—வல்லகோல்
என்று இவை நஞ்செழுத்தோடு ஏலா வகை உரைப்ப
நின்ற தசாங்கம் என நேர்-வெண்பா பாட்டியல்செ. 19

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பள்ளிச் சிறாருக்கு இவை பாடமாக வைக்கப் பட்டமையும், அப்பொழுது அவர்களுக்கு ஏற்ற பாடல்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதிப்பிக்கப் பட்டமையும், அவற்றிற்குப் பொருளுதவியும் கிடைத்தது என்பதனையும் பழம் பதிப்புகளால் உணர முடிகிறது. நாராயண பாரதியாரின் திருவேங்கட சதகத்தை 1918இல் பதிப்பித்த பி. கே. சீனிவாசாசாரியாரின் பதிப்பு கொண்டு இவற்றை அறிய முடிகிறது. இக்கால கட்டத்தில் சிறுவருக்கெனப் புதிய நீதி சதகங்கள் உருவாக்கப் பட்டமையையும் மதலைச் சதகம், உத்தம நீதி—முதற் சதகம் முதலானவை கொண்டு அறியலாம். இன்று இச்செல்வாக்கைச் சதகங்கள் இழந்து விட்டன என்றே கூறலாம்.

எண்ணிக்கையில் பக்திச் சதகங்கள் முதன்மை பெறும் பொழுதிலும் பதிப்பு நிலையில் இவை இரண்டாம் இடத்தையே பெறுகின்றன. மண்டலச் சதகங்களில் மிழலைச் சதகமும், கானாட்டுச் சதகமும் வெளி வந்ததாகத் தெரியவில்லை. மருத்துவச் சதகங்களில் ஒன்றிரண்டே வெளிப் போந்துள்ளன.

தொடக்க காலத்திய பதிப்புகள் 'சிவகங்கை சீமை பூங்கொன்றை வேலங்குடியில் எழுந்தருளியுள்ள கறுப்பண்ண சுவாமி சதகம்' என்பது போன்று (1897) விரிவான பெயருடனும் 'குருபாத தாசர் அருளிச் செய்த திருப்புல்வயல் குமரேசர் சதகம்' என்று (1888) ஆசிரியர் பெயருடன் இணைந்தும், 'சாந்தலிங்க சுவாமிகள் அருளிய வைராக்கிய சதகம் மூலமும் சிதம்பர சுவாமிகள் அருளிய உரையும்' என்று (1878) விளக்கமாகவும் அமைவதைக் காண முடிகிறது. அக்கால மரபையொட்டிப் பலரின் சாற்றுக் கவிகளும் உடன் இடம் பெற்றுள்ளன.

கொங்கு மண்டல சதகத்தின் தி. அ. முத்துசாமிக் கோனாரின் பதிப்பிற்கு உ. வே. சாமிநாதையர் அருளிய,

> பூமலி புலவர் பிறர்க்குவந் தளிக்கும் புண்ணியர் சரிதத்
> தா லாய
> தூமலி பயனை நன்குதேர்ந் தெங்குந் துருவியே பலபட
> வாய்ந்து
> பாமலி கொங்கு மண்டல சதகப் பனுவலைப் பதிப்பித்
> தீந்தனனால்
> தேமலி முத்துச்சாமிப் பேர்ப்புலவன் திருச்செங்கோடு
> றைத் தவத்தினனே

எனும் கவியைக் காட்டாக்கலாம். இவ்வாறு பலர் இந்நாலுக்கு அளித்திருப்பதினின்றும் நூலாசிரியர் பெருமைக்கு இணையாகப்

பதிப்பாசிரியரும் அன்று சிறப்பிக்கப் பட்டதை உணருகிறோம். பதிப்புத் துறை பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையே வளர்ச்சியடையத் தொடங்கிய அக்காலத்தில் துணிந்து அதில் ஈடுபட்டோரைப் பாராட்டுதல் இயல்பாயிற்று.

கார்மண்டல சதகம், அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், திருவேங்கட சதகம் எனச் சில சதகங்கள் உரையுடன் வெளி வந்துள்ளன. ஒரே நூலுக்குப் பல உரைகளும் உள. சான்றாக வீ. ஆறுமுகம் சேர்வையின் விரிவான உரையும் (1918) சக்கரவர்த்தி நயினாரின் அரும்பத உரையும் (1930) அறப்பளீசுர சதகத்திற்கு உண்டு. மற்றும் சு. கோவிந்தசாமிப் பிள்ளை, புலவர் அரசு போன்றோர் உரையும் உண்டு.

இன்னும் அச்சில் வராத சதகங்களும் வெளி வரும் பொழுது சதக இலக்கியத்தின் பெருமையை விரிவாக உணர இயலும். இலக்கியத் துறையில் ஒரு புதுப்பாதையை—வரலாற்றுணர்வை நல்கிய மண்டல சதகங்கள் போதுமான பதிப்புகளைப் பெற வில்லை என்றே தோன்றுகிறது. இதனால் இவை முழுநிலையில் உணரப்படவும் இல்லை எனலாம். பொது நிலையில்; பிற சிற்றிலக்கிய வகைகளினின்றும் வெகுவாக வேறுபட்டுப் பல புதுமைகளையும் உள்ளடக்கியுள்ளமையைக் காண்கிறோம்.

கொள்கை-நோக்கம்-பயன்

ஒவ்வொரு இலக்கியத்தின் தனித்தன்மையும் அதன் படைப்பாளரின் திறமையில் மட்டுமின்றி, அதற்குரிய கொள்கை, எழுந்ததன் நோக்கம், விளைந்த பயன் என்பனவற்றிலும் அமைவது வெள்ளிடை மலை. ஓர் இலக்கியம் இவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது போல் அமையும் விதிகளை அதன் கொள்கைகளாக—இலக்கியக் கொள்கையாக எண்ணலாம். இலக்கணமும் இலக்கியமும் இணைந்து இதனை உருவாக்குகின்றன. ஒவ்வொரு இலக்கியமும் எழுவதன் அடிப்படையை ஆய்வது இலக்கிய நோக்கமாக அமைகிறது. இவற்றால் அவ்விலக்கியத்தின் பயன்களையும் ஓரளவு ஊகிக்க முடிவதுடன், வெளிப்படையாகவும் ஒரு சில அமைகின்றன. இவ்வகையில் சதக இலக்கியத்தின் கொள்கை, நோக்கம், பயன் என்பனவற்றை இங்குக் காண முயல்கிறது இக்கட்டுரை.

கொள்கை

சதக இலக்கியத்தின் கொள்கை பற்றிய ஆய்வு முன்னுமொருவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.[1] அவரது பார்வையினின்று முற்றிலும் விலகிய கோணத்தில் இங்குச் சதக இலக்கியத்தின் கொள்கைகள் நோக்கப்பட்டுள்ளன. இவ்வுலகில் ஒன்றன் அல்லது ஒருவரின் நிலைபேற்றிற்கு அவர்தம் கொள்கைகளும் முதன்மைக் காரணமாகின்றன. அவ்வகையில் இலக்கியங்களும் தமக்கெனத் தனித்த கொள்கைகளை கொண்டுள்ளமை வெளிப்படை. இலக்கியம், புலவர், இலக்கிய வகை, காலம் எனப் பல நிலைகளில் அதனை அணுகவியலும். ஓர் இலக்கிய வகை எனும் அடிப்படையில் சதகயிலக்கியத்தின் கொள்கைகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

(1) பொருள், யாப்பு எனும் சிறைகளுக்குள் புலவரைக் கட்டுப்படுத்துதல் கூடாது. இஃது அவர்தம் புலமை வெளிப்

---

1. இரா. இரகுபதி; சதக இலக்கியம்; தமிழ் இலக்கியக் கொள்கை கருத்தரங்கு—106; 6-7-83; உருட்டச்சுப்படி.

பாட்டையும் கட்டுப்படுத்தக் கூடும். ஆகவே முழுநிலையில் புலவருக்கு இவற்றில் தம் விருப்பச் செயற்பாட்டு அனுமதி தேவை—என்பதே இதன் முதன்மைக் கொள்கையாக அமைகிறது எனலாம். பக்தி, வாழ்வியல் முதலான எண்வகைப் பொருண்மைகளைத் தன்வகையுள் காட்டி, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்துறை, வெண்பா எனப் பல பாக்களிலும் சிறந்த சதக இலக்கியங்கள் பல எழுந்துள்ளமை இவ்வாறு எண்ணச் செய்கிறது.

2. பொருள், யாப்பு இவற்றால் மட்டுமின்றி எண்ணாலும் தனித்த இலக்கிய வகையைச் சிறப்புடன் படைக்க இயலும் என்பதற்குச் சான்றாகச் சதகங்களும் திகழ்கின்றன. நூறு பாடல்கள் என்ற வரையறையில் எழுந்து வெற்றி பெற்றுள்ளமையை இருநூற்றிற்கும் மேற்பட்ட இவ்வகையின உணர்த்துகின்றன.

3. கற்றறிந்த சான்றோரிடம் மட்டுமே இலக்கியங்கள் நின்றுவிடுதல் கூடாது.பாமரர் யாவருக்கும் பயன்படும்வகையில் அமைதல் வேண்டும் என்பதும் இதன் கொள்கையாக அமைவதைப் பாடல்களின் எளிமைத் தன்மையும் பரவலாகக் கலந்துள்ள வழக்குச் சொற்களும் உணர்த்துகின்றன.

ஒளித்தாலுந் துர்க்குணம் போமோ
குருவுப தேசமந்திரம்
அளித்தாலும் புல்லர்நல் லோராவ
ரோசென் றடுத்தடுத்துக்
களித்தா யிரந்தரங் காக
முழுகிக்கங் காநதியிற்
குளித்தாலு மன்னமொவ் வாதாச்சு
தாநந்த கோவிந்தனே (34)

எனும் கோவிந்த சதகப் பாடலை இதற்குக் காட்டாக்கலாம்.

4. ஒரு குறிப்பிட்ட வட்டத்துள் இலக்கியங்கள் நின்றுவிடாது பல நிலைகளிலும் புதுமைகளைப் படைக்க வேண்டும் என்ற பொதுக் கொள்கையும் இங்கமைகிறது. மண்டல சதகங்கள் பொருண்மையில் புத்தொளி பாய்ச்சி இதனைக் காட்டியுள்ளன. ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் வரலாற்றுக் குறிப்புகளை ஒரு பொதுக் கூறின் கீழ் (மண்டலம்) இணைத்தலும் குறிப்பிடற்பாலது.

5. பாட்டுடைத் தலைமையாக இறைவன், புரவலன், நாடு என யாவும் அமையக் கூடும் என்பதும் இங்கமைகிறது.

இரட்டைத் தலைமையும் இடம் பெறலாம் என்பதையே 'அருமை மதவேள் அனுதினமும் மனதில் நினை தரு சதுரகிரி வளர் அறப்பளீசுர தேவனே' என அமையும் அறப்பளீசுர சதகம் போன்றன நவில்கின்றன. இந்நிலை சதக இலக்கியத்தில் மட்டுமே காணக் கூடியதொன்றாகவும் தோன்றுகிறது. கோவையிலக்கியங்களில் அமையும் கிளவித் தலைவன் பெயர் சுட்டப் பெறான். இங்கு இயற்பெயர் போற்றப்படுதல் சிறப்பு. நக்கீரரின் கயிலைபாதி காளத்திபாதி யந்தாதியில் இரண்டு தலங்கள் சிறப்புற்ற நிலை இங்கு வழிகாட்டியாகிறது போலும்.

6. ஈற்றொப்பாக அமையும் மகுடங்கள் பாடற்றலைவர் மற்றும் நூற்றலைப்புடன் தொடர்புற்று நிற்றல் கட்டாயத் தேவையோ எனக் கருதும் வகையில் மகுடம் பெறும் அனைத்துச் சதகங்களும் அமைந்திருத்தல் குறிப்பிடத் தக்கது. பாடல் தோறும் தலைவன் பெயரைச் சுட்டிச் சிறப்புச் சேர்த்தல், பாடல் முடிப்பு உத்தி எனுமிருவியல்பு களையும்கொண்டுள்ளது.

7. வழக்கில் வழங்கும் கதைகளுக்கு இலக்கியச் சிறப்பளித்தல்; முன்பே தோன்றி மிகு புகழ் பெற்றுள்ள இலக்கியங்களுக்கு மாற்றுவடிவம் தரல் எனும் இரு கூறுகளையும் இராமாயண, பாரதக்கதைச் சதகங்கள் தருகின்றன. பழமொழிகளுக்கு விளக்கமளித்து அமையும் சதகங்களையும் இதனுடன் தொடர்பு படுத்திநோக்கலாம்.

8. பாமரர் முதல் யாவருக்கும் புரியும் வண்ணம் இலக்கியம் எளிமையாக அமைதல் மட்டும் போதாது; கற்பாருக்குப் பல்நிலையிலும் வழிகாட்டுதலாகவும் அமைதல் வேண்டற்பாற்று என்பதனை வாழ்வியற் சதகங்கள் அறிவுறுத்துகின்றன. அற நூல்களின் தாக்கமாகவும், வளர்ச்சியாகவும் இவற்றைக் கொள்ளலாம். சமுதாயப் பயனே இலக்கியங்களின் தலையாய நோக்கமாக அமைதல் வேண்டும் எனும் கொள்கையை இவை சுட்டுகின்றன.

9. சமுதாயத்தில் செல்வாக்குடன் திகழுவதனை, தம் காலத்தவரால் போற்றப்படுவதனைச் சதகப் புலவர்கள் பாடு பொருளாக்கிப் போற்றியுள்ளதைப் பக்திச் சதகங்கள் இயம்புகின்றன. ஊரோடு ஒத்துச் செல்வதை வேண்டுவதாக இஃதமைகிறது.

10. பெரும்பான்மையான சதகங்கள்,

நனிவாழிநின் பல் கோயிலும்
நனிவாழி நின் பலதேவி மார்
நனிவாழிநின் னடியா ரெலாம்

நனிவாழிநின் பல வைபவம்
நனிவாழிநின் வட வேங்கடம்
நனிவாழிநின் கவிகற்றபேர்
நனிவாழிநின் கவிகேட்ட பேர்
நாராயணா நாராயணா (வடவேங்கட
நாராயண சதகம்: 100)

என்று முடிவுற்றிருப்பதை நோக்கும் பொழுது இலக்கியங்களு கற்பாரை வாழ்த்தி முடிந்திருக்க வேண்டும் எனும் கொள்கையை மேற்கொண்டுள்ளதாக அமைகிறது.

11. எழும் இலக்கியங்கள் யாவும் இலக்கிய வரலாற்றின் படிநிலை வளர்ச்சியைச் சுட்டுவதாக, மேலும் வளர்ச்சி பெறு தற்கு வழிகாட்டுதலாக, உந்துதலாக அமைதல் வேண்டும்; ஒன்றிலிருந்து மற்றொன்று கிளைக்கும்பொழுது அதன் பெருமை மேலும் விரிகிறது எனும் இலக்கியத்தின் உயிர் நாடியான பொதுக் கொள்கையும் சதக இலக்கியங்களில் நன்குச் சிறப்புற் றிருத்தலை அவை தரும் புதுமைகளால் தெளிய முடிகிறது இதற்குரிய சான்றுகள் பலவற்றை முன்கட்டுரையில் காணலாம் தண்டபாணி சுவாமிகளின் பழநித் திருவாயிரம், ஏழாயிரப் பிரபந்தம்[2] என்பனவற்றின் எழுச்சிக்குச் சதகம் உட்பட பிற எண்ணால் சிறப்புறும் சிற்றிலக்கியங்களின் உந்துதலும் ஒரு காரணம் என்பது குறிப்பிடற்பாலது.

பல்வகைச் செய்திகளின் இணைவாகக் கதம்ப மணம் கொள்ளும் வாழ்வியற் சதகங்கள், இலக்கியம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு இலக்கணம் கூறியுள்ளன.

எழுத்தசைகள் சீர்தளைக ளடிதொடைகள் சிதையா
திருக்கவே வேண்டு மப்பா
வீரைம் பொருத்த மொடு மதுரமாய் பளபளப்
பினிய சொற் கமைய வேண்டும்

---

2. வாரத்தின் ஒவ்வொரு கிழமைகளிலும் ஞாயிறு—சூரியன், திங்கள்—சிவன், செவ்வாய் — சக்தி, புதன்—திருமால், வியாழன் — கணபதி, வெள்ளி—முருகன், சனி—பொதுக் கடவுள் என ஒவ்வொரு பதிகமாக, நூறு பதிகங்களை நூறு வாரங்கள் இயற்றி இணைத்தது ஏழாயிரப் பிரபந்தமாகும். இதனுள் சூரியனைச் சிறப்பித்த 'ஞாயிறு ஆயிரமும்' விநாயகரைச் சிறப்பித்த 'கணபதி ஆயிரமும்' நூலாக முறையே தமிழ்ப் பதிப்பகத்தாராலும், உலகத் தமிழ்க் கல்வி இயக்கத் தாராலும் வெளியிடப்பட்டுள்ளன.

அழுத்தமிகு குறளினுக் கொப்பாக வேபொரு
ளடக்கமு மிருக்க வேண்டு
மன்பான பாவின மிசைந்து வரல் வேண்டுமு
னலங்கார முற்ற துறையில்
பழுத்துள முவந்தோசை யுற்றுவரல் வேண்டும்
படிக்குமிசை கூடல் வேண்டும்
பாங்காக வின்னவை பொருந்திடச் சொற்கவிதை
பாடிற் சிறப்பென்பர் காண்

(குமரேச : 86)

எனும் பாடலைச் சான்றாக்கலாம். இவ்வாறு பொது நிலையில் இலக்கியப் படைப்பின் சிறப்புத் தேவையை உணர்த்துவதுடன் சிறந்த இலக்கியங்களைச் சுட்டுதலும் காணப்படுகிறது. 'காழிக்குள் வாழ் சம்பந்தராய்க் கவிபாட நல்வழி காட்டிடும் (வீழிக்கனி நகர் வாயனே!' (49), 'கலங்கா உளத்தொடு நின் முருகாற்றுப் படையுடன் நின் புகழ் அலங்காரமும் அனுபூதியும் அறியாத மானிடர் தம்மினும்...விலங்காய்ப் பிறந்திடல் நல்லதே' (40) எனும் வேலாயுத சதகக் கருத்து, பக்திஇலக்கியங் களே பெருமைக்குரியன எனும் கொள்கையை உள்ளடக்கியதாக அமைகிறது. 'கவிக்குறுதி பொருளடக்கம்' எனும் குமரேச சதகம் (76) பொதுவாக மொழிய, தண்டபாணி சுவாமிகள்

'சந்தமிரு நாலுங் கலந்த கவிமாலை பல சாற்றிநிற்
கணிய வேண்டும்' (சீரங்க : 3)

என்று இறைவனைப் பாடுவதே பாடல் எனத் தன் கருத்தை யுரைப்பார். தண்டலையார் சதகம் இதனை வலியுறுத்தும் (67). பொருள் ஈயாப் புல்லரைப் பாடுதலைப் பலவும் எதிர்க்கின்றன. (திருவேங்கட : 60; கறுப்பண்ண—29) திருவேங்கட சதகம் அரங்கில் நிறைவேறும் நாடகங்களின் இயல்பையும் வரையறுத் திருப்பது (65) குறிப்பிடற்பாலது.

இத்தகு சிறப்புடை இலக்கியங்களைப் படைப்போரின் திறன் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் சுட்ட இச் சதகங்கள் தவறவில்லை. அறப்பளீசுர சதகம் கவிஞர் தம் பெருமையைத் தெளிவாக,

தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்தபைந்
தேன்மடை திறந்த தெனவே
செப்புமுத் தமிழினொடு நாற்கவிதை நாற்பொரு
டெரிந்துரைசெய் திறமை யுடனே

விள்ளரிய காவியத் துட்பொரு ளலங்காரம்
விரிவிலக் கணவிகற்பம்
வேறுமுள தொன்னூல் வழக்குமுல கத்தியல்பு
மிக்கப்ர பந்த வண்மை
உள்ளவெல் லாமறிந் தலையடங் குங்கடலை
யொத்ததிக சபைகண்ட போ
தோங்கலை யொலிக்கின்ற கடற்போற் ப்ரசங்கம
துரைப்பவன் கவிஞனாகும் (75)

என்று எடுத்துரைத்துள்ளது. பொருட் சிறப்புடன் இனிமையாக, இலக்கண நெறி வழுவாது, உலகவியல்பு மாறாது படைத்தால் மட்டும் போதாது; புலவனுக்கு அதனை அவையோர் முன்னிலையில் அஞ்சாது, தெளிவாக எடுத்துரைக்கவும் தெரிய வேண்டும் என்பதும் நோக்கற்பாலது. நல்ல புலமையோருக்குச் சான்றாகக் கறுப்பண்ணசாமி சதகம், அருணகிரியார், மாணிக்க வாசகர், சம்பந்தர், சுந்தரர், அப்பர், நக்கீரர் முதலியோரை அவர் தம் பாடற் பெருமையுடன் மொழிந்திருப்பதும் (41) கூறத் தக்கது. எத்தனை பொருட் சுவை யிருக்கினும் பக்தி ரசமில்லாத கவிகள்......மெய்த் துளசி யில்லாத நந்தவனமெனவே விளங்குமென்பார்கள் கண்டாய்' என்று திருவேங்கட சதகமும் கூறியுள்ளதை நோக்கும் போது இலக்கியங்கள் பக்திக்குச் சிறப்பளிக்க வேண்டுமென்பதைத் தம் பொதுக் கொள்கையாகக் கொண்டுள்ளமையை உணர முடிகிறது. எழுந்துள்ள சதகங்களின் இயல்பும் இதனை வலியுறுத்துகின்றன.

நூலைக் கற்போருக்கும் ஒரு தகுதி வேண்டும். அத்தகுதி யற்றவர்க்கு இலக்கியத்தைப் புகட்டல் கூடாது என்பதை மீனாட்சி சதகம் வலியுறுத்துவதையும் இவண் கருத்துள் கொள்ளலாம். கள் உண்டு, வெறி கொண்டு திரிகிறவன், மிகுதியாக நோயை உடையவன், வெம்பிணக்கன், மிகுந்த வஞ்சக நெஞ்சினன், திருடன், சோம்பேறி, சிறிதும் அஞ்சாது எந்தப் பாவத்தையும் செய்வோன், எப்பொழுதும் துயில் கொள்பவன், சிறிதளவு கூடப் புத்திக் கூர்மையில்லாதவன், பொய் கூறுபவன், தேவையற்ற ஆணவச் சிரிப்பைப் பல்காலும் கொள்பவன், கோபமுடையவன் இவர்கள் யாவரும் நூலறிதற்குரியவர்கள் ஆகார். (43) இவர்களுக்குக் கற்பிப்பதால் ஒரு பயனும் இல்லை. இவர்களில் சிலரால் நூலின் சிறப்பை உணரவும் இயலாது; பிறரால் உணரப்பட்டாலும் பின்பற்றல் முடியாது எனும் கருத்தில் விலக்கப் படுகின்றனர் எனலாம். இங்கு அறவிலக்கியமே எண்ணப்படினும், ஏனைய இலக்கியங்களுக்கும் பொருந்தும் வகையிலேயே அமைந்துள்ளமை நினைக்கத்

தக்கது. நூலைக் கற்கும் நெறியையும் இச்சதகம் உணர்த்தியுள்ளது. இவற்றை நோக்கும் பொழுது இலக்கியப் பயன்பாட்டு நிலையிலும் கொள்கைகள் உள்ளன என்பதை அறிய முடிகிறது. எல்லாச் சதகங்களையும் நுணுகி ஆராயும் பொழுது மற்றும் பல கொள்கைகளைக் காண முடியும்.

நோக்கம்

சதகங்களைப் பொருளடிப்படையில் பகுத்து வரலாறு, சமயம், கதை, உடல்நலம் பேணல், வாழ்வியல், தத்துவம், தமிழின் சிறப்பு, கல்வி, சமுதாயச் சீர்திருத்தம், அகப்பொருள், முன்னோர் நுதலியது முதலானவற்றை நவிலுதலைச் சதகங்களின் நோக்கங்களாகக் காண்பர்.[3] சதக இலக்கியங்களின் கொள்கைகளை நிறைவேற்றுதல் எனும் நிலையில் அவற்றையும் இவற்றின் நோக்கங்களாகக் குறிக்க இயலும். ஏனையவற்றைப் பொது நோக்கம், சிறப்பு நோக்கம் என இரண்டாகப் பகுத்துரைக்கலாம். பெரும்பாலாக அனைத்துச் சதகங்களுக்கும் பொதுவான வற்றைப் பொது நோக்கம் என்றும், தனிப்பட்ட புலவர்களின் நோக்கமாக அமைவனவற்றைச் சிறப்பு நோக்கம் என்றும் கூறலாம்.

பொது நோக்கம்

1. நூறே பாடல்களில் எதனையும் முழுநிலையில் தெளிவாக உணர்த்தவியலும் என்பதனை உணர்த்தும் நோக்கமாகக் கதை நவிலும் சதகங்களும், தத்துவச் சதகங்களும் அமைகின்றன. சுமார் பதினொன்றாயிரம் பாடல்களில் பாடப்பட்டக் கம்பன் இராமாயணத்தை நூறே பாடல்களில் வடித்திருக்கும் இராமாயணச் சதகம் சிறந்த எடுத்துக்காட்டாம்.

2. வழக்கில் வழங்குபவற்றிற்கு இலக்கிய ஏற்றம் அளித்து நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்ற உணர்வே பழமொழிச் சதகங்களிலும், சமய, வரலாற்று, சமுதாயப் பெரியோர்களின் வரலாறு காட்டும் மண்டல சதகங்களிலும் எதிரொலிக்கின்றன. 'உலக வழக்கச் சொல்லென் பாவேற யான் உனக்கோர் சதகஞ் சொல...' என்று நாராயணபாரதி தம் கோவிந்த சதகத்தில் வெளிப்படையாகவே இதனைச் சுட்டியுள்ளார்.

3. இட, இன, அரசியல், புலவர், பெரியோர் என எவ்வரலாற்றிற்கும் சிறப்பளித்திருக்காத கால கட்டத்தில் அவற்றின் பெருமையுணர்ந்து, போற்ற முனைந்ததன் விளைவே மண்டல

---

3. மு. சுப்புலட்சுமி; முன் சுட்டியது.

சதகங்கள். குறிப்பிட்ட இடத்தின் எல்லை, அதன் மலை, ஆற்று வளங்கள், சமயச் சிறப்பு, வாழ்ந்த பெரியோர் பெருமை, புலவரின் வரலாறு, படைத்த நூல்களின் மேன்மை, வாழ்ந்த வள்ளல்களின் ஆற்றல் முதலான பலவற்றின் சேர்க்கையாக அமைந்து இவை தம் நோக்கத்தைத் தெளிவாகப் புலப்படுத்தி யுள்ளன.

4. தேவார மூவர், ஆழ்வார் போன்று இறைவனை இறைஞ்சும் நோக்கத்துடன் முகிழ்த்தவையே பக்திச் சதகங்கள். பத்துப் பாடல்களில் படைக்கப்பட்ட நீண்ட ஒரே பாடலாக அமையும் உலா, தூது, தனித்தனிப் பாடல்களின் கலப்பாக இணையும் கலம்பகம் போன்றவற்றினின்றும் வேறுபட்டு நிற்பதாக இலக்கியம் யாத்தல் வேண்டும் என்ற உந்துதலும் சதகங்களின் எழுச்சிக்குக் காரணம் எனலாம். இது பக்திச் சதகங்களுக்கு மட்டுமின்றி ஏனைய வற்றிற்கும் பொருந்தும்.

5. சதக இலக்கியங்கள் பக்திக்குச் சிறப்பிடம் நல்குவதை யும் தம் நோக்கமாகக் கொண்டுள்ளன. பக்தி, தத்துவம் மட்டு மின்றி வாழ்வியல், மண்டல சதகங்களிலும் சமயச் செய்திகள் இடம் கொண்டுள்ளமை இதனை உணர்த்தும். வாழ்க்கையின் செம்மைக்கு அறமும் பக்தியும் இன்றியமையாதன எனும் எண்ணத்தின் விளைவே இஃது எனவும் கொள்ளலாம்.

6. இறைவன் எழுந்தருளியிருக்கும் புகழ்மிகு தலங்களைச் சிறப்பித்தலும் இவற்றின் நோக்கமாக அமைதலைக் காசிவிசுவேச சதகம், அண்ணாமலைச் சதகம், தண்டலையார் சதகம், வடவேங்கட நாராயண சதகம்போன்ற பலவற்றால் உணரலாம். உரைக்கும் பொருள் எதுவாயினும் குறிப்பிட்ட தலத்து இறைவனை முன்னிலைப் படுத்துதல் இவ்வெண்ணத்தைத் தருகிறது.

7. சமயம் பரப்புதல், அவற்றின் கொள்கைகளை விளக்குதல் என்பன பக்தி, தத்துவச் சதகங்களின் பிற நோக்கங்களாகின்றன. கிறித்தவம், இசுலாம் மதச் சதகங்களிடையே இவ்வுணர்வு அதிக மாகத் தோன்றுகிறது. வாழ்வியற் சதகக் கூறுகளையும் கொண் டிலங்கும் ந. சவரிமுத்து உடையாரின் சேசுநாதர் சதகம் கிறித்தவ மதக் கொள்கை விளக்கத்திற்கு மிகுந்த சிறப்பளித்தி ருப்பதைக் காணலாம்.

8. தம் நூல்கள் சமுதாயத்திற்குப் பயனுடையதாய் நிற்றல் வேண்டும் என்பது இலக்கியவாணர் அனைவரின் பொது நோக்கமே. இங்குப் பக்திச் சதகப் புலவர்கள்,

திருநாம மறவாவுன் றாசர்க் கெல்லாம்
சீர்பாதத் தூளிநா யடியே னுன்றன்
அருளாலே யெம்பிரான் சதக மென்றே
அறைந்தகவி நூறதனி லொன்றா னாலும்
பரிவாகக் கற்றவர்க்குங் கேட்ட பேர்க்கும்
படிமிசையிற் றுன்பமறுத் தின்பம் பாலித்
திருவடியின் மெய்ஞ்ஞானம் விளங்கச் செய்வாய்
இறைவா நா ராயணனே யெம்பி ரானே

என்று கோபால கிருஷ்ணதாசர் விழைவது போன்று தம் நூலால் கற்பார் இறையருள் பெறுவதை அல்லது தம் நூலுக்கு இறைத் தன்மை அமைவதை நோக்கமாகக் கொள்கின்றனர்.

9. பாடநூல், மாணாக்கர் அறிவுறுதல் பொருட்டுச் சதகங் கள் தோன்றியமையையும் காண்கிறோம். "தமிழில் இரு பாலவர்க்கும் பயன்படுமாறு சமஸ்கிருதத்திலுள்ள உத்தமமான நீதிகளைத் தெளிவான நடையில் பாடிய நூறுபாக்களைக் கொண்டது. நூறுபாக்களிலுமுள்ள அரும்பதங்களை விளக்க அரும்பத விளக்கமும், ஒவ்வொரு செய்யுளின் கருத்தையும் குறிப்பிக்கப் பாடல் கருத்தின் அவதாரிகையும் சேர்க்கப்பட்டிருக் கின்றன. எம்மதத்தவர்க்கும் சமமான நீதியும் இருபாலரும் கற்கத்தக்க பொருள்களும் இதன் கண் உள்ளன" என்று மோசூர் வெங்கடசாமி ஐயரின் 'உத்தமநீதி—முதற் சதகம்' பற்றிய குறிப்பு இதனைத் தருகிறது. மதலைச் சதகம், நன்மதி வெண்பா போன்றனவும் இத்தகையனவே.

10. ஒரு சமுதாயத்தின் மரபுகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், பண்பாடு போன்றன பின்பற்றப்பட வேண்டும்; அவை இலக்கிய ஏற்றமும் பெற வேண்டும் என்பதும் வாழ்வியற் சதகங்களின் முதன்மைக் குறிக்கோள்களுள் ஒன்றாக எண்ணச் செய்கிறது.

சோதிடம் பொய்யாது மெய்யென்ப தறிவரிய
சூழ்கிரக ணஞ்சாட்சி யாம்
சொற்பெரிய வாகடம் நிசமென்கை பேதிதரு
தூயமாத் திரைசாட்சி யாம்
ஆதியிற் செய்ததவ முண்டில்லை யென்பதற்
காளடிமை யேசாட்சி யாம்
அரிதேவ தேவனென் பதையறிய முதனூ
லரிச்சுவடி யேசாட்சி யாம்
நாதனே மாதேவ னென்பதற் கோருத்ர
நமகசம கஞ்சாட்சி யாம் (அறப்பளீசுர: 52)

எனும் பாடலைச் சான்றாக்கலாம்.

11. குறிப்பிட்டதொரு எல்லைக்குள் தோன்றி அல்லது வளர்ந்து பெருமை பெற்றோரை ஒரே இடத்தில் அறிமுகப் படுத்தல்; மற்றும் அவ்விடத்தின் சமயம், வரலாறு போன்றவை தொடர்பான சிறப்புகள் முதலானவற்றை இணைத்து இன்பங் காணுதலே வரலாற்றுச் சதகங்களின் பொது நோக்கமாகிறது.

12. வடமொழிச் சொற்களை ஓரளவு எல்லா சதகங்களிலும் காண்பதிலிருந்து, அம் மொழியைப் பாராட்டுதலையும் தங்கள் நோக்கங்களுள் ஒன்றாகக் கொண்டுள்ளனவோ என எண்ண வேண்டியுள்ளது. போசனத்திற் குற்றங் கூறியது, போசன காலத்து அன்ன பலியிடும் விதி கூறியது, போசனஞ் செய்யும் அனுட்டான விதி கூறியது, தோடம் வரும் வகை கூறியது, ஆசமனஞ் செய்யும் காலங் கூறியது எனத் தம் பாடல்களுக்குத் தலைப்புக் கொண்டிருக்கும் அண்ணாமலைச் சதகம் இதனை மிக வேகமுடன் பின்பற்றியதாகத் தெரிகிறது.

13. தம்மைப் புரந்த வள்ளல்களை இலக்கியம் வழி என்றும் நிலைபெறச் செய்ய வேண்டும் என்பதும் பொதுவானதொரு நோக்கமாக எண்ணும் வகையில் மாந்தை நகராதிபதி சதகம், திருவேங்கடநாத சதகம், சதுரகிரி அறப்பளீசுர சதகம் என்பன அமைந்துள்ளன. இந்நோக்கம் சதகங்களுக்கு மட்டுமின்றிச் சிற்றிலக்கிய வகைகள் பிறவற்றிலும் காணக்கூடிய தொன்றாம்.

சிறப்பு நோக்கம்

சதக இலக்கிய வரலாற்றில் புதுமைகளைப் படைத்துள்ள புலவோர் அனைவரும் அவ்வவ் புதுமைகளைத் தருதலைத் தம் நோக்கமாகக் கொண்டனர் என்பதில் ஐயமில்லை. அவர் தம் புதுமைகள் பலவும் முன் கட்டுரையில் சுட்டப்பட்டுள்ளதாதலின் இங்கு விடப்பட்டுள்ளன. ஏனையவற்றுள் சிலவற்றைக் கீழே காணலாம்.

1. ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்குப் பயன்படவேண்டு மெனும் நோக்குடன் எல். எஸ். ஸ்டீபன்ஸ் அருண் மொழி விளக்கம் என்னும் திருநசரையார் சதகத்தை இயற்றியுள்ளார். சமயப் பரப்புதலை மேற் கொள்வோர், அச் சமயத்தில் தெளிந்த அறிவுடன் திகழ்தல் தேவையாதலின் இந்நூல் அவர்களுக்குத் துணையாக எழுந்துள்ளது. புதிதாக ஒன்றைப் பின்பற்றும் பொழுதில் அதில் முழுமையான தேர்ச்சி பெறுதற்கும் உதவு கிறது. ''இரக்ஷணைப் படை (salvation army)யினரின் உபயோ கத்திற்காக இயற்றப்பட்டதும் லண்டன் மிஷனைச் சேர்ந்த ஒருவரால் பதிப்பிக்கப்பட்டதுமான இது கிறிஸ்துவ மதப்

பாடல்கள் அடங்கியதாம்'' என இந்நூலைப் பற்றிய குறிப்புள்ளது.[4]

2. இறையருள் பெற்றோர் அவ்விறைவனுக்கு நன்றி செலுத்து முகமாக நூல் படைத்தலைப் பகழிக் கூத்தரின் திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் போன்ற பிற இலக்கிய வகைகளிலும் காண்கிறோம். இங்கும் சுப்பிரமணியக் கடவுளால் கல்வி அருள் பெற்ற ஜி. சதாசிவம் பிள்ளை, மெய் கண்ட வேலாயுத சதகம் மூலமாகத் தம் நன்றியறிதலைச் சுட்டும் நோக்கினைக் கொண்டுள்ளார். ஆசிரியர் பெயர் அறியப்படாத கமுகாசல சதகத்தின் பதிப்புரையில், ''ஓர் சிவபக்தர் பாடியது' என்று உள்ளது. இதன் ஆசிரியர் குட்ட நோயுடையராயிருந்தார் என்றும் கமுகாசலப் பெருமான் கோயில் வலம் வந்ததும் சதகம் பாடி வழிபட்டுக் குணமடைந்ததாகவும் சதக வரலாற்றில் கூறப் பெற்றிருக்கிறது. சதகம் எனப் பெயரிய இந்நூல் 41 பாடல் களோடு இருப்பதால் பிறகு ஏதோ தடைப் பற்றிப் பாடல் நிறுத்தப்பட்டிருக்கலாம்,'' என்று காண்பதாகச் சுட்டுவர்.[5] கமுகாசல சதகம் இறையருள் பெற வேண்டிப் பாடியதை இதன் மூலம் அறிந்து கொள்கிறோம். இறையருள் என்பது இங்குப் பொது நிலையில் அமைகிறது.

3. தன்னைக் கவர்ந்த நூலைப் போற்ற வேண்டும் என்ற விழைவில் முகிழ்த்ததே திருக்கோனேரி தாஸ்யையின் 'திருவாய் மொழி வாசக மாலை எனும் விவரண சதகம்' ஆகும். 'மாறாத அன்புடையார் முனே மருவும் திருப்புகழ் பாடியே பேறு ஆன முத்தியில் மேவின' அருணகிரி நாதரின் கந்தரலங்கார ஈடு பாட்டைக் கந்தப்பையர் தம் வேலாயுத சதகத்தில் (15, 16, 17, 42...) பல்வாறாகக் காட்டுகிறார்.

4. சமயங்கள் தங்களுக்குள் வேறுபாடு கொண்டு ஒன்றை யொன்று தாக்குதல் கூடாது; ஒன்றை மற்றொன்று மதிக்க வேண்டும் என்ற உணர்வினைத் திருவருள் சதகம், காசிவிசுவேச சதகம் என்பனவற்றில் காண்கிறோம்.

5. முன் கண்டதற்கு எதிர் நிலையாகத் தம்மை எதிர்ப்போரை வீழ்த்த வேண்டும் எனும் நோக்கில், தம்மீது சுமத்தப் பட்டகுற்றச்

---

4. தமிழ் நூல் விவர அட்டவணை (1901—1910) Vol II, Part III தமிழ் வளர்ச்சி இயக்க வெளியீடு; சென்னை; 1972; ப. 211.

5. தமிழ் நூல் விவர அட்டவணை 1910—1910; தமிழ் நாட்டு அரசினர் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற வெளியீடு; 1916.

சாட்டுகளுக்குப் பதிலுரைத்துத் தம் பெருமையை நிலை நாட்ட வேண்டும் என்ற முனைப்பில் கிறிஸ்தவ மத கண்டன சதகம் எழுந்துள்ளது அறிதற்பாலது. இதனோடு இணையும் தன்மையாகப் பிற சமயத்தை எதிர்த்தும், தம் சமயத்திற்கு வளந்தரும் வகையிலும் நூலமைய வேண்டும் என்ற நோக்கினை ஜி. எஸ். வேதநாயகரின் அமலகுரு சதகத்தில் காண்கிறோம். 'அரிவாளை ஓங்கிய கோரமுகமாய் நின்ற அகங்கார ரூபமாகும் அலகைகளை வணங்குவோர் அன்பற்ற சீவனில் அவ்வாறு சீவிக்கலாம்; இருளனைக் கறுப்பனை வணங்குவோர் கறுப்பாயும் இருளாயும் நின்று விடலாம்' (4) என்று இந்துமதத்தின் சிறு தெய்வ வழிபாட்டினைக் கண்டித்திருப்பதைக் காட்டாக்கலாம்.

6. தம் சமயச் சீர் கேடுகளைக் களைந்து அவற்றைச் செம்மைப் படுத்துவதையும் வேதநாயகர் பிறிதொரு நோக்கமாகக் கொண்டிருப்பதை,

உலகத்தார் ஊரிலும் கிறிஸ்தவர்கள் சபையிலும்
ஓயாத சச்சரவுகள்
ஓடியம், சாடிகள் உத்தண்ட கோபங்கள்,
ஒற்றுக்கேட் கும்தன் மைகள்
கொலை, களவு, குடி, காமம், மோசடிகள், பொய்ம்மொழிகள்
குருநிந்தை, சாமத் ரோகம்,
கோள், புறணி, தூற்றுதல், குடிகேடு, பொறாமைகள்
சூத்திரம், பெருமை, வன்மம்
புலைபேசி உடன்நரரை இகழுதல், தீதுபுரி
புல்லர்க்குக் கைகொடுத்தல்,
பூசைக்குத் தருமத்துக்கு ஈயாமல் வேசிக்குப்
பொலிசைவழக் குக்கும் ஈதல்
நலமான வேதம்ஒன்று இல்லாது ஸ்ரீருக்கையில்
நாங்கள்மெய் மதத்தர் என்னும்
நையாண்டிக் கிறிஸ்தவர் ஏசுவினால் பெற்ற
நன்மை ஏது? அமல குருவே, (19)

என்பது போன்ற பாடல்களால் (20, 21......) அறியமுடிகிறது.

7. சமயக் கொள்கைகளை விளக்கும் பொழுது அரபு மொழிக்குச் சிறப்பளிக்க வேண்டும் என்ற கொள்கையராய்த் தக்கடி ஷெய்கு பஸீர் லெப்பை இருந்திருப்பாரோ என்ற எண்ணம், 'அறபு மொழிப் பயிற்சி இன்றி இச் சதகத்தைப் புரிந்து கொள்வது கடினமாகும். எந்த ஒரு செய்யுளும் கூட ஒரு அறபுச் சொல் இன்றிக் காணப்படவில்லை. ஏனைய

இஸ்லாமிய சதகங்களுடன் ஒப்பிடும் போது இதில் மிகுதியான அளவில் அறபுச் சொல்லாட்சி இடம் பெற்றிருக்கிறது' என்பதைக்[6] காணும் பொழுது தோன்றுகிறது. இந்து மதத்தில் வடமொழி தெய்வ மொழியெனப் பலரால் போற்றப்படுதல் போன்று, இசுலாமியரின் தெய்வ மொழியாக அரபு மொழிச் சிறப்புற்றிருத்தல் இதற்குக் காரணமெனலாம்.

8. கானாட்டுச் சதகத்துள் வேளாளரின் பெருமை பலபட போற்றப்பட்டிருப்பது அந்நூலின் எழுச்சிக்கு அதுவே முதன்மை நோக்கமோ என எண்ணச் செய்கிறது. இவ்வாறு ஓரினத் தாருக்குப் பெருமைசேர்ப்பதை நோக்கமாகக் கொண்டு பாடியதைச் செயங்கொண்டார் சதகத்திலும் காண்கிறோம். 'தனவணிகர்கள் வளம் பெறவேண்டும் என்பதுதான் இதைப் பாடியதன் நோக்கம். எனவே முதலாவதாகத் திருமகளை நோக்கி 'நீ என்றைக்கும் எங்கள் தன வணிகரை விட்டு நீங்கக் கூடாது என்று வந்தித்து உறுதிபெற்றுக் கொண்டார்' என்பர் இந் நூலின் பதிப்பாசிரியர் மெய்யப்பச் செட்டியார்.

9. பிள்ளைப் பெருமாளையங்காரின் 'நூற்றெட்டுத் திருப்பதி திருவந்தாதி' போன்று, புகழ் வாய்ந்த திருத்தலங் களை ஒருங்கே இணைத்து நூல்யாக்க வேண்டுமென்ற எண்ணம் ந. கனகராசையரின் 'காசிவிசுவேசசதகத்தில்' எதிரொலிக்கக்காணலாம். முன் நூல் வைணவ தலங்களுக்குச் சிறப்பளிக்க, சமய வேறுபாடு அற்ற நிலையாக, சமயப் பொதுமை இதில் சிறந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

10. வைணவ சமயத்தில் குறிப்பிடத்தக்கோராக, திருமால் அடியார்களாகச் சிறந்தோரை ஒருங்கே போற்று முகத்தான் வானமாமலைச் சதகம் தோன்றியது போலும். துருவர் முதல் மணவாள மாமுனிகள் ஈறாகப் பல அடியார்களின் பெருமை களைத் தனித்தனியே பாடல் தோறும் புகலுவதாக நூல் அமைந்துள்ளதால் இதனை உணரலாம்.

11. பத்துச் சதகங்களைப் படைத்துள்ளமை, மச்சரேகை சித்தருக்குச் சதகங்ளைப் படைப்பதில் உள்ள மிகுந்த ஈடுபாட்டை உணர்த்துகிறது.

12. ஆத்மநாத தேசிகரின் 'சோழ மண்டல சதகம்,' சித்தாமூர் வேளாளர் அருணாசலம் விருப்பத்தை நிறைவு செய்தலை நோக்கமாகக் கொண்டு எழுந்துள்ளது. தமிழிலக்கிய வரலாற்றில் பல நூல்களின் எழுச்சிக்குப் பிறரின் தூண்டுதல்

6. பீ. மு. அஜ்மல்கான்; முன் சுட்டிய நூல்; ப. 30.

காரணமாக அமைவதைக் காண்கிறோம். தமிழின் தலைமைக் காப்பியமாம் சிலம்பினை இளங்கோ படைக்கச் சீத்தலைச் சாத்தனார் வேண்டியதை அதன் பதிகம் சுட்டும்.

தமது பாடற்றலைவரைப் பல்வகை இலக்கியங்களால் சிறப்பிக்கும் பொழுது சதகவகையாலும் பாடவேண்டும் என்ற நோக்கில் மணிவாசகர் திருச்சதகத்தையும், தி. கந்தப்பையர் தணிகை வேலாயுத சதகத்தையும் படைத்தனர் எனவும் கொள்ளலாம். மிக நீண்ட நூல்களாக அமைவனவற்றைச் சுருங்கிய வடிவில் தரவேண்டும் என்பதும் இராமாயண, மகாபாரத, கந்தபுராண, சதகங்களின் படைப்பு நோக்கங்களுள் ஒன்று எனக்கொள்வதில் தவறில்லை.

எண்ணடிப்படையில் தனித்த இலக்கிய வகையாக அமையும் இதனுள் நூறு பாடல்கள் எனும் வரையறை மீறிப் பல புலவர் கள் பாடியதன் நோக்கம் புலனாகவில்லை. சதகம் என்பது ஒரு முற்று எண். அதில் சற்று முன் பின் இருப்பதில் தவறில்லை என்று எண்ணினர் போலும்.

பயன்

சதகங்களின் பயன் என இயம்பும் பொழுது பொதுநிலை யில் சிலவற்றையும், சிறப்பு நிலையில் சமுதாயப் பயன், சமய வரலாற்றுப் பயன், மொழி வரலாற்றுப் பயன், கலைப் பயன், ஊர்ப் பெயர்கள் அறியும் வாய்ப்பு என்பனவற்றையும் தருவர்.[7] அவை தவிர ஏனைய சிலவற்றை இங்குக் காணலாம்.

(1) சுமார் 12ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண் டளவான காலத்திய தமிழ்ச் சமுதாயத்தை வாழ்வியல் சதகங்

---

7. அறம்பொருள் இன்பம் வீடு நாற்பயன்கள் கருதலில் அற நூல்கள் உலகியல் நல்வாழ்வுக்குப் பயன்படக் கூடியன எனலாம். இறைச் சார்புடன் அறமும் உலகியலும் கூறும் இச் சதகங்களுள் சில முக்திப்பயனும் கூறுகின்றன ....இறைவனை நோக்கிப் பாடும் புலவோர் தன்னிறைவுக்காக மன நிம்மதிக்காகவே படைத்திருப்பின் அதுவே பயனாகலாம். புலமை வெளிப்படுத்த எழுதப்படுவது நிறைவிலேயே பயன் பெறுகிறது. முதலில் எழுந்த சதகங்கள் பிற்காலச் சதகங்கட்கு வழிகாட்டி நின்ற பயனைப் பெறுகின்றன. ஒரே இலக்கியப் போக்குடைய சதகங்கள் மடை மாற்ற நோக்கைத் தூண்டும் பயனையும் கொள்கின்றன. மு. சுப்புலட்சுமி; முன்சுட்டியது; ப. 13—15.

கள் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. அந்தணர்களின் செல்வாக்கு மிக ஓங்கியிருந்தது. 'அந்தணர்க்கு ஆபத்தில் உதவாதிருப்பதினில் ஆருயிர் விடுவது நன்று' (குமரேச. 81) 'வேதியர்க் கதிகமாஞ் சாதியும்.............இல்லை யென்று பலநூலெலாமாராய்ந்த பேருரை செய்வார்' (அறப்பளீசுர: 55) 'சற்றும் அறிவில்லாமல் அந்தணரை நிந்தை செய்தயவிலோர் ஆயுள் பெருகார்' (அறப்பளீசுர:88) புரோகிதர், புராணிகர், வேதாகமங்கற்ற வைதிகர் தபோதனர்கள்.........மதியாத குற்றங்கள் செயினும் பொறுப்பதல்லால், வாதாடி யெதிர் செய்கை மன்னர் நெறியன்று காண்' (திருவேங்கட:18) சாதியில் மூத்தவர் பிராமணர் (மீனாட்சி: 25) எனப் பல சான்றுகளை இதற்குக் காட்டலாம். இவர்களுக்கு அடுத்த நிலையில்வேளாளர் மதிக்கப்பட்டதையும், சாதிப் பிரிவுகள் பலவாக அமைத்து அவற்றுள் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டு இழிந்த பிரிவினர் பழிக்கப்பட்டதையும் அறிய முடிகிறது. 'திசைதோறும் உள்ளபல தேவாலயம் பூசை செய்ய நல்லோர் பெறுவதும் சீர் கொண்ட பைங்குவளை மாலை புனை வேளாளர் செய்யும் மேழிப் பெருமை காண்' (அறப்பளீசுர : 84) என வேளாளர் பெருமை பெறுகின்றனர். சாதிப்பகுப்பில் கண்டிப்பினையும், உயர்வு தாழ்வினையும் 'சாதி நெறி முறைமை வழுகின்ற தீயோர்...... கண்டவுடனே பின்னை யெண்ணாது கண்டித்தல் கருணை மனு நீதி கண்டாய்' (திருவேங்கட : 16) 'சொல்வார் சொல் நம்பத் தகுவதல்லாமல் சொல்லைப் புரட்டும் வல்வாய்ப் புலையர் நம்புவரோ' (கோவிந்த : 58) என்பன போன்றவை உணர்த்துகின்றன. 'சாதி சொல்லால் அறியலாம்' (குமரேச 38) எனும் பொழுது இனத்தாரிடையே கிளைமொழி வழக்கு அன்றே தோன்றியமை வெளிப்படுகிறது.

பெண்கள் நிலை சமுதாயத்தில் குறைவாகவே மதிக்கப்பட்டது. பேரிலகு பெண்களை அனேகமாய்ப் பெற்றவர் பாவியாகக் கருதப்பட்டான். (கறுப்பண்ண : 76) கணவன் உணும் முனம் உண்பாளை அடக்கமில்லாதவளாகக் கண்டிக்கும் தண்டலையார் சதகம் பெண்களின் இழிநிலையை,

உரங்காணும் பெண்ணாசை கொடிதாகும்
பெண்புத்தி யுதவா தாகும்
திரங்காணும் பெண் வார்த்தை தீதாகும்
பெண் சென்மம் சென்ம மாமோ
வரங்காணும் தண்டலைநீ ணெறியாரே!
பெண்ணிடத்தின் மயக்கத் தாலே

இரங்காத பேருமுண்டோ பெண்ணென்ற
வுடன்பேயு மிரங்குந் தானே (85)

என்று நவின்றிருப்பதைக் காணலாம். இதற்கு எதிர்நிலையாக ஆண்மக்கள் உயர்வாகப் போற்றப்பட்டதைத் திருவேங்கட சதகம் (6) போன்றவற்றால் அறியலாம். இந்நூல் நகரச் சிறப்புகளுள் ஒன்றாக 'பரத கீதப்ரபல வேசியர்களாடலும், பாடலும் பெறுகோயிலும் (7) என்று நவின்றிருப்பதில் பரத்தையர் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டப் பிரிவினராக அமைந்ததை அறியமுடிகிறது.

கற்றோர் தம் புலமையைச் சொற்பொழிவு வழி உணர்த்திப் பொதுமக்களுக்கு நலம் வழங்கியதை 'கற்றவொரு வித்துவானைக் கல்விப்ரசங்கத்தினாலறியலாம்' எனக் குமரேச சதகம் (38) காட்டும். புலவர்களின் வருவாய் புரவலரினால் அமைந்ததையும் 'தொடை ஏறு செந்தமிழ் பாடியே தொழுதும் கொடாதவர் வாழ்தலைக் கடை ஏறி இங்கு இரவாமலே கழல் ஆர்ந்த சிற்றடி நல்குவாய்' (72); 'காடிக்கும் நீள் கந்தைக்கும் ஓர் கவிபாடியே கணமூடரைக் கூடிக் குலைந்து அலையாமல் உன் குளிர் தாமரைப் பதம் நல்குவாய்' (24) என வேலாயுத சதகம் உணர்த்தும். புலவரின் நிலை, பொருள் நிலையில் இரங்கத் தக்கதாகவே இருந்திருக்கிறது என்பதை இதனால் பெறலாம். புலவோர் சொற்பொழிவாளராக, நூற்கருத்தை மன்றத்தினருக்கு உணர்த்துவோராகவும் விளங்கியமை பலசதகங்களால் அறிய வருகிறது. கவிஞர் தம் இயல்புகளுள் ஒன்றாக, 'நன் மதுர வாக்குஞ் செப்புமவையோர்கள் பிரமிக்க விடியென்னவே செய்யும் பிரசங்க நடையும்...உடையோன் கவிஞன்' (கயிலாச: 7) என்று சுட்டுதலைக் காட்டாக்கலாம்.

அக்கால கட்டத்தில் தமிழகத்தில் நிலவிய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது. குழந்தைகளுக்குச் செவ்வெண்ணெய் புகட்டும் பழக்கத்தைக் கறுப்பண்ணசாமி சதகம் உணர்த்துகிறது. கோயில்களில் திருவிளக்கிடும் பொழுது பசுவின் நெய்யினையும், தாமரை நூலினைத் திரியாகவும் பயன்படுத்தியதைத் தண்டலையார் சதகம் (1) சுட்டும். தம் மகளின் துணைவர்க்கு, அவளின் பெற்றோர் செய்யும் சிறப்பினை 'வேட்டகந் தன்னிலே மருகன் வந்திடுமளவின் மேன்மேலுமுபசரித்து விருந்துகள் சமைத்து நெய் பால் தயிர் பதார்த்தவகை வேண்டுவ எலாம் அமைப்பார். ஊட்டமிகுவர்க்க வகை செய்திடுவர். தைலமிட்டுறுதியாய் முழுகுவிப்பார்

ஓயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவார்' எனக் குமரேச சதகம் (72) உரைக்கும்.

வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்கும் பழக்கம் பரவலாக இருந்திருக்கிறது. 'பட்டிக்கடாமிசை அந்த கன்பாசம் கொடு வரு முன்னமே, வட்டிக்கு வைத்திடு காசு எலாம் வறியோர்க்கு அளிப்பவர் உய்குவார்' என வேலாயுத சதகம் (65) அறிவுறுத்துகிறது. இவ்வட்டிக்குப் பெறும் கடன்களுக்குப் பத்திரம் எழுதி வழங்கும் வழக்கத்தைக் கயிலாசநாதர் சதகம் விளக்குகிறது. (21,22)

சகமதனின் முப்பதாண் டுக்குமேற் பட்டகைச்
சாதன மெனும் பத்திரந்
தந்திட்ட தொருமுதற் பொருளுக்கு வட்டியது
சமமாகு காலமளவுந்
தகவுறுந் திறமுடைய னாகியே தனிகன் மிகு
தனமிகுஞ் செல்வனாகிச்
சமீபத் திருந்துவாழ் கின்றகட னாளியைச்
சற்றேனுங் கேளாமலுந்
துகளிலாச் சிட்டனைக் காட்டாம லும்மவன்
சும்மா விருந்து விடிலோ
தோன்றுமப் பத்திர நீதித் தலத்தினிற்
றோல்வியுற் றழியும்

என்று அதன் விதிமுறைகள் அமைதலை அந்நூல் வழி காண்கிறோம்.

விரதங்களும் நோன்புகளும் வழக்கிலிருந்தன. அக்காலையில் ஒரு பொழுது மட்டும் உணவு அருந்துதலை, 'கருதும் ஒரு சந்தியின் பாண்டம் என்பதை வரும் களவான நாயறியுமோ' (குமரேச : 53) என்பதால் அறியலாம். 'உய்ந்திடவே செவ்வாயும் சங்கட சதுர்த்தியாம் உறு விரதம்' (மூத்த பிள்ளையார் : 59) என்பது போன்று பலவகை விரதங்கள் இருந்தமையும் உணரற்பாலது. மீனாட்சி சதகம் அந்தணர்களின் பழக்க வழக்கங்களுக்குச் சிறப்பளித்து அவற்றைச் சிறப்புற மொழிந்துள்ளது (66,67).

தமிழரிடையே அன்று நிலவியிருந்த நம்பிக்கைகளை வாழ்வியல் பற்றிய கட்டுரையில் விரிவாகக் காணலாம். அவை மிகுதியும் சமயஞ் சார்ந்ததாக நிற்றல் வெளிப்படை.

கருமந் தொடங்கிலைங் கரன் முன்பு வைக்கவுங்
கல்வியைக் கற்றி டுகவுங்
கட்டழக தாகமென பாடங்கள் செய்யவுங்
கலியாண மதுசெய் யவும்

தருமங்கள் புரியவும் வேளாண்மை செய்யவுங்
தகும்வாணி பங்கள் செயவும்
தலங்கள் தரிசிக்கவுங் காசியிம சேதுவிற்
நான் சென்று நீரா டவும்
திருவிழாச் செய்யவு மாதார மாம் பொன்
செகத்தவர்க் கென்று மவைதான்
திரைகடலி லோடியுந் திரவியந் தேடெனச்
செப்புமொழி நிசமல் லவோ

(கறுப்பண்ண : 65)

என்பதினின்றும் சமயம் வாழ்வில் இரண்டறக் கலந்து நின்றமை பெறப்படுகின்றது.

பாமரரும் போற்றும் வண்ணம் படைக்கப்பட்ட இச்சதகங்கள் அவர்களுக்குப் பொது அறிவுக் களஞ்சியமாகப் பயன் பட்டமையை வாழ்வியற் சதகங்கள் உணர்த்துகின்றன. சமயத்தையும் சமய நெறிகளையும் பின் பற்றுதலை வலியுறுத்துவனவாகவும் அமைந்துள்ளன. அண்ணாமலைச் சதகம் இதில் முன் நிற்கிறது. சைவ சமய நடைமுறைகளைப் பின் பற்றுதல் யாங்ஙனம் என்பதே இதனுள் பல்கிப் பரந்துள்ளது. கயிலாசநாதர் சதகம், பதினெண் புராணம் (40) முப்பத்திரண்டு ராகம் (42), வாத்தியங்கள் வகை (43), தொண்ணூற்றாறு தத்துவம் (44), இதுவரை கலியாண்டவரசர் (45), என நிகண்டுகளின் பயனையும் அளிக்கக் காண்கிறோம். கிரக, ராசிகளின் பலன், நல்ல நேரம், நிகழ்வுகளின் பலன், நிமித்தங்களின் பலன் போன்றவற்றைச் சதகங்கள் உள்ளடக்கும் பொழுது பஞ்சாங்கங்களின் பயனையும் தருவதாய் அமைகின்றன. உலகோர் இயல்பு, வாழ்வில் பின்பற்ற வேண்டியன, நீக்க வேண்டியன, உடல் நலனைப் பேணுமுறை, உயர்ந்தவை, தாழ்ந்தவை எனப் பலவும் இங்கு விளக்கம் பெற்றிருத்தலின் வாழ்வியல் கையேடாக இவை அக்காலத்தே பயன்பட்டன எனத் துணிந்து கூறலாம்.

வரலாற்றாசிரியருக்கு உறுதுணையாவன மண்டல சதகங்கள் என்பதில் கருத்து மாறுபாடில்லை. இன்று குறிப்பிட்ட இடம் பற்றிய சிறப்புகளை நல்கும் சுற்றுலாத் துறையினரின் வழிகாட்டி போன்று இவை அன்றமைந்திருந்தன என்றும் கொள்ளலாம். இன்று இன்னும் ஏட்டுச் சுவடியிலேயே நிலை பெற்றிருக்கும் தக்கை ராமாயணம் தோன்றிய வரலாற்றை,

அம்புவி மெச்சுகுன் றத்தூரி லாயரி லாய் கலைதேர்
எம்பெரு மானைக் கொடுதக்கை யென்னு மிசைத்
தமிழால்

நம்பு மிராம கதையையன் பாக நவில விசை
வம்பவிர் தார்ப்புய னல்லய னுங் கொங்கு மண்டலமே
(94)

எனும் பாடலால் அறிகிறோம். இசைப் பாடலாக அமையும் இந் நூல் கம்பனின் ராமாயணத்தைப் பின்பற்றி எழுந்துள்ளது. இலக்கிய நயத்திற்கு முதன்மை யளித்தலைத் தவிர்த்து, செய்திகளுக்கு முதன்மைச் சிறப்பளித்து, பின் வந்தோர்க்குப் பல அரிய செய்திகளை இம்மண்டல சதகங்கள் அளித்துப் பயனடைந்துள்ளன.

தன் சமயத்தார் மட்டுமின்றிப் பிற சமயத்தவரும் அதன் கொள்கை, சிறப்பு, பின்பற்றும் நெறி போன்றவற்றைத் தெரிந்து கொள்வதற்குப் பக்திச் சதகங்களும், தத்துவச் சதகங்களும் பெரிதும் பயன்படுகின்றன. இவற்றிற்கிடையே காணப்படும் சமயக்காழ்ப்பு வெறுக்கத் தக்கதொன்றாயினும் சமயங்களின் பொதுத் தன்மையை உணர்வதற்கு இச்சதகங்கள் பெரிதும் பயன்படுகின்றன. 'இகத்தில் பிறந்த நாள், புனித ஞானஸ்நானம் எய்திச் சிறந் திட்டநாள், இதமான புதுநன்மை பெற்றநாள், மணவாழ்வையேற்றுப் புகுந்திட்ட நாள், அகத்துறு வேட்கையாலே துறவு பூண்டநாள், அருமறைக்குருவான நாள்......பத்தும் மங்கள முற்றும் நாள்' எனக் குறித்தவர் ஒருவரின் பெருமைக்குரியனவற்றைப் பிறர் அறிந்து கொள்ள முடிகிறது. படைத்த புலவோர் இறைவன் மீது ஒன்றிப் பாடிய உணர்வினை அதனைக் கற்கும் பிறரும் பெறுமாறு அமைந்து சிறப்புறுதலை மணிவாசகரின் திருச் சதகம், அமல குருசதகம், அகத்தீசர் சதகம் முதலான பல பக்திச் சதகங்களில் காணலாம்.

புதுமைச் சதகங்கள் மட்டுமின்றிப் பிறவும் வேறொன்றின் தோற்றத்திற்கு உறுதுணையாவதை, ''இச்சதகப் பாடல்கள் எல்லாம் தயாநிதி மாலையில் 'தயாநிதியே' என முடியுமாறு போல, 'வேலாயுதா, வேலாயுதா' என்னும் மகுடத்துடன் முடிவுறுதல் காணலாம். இவ்வகை அமைப்பில் திருத்தணிகை முருகன்மேல் மற்றொரு புலவர் பாடிய 'வேலாயுதசதகம்' ஏட்டுப் பிரதியாய்ச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி செங்கோட்டு வேலர் அவர்களிடம் உள்ளது. நாகபட்டினத்தில் நீலாயதாட்சியம்மன் தெற்கு வீதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமெய்கண்ட வேலாயுதக் கடவுள் மேல் அழகுமுத்துப் புலவர் பாடிய ஸ்ரீ மெய்கண்ட வேலாயுத சதகம் என ஒரு நூலும் உள்ளது. இந் நூலும் 'வேலாயுதா வேலாயுதா' என்னும் விளியுடன் முடியும் நூறு பாடல்களைக் கொண்டதாகும். ......இவை கந்தப்ப ஐய

நூலின் வழிநூல்களாகவே கொள்ளத்தக்கனவாம்'' என்று வேலாயுதசதகப் பதிப்பாசிரியர் சுட்டுவதினின்றும்[8] பெறலாம்.

வாழ்க்கைக்கு வழிகாட்டுதலைத் தம் முதன்மை நோக்கமாகக் கொண்ட சதகங்கள் அதில் வெற்றி பெற்றுள்ளமையைப் பாடநூல்களாக அவை சிறந்திருந்தமையினின்றும் பெறலாம்.[9]

பள்ளிச் சிறார்க்கு மட்டுமின்றிப் பொது நிலையிலும் இச்சதகங்கள் சிறப்புற்றிருந்ததை அறிகிறோம்.[10] ஆயின் இன்றைய நிலையில் இவற்றின் இப் பயன்பாடு மிகக் குறைவே. உரைநடையிலக்கியங்களின் பெருக்கத்தாலும், மாறிவரும் சமுதாய உணர்வுகளாலும் இம்மாற்றம் எனலாம். எனினும் தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழ்ச் சதகங்கள் தமக்கென நிலையான ஓரிடத்தைக் கொண்டுள்ளன. தமிழ்ச் சமுதாய வரலாற்றாய்விற்கு, சதகங்களின் பங்கு பெரும்பான்மையானது. அவையின்றி இடம்பெறும் சமுதாய ஆய்வு முழுமை பெறாது எனத் துணிந்து கூறலாம்.

---

8. மு. சண்முகம் பிள்ளை; திருத்தணிகைச் சந்நிதிமுறை;
9. நாராயண பாரதியார் இயற்றிய திருவேங்கட சதகம், 1918 ஆம் ஆண்டு பி.கே. சீனிவாசாசாரியர் பதிப்பிற்குச் சென்னைப் பாடசாலைப் புத்தக சங்கத்தார் பொருளுதவி செய்ததாகத் தெரியவருகிறது. சிறுவர்க்கெனத் தேர்ந்தெடுக்கப்பெற்ற 51 பாடல்கள் மட்டும் கொண்டது.

   தமிழ் நூல் விவர அட்டவணை; Vol V, Part I; தமிழ் வளர்ச்சி இயக்க வெளியீடு; சென்னை; 1975.
10. மு. வரதராசனார்; தமிழ் இலக்கிய வரலாறு; சாகித்திய அக்காதெமி; புதுடில்லி; நா. ப. 1980; பக், 221-222.

   ''They have had immense popularity till the first quarter of the 20th Century. Till recently young children knew them by rote; they served as an introduction to poetry and literature to the young mind. Though the verses were long, they were adapted to singing and so were easy to memorize. They also helped to keep alive many social traditions and conventions in the minds of successive generations, because a memorization of at least half a dozen Satakams was considered necessary for a beginner in literature.

   —M. Arunachalam; An introduction to the history of Tamil literaure; Gandhi Vidyalayam, Tiruchitrambalam; 1974; p. 180.

வாழ்வியல்

உயிரினங்கள் யாவற்றிலும் உயர்ந்தவனாக மனிதன் மதிக்கப்படுகிறான். அவ்வாறு அவனை உயர்த்துவது அவனது நடைமுறைகளே. அந்நடைமுறைகள் சிறப்பாக அமைய வேண்டும் என்பதில் ஒவ்வொருவரும் அக்கறை கொள்கின்றனர். அன்றாட வாழ்வில் இடம் பெறுவன; பிறருடன், சமுதாயத்துடன் தொடர்பு கொள்ளுதல்; மனிதனின் தனிமனித வாழ்வில் இடம் பெறுவன; பொதுவாழ்வில் மேற்கொள்ளப் படுவன; சமுதாய அமைப்பு முறை என்பன போன்றன இதனுள் அடங்குகின்றன. மனிதரின் வாழ்வினைச் சுற்றியே இவை அமைந்திருத்தலின், இவற்றை வாழ்வியற் கூறுகளாகக் கொள்ளலாம். இவ்வாழ்வியலை நெறிப்படுத்துகின்ற தொழிலை அன்று திருக்குறள் முதலான அற நூல்கள் மேற் கொண்டன. காப்பியங்களும் தங்கள் நோக்கங்களுள் ஒன்றாக அதனைக் கொண்டன. பின்னாளில் சதக இலக்கியங்கள் தோன்றி மிகுந்த செல்வாக்கு பெற்றன. அவ்வாறு மனிதரின் அகவாழ்வையும் புற வாழ்வையும் சிறக்கச் செய்யும் வாழ்வியற் சதகங்களின் எண்ணங்கள் இங்கு இயம்பப்படுகின்றன.

அகவாழ்வானது ஒரு தனி மனிதனின் செயற்பாடுகளையும், புறவாழ்வானது அத்தனிமனிதன் சமுதாயத்தில் ஓர் அங்கம் என்ற நிலையில் செயற்படுவதையும் சுட்டுகிறதெனலாம். இச் சூழலில் வாழ்வியற் சதகங்கள் அறிவுறுத்தும் கருத்துகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

வாழ்வியற் கூறுகள்

- தனிமனிதன்
  - பண்பு
    - பெருமை
    - சிறுமை
    - நற்பண்பு
    - தீயபண்பு
    - நல்லோர்
    - தீயோர்
  - தொழில்
    - செய்யவேண்டியன
    - செய்யக்கூடாதன
    - உடல் நலம் பேணல்
- சமுதயத்தில் ஓர் அங்கம்
  - சமயம்
    - வழிபாடு
    - புராணம்
    - தலம்
    - நிலையாமை
  - சமுதாயம்
    - இனப்பகுப்பு
    - நம்பிக்கைகள்
    - சோதிடம்
    - உயர்ந்தவை
    - பயனற்றவை
    - துன்பந்தருவன
    - புலவர்
    - பாடல்
    - நாடு
  - உலகியல்
    - மரனிடரியல்பு
    - இயற்கை

சதகங்கள் தனிமனிதநிலை, சமுதாயநிலை என்று தனித் தனியாக இவண் சுட்டியுள்ளது போன்று மொழியவில்லை. இரண்டும் இணைந்த நிலையிலும் நவின்றுள்ளது. இப்பகுப்பு முறை தெளிவிற்காக இங்கு மேற்கொள்ளப்பட்டது. பல கருத்து கள் சதகங்களுக்கிடையே கூறியது கூறலாகவே அமைகின்றன, எனினும் அண்ணாமலைச் சதகம், கயிலாச நாதர்சதகம், மீனாட்சி சதகம் போன்ற சில, தனித்தன்மைகளைக் கொண்டி லங்குவதையும் காண முடிகிறது. இறுதியில் அமைந்துள்ள அட்டவணை சதகங்களில் இவ்வாழ்வியல் கூறுகள் இடம் பெற்றுள்ள மாற்றைத் தருகின்றது. அதனைக் கொண்டு இச்சதகங்களின் தனித்தன்மைகளையும், சிறப்புகளையும் உணர வியலும். ஒவ்வொன்றும் எக்கூற்றிற்கு முக்கியத்துவம் அளித் துள்ளன என்பதும் புலனாகும்.

இனி இவை பற்றிச் சதகங்கள் தரும் விளக்கங்களை முறையே ஒவ்வொன்றாகக் காணலாம்.

பெருமை

தனி மனிதச் சிறப்பு அவனின் பண்பு நலனில் மிளிர்கின்றது. தனி மனித நலம் குடும்ப நலமாகிப் பின் சமுதாய நலமாக உயர் வடைதலின் அறநூல்கள் அதற்கு மிகுந்த சிறப்பளிக்கின்றன.

ஒருவருக்கு மேன்மையை, சிறப்பளிப்பனவற்றைப் பெரிதாகக் கருதுதல் இயல்பாதலின் அவற்றைப் பெருமைக்குரியன எனக் கொள்கிறோம். பெருமை தரும் காரணிகளுள் பண்பு நலனும் ஒன்றாதலின் இவண் எண்ணப்படுகிறது. இயல்பாகவே பிறப்பில் பெருமையுற்று அமைவன, ஒன்றனுக்குப் பெருமை யளிப்பது, ஒருவர் பெருமைக்குரியோராகும் தன்மை போன்ற வற்றைச் சதகங்கள் இங்குச் சுட்டுகின்றன. இதற்காகச் சமுதாயத்தில் பெருமையுடன் திகழ்ந்தோரையும் முன்னிறுத்தி அறிவுறுத்துகின்றன. குமரேச சதகம், கறுப்பண்ணசாமி சதகம், திருவேங்கட சதகம் முதலானவற்றில் இவை பற்றிய எண்ணங் கள் பிறவற்றை விட அதிக அளவில் காணப்படுகின்றன.

சந்தனக் கட்டை பழுதுற்றாலும் அதன் மணம் என்றும் பழுதுறாது, பாலை எவ்வளவு தான் காய்ச்சினாலும் அதன் இனிமைக் குணம் மறையாது, அழுக்கடைந்தாலும் மணியின் ஒளி குன்றாது, நெருப்பில் இட்டாலும் தங்கத்தின் மாற்றுக் குறையாது, சூரியனை மேகம் மறைத்தாலும் ஒழிக்க முடியாது அதுபோல பெரியோரின் பெருமையை அற்பர் அறிய வியலா விடினும் உலகில் நிலைத்து நிற்கும் (அறப். 23) என்று பெருமை

யின் பெருமை உணர்த்தப்படுகிறது. தான் அறிந்தவர் அனை வருக்கும் உதவி செய்தல், ஊரார் நன்மைக்காகக் குளம், கிணறு உருவாக்குதல், கோயில்கள் கட்டுதல், அறம் பல செய்தல், மிக்கப் புகழுடைய புதல்வரைப் பெறுதல், சுத்த வீரராய்த் திகழ்தல், பல்வகைக் கல்வி கேள்விகளில் சிறந்தோங்கி நிற்றல், இல்லையெனாத கொடை வண்மை பெற்றல், காவியம் படைத்தல், சிறந்த பத்தினியை மனைவியாகக் கொள்ளல் இவற்றால் உலகில் பெருமை யுடையோராகத் திகழலாம் (குமரேச. 31) என்றும் கருதப்படுகிறது. இத்தகையோரைச் செத்தும் சாகாதவர் எனக் குமரேச சதகம் சுட்டுதலும் குறிப் பிடற்பாலது. பிறருக்காக வாழும் பெற்றியுடையோராகத் திகழ்பவரை நிலையுள்ள புகழாளராக அண்ணாமலைச் சதகம் உணர்த்தும்.

தாராளமாகக் கொடுக்கும் தியாகிகளுக்குப் பொருள் துரும்பு என்று ஈகைக் குணத்தைச் சிறப்பிக்குங்கால் அனைத்திலும் அன்னதானம் மிக்க பெருமையுடையதாய்த் திகழ்தலை, 'வருத்தும் பசிக்கினிய வன்ன தானத்தை நிகர் மற்றொன்று ச்ரியாகுமோ' (8) என்பதால் சுட்டும். சிறிதாகத் தோற்றம் தரும் ஒன்று செயலில் இறங்கும் பொழுது அதன் பெருமை ஒளிவிடுவதை,

விசிறி யிலடங்கினற் காற்றுவெப்பங்களை
விலக்கிநளி னங்கொ டுக்கும்
வித்திலுற் றிடுபொருள்கள் பருவகா லத்தினில்
விளைந்துபல னைக்கொ டுக்கும்
புசபெலத் தினிலுற்ற சவுரியம் சமரிற்
பொருந்திச் சயங்கொ டுக்கும்
பூததய வினிலுற்ற புண்ணியஞ் செல்வப்
புகழ்ப்பிர தாபங்கொ டுக்கும்
நிசமதனி லுற்றறிவு பிரபஞ்ச மாயைதனை
நீக்கிமோட் சங்கொடுக்கும்
நெடிய வா னுற்றமுகில் புவனந் தழைத்திடவு
நிதமு மழை யைக்கொ டுக்கும்
வசனமீ தினிலுற்ற யின் சொல்லா னதுநல்ல
வனெனப் பெயர்கொ டுக்கும் (கறுப்பண்ண: 49)

எனப் பேசுகிறது. ஒருவன் நல்லவன் என்று பெயரெடுத்தற்கு இன்சொல் ஒன்றே போதுமானது. மிக எளிய இவ்வழியாலே வாழ்வில் பெருமை பெறலாம் என்பதனை வலியுறுத்தற் பொருட்டு இறுதியில் அமைத்துள்ளது போலும்.

வாழ்மனைக்கு அழகு குலமங்கை, குலமங்கை வாழ்வினுக் கழகு சிறுவர், வளர் சிறுவருக்கழகு கல்வி, கல்விக்கழகு உலகத் தார் போற்றும் உயர் குணம் கொளல், அக்குணத்திற்கு அழகூட்டுவது பேரறிவு. அப் பேரறிவு பெருமை பெறுவது தவம்; உயர்ந்த உதவி, விரதம், பொறுமை, பெரியோரைப் பணிந்து அவர்க்குப் பணிவிடை புரிதல், சிறந்த ஒழுக்கம், அன்பு, கருணை என்று ஒருவர் பெருமையுறுதற்கான வழிகளையும், ஒன்று மற்றொன்றைச் சார்ந்து நிற்றலையும் அறப்பளீசுரசதகம் (9) சுட்டுகிறது.

பிறருக்கு உதவி செய்தலை விருப்பாகக் கொண்டோரை, அதனின்றும் விலக்கிடினும் அவர் செய்கை யொழிந்து போகாது, அவர்களுடன் பிரிக்க இயலாவாறு கலந்துநிற்கும் பண்பு அதாகும். அதுவே அவர்க்குப் பெருமைதருவதாகவும் அமைகிறது. இவ்வாறு உலகில் தம் செயலால் பெருமை பெற்று நிற்போரைத் திருவேங் கட சதகம் (93) யார் யாரெனப் பட்டியலிட்டுக் காட்டு கிறது. குமரேச சதகம் அத்தகு பெரியோரை அவர்தம் பெருமைக்குரிய செயலைச் சுட்டி இனங்காட்டுகிறது (45). இவ்வாறு சுட்டுவதன் மூலம் கற்பாரும் தாமும் அவர் போல் பெருமை பெறல் வேண்டும் எனும் உணர்வினைப் பெற வழி வகுக்கின்றன எனலாம்.

தம்மால் மற்றவருக்கு எவ்வகையிலேனும் பயன்படுதற் கியலா காலையிலும் தம்மளவில் உயிர்ந்தோராக நிற்றலே போதுமானது என்பதை அறப்பளீசுர சதகம்,

'பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்துளோர்
பூவலஞ் செயவேண்டு மோ
பொல்லாத கொலைகள விலாதநன் னெறியுளோர்
புகழறஞ் செயவேண்டு மோ
நையாத கர்மத்தை லோபத்தை விட்டபேர்
நல்லறஞ் செயவேண்டு மோ
நன்மனோ சுத்தியுண் டானபேர் மேலுமொரு
நதிபடிந் திடவேண்டுமோ (58)

என்பதால் வலியுறுத்துகிறது. நல்லவன் என்று உலகமெல்லாம் போற்றிடும் பேருடனே புகழ்படைத்து வாழ்பவனே மனிதன் என்று போற்றுதற்குரியர் என்பது தண்டலையார் சதகக் கருத் தாம் (25). இவ்வாறு மனிதன் நல்லவனாக, வல்லவனாக, மேலோனாக பெருமை பெறுதற்குப் 'பொருள்' எவ்வாறெல் லாம் பயன்படுகிறது என்பதை இராமச்சாமிக் கவிராயர் (கறுப்

பண்ண:65) நவின்றிருப்பதும் இவண் எண்ணற்பாலது. மற்றும் இப்பொருளைப் பெற்றிருப்பதால் பெறக்கூடிய பெருமைகளை யும் கயிலாசநாதர் சதகம் (14) சுட்டும். மானிடர் பெருமைக்கு வழிகோலுவனவற்றுள் சிறப்பானதொன்றான கல்வி பற்றியும் இச்சதகம் (17) விரிவாகப் பேசுகிறது. தாழ்ந்து நிற்க வேண்டிய காலத்து அவ்வாறிருந்தே பெருமை பெறவேண்டும் எனப் பயிற்றும் (24) குமரேச சதகம் மனிதரெனப் பிறந்தோர், உலகில் இவ்வாறுதான் வாழவேண்டும்; அதுவே பிறவியின் பெருமை என்று வற்புறுத்தும்.

சடமொன் றெடுத்தாற் புவிக்குநல் லவனென்று
தன்பேர் விளங்க வேண்டுஞ்
சதிருடனி தல்லாது மெய்ஞ்ஞானி யென்றவ
தரிக்கவே வேண்டு மல்லால்
திடமினிய ரணசூர வீரனிவ னென்னவே
திசைமெச்ச வேண்டு மல்லால்
தேகியென வருபவர்க் கில்லையென் னாமலே
செய்யவே வேண்டு மல்லால்
அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவா
னாகவே வேண்டு மல்லா
லறிவான துரைமக்க ளாகவர வேண்டுமிவ
ரதிகபூ பால ராவர் (74)

இவ்வாறு எவ்வகையிலேனும் ஒரு துறையில் பெருமையுடையோ ராய் விளங்குதலே வேண்டற்பாற்று என்று அறிவுறுத்துகிறது. பண்பு, செயல், பொருள், கல்வி என ஏதேனும் ஒன்றால் உலகில் ஒவ்வொருவரும் எவ்வாறேனும் உயர்வு பெறல் இயலும் என்ப தையே இவ்வாறு சுட்டுகிறது எனலாம்.

இவையேயன்றி ஒரு நகரினை அணிசெய்வனவற்றை அறப்பளீசுர சதகமும் (48) திருவேங்கட சதகமும் (7) உணர்த்து கின்றன. அவற்றை அதன் பெருமையாகக் கொள்ளலாம். பெருமைமிக்கதொரு நாட்டின் சிறப்புமிக்கதொரு ஊரில், 'தக்க தொரு வீதியொருபானடு விசாலமாய்ச் சார்ந்த சிங்கார மனை யிற் தனதானியங்கறவை முதலான செல்வந்தழைத்தன்ன தான முதவி மச்சகண மக்களொடு வாழ்வதே வாழ்வு' எனவும் திரு வேங்கட சதகம் (72) கூறுவதும் நினைத்தற்பாலது. ஒருவருடைய பண்புகளும் செயல்களும் மட்டும் பெருமையுடையதாய் நிற்றல் போதாது. அவரது வாழ்வும் குறையற்ற நிறைவுடைய தாயமைந்து சிறத்தலே பெருமைமிக்கது என்பது அதன் கருத்தாகும்.

சிறுமை

ஒருவர் பெருமையடைதற்கு மாறாகக் கொள்ளும் களங்கம் இகழ் ஆகியன சிறுமையாகின்றன. பெருமையும் சிறுமையும் வாழ்வும் தாழ்வும் மேடும் பள்ளமும் உலகியற்கை. நன்மையுந் தீமையும் இணைந்துதான் உலகம் அமைந்துள்ளதாதலின், வாழ்வியலை விளக்க முற்பட்ட அறநூல்கள் அதன் இரு புறங்களையும் சுட்டத் தவறவில்லை. அவ்வகையில் பெருமைபற்றிப் பேசிய சதக நூல்கள் சிறுமையையும் சுட்டுகின்றன.

வாழ்வில் சிறுமையுறுதற்குரிய காரணங்களாக மாறாத வறுமை, நீங்காத பிணி, வேட்டகத்தில் உண்டல், மனைவியை வழங்கி அதனால் தன்னுயிர் வளர்த்தல், பிறரை நிந்தை செய்து உய்த்தல், சிவிகை சுமந்து பிழைத்தல், அழியாத கவலையில் அழுந்துவோர், வார்த்தையில் சோர்வு படல், மனையாளுக்கு அஞ்சி விருந்தினை ஒழித்தல் உண்மையில்லை எனத் தெரிந்தும் வீம்புடன் ஒன்றை நீதிமன்றம் கொண்டு செல்லுதல் முதலானவற்றைத் தருவர். (குமரேச 32) இத்தன்மை உடையோர் உயிருடன் இருந்தும் இறந்தவராகவே கருதப்படுவர். இங்குச் சிவிகை சுமத்தல் இழிதொழிலாகக் கருதப்பட்டமைக்கு வள்ளுவரின் 'அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை' எனும் குறள் (37) காரணமாயிருக்கலாம். அறம்புரியா வாழ்வு இழிந்தது எனும் நிலையில் இது இங்கு இவ்வாறு சுட்டப்பட்டிருத்தல் வேண்டும். மற்றும் மனைவியின் தாய்வீட்டில் பலநாள் தங்கியிருத்தல் மிக்க இழிவாக அன்று கருதப்பட்டமையையும் உணருகிறோம்.

வேதமந்திரம் ஓதித் தேன்பால் புகட்டினாலும் வேம்பு இரும்பாகாது, சீனியைக் கொட்டி வளர்த்தாலும் வெள்ளுள்ளியின் குணம் மாறாது, கோதையரிடம் பாலருந்தினும் மந்திகள் தம் குறும்பினை ஒழித்தல் இயலாது, கோடிகோடியாய் மாத்திரை, லேகியம் என அளித்தாலும் நாயின்வால் நிமிராது, சாதிமலர் மாலைபோல் நெட்டியில் செய்தாலும் அதில் நன்மணம் வாராது அதுபோல் சிறுமைத் தன்மையுடையவர்க்கு எவ்வளவுதான் உரைக்கினும் அவர் திருந்தமாட்டார் என்பது கயிலாசநாதர் (37), குமரேசர் (15, 37, 39) கறுப்பண்ணசாமி(85) சதகங்களின் உறுதியான முடிவாகிறது. சிறுமையின் ஆட்சி அந்த அளவிற்கு ஆழமானதாக அமைந்து மாற்றுதற்கியலாதாகிறது.

சிறப்புடையதாகக் கருதப்படுவனவும் முறையில்லா நெறியடையும் பொழுது சிறுமையடைவனவாக, குருவிலாவித்தை,

கூரறிவிலா வாணிபம், குணமிலா மனைவி, ஆசை குடிநலமிலா நாடு, நீதியில்லா அரசு, யானையில்லா வெம்போர், திருவிலா மெய்த்திறமை, பொறையிலா மாதவம், தியானமில்லாத நிட்டை, தீபமில்லாத மனை, உடன்பிறப்பில்லாத உடல், சேகர மில்லாத சென்னி, அழகிய உருவின்றிப் பருத்த உடல், பசியில்லா உண்டி, உண்மையில்லாத மொழி, அறிவு இல்லாத அமைச்சு வீரமில்லா வீரம், உதவியில்லா நட்பு, பெரியோரில்லா அவை என வரிசைப்படுத்துவர் (குமரேச. 21). அதற்குரிய இயல்பில் குன்றாது முறையோடு நிற்றல் வேண்டும் என்பது இதனால் வலியுறுத்தப்படுகிறது. இதனைத் திருவேங்கட சதகமும் சுட்டும் 25, 62). தம்முடைய கடமையில் தவறும் பொழுதும் சிறுமை யுறுவதை,

நீதிவழு வாவகை வழக்குரைப் போர்களு
நிறைந்ததீ வினைகளெல்லா
நீங்குபரி காரமுறை செய்குவோ ரும்பிணி
நிறுத்தவரு பண்டிதர்களும்
சோதிடஞ் சொல்லும்பு ரோகிதரு முலகந்
துதித்தசெங் கோல்வேந்தருந்
தூயவுப தேசதே சிகருமவர் சீஷருஞ்
சொல்லுமிவ ரேழுபேரும்
ஆதிமறை நூலிலுரை செய்தவித மாராய்ந்
தறிந்துதெளி யாதுசெயிலோ
வடைக்கலப் பொருளைக் கவர்ந்திடு பேரிலு
மகோரநர கடைவர் கண்டாய் (70)

என்று இந்நூல் உணர்த்துகிறது. இதுபோன்றே அருகிலிருக்கும் புண்ணிய நதி, தலம் முதலியவற்றைத் துதியாத கயவன் ஈனமான முடவன்; கைதந்த வோலை வாசிக்க முடியாத கசடன் மிக்க குருடன், தீது பெறு தன் களவு கண்டவர்க்கு உத்தரஞ் செப்பிலாதவன் ஊமையாம்; நல்ல பெருமைதரும் கதை ஒன்றேனும் அறியாதவன் செவிடன், ஏதெனினும் ஓர் பேர் விளங்கும்படியாக உடலெடுக்காதவன் குரூபி, இறைவழிபாடு செய்யாதவன் நீசன் என்று மானிடரின் சிறுமைகளை இந்நூல் (44) சுட்டுகிறது.

சிறுமதியாளரின் செய்கையை நகைச்சுவையுடன் திருவேங்கடசதகம் இயம்புவதும் (69) எண்ணற்பாலது. வாழ்க்கையைச் சிறுமைப்படுத்துவதில் முன்னணியில் நிற்கும் வறுமை பற்றிப் பலவும் பலவாறாக எடுத்தியம்பியுள்ளன. கயிலாசநாதர் சதகம், 'பதிதரெனவே மெலிகுவார், வாய்ச்

சொலெங்குஞ்செலாது, மங்கலமிழந்த மாதரும் அவமதிப்பர், பிறர் மனைவயிற் செலவஞ்சுவார், கொடியோரெனப் பெயர் தரிப்பர், கூரறிவு குன்றும், ஒரு காசுக்கும் நம்பாத கொள்கை வறுமைக் குணங்காண் (15) என்று அவற்றுள் மிகத்தெளிவாக உரைக்கிறது. நல்லோரையும் நாசஞ் செய்யும் பரத்தமையையும் இவ்வாறே தனித்து எடுத்துக்காட்டி அறிவுறுத்தியுள்ளன.

பெருமையுடையனவும் சிறுமையடைவதான குறைபாட்டைக் களைவதற்கும் சதகங்கள் (அறப்பளீசுர : 66) வேண்டுகின்றன. பெருமைக்குரிய நகரைச் சுட்டியது போன்று அதற்கு எதிரான சிறுமைக்குரிய நகரினையும் அறப்பளீசுர சதகம் காட்டுகிறது. பெருமைக்குரியோரை எடுத்துக்காட்டியது போல சிறுமையுற்றோரையும் குமரேச சதகம் (47) பட்டியலிட்டுக் காட்டியுள்ளது. இவர்களின் வரலாறு மற்றவர்க்கும் பாடமாக இருத்தல்வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வகைப் பட்டியல்கள் அமைகின்றன எனலாம்.

நற்பண்பு

வாழ்க்கையைப் பல கோணங்களினின்றும் படம் பிடித்துக் காட்டுதல் சதகங்களின் நோக்கமாதலின் மானிடரின் பண்பு விளக்கங்கள் சிறிதளவே இங்குப் பேசப்படுகின்றன. அறநூல்கள் இவற்றிற்குச் சிறப்பிடம் அளித்திருப்பதால் இவை முக்கியத்துவம் அளிக்கவில்லை எனவும் கொள்ளலாம். அண்ணாமலைச் சதகம், திருவேங்கடசதகம் போன்றன இதில் விருப்பங்கொள்ளவில்லை என்பதும் நவிலத்தக்கது.

தன்னை நம்பி வந்தோரையும், சுற்றத்தையும், பெற்ற தாய் தந்தையரையும், நண்பரையும் என்றும் கைவிடாது காத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தும் குமரேச சதகம் (94) அவ்வடைக்கலம் காக்கும் பண்பினால் பெருமை பெற்றோரையும் (97) எடுத்துக் காட்டி அதனை மேற்கொள்ள வேண்டுகிறது. இந்நூல் போற்றும் மற்றொரு பண்பாக நடுவுநிலைமை யமைகிறது. தம் மிடையே நீதிகேட்டு வரும்பொழுது, அதனால் செல்வம் வருமென்றோ, தம் அன்பிற்குரியவரென்றோ, பகைவரென்றோ, செல்வந்தரென்றோ, ஏழையென்றோ எதைக் குறித்தும் நடுநிலை பிறழாது சமன் செய்து சீர் தூக்கும் கோல் போலமைந்து நீதி உரைத்திடல் வேண்டும் (61) என்று வலியுறுத்துகிறது.

பல செத்தைகள் இணையும் பொழுது கயிறாகி அது வலிமை வாய்ந்த யானையையே கட்டுகிறது. பல துளிகள் சேர்ந்து ஆறாகி குளம், ஏரி இவற்றை நிறைவிக்கிறது. நுண்மையான பஞ்சு பல சேர்ந்து நூலாகி நல்லாடையாகிறது. கோலுடன்

சீலை கூடும்பொழுது சிவிகையாகிறது. அரிசியுடன் உமியும் தவிடும் இணைந்திருக்கும் பொழுதுதான் மீண்டும் முளைக்க முடியும். எனவே மனமொத்த நேயமொடு கூடி யொருவர்க் கொருவர் வாழின் வெகு வெற்றி பெறலாம் என்று அறப்பளீசுர சதகம் ஒற்றுமையைப் பின்பற்றத் தூண்டுகிறது. இந்நூல் ஒருவர் பிறரிடம் பழக வேண்டிய முறையையும்,

மாதா பிதாவினுக் குள்ளன் புடன் கனிவு
மாறா நல்லொழுக்கம்
மருவுகுரு வானவர்க் கினிய வுப சாரமுள
வார்த்தை வழிபா டடக்கம்
காதார் கருங்கண்மனை யாள்தனக் கோசயன
காலத்தி னய பாஷணங்
கற்றபெரி யோர் முதியர் வருமாது லர்க்கெலாங்
கருணைசே ரருள் விதானம்
நீதிபெறு மன்னவ ரிடத்ததிக பயவிநய
நெறியுடைய பேர்க் கிங்கிதம்
நேயமுள தமர்தமக் கமகிழ் வுடன் பரிவு
நேரல ரிடத்தில் வயிரம்
ஆதிமனு நூல்சொலும் வழக்கமிது வாகும் (29)

என்று நவில்கின்றது. உலகில் பிறந்த எவரும் தனியொரு மனிதனாய் வாழ்க்கையை நடத்துதல் இயலாத ஒன்று. எவ்வகையிலேனும் எதற்காகவேனும் துறவு நிலையில் கூடப் பிறருடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வுண்மையை உணர்ந்து அமைதியான, அழகான வாழ்க்கை வாழ விரும்புவோர்க்கு இவ்வாறு அறிவுறுத்துகிறது எனலாம்.

சிறிதளவே ஆன உதவியானாலும் செய்த நன்றியைப் பனையளவாகக் கொண்டு உயிர் உள்ளவரையும் நினைத்தலைப் பெரிதாகத் தண்டலையார் சதகம் (12) நினைக்கிறது. 'பறித்து உரிய பொருள் முழுதும் கவர்ந்தாலும், அடித்தாலும், பழிசெய்தாலும் பொறுத்தவரே யரசாள்வார் பொங்கினவர் காடாய் போவார்' என்று இந்நூல் (17) பொறுமையைச் சிறப்பித்துப் பேசுகிறது. 'பொறுமையுடன் அறிவுடையார் இருந்த இடம் விளக்கேற்றிப் புகுதல் வேண்டும்' (92) என்று மேலும் அதன் பெருமையை வற்புறுத்துகிறது.

இவற்றினின்றும் சற்று விலகிய நிலையில் கறுப்பண்ணசாமி சதகம் நற்பண்புகளைப் போதிக்கின்றது. இரக்கம் உள்ள மனதில் தயவு உண்டு. தயவு வரின் பொறுமை வரும், பொறுமை வரின் நல்ல அமைதியான குணம் வரும். அவ்வாறாயின் நாளும்

வளர் அன்பு உண்டாகும். அன்பு உள்ள இடத்தில் அளவற்ற ஈகைக் குணம் வரும். அதனால் அதிகப் புண்ணியம் உண்டாகும். அப்புண்ணியத்தால் உலகில் நல்ல புகழ் உண்டாகும். (15) என்று மொழிகின்றது. ஒரு நல்ல பண்பு பிற நல்ல பண்புகளுக்கும் அடிப்படையாவதைச் சுட்டி அதனால் உலகில் சிறந்த புகழைப் பெறவும் முடியும் என்று காட்டுகிறது. இதன் வழிக் கற்பாரை நற்பண்புகளை மேற்கொள்ளத் தூண்டுகிறது எனலாம். வாழ்க்கையில் எதனைப் பின்பற்றுதல் மிக மிகத் தேவையானது என்று புலவோர் கருதினரோ அதற்கேற்ப அவற்றிற்குத் தம் நூல்களில் சிறப்பளித்துள்ளனர் எனலாம். அறப்பளீசுர சதகம் ஒற்றுமையை வலியுறுத்திய பொழுதிலும் ஒருவரின் குணத்தின் இயல்பினை எவ்வாறு கண்டறியலாம் என்பதற்கு விளக்கம் அளித்துள்ளமை சுட்டற்பாலது. கற்றோர் என்பதை அவர் தம் ஒழுக்கம் நிறை இனிய வாக்கும், கற்புடையோரை அவரது பார்வையும் நடையும், கற்பற்றோரை அவரது அடக்கமின்மையும், அறமுள்ளோரை அவரது இரக்கக் குணமும், வீரமுடையோரை அவரது அஞ்சாமையும் உணர்த்தும் (31) என்பது அந்நூல் காட்டும் வழியாம்.

தீயபண்பு

அறப்பளீசுர சதகம், கைலாச நாதர் சதகம், கறுப்பண்ண சாமி சதகம் என்பன சினத்திற்கு அதிகச் சிறப்பளித்து அதனை ஒழிக்க, வேண்டியுள்ளன. சினம் பிற தீய குணங்களையும் வரவழைக்கும் என்று அறப்பளீசுர சதகம் அதன் கொடுமையை விரிவாகக் காட்டியுள்ளது.

> கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய் தந்தை
> கோபமே குடி கெடுக்குங்
> கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
> கோபமே துயர் கொடுக்கும்
> கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
> கோபமே யுற வறுக்குங்
> கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
> கோபமே கருணை போக்கும்
> கோபமே யீனமாங் கோபமே யெவரையுங்
> கூடாம லொருவ னாக்குங்
> கோபமே மறலிமுன் கொண்டு போய்த் தீயநர
> கக்குழியி னிற்றள்ளு மால் (87)

என்று மிக்க வேகமுடன் சினத்தைச் சீறியுள்ளதைக் காணலாம். ஒருவரின் அழிவிற்கு முழு முதற் காரணியாய்ச் சினம், நிற்றலை,

இதனைக் கற்பார் நன்கு உணர முடியும். சினத்தால் அழிந்த வர்களைப் புராண, இதிகாசங்களினின்றும் எடுத்துக் காட்டி, அழிவிற்கு அடித்தளமிடும் சினத்தை ஒழிக்க வற்புறுத்துகிறது, கறுப்பண்ண சாமி சதகம் (24). மூவகைக் குற்றங்களுள் மிகக் கொடியது சினமே என்றுரைத்து அதன் தீமைகளை அடுக்கி அதிலிருந்து தம்மைக் காப்பாற்றும்படிக் கயிலாசநாதரைவேண்டு கிறார் சிதம்பரம் பிள்ளை. ஆணவத்தால் அழிந்தோரையும் வரிசைப் படுத்தி அதனின்றும் மீளக் கற்பாரை வலியுறுத்து கிறது (86) கறுப்பண்ண சாமி சதகம்.

மனிதனைத் தீயவழியில் இழுக்கும் நச்சரவங்களுள் பொருளாசையும் ஒன்று. எதை வேண்டுமாயினும் அளக்கலாம். பொருளாசைக்கு மட்டும் அளவே கிடையாது என்று அதன் இயல்புரைக்கும் கயிலாசநாத சதகம் (18). இந்நூல் மனிதனாகப் பிறந்தும் இறைவனை வணங்காதவன், மனைவி மக்களைத் தவிக்கவிட்டுப் பரத்தையின் பின் திரிபவன், மிகுந்த செல்வம் இருக்கவும் அதனை அனுபவிக்காது உண்ணாது, உடுத்தாது உடல் மெலிபவன், துறவியானாலும் பெண்ணாசை விடாத சண்டாளன், தினமும் நல்ல அறிவுதரும் நூல்களைப் படித்தும் ஆணவத்தை அகற்றிடாதவன், அன்னை தந்தை பசித்திருக்கத் தான் மட்டும் அருந்துபவன் இவர்களெல்லாம் கருமிகளாவர் என மொழிகிறது (38). எனவே இப்பண்புகளை யெல்லாம் ஒழித்துவிடல் வேண்டும். அப்பொழுதுதான் நல்லதொரு மனிதனாகலாம் என்பது இதன் கருத்து.

நடுவுநிலைமையை வலியுறுத்திய குமரேசசதகம் ஒரு தலைச் சார்பினை வெகுவாகக் கண்டிக்கிறது. இத்தன்மையினால் வரும் அழிவுகளைச் சுட்டி, அதனின்றும் மீள்வதற்கு வேண்டு கிறது. (62). பிறர்மனை நயத்தலால் வரும் கேடுகளையும் ஒருங்கே மொழிந்து (65) அதனின்று விடுபட வலியுறுத்துகிறது. தண்டலையார் சதகம் ஆணவத்தையும் (92), பொறாமையினை யும் (18) ஒழிக்க அறிவுறுத்துகிறது.

பெண்புத்தி கேட்டல், தந்தைதாயின் பிழையைப் புறஞ் சொல்லல், பெரியோர் சபையில் பிதற்றுதல், சுற்றத்தார் நகைக்கவே இழிதான பழிதொழில் புரிதல், பற்றற்றபேர்க்கு முன் பிணை நின்று பின்பு போய்த் தவித்தல், கண்கெட்ட மாடென்ன ஓடி இரவலர் மீது காய்ந்து வீழ்தல், போன்றவை யும் கற்றறிவில்லா மூடத்தன்மையுடன் ஒப்பு நோக்கத் தக்கதே என்று அறிவின்மை காரணமாக நிகழும் பிழைகளையும், பண்பிறக்கத்தையும் அறப்பளீசுரர் சதகம் (35) சுட்டுகிறது.

பிறரும் தம்மைப் போன்றவரே என்று எண்ணாது அவரது பிழைப்பைக் கெடுக்கும் புல்லரை வன்மையாகக் கண்டிக்கும் கோவிந்தசதகம் (15), 'விடம் பாய்ந்து செத்த பிணத்துக்கும் பச்சிலையுண்டு, புல்லோர்க்குப் பிறக்கும் பொல்லாக் குணத்துக்கு நன் மருந்தேது' என்று (12) புன்மையாளரைத் திருத்தவே இயலாது எனமொழிகிறது.

நல்லோர்

ஒருமனிதனை நல்லோனாக, பெருமைக் குரியோனாக ஆக்குவது அவன் பால் குடிகொண்டிருக்கும் நற்பண்புகளே. நற்பண்புகள் வழிகாட்ட ஒருவர் வாழ்வை நடாத்திச் செல்லும் பொழுது உலகில் பேரும் புகழும் பெற்ற சான்றோராகிறார். அத்தகையோர் யாவர் என்பதையும் இச்சதகங்கள் இனங்காட்டுகின்றன. நல்லோர்களின் வாழ்க்கை எவ்வாறு அமையும், அவர்கள் இயல்பு யாது என்பனவற்றை இவை தெளிவாக உணர்த்தியுள்ளன.

உடன் பிறந்தாருடன் இணைந்து வாழ்தல், நல்ல மக்களைப் பெறுதல், நற்குணங் கொள்ளுதல், பிச்சையிட்டு உண்ணுதல், இறந்த முன்னோர்களுக்கு இடுதல், கோயில்களுக்குச் செய்தல், பிறருக்கு உதவுதல், சிறியோர் செய்யும் பிழை பொறுத்துச் சினத்தைத் தவிர்த்தல், பிறருக்குப் பணிந்து செல்லுதல், இன்சொற்களை மொழிதல் இவற்றால் என்றும் தாழ்வு வாராதாதலின் நல்லோர் முறைமை இதுவே எனக் குமரேசசதகம் (96) பேசுகிறது. மற்றும் அன்னதானம் செய்தல், பெரியோர் சொல்வழி நிற்றல், செய்யும் தொழிலில் வந்த லாபத்தில் பிறருக்கு உதவிடுதல், நல்லவர்களைச் சார்ந்து நல்லாசிரியரின் அறிவுரைப் படி நடத்தல், சொன்ன மொழி மாறாதிருத்தல், பெற்றோரைப் பேணுதல், சோம்பலைத் தவிர்த்தல்,உயிர் போயினும் வாய்மை தவறாதிருத்தல், இல்வாழ்விலிருந்தாலும் தாமரையிலைத் தண்ணீராக உலகப்பற்றொழிந்து நிற்றல் என்பனவும் நல்லோருக்குரிய இயல்புகளே என (99) மொழியும்.

இத்தகைமையோரை மகாபுருடன், மகாதீரன், மகாராஜன், மகாமேரு, மகா தியாகி, மகாஉசிதன் என்று போற்றும் அறப்பளீசுர சதகம் (17), மற்றும் சில நெறிகளை,

> செய்ந்நன்றி மறவாத பேர்களு மொருவர் செய்
> தீமையை மறந்த பேருந்
> திரவியந் தரவரினு மொருவர்மனை யாட்டிமேற்
> சித்தம் வையாத பேரும்

கை கண் டெடுத்த பொருள் கொண்டுபோய்ப் பொருளாளர்
கையிற் கொடுத்த பேரும்
காசினியி லொருவர் செய் தருமங் கெடாதபடி
காத்தருள் செய்கின்ற பேரும்
பொய்யொன்று நிதிகோடி வரினும் வழக்கழிவு
புகலாத நிலைகொள் பேரும்
புவிமீது தலைபோகு மென்னினுங் கனவிலும்
பொய்மையுரை யாத பேரும்
ஐயவிங் கிவரெலாஞ் சற்புருட ரென்றுலக
ரக மகிழ்வர் (16)

என்று நல்லோர் நடத்தைக்குரிய பண்புகளை விதிக்கிறது. இந் நூல் நல்வினையாளர்களாகச் சிபி, அரிச்சந்திரன், மாபலி, பரசுராமன், சுமுத்திரை சுதன், கருடன், பகீரதன், சிறுத் தொண்டன், கானவன், பிரகலாதன், விபீடணன் ஆகியோரைத் தருகிறது (46) இடருற்ற காலையிலும் தம் கொள்கையிலிருந்து சிறிதும் வழுவாத தன்மையே ஒருவரை உயர்நிலைக்குக் கொண்டு செல்கிறது என்பது இதனை நோக்க இந்நூலின் எண்ணமாகத் தெரிகிறது.

தீயோர்

நல்லோரை எளிதில் இனங்கண்டு விடலாம். தீயோரை உணர்தல் அரிது. பல்வகை நடிப்புகளாலும் வேடங்களாலும் தம்மை மறைத்துக் கொள்வர் ஆதலின் நல்லோரைப் பற்றிச் சுருங்கிய அளவில் மொழிந்த சதகங்கள் தீயோரைச் சற்று விரிவாகவே விளக்குகின்றன. தீயபண்புகளிடமிருந்து தம்மை விலக்கிக் கொள்வது ஒன்று; தீயோரிடமிருந்து விலகிக் காத்துக் கொள்வது மற்றொன்று எனும் இரட்டைப் பயனை இவை நல்குகின்றன.

துறவு நிலையிலும் பெண் பின் செல்வோன், தன் குல நடத்தையை விட்டு, மானத்தை விட்டு நடப்பவன், போரில் ஆயுதத்தைக் கைவிட்டு எதிரியைப் பணிபவன், கொடையிலா செல்வம் படைத்தவன், குறளி சொல்பவன், சண்டையிடுவோன், மடையருடன் உறவாடி வாடுவோன் இவர்களெல்லாம் உயிருடன் வாழும் பிணங்களாகும். பிறருக்கு ஐயமிட்டு உண்ணாதவன், மானமழிந்தவன், அநியாய விலைக்குப் பொருட்களை விற்பவன், அந்தணருக்குச் சொந்தமான இடத்தைக் கபடமாய் வாங்கியவன், கடன்பட்டவன், கோவிலில் சேயிழைதனைச் சேர்ந்தவன், திருநீறு பஞ்சாக்கரத்தை விட்டவன், சிவ வழிபாடு

செய்யாதவன், கன்னியழியாத பெண்களைக் கெடுத்தோன், நதியினில் நிர்வாணமாய் நின்று மூழ்கினோன், சமயத்தை அழித்தோன், கைக்கூலி பெறுபவன் எனும் இவர்களெல்லாம் நரக வேதனைக்குரியவர்கள். நல்வினையாற்றுபவர்க்கு இடையூறு புரிவோன், புராணங்களைப் பழித்தோன், பூவையரை நடுவழியில் விட்டேகினோன், இரக்கமில்லாதவன், விலங்குகளை வீழ்த்துவதற்காகக் கண்ணி, பொறி, வலை, தூண்டில், படுகுழி முதலியன அமைத்தவன், கணவரைத் தானிழந்த கன்னியரை மருவினவன், வயிற்றிடைச் செனித்திடும் கருவினை அழித்தவன், தவறான நீதிவழங்குவோன், சிவன் சொத்தினை இரந்தவன், ஏழைக்கு இடுக்கண் ஆற்றியவன் இவர்கள் அனைவரும் வாய் பேசு பிணமெனவே மதித்திடற்குரியவர் என்று தீயவர் யார் யார் எனும் பட்டியலை மிக விரிவாகத் (33-35, 61) தந்துள்ளது கருப்பண்ணசாமி சதகம்.

பல்லோர் உறவில் தான் வாழ்க்கை அமைகிறது. அவ்வுறவுகள் சரியில்லையாயின் உறவு பகையாகிறது. அவ்வாறு பகையாவார்க்குரிய இயல்பினையும் இந்நூல்,

மிடியினாற் கனகடன் படுகின்ற தந்தையும்
விபசாரி யான தாயும்
வினவுசொற் கேளாத தம்பியு மிரண்டக
மிகச்செய் திடுந்த மையனும்
கொடியதா டகைநேரு மனைவியுங் கபடமுறு
குணமுற் றிடுந் தோ ழனும்
கூட்டுறவு யில்லாத தாயாதியு மயிடங்
கோரஞ்செய் திடுமா மியும்
படியாத பிள்ளைகளு மன்பிலா மாமனும்
பண்பிலா மைத்துனை வரும்
பாரிற்தனக் கிவர்கள் சத்துரு வெனச்சொலப்
படுமென்ப ரறிவுடை யர்காண் (45)

என்று எடுத்துக் காட்டுகிறது. உறவுகள் தம் செய்கையால் பகையாகும் பொழுது தீயவர்களாகின்றனர்.

வாழ்வில் நற்கதியடைய யியலாது துன்புற நேரும் என்று தீவினை புரியாளரை இந்நூல் கண்டிக்கக் குமரேச சதகம் சற்றுப் புதுமையான நிலையில் ஒவ்வொரு குற்றம் புரிவோரையும் ஒவ்வொரு விலங்கிற்கும், நவகோள்களில் ஒன்றிற்கும் ஒப்பிட்டுக் காட்டுகிறது.

தான் கூறுவது, செய்வதுதான் மேல் என்று பெரியோர் அறிவுரையைப் புறக்கணிப்பவன் குரங்கு; கூட்டத்தில் குறிப்

பறிய வியலாது நிற்பவன் பயனற்ற மரம்; ஆணவ வீம்பினால் தனக்கு எளியவரை எதிர்த்து நிற்கும் வெறியன் குரைக்கும் நாய்; தன்னிடம் உதவி நாடி வருபவரைப் பாராட்டாத கருமி; மேன்மையில்லாத கழுதை; சோம்பலுடன் பெரியோர் கூடும் அவையில் உறக்கம் கொள்பவன் சண்டிக்கடா; சூதுடன் வஞ்சமாக அடுத்தவர்க்குத் துன்பம் செய்பவன் கொடுந்தேள்; பெற்றோரின் அறிவுரையைக் கேளாத பிள்ளை அஷ்டமச்சனி; கணவனுக்கஞ்சாது எதிர்வாதம் புரியும் மனைவி சன்மத்தில் அங்காரகன்; தன்னை மீறித் தன் சொற்கேளா அடிமை சந்திராஷ்டகம்; தன்னுடைய உரிமை கோரி நீதிமன்றம் ஏறுகின்ற தம்பி சன்மச் சூரியன்; தன் உடன் பிறந்தானை வஞ்சித்த தமையன் மூன்றாமிட வியாழன்; நாள் தோறும் தங்களுக்குள் பகை வளர்த்துக் கொள்ளும் கொண்டோனும் கொடுத்தோனும் ராகு கேதுக்களாகும் என்பது அதன் எண்ணமாகும் (40,42).

பொதுவாக அற நூல்கள் தீயோர் யார், அவர் எத்தன்மையர்; அவரால் வரும் துன்பங்கள் யாவை என்பன போன்றவற்றை மட்டுமே மொழியக் காணலாம். அவற்றினின்று வேறுபட்டமையும் இந்நிலை, அத்தீமையின் கொடுமையை மேலும் வலியுறுத்துவதாக அமைகிறது. இழிவான விலங்காகவும், வேண்டாத கோள்களாகவும் தீயவர்களைச் சுட்டும் பொழுது, இந் நேரிடைத் தாக்குதலினால் தீயோர் திருந்த வாய்ப்புண்டு என்ற எண்ணம் இதற்குக் காரணமாகலாம். தீவினை புரிய எண்ணுவாரையும் தடுக்க முனையும் உத்தியாகிறது. இத்தீயோரிடமிருந்து நல்லோரை விலகி நிற்கச் செய்யும் எச்சரிக்கையாகவும் அமையும். இவ்வாறு பலர் பல நிலைகளில் திருந்த வழியேற்படுகிறது.

கடனுதவு பேர்வந்து கேட்கும்வே ளையின் முகங்
கடுகடுக் கின்ற பேயுங்
கனமருவு பெரியதனம் வந்தவுட னிறுமாந்து
கண்விழிக் காத பேயும்
அடைவுடன்சத்துருவின் பேச்சை விசு வாசித்
தகப்பட் டுழன்ற பேயும்
ஆசைமனை யாளுக்கு நேசமா யுண்மைமொழி
யானதை யுரைத்த பேயும்
இடரிலா நல்லோர்கள் பெரியோர்க ளைச்சற்று
மெண்ணாது ரைத்த பேயும்
இனியபரி தானத்தி லாசைகொண் டொருவற்
கிடுக்கண் செய் திட்ட பேயும் (23)

என்று மற்றும் சில வேண்டாத பண்புடையோரை யாவரும் வெறுக்கும் பேயாகக் காட்டுகிறது. நல்ல பண்புடையோராக நல்வினையாற்றுவோர் தான் மனிதர், மற்றையோர் அப்பிறவியே யில்லை என்பதே இந்நூலின் ஆழமான கருத்தாக அமைகிறது. தகாத செய்கையுடையோரைச் செவிடன், ஊமை, சப்பாணி, குருடன், சண்டாளன், மாபாவி என்றெல்லாம் வசைபாடும் கயிலாசநாதர் சதகம் (20) சமுதாயத்திற்கு ஒவ்வாத பலரை இருந்தும் இறந்தவராகக் (13) காட்டுகிறது. இவர்கள் இருப்ப தால் யாதொரு பயனுமில்லை; இறப்பதே மேல் என்று வன்மை யாகக் கண்டிக்கிறது.

தீயோரின் பழி உலகம் உள்ளளவும் நிலைபெறக் கூடிய தொன்று என்று புராண, இதிகாச பாத்திரங்கள் வழி அறிவு றுத்துகிறது திருவேங்கட சதகம் (94). இவ்வாறு பலவாறாகத் தீயோரின் இயல்புகளையும், செயல்களையும் சுட்டிய சதகங்கள் அத்தகையோரை நல்வழிப்படுத்த முனையும் அதே வேளையில், யாராலும் எதனாலும் அக்கயவர்களைத் திருத்தவே இயலாது என்றும் தங்கள் தோல்வியை ஒப்புக் கொள்கின்றன (தண்டலை: 100). மானிடரின் ஈனத் தன்மைகளை வகைப்படுத்தி மொழியும் (38) அறப்பளீசுரர் சதகமும் (47) சேசுநாதர் சதகமும் (38,39,54) தீவினையாளரைப் பட்டியலிட்டுக் காட்டி அவர் வழிச் செலாது நல்வழி நடக்க அறிவுறுத்துகின்றன.

செய்ய வேண்டியன

ஒருவர் மேற்கொள்ளும் வினைகளும் அவர்தம் இயல்பிற்குக் காரணமாய் நிற்றலின் அறநூல்கள் அவற்றிற்கும் சிறப்பளிக் கின்றன; எல்லாச் சதகங்களாலும் வலியுறுத்தப்படும் நல்வினை களுள் அறம் மிகுதியாகப் பெருமைப் படுத்தப்பட்டுள்ளது. 32 வகை அறங்கள் யாது என்பனவற்றை அறப்பளீசுர சதகமும் (94 அண்ணாமலைச் சதகமும் (40,41) இனங் காட்டுகின்றன. நெரு நல் உளனொருவன் இன்றில்லையெனும் பெருமையுடைத்திவ் வுலகு ஆதலின் நினைத்த உடனேயே அறம் புரிதலை, போங் காலம் வருமுன்னே புண்ணியஞ் செய்து அரிய கதி பொருந் துறலை வரவேற்குந் தண்டலையார் சதகம் (42,51) கொடிய வறுமைக் காலத்தில் அன்னதானம் இடுதலை மிகச் சிறந்த அற மாகப் போற்றுகிறது (48).

நன்மை செய்தார் நலம் பெறுவர் ஆதலின் வேண்டுவது பலர்க்குமுபகாரமாகும் (4), இல்வாழ்க்கை செலுத்தும் நல்லோர் ஒரு விருந்தாயினுமின்றி உண்ட பகல் பகலாகாது; உளவாய்

வந்த பெரு விருந்துக்குபகாரஞ் செய்தனுப்பி இன்னும் எங்கே பெரியோர் என்று வருவிருந்தோடு உண்பதுவே நன்று; விருந்தில்லாது உணுஞ் சோறு மருந்துதானே (10) என மொழியும் இந்நூல் உயிர்க்கொலையை மிக வன்மையாக எதிர்த்து (27) உயிர்களிடத்து இரக்கம் காட்ட வேண்டுகிறது.

தக்க காலமறிந்து (69), இடனறிந்து (70) செயல் ஆற்றும் பொழுது உறுதியாக வெற்றிகிட்டும் எனக் காட்டும் குமரேச சதகம் கடுகடுத்து ஆயிரஞ் செய்தலில் இன்சொல் ஒன்றால் மகிழ்வுடன் அழைத்தல் நன்று; ஆயிரம் மிகப் பெரிய வேள்விகளைச் செய்வதிலும் பொய்கூறாமை நன்று; வெடுவெடுவென பேசும் அறிவற்றோர் நட்பினைக் கொள்வதினும் அறிவுடையோர் பகை நன்று; ஆயிரம் வெகுமதிகளை வழங்குவதை விடத் துன்பப்பொழுதறிந்து அரைக்காசு உதவுவதே சிறப்பு; நோயுடன்கூடிய வளம் நிறை வாழ்வைவிட, நலம் பொருந்திய வறுமை வாழ்வு மேலானது என்று மொழியும் குமரேசர் சதகம் நல்லோர் நட்பின் பெருமையைச்சுட்டி வலியுறுத்தும் (43, 48). அறப்பளீசுரர் சதகமும் இதனைச் சிறப்பாகத் தருகிறது (76). பருவத்திலே பெற்ற சேயும், புரட்டாசி பாதி சம்பா நடுகையும் கருணையொடு மிக்க நாணயம் உள்ளோர் கையினில் கடனாக இட்டு வைத்த முதலும், காலமது நேரில் தனக்கு உறுதியாக முன் கற்று வைத்த கல்வியும், அறிவுடையோருடன் கொண்ட நட்பும் வீணல்ல—இவையெல்லாம் கைமேல் பலனாக வளர்ச்சி தரும் என்பது குமரேசர் சதகம் உணர்த்துவதாம். காலத்தோடு, நல்லிடம் பார்த்துச் செய்ய வேண்டியன செய்யும் பொழுது உறுதியாக நற்பயன் விளையும் என்றுரைத்து அதன்படி நடக்க அழைக்கிறது இந்நூல்.

சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிடத் தூண்டுகோலொன்று தேவைப் படுதல் போன்று தனக்கு மிகுந்த அறிவு உண்டாயினும் மற்றொருவரின் அறிவுரையையும் கேட்டுப் பயனடைய வேண்டும். இதனால் தனது தவற்றினின்று மீண்டு கொள்ளவும் முடியும்; எனவே மிக்க பெருமையுடைய புலவனாகினும் தன்னினும் கற்றோரைச் சேர்ந்தொழுக வேண்டும் என வழிகாட்டுகிறது அறப்பளீசுர சதகம். செய்கின்ற காரியத்தைச் செய்ம்முறைப்படிச் சரிவரச் செய்தால்தான் நல்வினையாயினும் அது பயன் கொடுக்கும், திறம்பட முற்றுப்படும் எனவே செய்வதைத் திருந்தச்செய், அரைகுறையாக முடிக்காதே என அறிவுறுத்துகிறது கறுப்பண்ணசாமி சதகம் (32) பெரியோரைப் பணிந்து அவர் வழி நிற்றல் (40), நல்வழி

காட்டும் நல்லினஞ் சேர்தல் (63); காரியத்தில் கண்ணாயிருத்தல் (66) உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் (93, 94) காலம் பார்த்து வினையாற்றல் (95) ஆகியவற்றை வாழ்க்கையின் வெற்றிக்குரிய வழிகளாகச் சுட்டும் இந்நூல் ஒருவர் பிறருக்குச் செய்யும் உதவி யின் பெருமையை அதனதன் தகுதிக்கேற்ப அளவிட்டுரைத்த லும் (59) குறிப்பிடற்பாலது.

தம்மளவில் நல்லவராகத் திகழ்தற்கும், தமக்குத் தீமை தருவனவற்றையும் விரைந்து ஒழித்தலையும் இச்சதகங்கள் வலியுறுத்துகின்றன (குமரேச : 12, அறப்பளீசுர : 42, திருவேங்கட : 16—17). நன்மையைப் பெருக்குதல் மட்டும் போதாது தீமையை அறவே ஒழித்தலும் வாழ்வில் மிகவும் வேண்டற் பாலதாம் என்பதே அதன் பொருள். இத்தீமையை அழிக்காது விட்டு வைத்தால் பின்னாளில் அதுவே நன்மையை வேரறப் பறித்துவிடும் ஆதலின் முன்னெச்சரிக்கையுடன் செயல் படுதலை இவை வேண்டுகின்றன.

ஒருவரின் அன்றாட வாழ்க்கை எப்பொழுது சிறக்கும் என்பதற்குத் திருவேங்கட சதகம்,

கருணை நதி மூழ்கியே சந்திவந் தனமுடன்
　　கருதஜப தபவோமமுங்
கடவுளோர் பூசையுஞ் செய்து வேதாகமக்
　　கல்வியது முறைபடித்துத்
தருமத் தியானநற் கருமமா நீதியொடு
　　தந்தைதாய் புத்திரருடன்
றானுணவு செய்துரா மாயணம் போற்றியே
　　சந்தியொடு கரும நண்ணி
பரிவுடன் நின்றிருக் கோயில்வல மாகிப்
　　பணிந்து பத சேவை செய்து
பண்பான சந்த்ரோ தயத்தின்மல ரணைமீது
　　பாரியுட னேமகிழ்ந்து
மருவியே வாழுமில் வாழ்க்கையே வாழ்வு காண் (71)

என விடைதருகிறது. கறுப்பண்ணசாமி சதகமும் இதனை வழி மொழிந்திருக்கக் காணலாம் (71). சமய உணர்வு அன்றாட வாழ்வில் முழுமையாக ஆட்கொண்டிருப்பதை இவை காட்டு கின்றன. இது போன்ற பிற செய்திகளினின்றும் சமயமற்ற வாழ்க்கையை ஒரு நல்வாழ்க்கையாக இவை கருதவில்லை எனத் துணியலாம்.

தவிர்க்க வேண்டியன

இங்குத் தீ நட்பிற்குச் சதகங்கள் முதன்மையளிக்கின்றன. ஒன்றை ஆக்கவும் அளிக்கவும் வல்லது நட்பாதலின் அதில் மிகுந்த கவனம் கொள்வதை இவை வேண்டுகின்றன எனலாம். கருங்காக்கையது வெண்மை நிறமாயினும், நிலையான கற்பசுவில் பால் கறக்கினும், நெட்டியிற்றண்ணீர் பிழியினும் மலையினிற்றாமரை படர்ந்து பூத்திடினும் வஞ்சகர் உறவால் எவ்வித பயனும் ஏற்படாது என்று சுட்டி (கறுப்பண்ண : 47) அதனால் இருக்கும் நன்மையையும் இழக்க வேண்டிவரும் என்று எச்சரிக்கின்றன (குமரேச 78).

வன்மவினை வேண்டாம், பொய்வேண்டாம், பிறரை என்றும் வருத்தல் வேண்டாம் (4) என வேண்டும் தண்டலையார் சதகம் பெரியோருக்குத் தீங்கு செய்தால் ஆடாகிக் கிடந்த வீடத்து அதன் மயிருங்கிடவாமல் அழிந்து போவர் (33) என எச்சரிக்கின்றது. மெய்ஞ்ஞான வடிவமான துறவிகள் பொருள் தேடுதல் சொர்க்கத்தே போம் போதும் கக்கத்தேராட்டினத்தைச் சுமந்து செல்லுதலை ஒக்கும்; எனவே அஃது முற்றிலும் பொருத்த மற்றது (43) என நவின்று ஒருவர் செய்யும் மறவினைகளால் அழிவது உறுதி அதில் ஐயமில்லை எனவும் எடுத்துரைக்கிறது (46).

மண்ணுலகிற் பிறர்குடியை வஞ்சனையிற்
கெடுப்பதற்கு மனத்தி னாலே
உன்னிடினு முரைத்திடினு மவன்றானே
கெடுவனென்ப துண்மை யன்றோ
தென்னவன்சோ ழன்பணியுந் தண்டலைநீ
ணெறியாரே தெரிந்து செய்யுந்
தன்வினை தன் னைச்சுடவோட் டப்பம் வீட்
டைச்சுடவுந் தான்கண் டோமே (65)

என்று பிறருக்குக் கேடு நினைப்பவன் தானே அழிந்து விடுவதனைச் சுட்டுவதுடன் தேவையற்ற இடத்தில் தேவையற்றவற்றை மொழிதலையும் (64) தேவையற்றவர்க்குச் செய்யாது மாற்றாருக்குச் செய்யும் பயனற்ற உதவி (52) சூதாடுதல் (88), சிவனடியாரில் உயர்வு தாழ்வு கற்பித்தல் (84) போன்றவற்றையும் கண்டிக்கிறது. இந்நூல், வசைபெருக அநியாயம் செய்து பிறர் பொருளையெல்லாம் வலிய வாங்கித் திசைபெருகுங் கீர்த்தி யென்றும் தன்மம் என்றும் தானம் என்றும் செய்வதெல்லாம் பசுவினை வதை செய்து அதன் தோலால் செய்த

செருப்பினைத் தானஞ் செய்தலுடன் ஒக்கும்; எனவே இத்தகு பயனற்ற தொழிலையும் விட்டொழிக்க வேண்டுகிறது (58). ஒவ்வொருவரும் அவரவர் இயல்பிற்கேற்ப நடப்பதுதான் பெருமைதரக்கூடியது; ஒன்றைப் பார்த்து அவ்வாறு தமக்குப் பொருந்தாததைச் செய்யும் பொழுது (78) அஃது நகைப்பிற்கு இடமாகி விடும் என்றும் எச்சரித்தல் குறிப்பிடற்பாலது.

பெண் சொற்கேட்டமையால் தீங்குற்றோரைச்சுட்டி (21) அதனைப் பழிக்கும் கறுப்பண்ணசாமி சதகம், சூது விளையாடல், கொலை களவு செய்தல், சோர்வு தரு கள்ளுண்டல், ஆசிரியரை நிந்தித்தல், தீது புரி கபட நாடகமுடைய வஞ்சகர் நட்பு கொளல், பொருள் தேடாது பொருளைச் செலவழிப்பவனின் சீராட்டல், அளவுக்கு மீறிய சினத்தைக் கட்டுப்படுத்தாமை, மீதூண் விரும்பல், நாவடக்கமின்மை, மிகவாகவே குறளீ, கோள் சொல்லுதல், தேவையற்ற சண்டையில் ஈடுபடல், லாபத்தை மிஞ்சிச் செலவிடல் இவையெல்லாம் ஒருவர் தம் வாழ்விலிருந்து முற்றாக நீக்கவேண்டிய தீவினைகளாகும் (50) எனக் காட்டுகிறது. செய்கின்ற கடமைகளில் தவறு நேராது காத்துக் கொள்ளுதல் மிகத்தேவை. அவ்வாறன்றாயின் துன்புற நேரிடும் என்றும் உணர்த்துகிறது (46). இவை மட்டுமின்றி ஒருவன் இருமனைவியரைக் கொள்வதும், நாயினும் கடையராய்ப் பொய்ச் சாட்சி சொல்லுதலும், நட்பிற்காகப் பிணை படுதலும் போன்றவற்றால் ஒருவன் தனக்குத் தானே அழிவினைத் தேடிக் கொள்கிறான் (46). எனவே இவற்றிலிருந்து விடுபடலே உய்விற்குவழி எனப் போதிக்கின்றது.

சூது முதலானத் தீச் செயல்களால் அழிந்தோரைச் சுட்டி அறிவுறுத்தும் திருவேங்கட சதகம் (12) பயனில சொல்லுதலால் வருமிழிவு (31); ஒவ்வொன்றுக்கும் ஓர் எல்லை உண்டு; அவ்வெல்லையைத் தாண்டி வினையாற்றும்பொழுது அடையும் அழிவு (32) ஆகியவற்றையும் காட்டுகிறது. மருத்துவர்கள் செல்லக் கூடாத இடங்களையும் வரிசைப் படுத்தும் இந்நூல் (73) பொது நிலையில்,

> பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
> பெரியோரை முனிதல் வேண்டா
> பின்னொன்று முன்னொன்று பேசியே யவமான
> பேர் கொண்டு திரிதல் வேண்டா
> உற்றவர்கள் போலவுட் பகையான வஞ்சகரை
> யொருநாளு நம்பல் வேண்டா
> ஒருவருக் கிச்சையாய்ப் பொய்சொல்லி பின்சபையி

ஞானமைபோ னிற்றல் வேண்டா
சற்றுமே பொறுமை யில்லாதவர்கள் சண்டையிற்
றான்போய் விலக்கல் வேண்டா
தைரியந் தனில்விக்ர மாதித்த னென்னிலுந்
தன்னையே புகழல் வேண்டா
மற்றொன்று மெண்ணாது செய்யல் வேண்டா. (38)

என்று கடியப் படவேண்டிய வினைகளை அறிவுறுத்துகிறது.

குமரேசர் சதகமும் (60, 92, 95), அறப்பளீசுரர் சதகமும் (8, 56) இக்கருத்துகளையே சற்று விரித்தும் சுருக்கியும் மொழிந்து வாழ்வில் அவற்றை ஒழித்து நல்வழிப்பட வேண்டுகின்றன. கயிலாசநாதர் சதகம் யார் யாருக்குக் கடன் கொடுத்தல் கூடாது என்று மொழிவதும் (31) சுட்டத் தக்கது. சேசுநாதர் சதகம் கொலை (19), களவு (25,26) பொய் (27) பிறர்மனை நயத்தல் (28,29) பிறர் பொருள் மீது பற்று வைத்தல் (30) முதலியவற்றை மிக வன்மையாகக் கண்டித்திருப்பதும் குறிப்பிடற்பாலது.

உடல் நலம் பேணல்

வாழ்வியலின் எல்லாக்கூறுகளையும்இயன்றஅளவில்உணர்த்துவதனை முக்கிய நோக்கமாகக் கொண்ட இச்சதகங்கள் உடல் நலம் பேணுதற்குரிய தற்காப்பு நடவடிக்கைகள் பலவற்றைக் கூறியுள்ளன. நோய்களினின்று ஒருவர் தம்மை விடுவித்துக் கொள்வதற்குரிய முன்னேற்பாடாகவும் அவை அமைகின்றன. வந்தபின் வருந்துவதை விட வருமுன் காத்தல் நலம் என்பதை இவை இவற்றால் உணர்த்துகின்றன. உயிர் வாழ்க்கைக்கு உடல் இன்றியமையாததாதலாலும், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாதலாலும் இதற்குச் சிறப்பளித்துள்ளனர் எனலாம்.

இந்நூல்கள் உடல் நலம் பேணுதற்குப் பின்பற்ற வேண்டிய வழி முறைகளையும், தவிர்க்க வேண்டுவனவற்றையும் மொழிகின்றன. பெரும்பாலும் அவற்றில் வேறுபாடுகள் இல்லையென்றே கூறி விடலாம். கொடுத்துள்ள செய்திகளின் அளவில் தான் அவற்றிடையே வேறுபாடுள. காலை துயிலாது விரைந்து எழுந்து இறைவழிபாடு மேற்கொளல், எந்தக் காரியத்தையும் அணுவளவுகூட பிசகாது உரிய காலத்தில் இயற்றல், தினமும் இரவில் விடாமல் பால் அருந்துதல், பசித்த பின் புசித்தல்,தனக்கு இளைய பெண்ணுடன் பதறாமலே கலவி புரிதல், ஆலயம் மிகத் தொழுதல், தருமங்கள் செய்தல், பெரியோர்க்கு அமுதளித்தல், அன்னதானம் செய்தல், ஓமப்புகை உடல்மீது படியச் செய்தல், மாலை வெயிலில் காய்தல் இவற்றால் வாழ் நாள் நீடிக்கும்

என்பர் (கறுப்:71). உணவின் குறைபாடுகளையும் (62); உணவு உட்கொள்ளும், உண்ட பின் மேற்கொள்ளும் விதிகளையும் (63,64) தாம்பூலம் தரிக்கும் இயல்பினையும் (65) சுட்டும் அண்ணாமலைச் சதகம் சரீரம் உண்டாகி வளரும் நிலையினையும் பகருகிறது (71,73).

காளான், முருங்கை, சுரை, கொம்மடி பழஞ்சோறு,காந்திக் கரிந்த சோறு, சிறப்பில்லாத சிறுக்கீரை, பீர்க்கத்தி, வெள்ளுப்பு, தென்னை வெல்லம், வெள்ளுள்ளி, ஈருள்ளி, வெண்கத்திரிக்காய், போன்றவற்றை உணவில் விலக்க வேண்டுமென அறிவுறுத்தும் அறப்பளீசுர சதகம் (65), வாழை, புன்னை,புரசு, குருக்கத்தி, மா, பலா, தென்னை, பன்னீர் முதலியவற்றின் இலைகளில் உணவு உண்ணலாம் என்றும், அரசு, வனசம், பாடலம், தாழை, அத்தி, அண்ட பத்திரம், சகதேவம், முள்முருக்கு முதலியவற்றின் இலை ஆகாதென்றும் மொழிகிறது(73). முற்றிய தயிர், காய்ச்சியபால், இளநீர், மோர், உருக்கிய நெய், முதிராத வழுக்கையிளநீர், உண்டபின் நன்றாகத் தண்ணீர் அருந்தல், உண்டபின் உலாவல் இவற்றுடன் மாதத்திரண்டு முறை மாதரைப் புல்குதல்,வருடத்திற்கு இரண்டு முறை வயிற்றைச் சுத்தம் செய்தல், வாரத்திற்கு இரு முறை தைலம் தலைக்கிடுதல் முதலியவற்றையும் நீண்ட வாழ் நாளுக்குக் கடைப்பிடிக்கும்படிக் குமரேச சதகம் (19) வேண்டுகிறது.

கல்லினான் மயிரினான் மீதூண் விரும்பலாற்
கருதிய விசாரத்தி னாற்
கடுவழி நடக்கையான் மலசல மடக்கையாற்
கனிபழங் கறியுண்ண லால்
நெல்லினா லுமியினா லுண்டபின் மூழ்கலா
னித்திரைக ளில்லாமை யா
னீர்ப்பகையி னாற் பனிக் காற்றிலுட னோதலா
னீடு சரு கிலை யூற லால்
மெல்லிநல் லார்கலவி யதிக முள் விரும்பலால்
வீழ்மலஞ் சிக்குகையி னான்
மிகுசுமை யெடுத்தலா லிளவெயிற் காய்தலான்
மெய்வாட வேலை செயலால்
வல்லிரவி லேதயிர்கள்சருகாதி யுண்ணலால் (குமரேச.30)

வன்பிணிக்கு இடமாகிறது என்பது இவற்றின் கணிப்பு. இவற்றை விலக்கும் பொழுது உடல் நலம் பெறுகிறது. இவை இச்சதகங்களின் கருத்து மட்டுமின்றி நம் முன்னோர் கடைப்பிடித்த, கடைப் பிடிக்க விரும்பிய நெறிகளுமாக அமைந்

துள்ளன. இவற்றுள் பல இன்றும் பெரியோரால் கடைப்பிடிக்கப் படுதல் கண் கூடு. உடல் நலம் பேணுதலில் இன்றியமையாத நல்லொழுக்கமும் இடம் பெற்றுள்ளமை அறிதற்பாலது. முறை யான வாழ்க்கையால் அனைத்து நலன்களும் அடையப் பெறு தலும், ஒழுக்கக் குறைபாட்டால் உடல் நலம் மட்டுமின்றி மற்றும் பல இழப்புகளை அடைய வேண்டி வருதலையும் இந்நூல்கள் இவற்றால் உணர்த்துகின்றன.

வழிபாடு

எங்கும் எதிலும் சமயப் பற்றினை முழுமையாகக் கொண்டி ருந்த கால கட்டமாதலால் வாழ்வியல் சதகங்களில் சமயமும் ஓர் சிறப்பிடம் பெறுவதாயிற்று. மிக அதிகமான செய்திகளை அண்ணாமலைச் சதகம், பக்திச் சதகமோ என எண்ணுமள விற்குத் தருகிறது. சைவ சமயம் தொடர்பான பல உண்மை களை அதனால் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்நூல் கூறும், சைவ சமயத்தின் உட்சமயங்கள் ஆறு; அவை கணபதி வழிபாடு பண்ணுவது பாசுபத சமயம், கதிர் வேலனை வணங்குவது அண்ணன்மா விரத சமயம், சிவனையே கும்பிடுவது சைவ சமயம், வீர பத்திரருக்கு வணக்கம் செய்வது காளாமுகச் சமயம், வைரவரை வழிபடுவது வைரவ சமயமாம், பராசக்தியைப் போற்றுவது வாம சமயம் (53) என்பனவாகும். மற்றும் அட்டலட்சுமிகள் பற்றிய விளக்கத்தையும் (75) தந்துள்ளது.

நவக்கிரக வழிபாட்டில் அமையும் ஒன்பது கோள்களின் உருவம், அமர்ந்திருக்கும் திசை, அவற்றிற்குரிய தானியங்களும் சமித்தும் (யாகத்திற்குரிய எரிபொருள்) இவையிவை என்ற வரையறையையும் (97,98) இது சுட்டுகிறது. கறுப்பண்ணசாமி சதகம், கானகத்தே உறங்காப்புளி மரத்தின் நிழலில் கனக பீடிகையின் மீது அமர்ந்து மணங்கமழ்கின்ற சாம்பிராணிப் புகை யினை விரும்பி ஏற்றுக் கொண்டு அருள் விளையாடல் நிகழ்த்தி மிக்க பெருமை பெறும், கறுப்பண்ணசாமியைக் கடல் சூழ்ந்த ஈரேழ் உலகம். ஆயிரத்தெட்டு அண்டம், மற்றும் நூறு கோடிக் கும் மேற்பட்ட அகிலாண்டம் எங்கும் ஒளி மயமாய் நிறைந் துள்ள பரிபூரணமாக (2) உணர்த்தும்.

திருவேங்கட சதகம், உலகில் உள்ள உயிரினங்கள் எல்லாம் செழித்து நிற்கும்படியாக அதனைக் காத்து நிற்பது, பிரமனைத் தம் உந்தியில் ஈன்றவனும் திருமகளை மார்பிலே பெற்றிருப்ப வனும், வேதங்களால் போற்றப்படுபவனுமாகிய திருமலைத்

தெய்வமெனக் குறித்து நிற்கும் (1). இவ்வாறுபுலவரின் சமயத்திற் கேற்ப தெய்வங்களின் சிறப்பு மொழியப் படுகின்றது. எனினும் அறப்பளீசுர சதகம் பொது நிலையில் நின்று திருமாலின் அவதாரங்களையும் (90) சிவனின் பெயர்களையும் (99) வரிசைப் படுத்தி மொழிந்திருப்பது சுட்டற்பாலது.

மண்ணும் விண்ணும் அஞ்ச வரும் காலனையும் போடா வென்றே அஞ்சாது எதிர்த்து நிற்கும் வல்லமை (73) உலக வாழ்வில் ஈடுபட்டிருந்தாலும் அதில் திருநீற்றில் கழற்காய்போல் பற்றற்றிருத்தல் (36) எனும் இவற்றைத் தண்டலையார் சதகம், அடியாரின் இயல்புகளாகச் சுட்டும். அடியார் தம் பெருமையை விரிவாகத் திருவேங்கட சதகம் (101) பேசும். இவ்வடியார் இறைவனை வழிபடும் நெறிகளையும் சதகங்கள் காட்டுகின்றன.

தேவாலயம் சுற்றிடுதற்கே கால்கள், இறைவனைக் கண் குளிரக் கண்டு வழிபடுவதற்கே கண்கள், அவன் திருத்தாமரை யடிகளை எந்நேரமும் சிந்தனை செய்வதற்கே சிந்தை, தெய்வத் திருப்புராணங்களைக் கேட்டுப் பயன் பெறற்கே செவிகள், விமலனை வணங்கற்கே சென்னி, நல்ல புண்ணிய நீரில் நீராடற்கே உடல் என்று இவற்றின் பயன்பாடு (குமரேச: 89) பேசப்படுகிறது. திருநாவுக்கரசரின் திரு அங்கமாலையை அடியொற்றிஇப்பாடல் அமைந்துள்ளது எனலாம்.

சிவலிங்கவழிபாட்டைச்சிறப்பித்துரைக்கும் அண்ணாமலைச் சதகம் (32), ஆற்று மணலால் லிங்கம் செய்து வழிபடுவோருக்கு நீண்டநாள் வாழ்வமையும் என்பது போன்று ஒவ்வொரு லிங்க வழிபாட்டாலும் பெறும் பயனை (49) உணர்த்தியுள்ளது. எந்தப் பயனை வேண்டி அடியார் வழிபடுகின்றனரோ அதற் கேற்ப சிவலிங்கம் படைக்கப்படல் வேண்டும் என்பதையும் இதில் அறிவுறுத்துகிறது. வில்வ மலர் முதலாக நூற்றெட்டு வகை மலர்களைச் சிவ வழிபாட்டுக்குரிய மலராகத் தொகுத் துரைக்கும்[1] இந்நூல் வழிபாட்டிற்கு ஆகாத மலர்களையும்

---

1. வில்வமலர், கொன்றை, மாந்தளிர், புன்னை, மல்லிகை சதகுப்பை, தண்ணீர்மிட்டான், பருத்தி, பொன்மத்தை, வெண்தாமரை, வெண்பட்டி, வெள்வழுதுணை செந்தாமரை, நறும்பச்சை, வெண்காசை, மருக் கொழுந்து, மந்தாரை, பன்னீர், முல்லை, மாதுளம்பூ, கொன்றையாத்தி, கழிஞ்சில், பொன்னாவரை, செவ்வந்தி, குதம்பை, வெட்சி, பூளை, நாரத்தை, செவ்வரவிந்தம், ஞாழல், செங்கழுநீர், பசுந்தும்பை, கோங்கு, சிறுசெண்பகம், வெண்பட்டிகை, சிறுநாக

இச்சிலா லரசுபூ சணிபெருக் காமணக்
கிலையினி லெடுத்திட்டபூ
வீஞ்சோலை பனையோலை பின்னலிடு கூடையி
லெடுத்தபூ விடதுகையிற்
பச்சிலையி லாவெறுங் கையினி லெடுத்தபூ
பாண்டத் தெடுத்திட்டபூ
பால்போ னிறத்துகி லதனிலு மெடுத்தபூ
பரிசுத்த மில்லாவிடத்
துச்சிதம தென்றே யெடுத்தபூ கீழ்விழுந்
துதிர்ந்தபூ மோந்திட்டபூ
வுண்மையாகப் பூசனைக் காகாது குற்றமென
வோதுஞ் சிவாகமங்கள் (44)

என்றுரைத்து அவற்றை நீக்கக் கோருகிறது.

மீண்டும் பிறவாமையாகிய பேரருள் பெறுதற்கு வழி காட்டும் மெய்ஞ்ஞானம் பெறவேண்டினால், சரியை, கிரியை, யோகம் எனும் மூன்றும் கடந்த குருவை அடைக்கலம் புக வேண்டும். அவ்வாறின்றிச் சிவாலயலிங்க தரிசனம் கண்டு அதன் வழி அருள்பெற வேண்டினோர் முதலில் வலக்கையைத் தலைமேற் கொண்ட அதிகார நந்தியைக் காணவேண்டும் என்று வழிபடுவகையை இது உணர்த்துகிறது (89). பிறவியின் சிறுமையைச் சுட்டி மீண்டும் பிறவாமையை வேண்டும்[2] சிதம்பரம் பிள்ளை (கயிலாச :46) அடங்காத நெஞ்சுடையோ ராகித் தவம் சற்றும் புரியாது, இந்திரியங்களை அடக்கி இறைப்

மல்லிகை, வலம்புரி, அடுக்குநந்தியாவர்த்தம், நீலோற்பலம், நாவல், பாதிரி, புரோசை, பொன்மத்தை, நாயுருவி, குமரிவேங்கை, நாணல், வெண்காக்கணம், கோட்டம், கடம்பம், நறுந்தாளி, வெள்ளெருக்கு, கருந்துளசி, வெண், கருவன்னி, மால், காந்தி, பிச்சி, இலாமிச்சை, கரிய செம்பைப்பூ, பசுங் குசை, செழுசேவகன்; செம்பாதிரி, வெள்ளலரி, வெள்ளைதிலோத்தம், சிவகரந்தை, வெட்பாலை, பட்டிகை, புலித்தொடக்கி, மென்குரா, ஆத்தி, சண்பகம், பூகம், விளாகி, உளுவை, வெள்ளைநொச்சி கரு, வெண்ணெய்தல், கொட்டைக் கரந்தை, கருங்காலி செவ்வேங்கை, வெண்ணிற கொக்கிறகு, வெள்ளடுக்குக் கூடு மந்தாரம், கதிர்பச்சை, குமவலரி, கருமை, வெண்மைவிளா, செவ்வந்தி, ஓரிதழ்த்தாமரை.

2. மணிவாசகரின்போற்றித் திருவகவல் 10—41 பகுதியை ஒத்து இஃதமைகிறது

பணி ஆற்றாது, பக்தியுடன் அஞ்செழுத்தை ஓதாது இருப்பினும் பரமனையே அடைக்கலமாக நம்பியிருக்கும் தமக்கு அருள் புரிய வேண்டுகிறார். அதன் வழி கற்பாருக்கும் இறை நம்பிக்கையை யூட்டி, இறைவழிபாட்டை வேண்டுகிறார் எனலாம். உரு வெடுத்த நாள் முதலா உடல் வளர்க்க உழல்வதல்லால் மருவிருக்கும் நின்பாதமலர் தேடித்தினம் பணிய மாட்டேன் என்றிரங்கும் படிக்காசுப் புலவர் (28), தண்ணமரு மலர்ச் சோலைத்தண்டலை நீணெறியைப் பாடில் எண்ணமிக இம்மையி லும் மறுமையிலும் வேண்டியதுண்டு. இதனை ஓராமல் மண்ணின் மிசை மானிடரைத் துதி செய்வதேன் (67) என வினவுகிறார். இறைவழிபாட்டால் இம்மையில் மட்டுமின்றி மறுமையிலும் வேண்டியதைப் பெறலாம் என்பதை வலியுறுத்தி பக்தியுணர்வைத் தூண்டுகிறார்.

வழிபாட்டின் பல்வகை நெறிகளையும் அவற்றின் பலன் களையும் அண்ணாமலைச் சதகம் விரிவாக எடுத்தியம்புகின்றது. ஓராயிரம் பூக்களைக் கொண்டு அர்ச்சித்தலின் ஒரு வில்வத்தால் அர்ச்சித்தல்; ஓராயிரம் கிணறு வெட்டி வைப்பதினும் கோயிலில் ஒரு குளத்தை உருவாக்கல்; ஓராயிரம் வீடுகள் கட்டி உதவுதலி லும் ஒரு மடமமைத்தல்: பேராயிரம் சொல்லும் மந்திரத்தினும் பெருமுத்திதரும் பஞ்சாக்கரம் ஓதல்; முப்பத்திரண்டு அறங் களினும் ஒரு ஞானிக்கு உணவளித்தல் ஆகியன சிறப்புடையன என்று சமுதாய அறங்களைவிடச் சமயத்திற்குச் செய்வன வற்றையே உயர்வாகப்பேசுகிறது (50). சமயத்தைச் சிறப்பித்த லும் சிறந்த வழிபாடாக இங்கு இதனால் உணர்த்தப்படுகிறது.

ஞாயிற்றுக் கிழமைகளில் வில்வத்தால் அர்ச்சித்தால் எண் வகைச் சித்தியும் கிடைக்கும்; திங்கள் துளபத்தால் வழிபட அளவிலா செல்வம் உண்டாகும்; செவ்வாயினில் விளாகொண்டு அர்ச்சிக்க நல்ல அன்புடைமைந்தர் உதிப்பர்;புதனன்று மாதுளை யால் வழிபட மெய்ஞ்ஞானம் பெருகும்; வியாழக்கிழமை வங்க மலர் தந்து வணங்கக் கல்விச் செல்வம் கைகூடும்; வெள்ளிக்கிழமை நாவற் கொழுந்தால் வழிபட அரசனாகும் சிறப்பு வரும்; சனிக் கிழமையன்று காந்தி (?) கொண்டு வழிபட உடலில் நோய் வராது என்று ஒவ்வொரு கிழமைக்கும் அர்ச்சனைக்குரிய பொரு ளையும் அதன் பயனையும் உரைக்கிறது (51).

இதுபோன்றே இறைவனுக்கு ஏற்றும் விளக்குகளின் சிறப்பும் இயம்பப்படுகிறது. தேங்காய் எண்ணெய்யை விட நல்லெண்ணெய், அதைவிட பசுவின் நெய், அதைவிட இலுப்பைக் காயெண்ணெய், அதைவிடக் கற்பூரம் சிறந்தது என்று மொழி

கிறது. (52) உருத்திர மணிமாலை யணிய வேண்டிய முறையும் (55) அணிந்து இறைவனை உன்னிச் செய்யும் தியான வழிபாட்டில் அதில் உள்ள காய்களின் எண்ணிக்கை, கையில் பிடித்துள்ள முறையிவற்றால் கிடைக்கும் பலனையும் (56) தருகிறது. அவ்வாறு இருந்து வழிபடும் திக்கிற்கு ஏற்பவும் பலனமைகிறது எனவும் (57) சுட்டுகிறது. பிரதோடத்தன்று மேற்கொள்ளும் சிவலிங்க வழிபாட்டால் இறையருளால் செல்வமும் நீண்ட வாழ்வும் அமையும் (58) என்று சிவலிங்க வழிபாட்டிற்குரிய சிறப்பு நாளும் ஓதப்படுகிறது.

தூய்மையான நீர், நல்லெண்ணெய், அரிசிமா, மஞ்சள்த் தூள், நெல்லிமுள்ளி, தூபஞ்சகௌயம், பசுவின் நெய், பால், தயிர், பஞ்சாமிர்தம், பலா, மா, கதலி, மாதுளை, எலுமிச்சை, தமரத்தை, நார்த்தை, தேன், திரட்டுப் பால், கருப்பஞ்சாறு, இளநீர், வில்வநீர், தபனநீர், பொன்னிறத் தோதகம், கற்பூரம், புனுகு, சந்தனம் முதலியவற்றை இறைவனுக்குரிய அபிடேகப் பொருட்களாகச் சுட்டுகிறது. (3) மற்றும் திங்கள் தோறும் வரும் பூரணை நாளுக்குச் சித்திரை மாதம் மருக்கொழுந்தபிடேகம், வைகாசியில் சந்தனம், ஆனியில் பலா, மா, வாழை எனும் முக் கனி, ஆடியில் சர்க்கரை, ஆவணியில் அதிரசம், புரட்டாசியில் காய்ச்சிய திரட்டுப் பால், ஐப்பசியில் அன்னம், கார்த்திகை தீபார்ச்சனை, மார்கழிக்கு நெய், தை மாதம் தேன், பங்குனி யில் தயிர் என்று அபிடேகம் செய்தலைச் சிறப்பாக இயம்பு கிறது (7).

இறைவனுக்குரிய இருபத்தொரு யாகங்களையும் (12), நாள் தோறும் செய்யும் ஐவகை யாகங்களையும் (61) உணர்த்துவ துடன் விபூதி அணியும் பொழுது, முறை, அதன் பயன்களையும் விரிவாக (39, 43, 54) எடுத்தோதுகிறது. அணியு முறையிலும் சாதிப் பாகுபாட்டை இந்நூல் (8) புகுத்தியிருப்பது அன்றைய சமுதாயத்தில் அது பெற்றிருந்த முக்கியத்துவத்தைக் காட்டு கிறது.

பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெடுத்துப்
பாரினில் விழாதபடி யண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதிலொழுக
நித்தமூ விரல்களா னெற்றியி னழுந்தலுற
நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமா
நீங்காம னிமலனங்கே

சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யுந்திரு
சஞ்சலம் வராதுபர கதியுதவு மிவரையே
சத்தியுஞ் சிவனென்னலாம் (87)

என்று குமரேச சதகமும் விபூதி அணிதலின் பயனையும் முறைமையையும் பேசுகிறது. நவக்கிரகங்களுக்கு அளிக்கும் தானம் (96), அன்னத்தைப் பலியிடுமுறை (63), முக்கணம் (95) என மற்றும் பலவற்றையும் அண்ணாமலைச் சதகம் பேசுகிறது. 96 தத்துவங்களையும் அறப்பளீசுர சதகமும் (89) கயிலாச நாதர் சதகமும் (44) எடுத்துக் காட்டுகின்றன.

சவரிமுத்து உடையாரின் சேசுநாதர் சதகம் கிறித்தவ சமயம் பற்றிய பல செய்திகளையும் நல்குகிறது. வழிபடுதலின் தேவை (11), பத்துக் கற்பனைகள் (13) திருநாட்கள் (17) ஞானதீட்சையின் சிறப்பு (97), மங்கல நாட்கள் (99), பாவசங்கீர்த்தனத்தின் பெருமை (98) எனப் பலவற்றை இதனால் அறியலாம். மச்சரேகை சித்தரின் சதகங்கள் இசுலாமிய சமயச் செய்திகளுக்குச் சிறப்பளித்துள்ளன.

புராணம்

பதினெண் புராணங்கள் யாவை, அவற்றின் தலைவர்கள் யார் என மொழிகிறது அறப்பளீசுர சதகம் (96). இவற்றைக் கயிலாசநாதர் சதகத்திலும் (40) காணலாம். புராணக் கதைகளைச் சுருக்கமாக (16—21, 26) அண்ணாமலைச் சதகம் தருகிறது. புராணக்கதா பாத்திரங்களைத் தாம் கூறவரும் கருத்துககுச் சான்றாக மொழிதலைப் பலவற்றில் (கயிலாச 30; அண்ணமலை 101; திருவேங்கட 100) காணலாம். நூல்களின் 100 பாடல் எனும் வரையறை இவற்றின் சுருக்கக் குறிப்புகளுக்குக் காரணமாகின்றது

தலம்

இறைவன் எழுந்தருளியிருக்கும் தலங்களைச் சிறப்பித்துரைத்தலை இங்கும் காணமுடிகிறது. இதிலும் அதிக அளவில் அண்ணாமலைச் சதகமே காட்டியுள்ளது. புராண நிகழ்வுகளால் திருக்கோவலூர் (2), தீர்த்தலங்களைச் சுட்டுதலால் திருவண்ணாமலை, தேவார மூவர் பாடல் பெற்றதால் அத்திருத்தலங்கள் (6) இடச்சிறப்பால் திருமுனைப்பாடி முதலியன சிறப்பிக்கப்பட்டுள்ளன. தன் பாட்டுடைத் தலைவனின் இருப்பிடத்தைச் சிறப்பிக்கு முகமாகத் தண்டலையை அச்சதகம் சிறப்பிக்கிறது (42).

நிலையாமை

சமயங்கள் தங்கள் கருத்தை வலியுறுத்தி இறைவன்பால் மக்களை த்திருப்புதற்குக்கொள்ளும் வழிகளுள்நிலையாமையைச் சுட்டுதலும் ஒன்றாகும். அறத்தினை மேற்கொள்ளும்படி மக்களைத் தூண்டுதற்காகவும் நிலையாமையை உணர்த்துதலை அறவிலக்கியங்களில் காணலாம். இவ்விரண்டிற்கும் சிறப்புதரும் சதகங்களும் இதனை நவின்றுள்ளன. யாக்கை நிலையாமையைத் திருவேங்கடசதகம் (86), அறப்பளீசுர சதகம் (19) குமரேச சதகம் (71), போன்றன சுட்டி அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளன. யாக்கை ஒழிந்த பின் எதனையும் ஆற்றுதற் கியலாது ஆதலின் யாக்கை இளமையுடன் விளங்கும் பொழுதே செய்யவேண்டிய அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றத் தூண்டுகின்றன. செல்வ நிலையாமையைத் தனித்துச் சிறப்பித் துரைக்கும் குமரேசசதகம் (73) உலக வாழ்வில் இவை தவிர நிலையற்ற தன்மையுடைய பிற பலவற்றையும்,

கொற்றவர்கள் ராணுவமு மாறுநே ராகிய
குளங்களும் வேசை யுறவுங்
குணமிலார் நேசமும் பாம் பொடு பழக்கமுங்
குலவுநீர் விளையாட லும்
பற்றலார் தமதிடை வருந்து விசு வாசமும்
பழையதா யாதி நிணறும்
பரதார மாதரது போகமும் பெருகி வரு
பாங்கான வாற்று வரவும்
நத்து மொரு துர்ப்புத்தி கேட்கின்ற பேருறவு
நல்லமத யானை நட்பும்
நாவினல் லுறவுமொரு நாள்போ லிராவிவைக
ணம்பப் படாது கண்டாய் (82)

என்று காட்டுகிறது. இன்பம் தருவதாய், துணை நிற்பதாய் தோன்றும் இவை பின்னாளில் துன்பத்தையும் தரலாம், நம்மைப் பிரிந்தும் செல்லலாம். எனவே நிலையற்ற இவற்றை நம்பி வாழ்வில் ஏமாற்றமடையாது நிலைபேறுடைய இறைவனை அடைக்கலம் புகுதலே வாழ்விற்கு வழி என உணர்த்துகிறது.

சமுதாயம்

பல குடும்பங்கள் இணைந்து தம்முள் சில கட்டுப் பாடுகளை எழுதாச் சட்டமாகக் கொண்டு வாழுகின்ற பொழுது சமுதாயம்

உருவாகிறது. இச்சமுதாயத்திலிருந்துதான் இலக்கியங்கள் தோன்றுகின்றன. தம் தோற்றக்களத்தைப் பிரதிபலிப்பதாகவே காலந்தோறும் எழும் இலக்கியங்கள் அமைகின்றன. தம் சமுதாயத்தைச் சீர்திருத்தும் நோக்கோடு எழும் பொழுது அவை அறவிலக்கிய மாகின்றன. தம் காலச் சமுதாயத்தை உணர்த்தல், அதற்கு வழிகாட்டல் எனும் இரு நிலைகளும் வாழ்வியற் சதகங்களில் இடம் பெற்றுள்ளன. எனவே இச்சதகங்களை அறச்சதகங்களாகவே பொதுவாகக் கொள்வர். இவை காட்டும் சமுதாய நிலைகளுள் பல முன்கட்டுரையில் பயனாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. எஞ்சியவற்றை இவண் நோக்கலாம்.

இனப் பகுப்பு

தொழில் அடிப்படையில் தொல்காப்பியம் பிரித்த பகுப்புகளை இனப்பகுப்பாக மாற்றி அதில் உயர்வு தாழ்வு கற்பித்து சமுதாயத்தில் மிக உறுதியுடன் கடைப்பிடிக்கப் பட்டமையைப் பிற்காலத்தில் காண்கிறோம். இந்நிலை சதக இலக்கியகாலத்தில் உச்சநிலையில் அமைந்திருந்ததையும் தத்தமக்குரிய இயல்புகளை மீறுபவர்கள் கண்டிக்கப் பட்டமையையும் அவற்றால் உணர்கின்றோம், குமரேசசதகம், கயிலாசநாதர் சதகம், திருவேங்கட சதகம், கறுப்பண்ணசாமி சதகம் போன்றன நூலின் தொடக்கத்திலேயே இதற்குச் சிறப்பளித்திருக்கக் காணலாம்.

புவியில் திங்கள் மும்மாரியும் கொற்றவர் நடாத்து செங்கோல் வளமையும், நாடுகள் செழிப்பதும், சகலதருமமும் நிகழ்வது அந்தணரால் என்பதில் சற்றும் பிறழாத நம்பிக்கையை (திருவேங்கட : 2) இவை ஊட்டுகின்றன. வேதம் படித்தல், ஒருவர்க்கு ஓதுவித்திடுதல், வேள்வி செய்தல், செய்வித்திடுதல், வேண்டியதை இரத்தல், பிறருக்கு ஈதல் எனும் ஆறும் இவர்களுக்குரிய தொழிலாகக் குறிக்கப்படுகின்றன (அண்ணாமலை, 29). தொல்காப்பியரின் 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்: (பொருள் : 74) என்பதற்கு உரையாசிரியர் தந்துள்ள விளக்கமாக இஃ்தமைதல் நவிலற்பாலது. காயத்ரி முதலான வழிபாடுகளைக் குறைவற செய்வர்; வேதம், ஆகமப் புராணங்களின் வளமையையும் நன்குணர்ந்தவர்; யாகங்களை அவற்றின் முறைப்படி நடத்துபவர்; எல்லாத் தீவினைகளையும் ஒருப்பர், செம்பு முதலானவற்றில் தெய்வவடிவங்களை உண்டாக்குவிப்பர்; அனைவரும் போற்றும் வகையில் நீதி வழங்குவர், வைதிக நெறியை முறையாகப் பின்பற்றிப் பேராசை

கொண்டிடாத இவர்களின் பெருமை பேசுதற்கு அரிது என்பர் (குமரேச : 2, அறப்பளீசுர 81).

குடிகளிடத்தும், படைகளிடத்தும் அன்புகொண்டிருத்தல், நாட்டுநலன் குரித்து உரியவருடன் கலந்து முடிவெடுத்தல், குறிப்பறிதல், உண்மை மொழிகளையே கூறுதல், கொடையளித்தல், தினமும் அவரவர்க்குரிய மரியாதை அளித்தல், பொறுமையைக் கடைபிடித்தல், முறையான உபாயங்களை மேற்கொள்ளுதல், அமைச்சர் முதலான அரசலுவலர்களை அவர்களின் பண்பறிந்து நியமித்தல், எல்லாவுயிர்களையும் தம்முயிர் போன்று பாதுகாத்தல், குற்றங்களைதல், உறுதியான நல்ல நட்பு கல்வியறிவு இவற்றுடன் கால, இடமறிந்து மற்றான் வலியுணர்ந்து பகைவரை அழித்தல் முதலியவற்றை அரசர்க்குரிய இயல்பாக்குவர் (குமரேச : 3). அமைச்சர், கருமாதிகாரர், வாயிற்காப்போர், கண்போன்ற சிறப்புடைய ஊரின் பெரிய மனிதர்கள், படைத்தலைவர், குதிரைவீரர்கள், யானைவீரர் எண்மர் இவர்கள் அனைவரும் எப்பொழுதும் அரசருக்கு உறுதுணை யாவர். இயல்பு தவறாத அந்தணரான நண்பர், மருத்துவர், கலைஞர், நிமித்திகர், புலவர் இவர்கள் ஐவரும் அரசருக்கு உறுதிச்சுற்றமாவர் என்று அண்ணாமலைச்சதகம் (14) மொழியும். அரசரின் பணியில் துணை நிற்போரின் இயல்புகளையும் அரசன் விரைந்தும், சற்று தாமதித்தும் செயலாற்ற வேண்டிய வற்றையும் திருவேங்கட சதகம் (8, 16, 17) வரையறுத்துக் காட்டியுள்ளது.

கடல், நாடு, நகர், மலை, காடு இவற்றில் உள்ள செல்வங்கள் மலிவாகக் கிடைக்கின்ற காலத்தினை நன்கு தெரிந்து கொண்டு அவற்றைப் பெற்று, பின் தனக்கு நல்லலாபம் வருகின்ற பொழுதில் அவற்றை விற்று மகிழ்வர். திடமுடன் தாங்கள் அறிந்த வாணிபம் மட்டுமே செய்குவர். ஆதாயத்தை மிஞ்சிய செலவினைச் செய்ய மாட்டார். கடுகுதனில் எட்டிலொருகூறு வரவு எனினும் கணக்கு முறையில் வழுவாது நிற்பர். செம் பொன்னின் மாற்றினை நன்கு தெளிந்து உரைப்பர். மிகுந்த மதிப்புடையதை அடகு வைத்தாலும் அதன் சிறுப்பு கண்டு அதன் மேற்கணக்காகப் பொருள் தருவர். நூற்றுக்கு ஒன்று வட்டி கொள்வர்; அண்டப்புரட்டர்கள் முறிதந்து தங்களுக்கு அடகுப் பொருள் வைக்கினும் கடன் தரமாட்டார்; நம்பிக்கைக் குரியோராயின் அவர்கேட்டனுப்பினும், வாய் வார்த்தையிலும் தருவர். பற்று வரவில் சிறிதும் பிசக மாட்டார்; சொன்ன தவணையிலும் வழுவமாட்டார்; தராசின் நடுமுள் போன்ற நாநலம் உடையர், பாவாணரைக்காணில் உபசரித்தே நல்ல

பரிசளித்து உள மகிழுவார் என்று வணிகர் போற்றப் படுகின்றனர்.

நல்லதே வாலயம் பூசனை நடப்பது
நாடோறு மழைபொழிவதும்
நாடிய தபோதனர்கண் மாதவம் புரிவது
நவில்வேத வேதிய ரெலாஞ்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதுந்
தொல்புவி செழிக்கு நலமுஞ்
சுபசோ பனங்களுங் கொற்றவர்கள் செங்கோற்
றுலங்குமனு நெறிமுறை மையும்
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
விற்பனையு மதிக புகழும்
மிக்கவதி காரமுந் தொழிலாளர் சீவனமும்
வீரரண சூர வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவ வன்றோ?

(குமரேச : 5)

என்று உலகத்தவர் தொழில் தடைபெறாது நடத்தற்கும், வாழ்வு சிறத்தற்கும் வேளாளர் பெருமையே காரணம் என்று இவை நவில்கின்றன. பொதுவாக அனைத்து நூல்களும் வணிகரின் பின் வேளாளர் இயல்புரைக்க அண்ணாமலைச் சதகம் முன்னுரைத்து அவர்களுக்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

நம்பிக்கைகள்

ஒன்றன் உண்மையினை ஐயத்திற்கிடமின்றி, பிறர் முரண் பட்ட எண்ணம் கொள்ளினும் அதனைக் கருத்துட்கொளாது, ஒருவர் ஏற்றுக்கொள்ளுதல் நம்பிக்கையாகும். வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் இத்தகு நம்பிக்கைகள் இடம் பெறுதலைச் சங்க காலம் முதற்கொண்டே காண்கிறோம். வாழ்வியலறம் உரைக்க வந்த சதகங்கள் தம் காலத்தே சமுதாயத்தில் நிலவிய நம்பிக்கைகளைக் கற்பாரை ஆற்றுப் படுத்துகின்ற வகையில் உணர்த்தியுள்ளன. நம்பிக்கைகளின் அடிப்படையில் ஒவ்வொரு செயலும் மேற்கொள்ளப் பட்டமையை அறியமுடிகிறது. இவற்றுள் சில தொன்றுதொட்டு வருவனவாகவும் உள. சமயம் சார்ந்த நிலையில் பலவற்றைச் சதகங்கள் எடுத்துக் காட்டு கின்றன. சமயக் கொள்கைகளை, பழக்க வழக்கங்களை மக்க

ளிடையே வலியுறுத்துவதும் இவற்றின் நோக்கங்களுள் ஒன்றோ என எண்ணும் வகையில் இவை செல்வாக்கு பெற்றுள்ளன.

ஒருவர் வாழ்வில் நிகழும் நன்மை தீமைகளுக்கு இறைவனே காரணம் (தண் : 50); அவரவர் நினைவின்படி எதுவும் நடக்கவியலாது எல்லாம் சிவன் செயலே (கறுப் : 96) என்று சான்றுகளுடன் இவை இயம்பும்பொழுது இன்பத்தைக் கண்டு அதிகமாகத் தன்னைப்பற்றி ஒருவர் எண்ணித்தவறான வழியில் செல்லாது தடுக்கவும் துன்பத்தைக்கண்டுத் துவளாது தொடர்ந்து போராடவும் இதுபோன்ற எண்ணங்கள் உதவுகின்றன. குமரேச சதகம் இதற்காக நாட்டுப்புறக் கதை ஒன்றையும் கூறி விளக்கியிருப்பது (85) சுட்டத்தக்கது.

உலகச் செழிப்பிற்கு உறுதுணையான மழைக்குக் காரணமாக அமைவன மூன்று. ஒன்று மடமாதர் கற்பு, வேந்தரின் நீதி மற்றொன்று, வேதியரின் ஒழுக்கம் மூன்றாவதாகும் (அறப்: 24). 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன்' என்று தெய்வத்திற்கு இணையாக அரசர் போற்றப்பட்டதால் அவர்கள் நீதிநெறி தவறா செங்கோலாட்சி செலுத்துவது வேண்டப்பட்டது. 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்.' (குறள். 388) என்னும் வள்ளுவ வாய்மொழியும் ஆட்சி சிறப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தக் காணலாம். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி ஆதலின் சிறப்பான ஆட்சி நிலவும் பொழுதுதான் அமைதியும் வளமும் நாட்டில் நிலவும். சமயவாழ்வில் இறைவனின் அருளைப் பெறுவதற்குரிய வழிகாட்டியாக அந்தணர் மதிக்கப்பட்டதால் அவருக்கும் மிக உயர்ந்த நிலை சமுதாயத்தில் அளிக்கப்பட்டது. 'வேதாகமம் கற்ற வைதிகர் மதியாத குற்றங்கள் செயினும் பொறுப்பதல்லால் வாதாடி யெதிர் செய்கை மன்னர் நெறியன்று' (திருவேங்: 18) என்று உணர்த்துவதினின்றும் சமுதாயம் இவர்களுக்களித்த உயர்வு வெள்ளிடைமலை. சமுதாய ஒழுக்கத்தை நிலைபேறுடையதாகச் செய்வதற்காகப் பெண்களின் கற்புநிலை மிகவாகப் போற்றப்பட்டது. 'தெய்வம் தொழா அள் கொழுநற்றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' (குறள். 55) என்று கற்புடைப் பெண்டிருக்கும் தெய்வநிலை அளிக்கப்பட்டது. பெண்களை ஆண்களுக்கு அடிமையாக்குதற்கு இவ்வுத்தி பெரிதும் பயன்பட்டது. இவ்வாறாக நாட்டின் மழைவளத்திற்கு இவர்கள் தான் காரணம் என்ற நம்பிக்கை சமுதாயத்தில் வேர் விடலாயிற்று.

கலங்காத சித்தமும் செல்வமும் ஞானமும் கல்வியும் கருணையும் அழகிய வடிவும், போகமும். தியாகமும், அழகிய மங்கையும்,

அஞ்சாத வீரமும், பொறுமையும் தந்திரமும், ஆண்மையும் அமுதமொழியும் ஆ௱ இவையெல்லாம் ஒருவருக்குப் பிறவி யிலேயே தோன்ற வேண்டுமேயன்றிப் பிறரைப் பார்த்து வருவ தில்லை. (அறப் : 53) முன்வினைப் பயனாகவே இவை அமையும் என்ற நம்பிக்கையையும் இவை காட்டுகின்றன. பிறவிக்குணம் என்று கயிலாசநாதர் சுட்டுவதும் (9) இதன் எதிரொலியேயாம். இதன் மூலம் வாழ்நாளில் நல்வினை ஆற்றுதலை வற்புறுத்தின. இவ்வாறு நல்வினை புரிவதால் இம்மையில் கிடைக்கும் நற்பேறு களும் (திருவேங் : 87) உணர்த்தப்பட்டு நம்பிக்கையளிக்கப் பட்டது. வாழ்வில் எல்லா நலமும் பெற்று இன்புறுவோரை நல்வினை புரிந்தோராகவும் பல்வகையில் அல்லலுறுவோரைத் தீவினை புரிந்தோராகவும் கற்பிக்கப்படுதல் இதன் விளைவாகும். நல்வினையாளருக்குத் தூண்டுகோலாகவும், தீவினையாளருக்கு எச்சரிக்கையாகவும் இந்நம்பிக்கை பயன்படுத்தப்பட்டது.

திருமகள் அருள்பெற்றால் வாழ்வில் மிகுந்த சிறப்புண்டு, சென்ற வழியெல்லாம் சிறப்பு பெறும், செல்லாத வார்த்தை செல்லும், பொருள் துரும்பாக மதிக்கப்படும், மரியாதை மிகுதி யாகக் கிடைக்கும், பகையாளிகூட உறவாகுவான், பேச்சினில் பிழை வாராது, புவியில் முன் மதியாதோரின் மதிப்பு வரும், நினைத்த பொருளைப் பெறலாம் என்ற நம்பிக்கையையும் (குமரேச : 67) காண்கிறோம். ஒருவர் வாழ்வில் பொருள்வளம் பெற்றால் மேற்கண்டபடிச் சிறப்புப்பெறல் உலகியற்கை. ஆகவே அத்தகையோரை பொருளுக்குரிய தெய்வமான திருமகளின் அருள் பெற்றோராகக் காட்டி இறைவழிபாட்டை வலியுறுத்து கின்றனர்.

இத்திருமகள் மதகளிறு, கங்கைநீர், கமலாசனம், திருமால் மார்பு, அரசர், பசுக்களின் கூட்டம், பயிர், உண்மை மொழி, நல்லோர், அழகிய மனை, சுத்தவீரர், அவர்தம் கொடி, சுயம்வரம், துளசி, வில்வம், கடப்பமலர், நற்குண நங்கையர் இவர்களிடமெல்லாம் உறைகிறாள் [குமரேச : 35]. நற்பரி முகம், கடல், திருமணம் நிகழும் இல், கடிநகர், சுடர்விடும் விளக்கு, பொற்புடை சங்கு, பூந்தடம், பாற்குடம் முதலியனவற்றையும் திருமகள் வாழிடமாகக் கொள்வர்- [அறப்: 20]. பொருள் வளம் தருவனவற்றையும், மனமகிழ்ச்சி தருவனவற்றையும், அழகும் பெருமையும் மங்கலமும் தருவனவற்றையும் இவண் குறித் திருப்பது நோக்கத்தக்கது.

இவற்றிற்கு எதிர்நிலையில் பலரும் வெறுப்பனவற்றையும் வறுமை சூழ்ந்தவிடத்திலும் மூதேவியிருப்பதாகக் குறிப்பர்.

அளவின்றி வெகுவாக உணவு அருந்துவோர், பொய்பேசுவோர். இருந்தும் இல்லாதார் போன்று பழைய கந்தையணிவோர், கடி நாயெனச் சீறி எவரையும் அருகில் வரவொட்டாது துரத்தும் மகளிர்வாழ் மனை, ஆடுகளின் கூட்டம், இறந்துகொண்டிருப் போர் [அறப்: 21]; கெட்டுப்போன மங்கையர், புகை, தீயோரின் நிழல், இருள், அரசமர நிழல், கடுமையான சினமுடையோர், களர்நிலம், அழுக்கடைந்த மனை [குமரேச : 36] போன்றன அவ்விடங்கள். தூய்மை, அழகு, நற்பண்பு முதலானவற்றைப் பொதுமக்கள் பாராட்டவேண்டும், அவற்றிற்குச் சிறப்பளிக்க வேண்டும் என்பதனை இவ்வாறு சுட்டுதலின் மூலம் வலியுறுத்து கின்றன எனலாம். தீமைகள் தவிர்க்கப்பட்டு, நன்மைகள் பெருகுதற்கு இதுவும் ஓர் வழி என இத்தகு நம்பிக்கைகள் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

சிறந்த ஒழுக்கங்களைக் கற்பித்தலும், நம்பிக்கைகளை உருவாக்குவதின் நோக்கமாக அமைதலைக் காணமுடிகிறது. அண்ணாமலைச் சதகம் குற்றம் எப்பொழுதெல்லாம் வரும் என்று கூறும்பொழுது, உணவருந்தும்பொழுது பேசுதல், நகைத்தல், உருண்டையாய் உருட்டி உண்ணல், சிந்தல், ஒரு விரலை நீக்கி உண்டல், மயிர், பூச்சி, புழு, நகம் முதலியன பட்ட உணவினைக் கொள்ளுதல், நகத்தினையும் தலைமுடியினையும் பல்லால் கடித்தல், ஒரு காலினால் மற்றொரு காலைத் தேய்த்துக் கழுவுதல், உண்கலத்தே எச்சிலை உமிழ்ந்திடுதல், கையினால் நகத்தை உரித்தல், பாணியால் தலைசொரிதல், விரலினால் தலை கீறல், பாழடைந்த மனையிலே உறங்கல், கஞ்சா, கள் முதலியன குடித்தல், பெரியோரைப் பழித்தல், துயிலுபவரை எழுப்பல் முதலானவற்றைக் குறிக்கும் [66]. இவற்றை வாழ்வில் பின்பற்றுதல் நல்ல ஒழுக்கத்தைப் பாதிக்குமாதலின், குற்றம் வரும் என எச்சரித்து நம்பச்செய்து, ஒழிக்க வலியுறுத்துகிறது. நம்பிக்கைகளின் மூலம் எவற்றையும் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும் என்பதற்கு இதனைச் சான்றாக்கலாம். இதன்வழிக் குற்றங்கள் ஒழிந்து குணம் பெருக வழியேற்படுகிறது எனலாம்.

குறிப்பிட்ட ஒவ்வொரு செயலுக்கும் உரிய நாட்களையும் வரையறுத்துள்ளனர். அவற்றிற்குரிய நாட்களில் தான் அவற்றைச் செய்யவேண்டும் எனும் கண்டிப்பும், அதனை மீறினால் ஏற்படும் தீங்குகளைச் சுட்டி எச்சரிக்கையும் விடுத்தலை இவற்றில் காண்கிறோம். இத்தகு வரையரைகளைப் பிறவற்றைவிட கயிலாசநாதர் சதகமும் அறப்பளீசுர சதகமும் மிகுதியாகத் தருகின்றன. அறப்பளீசுர சதகம் புதிய துணிகளை

அணிவதற்குரிய நாட்களாக ஞாயிறு புதன், வியாழன், வெள்ளி என்பவற்றைக் குறிக்கும். முறையே கறைபடாத ஒளியும், அழகும், மென்மேலும் புதிய நல்லாடைகளும், வாழ்வும் திருவும் இந் நாட்களில் அணிவதால் கிடைக்கும். இவற்றை ஒழித்து திங்கள் அணிந்தால் பலகாலும் மழையினில் நனைந்து விரைவில் ஒழிந்து விடும், உறுதியாகத் துன்பம்வரும் வீரியமகலும்; செவ்வாய்க் கிழமை எனிலிலோ சிறிது நாட்களிலேயே ஆடை கிழிந்து விடுவதுடன் வெற்றியும் மறையும்; சனிக்கிழமையானால் வாழ்வகன்று இறப்பு வரும் என்று கற்பார் எச்சரிக்கப்படு கின்றனர். [61] மூன்று உத்திரம், அஸ்தம், பூரம், புணர்பூசம், ரோகிணி, அநுடம், சத்தமி, துதிகை, தசமி, பஞ்சமி, துவாதசி, திரிதிகை, திரியோதசி, அட்டமி முதலிய பொழுதுகளையும் புத்தாடை புனைவதற்குச் சிறப்பாகக் கயிலாசநாதர் சதகம் [75] மொழிகிறது. இந்நூல் புதனன்று புத்தாடை புனைவது அழிவைத் தரும் என்றுரைத்திருப்பது முன்னூற் கருத்தினின்றும் முரண்பாடாக அமைவது எண்ணற்பாலது.

புதுவீடு கட்டுவதற்கும் மனை தோண்டுவதற்கும், புதிய இல்லிற்குக் குடி பெயர்தற்கும் அறப்பளீசுர சதகம் நல்ல மாதங் கள் இன்னின்ன என மொழிகின்றது. சித்திரை நலம் தரும், செல்வம் பெருகும் ஆயின் அதைவிட வைகாசி நலம் பயக்கும். ஆவணி நலம் பலதரும்; ஐப்பசிமாதம் மேன்மை உண்டு; கார்த்திகையும் நல்லது; தை மாதமாயின் உயர்வு உண்டு ஏனைய இச்செயலுக்குப் பொருந்தா என்பதனைக் காரண காரியங் களுடன் சுட்டுதல் (67) காணப்படுகிறது. முன்னாளில் சிவன் திரிபுரங்களை எரித்தது ஆனிமாதம்; வெற்றிகொள் இராகவன் தேவி சிறைபட்டது ஆடிமாதம்; இரணியன் மாண்டது புரட்டாசி; பாரதப் போர் வந்தது மார்கழி; மாரன் எரியுண்டது பங்குனி எனவே இம்மாதங்கள் புதுமனை கோலுவதற்கோ, புகுவதற்கோ ஏற்றதல்ல என்றுரைக்கப்படுகிறது. நம்பிக்கைகளின் தோற்றத் திற்குப் புராணங்கள் இடமாதலை இவண் காண்கிறோம்.

'வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதல் இன்று' (குறள். 83) என்பதில் தமிழர் விருந்துவத்தல் பண்பிற்கு அளித்த உயர்வினைக் காணலாம். இதிலும் பல நம்பிக்கையுணர்வுகளைக் காண்கிறோம். விருந்துண்ண, கொடுக்கத் திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகள் நல்லது எனப் போற்றப்படுகின்றன. திங்கள் புதனன்று நல்ல உறவும் நன்மையும் உண்டு, நெடுநாள் பகையாய் இருந்த உறவு வெள்ளி யன்று உறவாய்த் திரும்பும். இவற்றிற்கு மாறாக ஞாயிறு

செவ்வாய், வியாழன் விருந்து இருப்பின் பகைவரும் என்று குறித்துள்ளனர். (68)

வெளியூர்களுக்குப் பயணம் செய்வதற்குரிய நாளும் பொழுதும் இவற்றால் உணர்த்தப்பட்டுள்ளன இடபம், கடகம் சிம்மம், துலாம் முதலியவை மட்டுமே ஏற்புடைய ராசியாகக்குறிக் கப்பட்டுள்ளன. ஏனையவற்றில் மேடத்திற்குப் பயணமாகாது எனப் பொதுநிலையில் கூறப்படுகிறது. மிதுனத்தில் செல்லும் காரியம் எதிர்ப்படும்; கன்னியில் நளிர்சுரம் வரும்; விருச்சிகத்தில் உடல் நோயுறுவதுடன் நடுக்கமும் வந்து கேடுறும்; தனுசில் பகைவர் வெற்றிபெறுவர்; மகரத்தில் மிகுந்த பயம்வரும் கும்பத்தில் கொடியர் தண்டனையெய்துவர்; மீனத்தில் பயணம் மிகுந்த பயங்கொண்டதாய் அமையும் என்று ஒவ்வாத பிற ராசி களில் வரும் இடர்ப்பாடுகளை அண்ணாமலைச் சதகம் (94) சுட்டுகிறது. கயிலாசநாதர் சதகம் எந்தக் கிழமைகளில் எந்த திசையில் செல்ல வேண்டும், மற்றும் செல்லக் கூடாது என்பதை வரையறுக்கிறது (76). செவ்வாய், திங்கள், சனிக்கிழமைகளில் தெற்கு, புதன், மேற்கு, வியாழன், ஞாயிறு, வெள்ளிக்கிழமை களில் வடதிசையும் சென்றவர்களுக்கு எவ்வளவு கடினமான வேலையானாலும் எளிதில் நலமே நிறைவுறும். ஆனால் ஞாயிறு, வெள்ளிக்கிழமைகளில் கிழக்கே சென்றால் அதிகப்பகை வரும்; சனியும், திங்களும் மேற்கே சென்றிடின் நினைத்த காரியம் நடைபெறாது; செவ்வாய்க் கிழமையில் தென்திசையில் சென்றவர்க்கு மரணமுண்டு; புதன், வியாழக்கிழமைகளில் வட திசை சென்றோர் திரும்ப மாட்டார் என்றுரைக்கிறது அச்சதகம்.

ஆடு, மாடு, குதிரை முதலிய கால் நடைகளுடன் அடிமை களையும் ஒருவர் வாங்குதற்குரிய நாட்களும் இந்நூலில் குறிக்கப் பட்டுள்ளன. அவற்றை விட்டு சித்திரை, மகம், உத்ரம், பூசம், ரோகிணி; அவிட்டம், உத்திராடம், உத்திராட்டாதி எனும் இவ்வெட்டு நட்சத்திரங்களிலும் உலகுளோர் எத்தனை கொடுத் தாலும் இவற்றைப் பெறல் கூடாது. அவ்வாறு பெற்றால் அவை ஒருவருடத்திற்குள்ளாகவே மரணமுறும் (83) என்று நவிலப் பட்டுள்ளது. இவைதவிர ஒருவர் சவரம் செய்வதற்குரிய நாளை யும் கூட இந்நூல் (96) உரைத்துள்ளது.

இத்தகைய நம்பிக்கைகள் சங்ககாலத்திய தமிழரிடையே இருந்ததாக அறிய இயலவில்லை. பிற்காலத்திய ஆரியர் செல் வாக்கால் தமிழ்ப் பண்பாட்டில் மிகுந்த மாற்றங்கள் நிகழ்ந் துள்ளமைக்கு இவற்றையும் சான்றாக்கலாம் எனத் தோன்று கிறது. நம்பிக்கைகளிடையே புராணங்களும், நாள், நட்சத்திரங்

களும் இடம் பெற்றுள்ளமை இவ்வெண்ணத்தைத் தருகிறது. அடிமைகளையும் விலைக்கு வாங்கி, விற்ற உண்மையைக் கயிலாசநாதர் சதகம் வழி உணருகிறோம். ஆண்டான் அடிமைச் சமுதாய நிலை வெளிப்படுகிறது. தீண்டத்தகாதாராக, இழிந்த சாதியினராக மேல்மட்டத்தவரால் கருதப்பட்டவர்கள் அடிமைகளாயினர் போலும். ஆரியச் செல்வாக்கால் தமிழ ரடைந்த இழிநிலைகளுள் இதுவும் ஒன்று எனலாம்; இடைக் காலத்தில் அடிமைகளை விற்றல், வாங்கல் நிலை அதிகமாக நிலவியதையும், பொதுவாகக் கோயில்களுக்கும் மடங்களுக்கும் அடிமைகள் விற்கப்பட்டிருப்பதையும், அந்தணர், அரசர், அரசவையில் பெரும் மதிப்புப் பெற்றிருந்தோர் எனச் சமுதாயத் தில் உயரிடத்திலிருந்தோருக்கு அடிமைகள் உடைமையாக இருந்தமையையும் கல்வெட்டுச் சான்றுகள் வழி நிறுவுதல்[3] இக் கூற்றிற்கு அரணாகின்றது.

நிமித்தம்

நிமித்தம் பார்க்கும் மரபு தமிழரிடையே தொன்றுதொட்டு வழங்கிவருவதைக் காண்கிறோம். பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளை முன்சுட்டும் குறியீடுகளை நிமித்தங்கள் எனலாம். இவற்றிடம் தமிழர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். கயிலாசநாதர் சதகமே இவற்றையும் மிகுதியாகக் காட்டுகின்றது.

கருடனைக் காணல் எந்நாளும் நல்ல பலனைத் தருவதாக நம்பப்படுகிறது. ஞாயிற்றுக் கிழமை கண்டால் உடலில் உள்ள நீங்காத பிணியாவும் தீரும். திங்கட்கிழமையில் அழகு கூடும். செவ்வாய்க்கிழமையானால் உளத்துயர் யாவும் நீங்கும். புதனும், வியாழனும் கருடனைக் கண்டு வணங்க நெடிய சூனியம் அகலும். வெள்ளி, மற்றும் சனிக்கிழமைகளில் உறவு வரும். தினமும் காலை காணலில் நல்லறிவு, செல்வம் முதலான எல்லா வளமும் பெற்று அரசர் போன்று வாழ்ந்து இறையடி அடைவர் என்பது [39] கயிலாசநாதர் சதகத்தால் பெறப்படுகிறது. கருடன் திருமா லுக்குப் பெரிய திருவடியாகச் சிறப்புறுதலின் நன்னிமித்தமாகப் போற்றப்படுகிறது போலும்.

கலைமான், வானரம், கருடன், கீரி, காடான், கருங்கூகை, கரடி, நாய், பன்றி, மூஞ்சூறு, ஆந்தை, ஆமை, காடை, பூனை, சிட்டு, முயல், உடும்பு இவை வலமிருந்து இடமாகச் சென்றிடின்

3. ந. மார்க்சியகாந்தி; தமிழகத்தில் அடிமைகள்; தமிழ் நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு; (பதி) இரா. நாகசாமி வரலாற்றுப் பேரவை; மு.ப. மே. 1979; பக். 216-225.

வழிப்பயணம் சிறப்புறும் நிமித்தமாகும் [80]. புலி, நரி, மயில், பசுங்கிள்ளை, கோழி, கொக்கு, காக்கை, சிச்சிலி, ஓந்தி, செம்போத்து, எருமை, பசு, மறையோர், உழுவை இவற்றையும் வலமிருந்து இடமாகச் செல்லின் நன்று என அறப்பளீசுரசதகம் [62, 63] மொழியும். நிறைகொண்ட நீர்க்குடம், பாற்குடம், எருக்கூடை, மங்கலமகளிர், சூல்கொண்ட மகளிர், வேசையர், சிறார், இரண்டு மறையோர், பலா, அன்னம், கிழங்கு, வண்ணான், மணிவளையல், மலர் இவைகள் எதிர்வரின் நன்னிமித்தம்; செல்லுகின்ற காரியம் இனிதே நிறைவேறும் என்று இவை உணர்த்துகின்றன [கயிலா: 81, அறப்; 64]. குதிரையனுமானித்தல், வளையொலி, கொம்பு, முரசு, தப்பட்டை, முழக்கு இவை ஒலித்திடுதல், வேட்டுச்சத்தம், வாவாவென்ற சொல் இவையும், செயல் வெற்றி நன்னிமித்தமாகக் கொள்ளப்படுகின்றன [அறப். 63].

பல்லி, எலி, ஓந்தி. பாம்பரணை முதலியன உடல்மேல் விழுதல் தீநிமித்தமாகக் கொள்ளப்படுகிறது. இவற்றிற்கும் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு பலன் உணர்த்தப்படுகிறது. ஞாயிற்றுக் கிழமையாயின் கொடிய பகைவரும்; திங்கட்கிழமை தனில் உயிர் இழப்புண்டாகும்; செவ்வாயில் பகைவரின் துன்பம் பெருகும், அன்னை, பிதா மக்களுக்களுக்குச் சேதத்தைப் புதன் தரும்; யானை, குதிரை முதலானவற்றொடு நீள் நிதியெல்லாம் வியாழனாகில் மறையும்; வெள்ளி சனியில் உடல்நோய் உண்டாகும். இவற்றிலிருந்து தப்புவதற்கு மாற்றாகச் செய்ய வேண்டியதையும் கயிலாசநாதர் சதகம் சுட்டுகிறது (60). அமுதம், எண்ணெய், கோமயம், ஓமம், நெய், வெண்ணெய் முதலியன அவற்றிற்குரிய மாற்றாகும். இவற்றை எந்நிலையில் எவ்வாறு பயன் கொள்ளல் வேண்டும் என்பது பற்றிய குறிப்பில்லை.

வெளியே செல்லும்பொழுது ஒற்றைத் தும்மல், தலை வாசற்படியில் இடித்தல், இருமல், போகாதே என்றல், அவச்சொல் எனும் இவையெல்லாம் தீநிமித்தத்தைச் சுட்டித் தடுப்பனவாம் [கயிலா. 80, அறப். 62]. இவற்றை மீறிச் சென்றால் துன்பமே மிகும் என்றும் இவை எச்சரிக்கின்றன. மற்றும் தலைவிரித்து வருதல், ஒற்றைப் பிராமணன், தவசி, தட்டான், துறவி, புல், விறகு, முதலியன சுமந்துவரல், மொட்டைத்தலை, கலன் கழி மகளிர், அழகற்ற பெண்டிர், நாவிதன், புதியதுணி, வாணியன், அக்கினி எனும் இவை எதிர்வரின் செல்லும் காரியம் தீமையையே தரும் என்பர். [அறப். 64, கயிலா. 81]

செஞ்செல்லும் பின் வருவதை முன் சுட்டும் நிமித்தமாதலைக் கயிலாசநாதர் சதகம் காட்டுகிறது. குழந்தையின் தொட்டி

வின் கீழ் தோன்றில் குழந்தை மரணமுறும்; வீட்டுத் தூணின் அடியில் தோன்றில் அதன் தலைவன் உயிர் நீங்கும்; பஞ்சணையின் கீழுறின் மனையாள் மாளுவாள்; நல்ல நிலத்தில் வரின் வீடு முழுவதுமே அழியும் என்பதுடன் தோன்றுகின்ற திசையினைக் கொண்டும் பலனுரைத்தல் காணப்படுகிறது [78].

சமயச் சடங்குகளில் தேங்காய் உடைக்கும் பொழுது அது உடையும் முறையிலும் நிமித்தங் காணல் குறிப்பிடற்குரியது. அடி பருத்தும் முடி சிறுத்துமாக வட்டமாக உடையின் ஆக்கம் தரும்; மூன்றாக உடையின் அதிக மகிழ்வு வரும், ஐந்திரண்டாய் உடையின் அளவற்ற செல்வம் வரும். பலவாறாக உடையின் சிவன் தியானம் பலனாம்; இவ்வாறின்றித் தேங்காயின் நீண்ட நரம்பு இரு கோணமாகில் துன்பம் வரும் என்றுணர்த்தப் படுகிறது [கயிலா. 79]. சமயச் சடங்குகளில் தேங்காய் உடைத்தல் சங்க காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. பிற்காலத்தில் புகுந்ததொன்றாகத் தோன்றுகிறது.

பல்லி, ஆந்தை, காகம் இவற்றின் குரல், தும்மல் முதலியவற்றிற்கும் ராசி பலன் இயம்பப்படுகின்றது. இவ்வொலிகள் மேட ராசியில் ஒலித்தால் போர்; இடபத்தில் குடியை அழிக்கும். மிதுனம் நோய் தரும்; மகர ராசியில் தீது வரும் இவையன்றி கடகம் நன்மைதரும், சிங்கம் அமுதமும் தயிரும் கொடுத்திடும். கன்னி வெற்றி தரும், கும்பமும் மீனமும் மகிழ்ச்சி தரும், விருச்சிகம் பொன் தரும், தனுசு விருந்து தரும், துலாம் தூதோலை தரும் என்பன அப்பலன்களாகும் (கயிலா.70).

வீடு கட்டத் துவங்கும் பொழுதும் அம்மனையில் குழிவெட்டுதலினின்றும் நிமித்தம் பார்த்தல் அறியப் படுகிறது. குழியில் நீர் விட்டு மேல் மலர் தூவ அம்மலர் வலமாகிடில் நல்வாழ்வு சிறக்கும். இடப்புறமாகச் சுற்றிடில் பகையாகும்; வண்டு, புழு இவை காணில் தீதாகும்; மற்று சினையாகு சிவை காணில் ஆக்கம் வரும். அரணை, நண்டு, பல்லி, தேரை, சிலந்தி எனும் பூச்சிகளிவை வரின் செம்மையே தரும்; இவையின்றி ஆமை, பாம்பு, தேள், உடும்பு, புலி, பூரமிவை வரின் மனை பாழாகும். வேர்கள் கண்டால் பொருள்கள் தப்பாது அழிவுறும்; எல்லாவற்றினும் சங்கு காணுதல் மிகுந்த நலம் பயக்கும் யோகமாம் என்று நவிலப் படுகிறது (கயிலா.80).

நிமித்தங்காணல் தமிழரிடையே காணும் பழமை வாய்ந்த பழக்க வழக்கங்களுள் ஒன்றாயினும் பழங்காலத்தவரிடையே இருந்தவற்றிற்கும் இந்நூல்கள் இயம்புவனவற்றிற்கும் இடையே

மிகுந்த வேறுபாடுகளை உணர முடிகிறது.[4] அன்று வழக்கில் வழங்கியவைகளில் விரிச்சி கேட்டல், பல்லி சொல் போன்ற ஒரு சிலவே இங்குள. பல்லி சொல் அன்று நன்னிமித்தமாகக் கருதப்படத் தீ நிமித்தமாகவும் இந்நூல்களில் சுட்டப் பட்டுள் ளதை முன்னர்க் கண்டோம். இதுபோன்றே ஆந்தையின் குரல் அங்குத் தீநிமித்தமாக மட்டுமே கொள்ளப் பட்டுள்ளமையும் சுட்டற்பாலது. சங்க இலக்கியம் சுட்டும் விலங்குகளின் தடு மாற்ற நிலை, உன்ன மரம் போன்றவை இங்குக் கருதப் படா விடினும், விரிச்சி கேட்டலுடன் தொடர்புடையதாகக் கருதத் தக்க எதிர் வருநிலை போன்றன, குறிப்பிட்ட நாள், நட்சத் திரம், ராசி இவற்றைக் கொண்டு பலன் காணல் போன்ற வளர்ச்சி நிலைகளை இங்குக் காண்கிறோம். நிமித்தங்களும், சோதிடமும் மக்களிடையே பெற்ற செல்வாக்கை இது சுட்டு கிறது. கௌளி நூல், காக சாஸ்திரம் என்று தனிச் சிறப்புடன் இது வளர்ந்த நிலையும் எண்ணற்பாலது. மரபாக வழங்கி வரும் நம்பிக்கைகளிடையே மாற்றங்கள் தோன்றவும் கூடும்; அவற் றிற்குப் பிற இனக்கலப்பு ஒரு காரணமாக அமைதல் கூடும் என்பன போன்ற எண்ணங்கள் இவற்றை நோக்க எழுகின்றன. தமிழரிடையே நிலவும் நம்பிக்கைகள் பற்றிய ஆய்வு தொடர்ந்து விரியும் பொழுது தமிழ்ச் சமுதாயம் பற்றிய புதிய கருத்துகள் பல உறுதியாகக் கிடைக்கும் எனும் எண்ணமும் இங்குத் தோன்று கின்றது.

இவை தவிர உடற் கூறுகளடிப் படையிலும் நம்பிக்கைகள் மிகுந்திருப்பதைக் கயிலாச நாதர் சதகத்தாலறியலாம்(99,87-91) பல்வகை உயிர்கள் பற்றிய நம்பிக்கையைக் கறுப்பண்ண சாமி சதகம் (84) தருகிறது. 84 லட்சம் உயிர் வகைகள் உள்ளதாக அது சுட்டுகிறது. தேவர்களின் காலவளவையில் அறப்பளீசுர சதகம் (40) நம்பிக்கை கொள்கிறது. உண்மை பொய்மையாகவும், தாழ்ந்தவை உயர்வாகவும் கருதப்படுவது கலிகாலத்தியல் பாகக் கயிலாசநாதர் சதகம் மொழியும். மற்றும் தூய்மையான பொருட் களையும், பிறவற்றைத் தூய்மை செய் பொருட்களையும் இந் நம்பிக்கையின் அடிப்படையில் உணர்த்தக் காண்கிறோம் (அறப்:41).

சமயம் மற்றும் சோதிடத்தின் அடிப்படையில் எழுந்தவை யாகப் பெரும்பான்மையான நம்பிக்கைகள் உணர்த்தப் பட்டுள்

4. க. காந்தி: தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கை களும்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை: மு. ப. 1980.

ளதைக் காண்கிறோம். சிலவற்றிற்குக் காரண காரியம் காட்டியிருப்பதும் எண்ணற்பாலது. வாழ்வின் உயர் பண்புகளுக்கும் சமய நம்பிக்கைக்கும் தொடர்பிருப்பதைக் குமரேச சதகத்தின் வழி உணர முடிகிறது.

சத்தியந் தவறா திருப்பவ ரிடத்தினில்
சார்ந்துதிரு மாதிருக் குஞ்
சந்ததந் திருமா திருக்கும விடந்தனிற்
றனதுபாக் கியமிருக் கும்
மெய்த்துவரு பாக்கிய மிருக்கும விடந்தனில்
விண்டுவின் களையிருக்கும்
விண்டுவின் களைபூண் டிருக்கும் விடந்தனில்
மிக்கான தயையிருக் கும்
பத்தியுட னினியதயை யுள்ளவ ரிடந்தனிற்
பகர்தரும மிகவிருக் கும்
பகர்தரும முள்ளவ ரிடந்தனிற் சத்துரு
பாலயனத் திறலிருக்கும்
வைத்திசை மிகுந்ததிற லுள்ளவ ரிடத்தில் வெகு
மன்னுயிர் சிறக்கு மன்றோ? (7)

என்பதாக அப்பாடல் அமைகிறது. உண்மையை வாழ்வில் கடைப் பிடிக்க வலியுறுத்தும் வேளையில் இறைமையையும் இணைத்து நம்பிக்கையினை உருவாக்குவதை இதனால் உணர முடிகிறது. நற்பண்புகளும் இறைப்பற்றும் இணையும் பொழுது தான் உயர்ந்த வாழ்க்கை அமையும் என்பதை வலியுறுத்தல் இவற்றின் நோக்கம் போலும்.

ஊழ்வினை

ஊழ்வினையிலும் பண்டு தொட்டு தமிழரிடையே நம்பிக்கை இருந்து வருகிறது. 'ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' (குறள்.380) என்பதையே சதகங்களும் புராணச் சான்றுகள் வழி வலியுறுத்துகின்றன. (குமரேச:46) ஊழ்வினையின் பலனை அனுபவித்துதான் தீரவேண்டும். அதிலிருந்து யாரும் தப்ப முடியாது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன [அறப்:54, கறுப்:31].

அட்டதிசை யெங்கணும் போ யலைந்தாலும்
பாதாள மதிற் சென் றாலும்
பட்டமென வானூடு பறந்தாலு
மென்ன வதிற் பயனுண்டாமோ

பிட்டுவர மண்சுமந்த தண்டலையா
ரேமுன்னாள் பெரியோர் கையில்
இட்டபடி யேயொழிய வேறாசைப்
படின்வருவதில்லை தானே [தண்டலையார்:3]

என உறுதியாக எடுத்துரைத்து தம்மிடம் இல்லாத ஒன்றிற்காக ஏங்குவதைக் கண்டிக்கின்றன. ஆசைப்படுதலே துன்பங்களுக்குக் காரணமாதலின் அதிலிருந்து தப்புவதற்கு, தப்புவிப்பதற்கு ஒரு வழியாக இதனைச் சுட்டுகின்றன எனவும் கொள்ளலாம். 'ஆசிலாப்பெரியோரிடத்தினி லடுக்கினு மனமத்தபடி யன்றி வருமோ? அவரவர் களனு போக மனுபவித்திடல் வேண்டுமல்லால் வெறுப்பதெவரை' எனும் கூற்றும் [குமரேச. 20] இதனை வலியுறுத்தக் காணலாம். வாழ்வில் நிகழ்வனவற்றை அதனதன் போக்கில் அவ்வாறே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதனை வற்புறுத்தவே இறைமையை அதனுடன் தொடர்பு படுத்தி அவற்றை அவன் விதித்த விதியாகக் காட்டுவது [கறுப்.75, தண்டலை:30] அமைகிறது எனலாம்.

சோதிடம்

விண்மீன் மற்றும் கோள்களைக் கொண்டுப் பின் நிகழ்வனவற்றைக் கணிக்கும் மரபும் அதில் நம்பிக்கையும் மிக்கப் பழமை வாய்ந்தனவாம். இதற்காக நாளையும் கோளையும் கொண்டு நற்பொழுதைக் கணித்துத் தரும் நிமித்திகர் பலர் இருந்தமையையும் அறிகிறோம். இதன் பாலுள்ள நம்பிக்கையினாலும், அவற்றைக் கடைப் பிடிப்பதைச் சமுதாயம் விரும்பியதாலும் சதகங்கள் இவற்றிற்கும் தம்முள் சிறப்பளித்துள்ளன. கயிலாச நாதர் சதகமும், அறப்பளீசுர சதகமும் பிற நம்பிக்கைகளுடன் சோதிடத்திற்கும் சிறப்பளித்துள்ளன. பிறந்த நாள் பயன் [கயிலாச:73, அறப்:77], பெண்கள் பருவமடைந்த நாளின் பயன் [கயிலாச:74, அறப்:69,70] முதலியவற்றுடன் மழை நாட் குறிப்பு [கயிலாச:95 அறப்:79], வருடமறுபதுக்கும் மாதம், வாரம், நட்சத்திரம், திதி, நாழிகை முதலியவற்றின் பிறப்பு, மாதங்களின் நட்சத்திர பலன், அமாவசை, நிறைமதி வரு நட்சத்திரம், அமிர்த, மரண, தத்த யோகங்கள், நட்சத்திரங்களுக்கும் நாளுக்கும் உள்ள பலன், வருடம் அறுபதிற்கும் பஞ்சாங்கப் பிறப்பு, கோள்களின் நிலை முதலான பலமும்[கயிலாச:51-64, 69,72,84,85,86] கணித்துரைக்கப்பட்டுள்ளன. நம்பிக்கைகள் மற்றும் நிமித்தங்கள் பலவும் சோதிடக் கலையுடன் தொடர்புற்றிருத்தலையும் முன் சுட்டியுள்ள காட்டுகள் வழிக் காணலாம். சமுதாயத்தில் மிகப் பெரிய செல்வாக்கினை இக்கலை இன்றும் கொண்டுள்ளமை உணர்தற்பாலது.

உயர்ந்தவை

சமுதாயத்தில் குறிப்பிட்ட சில பொதுவாக அனைவராலும் மிகுதியான மதிப்பைப் பெறுகின்றன. அவற்றை இத்தன்மை குறித்து உயர்ந்தவை எனலாம். கிடைத்தற்கரிய தொன்றா குவனவும், அவ்வவ் இனத்துள் சிறந்ததாகக் கருதப்படுவனவும். ஒன்றன் பெருமைக்குரிய காரணியும் சதகங்களால் உயர்ந்தன வாகப் போற்றப்பட்டுள்ளன. மானிடப் பிறப்பில் அட்டாங்க யோகமும் மெய்ஞ்ஞானமு நிறைந்திடு வோரே உயர்வாகக் கருதப்படுகின்றனர் (கயிலா. 11). கைக்குறுதி வேல், இன் மனைக்கு உறுதி மனையாள், கவிக்குறுதி பொருளடக்கம், கன்னியர் தமக்குறுதி கற்புடைமை, சொற்குறுதி உண்மை...... (குமரேச. 76) என்று ஒன்றன் உயர்விற்குக் காரணமானவை உணர்த்தப்படுகின்றன. மரங்களில் சந்தனம், நதியினில் கங்கை விரதத்தினில் சோம வாரம், நிலத்தில் காஷ்மீரம், தலத்தில் சிதம்பரம், ரிஷிகளில் வசிட்டர், பசுவில் காமதேனு, முனிவரில் நாரதர், நவமணிகளில் பதுமராகம், மலர்களில் தாமரை, வலிமையில் மாருதம், யானைகளில் ஐராவதம், தமிழினில் அகத்தியம், யந்திரங்களில் பிரணவம் என்று ஒவ்வொன்றிலும் உயர்வாக மதிக்கத்தக்கன குறிக்கப்பட்டுள்ளன. (குமரேச. 24) இங்கும் புராணம் தன் செல்வாக்கை நிலை நாட்டியிருப்பது நோக்கத் தக்கது. நிலங்களுள் வடநாட்டைச் சார்ந்த காஷ்மீரம் குறிக்கப்பட்டிருப்பது வியப்பைத் தருகிறது. இமயமலைப் பகுதியில் அது இருப்பதாலும், இறைவன் உறைவிடமாக இமய மலை போற்றப்படுதலாலும் இச்சிறப்புத் தரப்பட்டதுபோலும்; அல்லது அதன் இயற்கையழகிற்குக் குருபாததாசர் தம் உள்ளத்தைப் பறி கொடுத்திருக்க வேண்டும்.

ஒருவரிலிருந்து மற்றொருவர் தம் ஈகைத் திறனில் உயர்ந்து நிற்பதை அறப்பளீசுரர் சதகம் (14) சுட்டும். சிறப்புடையோரி லும் தனித்து உயர்ந்து நிற்பவரையும் இது தருகிறது [72]. பேரரசனாயினும் அறிவுடையவனாய் நிற்றல், பல கலைகள் கற்றறியினும் அடக்கத்துடன் அமைதல், அழிவற்ற செல்வந் தனாயினும் மிகுந்த ஈகையுள்ளம் கொண்டிருத்தல்...என்ப தாக அஃதமைகிறது. ஒருவருக்குச் சிறப்புச் சேர்ப்பனவற்றை யும் [குமரேச, 69, 54; அறப் : 60; கயிலா: 49; அண்ணாமலை: 93; திருவேங்:] 52 உயர்வாகப் பல பாடல்களில் இவை தரு கின்றன. ஒன்றிலிருந்து மற்றொன்று உயர்ந்து நிற்றலை, ஒப்பீட்டு நிலையில் திருவேங்கட சதகம் [50, 51] தந்து உயர்வை நோக்கிச் செல்லும்படிக் கற்பாரைத் தூண்டுகிறது.

'பாலினோடு தேன் வந்து சேரில் ருசியதிகமாம், பருகுநீர் சேரில் என்னாம்' என்று சிறப்புடையன ஒன்று சேரில் தான் உயர்வு அமையும் என்பதைக் குமரேச சதகம் [98] வலியுறுத்துகிறது. உலகில் உயர்ந்தோராதற்கு எவ்விதச் சிறப்பும் ஒருவர் பெற வில்லையாயினும் அவரும் உயர்வடைதற்கு ஒரு வழியைக் கீழ்க் கண்டவாறு அறப்பளீசுர சதகம் காட்டுகிறது.

தந்தைதாய் சற்குருவை யிட்டதெய் வங்களைச்
சன்மார்க்க முள மனைவியைத்
தவறாத சுற்றத்தை யேவாத மக்களைத்
தனைநம்பி வருவோர் களைச்
சிந்தைமகிழ் வெய்தவே பணிவிடை செய் வோர்களைத்
தென்புலத் தோர்வறி ஞரைத்
தீதிலா வதிதியைப் பரிவுடைய துணைவரைத்
தேனுவைப் பூசுரர் தமைச்
சந்ததஞ் செய்கடனை யொன்றுமிவை பிழையாது
தான்புரிந் திடி லில்லறஞ்
சாருநல முடையராந் துறவறத் தோருமிவர்
தம்முடன் சரியா யிடார் (95)

என்பது அதன் கருத்து. இல்லற ஒழுக்கங்களை அவற்றினின்று சிறிதும் வழுவாது நடாத்திச் செல்வதே போதுமானது எனும் குறிப்பும் இங்கு உட்பொதிந்து நிற்கக் காணலாம். ஒரு இல்லறம் எப்பொழுது நல்லறமாகிறது எனும் வினாவிற்கும் சிறந்த விடையாக இப்பாடல் அமைகிறது.

பயனற்றவை

'தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று' [குறள் : 236] என்று அறநூல்கள் விரும்பியது போன்று உலகில் தோன்றிய உயிரினங்கள் அனைத்தும் ஒருநிலையில் பிற்ருக்குப் பயனுடையனவாக அமைதலை வர வேற்கின்றன. நற்பண்பு, நல்வினை மற்றும் காலமறிந்து இடனறிந்து வினையாற்றுதலை அறிவுறுத்துதலின் அடிப்படையில் பயனற்றவைகளைப் பட்டியலிட்டுக் காட்டுதல் அமைகின்ற தெனலாம். ஒன்றின்மையால், பண்புக் குறைபாட்டால் ஒன்றிற்கொன்று ஒவ்வாமையால், முறையற்ற நெறியால், தீச் சார்பால் எனப் பல வகைகளில் இப்பயனற்ற தன்மை அமைதலைச் சதகங்கள் நவில்கின்றன.

இரவலர்க்கு உதவாத பெருஞ் செல்வம், நீளிருளில் மதியில்லாத வானம், நல்ல பொருள் இல்லாத பாடல், பிறர் படும்

துயர் கண்டு சற்றும் இளகாத மனம், இரக்க குணமற்ற மனம், அடக்கம், பணிவு இல்லாதவன், ஏந்திழையில்லாத இல்வாழ்க்கை, குதிரையில்லாத படை, நான்மறை யில்லா வேள்வி, மக்கட் செல்வமில்லா வீடு, மலர்களற்ற சோலை, அறிவுடை அமைச்சரில்லா அரசு, புகழ் படைக்காத உடல், செல்வமிலா இளமை, புலவரில்லாத அவை, செங்கோலில்லாத நாடு, தியானம் இல்லாத வழிபாடு, ஆலயம் இல்லாத ஊர், வீர மில்லாத படை போன்றவற்றால் யாது பயன் என்பது கயிலாச நாதர் சதகம் [34] விடுக்கும் வினா. இல்லாத இவை அவ்வவற் றுடன் இணையும் பொழுதுதான் பிறந்ததன் பயனைப் பெறு கின்றன. அன்றாயின் இவை இருப்பதும் ஒன்றுதான் இல்லாமை யும் ஒன்றுதான் என்பதே இவற்றின் முடிந்த முடிபு.

விருந்தாக வந்தவரை விடுத்துத் தான் மட்டும் உண்பவன், விளையாட்டுச் சண்டையைப் பெரிதாக்கிக் கலகம் விளைவிப் பவன், அருந்தவத்தோர் அருமை அறியாதவன், பெண் சொல் கேட்பவன், நோய் தீர்த்த மருத்துவருக்கு நன்றி மறப்பவன் [கறுப் : 60], தன் பெருமை சொல்லித் தன்னைத் தானே புகழ்கிறவன், போர் கண்டு ஒளிபவன், பெரியோர் புத்தி கேளாதவன், நண்பர்களுடன் மனம் ஒன்றாதவன், புறம் கூறு பவன், பெற்ற தாய் தந்தை துயர்பட வாழ்ந்திருப்பவன், மிகு செல்வமிருந்தும் பிறரிடம் பொருள் கேட்பவன், பொய்ச் சாட்சி சொல்பவன், உலகத்தவர் வாழ்வைப் பழிப்பவன் [குமரேச : 28] எனும் இவர்கள் போன்ற யாவரும் சமுதாயத்திற்குத் தேவை யற்றவர்கள். தமக்கும் பயன்படாது பிறருக்கும் தீங்கு விளை விக்கும் இவர்களால் எஞ்ஞான்றும் அழிவே யன்றி ஆக்கம் பெறுதற்கு வழியன்றாதலின் கடியப்படுகின்றனர். மற்றும் உள்ளன்பிலாது வெளியில் மிக இனிமையாகப் பேசுவ தினால் வரும் உறவு; அன்புடன் வரவேற்று உபசரிக்காது இட்ட உணவு; பிறரை விட்டுப் பார்த்து வரச் செய்யும் பயிர்; தலைவ னின்றிச் செல்லும் படை, விருப்பமில்லா பெண் மேல் கொண்ட காமம்; மிக்க கடன் கொண்டவர் வாழும் வாழ்வு [அறப் : 26] இவற்றாலும் யாதொரு பயனுமில்லை.

தருணத்தி லுதவிசெய் யாதநட் பாளர்பின்
　　　　தந்தென தராம லென்ன?
　தராதர மறிந்து முறை செய்யாத மன்னரைச்
　　　　சார்ந்தென்ன நீங்கி லென்ன?
பெருமையுட னன்மையில் லாதவொரு பிள்ளையைப்
　　　　பெற்றெனபெ றாம லென்ன?

பிரியமா யுள்ளன்பி லாதவர்க ணேசம்
பிடித் தெனவி டுக்கி லென்ன?
தெருளாக மானமில் லாததொரு சீவனஞ்
செய்தெனசெ யாம லென்ன?
தேகியென வருபவர்க் கீயாத செல்வஞ்
சிறந்தெனமு றிந்து மென்ன?
மருவிளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு
வந்தெனவ ராம லென்ன? [குமரேச: 26]

என, இருந்தால் ஒன்று பயனுடையதாக இருத்தல் வேண்டும் அன்றாயின் இல்லாமையே மேல் என்று அறிவுறுத்தி மற்றும் பல பயனற்றவைகளை [குமரேச: 27, 55, 93; திருவேங்: 26; அண்ணாமலை: 44, 92...] இவை அறிவுறுத்தியுள்ளன. பயனுடை வாழ்வு வாழ வேண்டும் என்பதனையே இவைகள் இவ்வாறு பல வழிகளிலும் வலியுறுத்துகின்றன எனலாம்.

துன்பத்திற்குரியன

இன்பமும் துன்பமும் உலகியற்கையாயினும் இன்பத்தைக் கண்டு கூத்தாடும் உலகம் துன்பத்தில் துடிக்கிறது. எதிர்கொள அஞ்சுகிறது. எனவே துன்பத்திலிருந்து தப்புவதற்கு வழிகாட்டும் சதகங்கள் துன்பந்தருவன எவை, அவற்றிலிருந்து விடுபடல் யாங்ஙனம் எனவும் மொழிகின்றன.

துதிக்கின்ற மனைவியுங் குறைசொல்வ டந்தைதாய்
சோகமுற வசைகூறுவார்
துன்பமொடு மனமெலியு மேனிவேற் றுருவமாந்
தொலையாத கவலை வளரும்
உதிக்கின்ற புத்தியு மழுங்கிடுங் கல்விபோ
முதரத்தி லதிகபசியா
முறவின்முறை யாருமொரு வார்த்தைசொல்
லார்சொன்ன
வுத்தரமு மொருவர் கேளார்
விதிக்கின்ற வுலகத்தி லெல்லாரு மிகழுவார்
மிடிவந்து சேர்ந்த தென்றால்
மேன்மையே தறிவேது குலமேது நலமேது
வித்தையே தெவரறிவர் காண்
மதிக்கின்ற வுன்பதம் போற்றிலவை சேருமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே [15]

என்று வறுமையின் சிறுமையை இச்சதகங்கள் நன்கு எடுத்துரைக்கின்றன. இறையருள் ஒன்றே இதன் பிடியினின்றும் தப்புவதற்கு வழி என்று இறைவழிபாட்டை வேண்டுகின்றன. எது இருப்பினும் வறுமையின் முன் அவை மதிப்பற்றுவிடுவதால் துன்பங்களுள் மிக்க கொடியதாக இது உணர்த்தப்படுகிறது.

ஐம்புலன்களும் [58], காமமும் [57] துன்பத்தை வருவிப்பனவாக அமைதலைச் சுட்டி அவற்றினின்று விடுபடற்கு அவற்றை அடக்கியாளுதலே நலம் எனக் கறுப்பண்ணசாமி சதகம் போதிக்கிறது. கற்றவர்களின் உறவைவிட்டு அறிவற்ற மூடரை நட்பாகக் கொள்ளுதல், பெரியோரின் குறிப்பறியாது தம் விருப்பம்போல் நடத்தல், பெற்றோர் மனம் வருந்தும்படி அவர்களைப் புறக்கணித்துவிட்டு, வெளியே பெருமையுடன் தானம் அளித்தல், உடன்பிறந்தோரைக் கைவிடல், சுற்றத்தாரைப் பகைத்து, அன்னியரை நட்பாகக் கொள்ளல் எனும் செய்கைகளாலும் ஒருவர் துன்பற நேரும் என்று இந்நூல் [38] எச்சரித்து நல்வழியில், நேர்வழியில் அறிவுடன் நடக்கும்படி அறிவுறுத்துகிறது. பிறவியே துன்பாக உணர்த்திப் பிறவாப் பேரின்ப வாழ்வுபெற இறையடி சேர அழைத்தலையும் இதனுள்ளும் [92], அண்ணாமலைச் சதகத்திலும் (74) காண்கிறோம்.

இவ்வாறு வறுமையும், அவரவர் செய்கைகளும் ஒருபுறம் துன்பத்திற்குக் காரணமாயிருக்க, மறுபுறம் பகைக்கத் தகாதவருடன் பகை கொள்ளுதல் காரணமாதலையும் இவை காட்டுகின்றன. அரசர், தவமுனிவர், கணக்கதிகாரி, அடுத்துக் கெடுப்போர், கொலைஞர், ஊரார், விகடப் பிரசங்கி மந்திரவாதி, மருத்துவர், கவிஞர், ஆசிரியர், உறவினர், பொருள் வளமுடையோர், அமைச்சர், தீயோர், தூதர், சமைப்போர், புலையர் ஆகியோரை [குமரேச. 22, அறப் 92, கயிலாச: 33] ஒருநாளும் பகையாக்கிக் கொள்ளல் கூடாது என அறிவுறுத்துகின்றனர். பொருள் மற்றும் வலிமையால் உயர்ந்தோரும், தீயோரும் இதில் இடம் பெற்றிருக்கக் காண்கிறோம். எனவே இவர்களைப் பகைக்கும் பொழுது இவர்களால் அழிவு நேரிடுதற்கும்' பலவகைகளில் துன்புறுதற்கும் வாய்ப்புண்டாதலின் இவ்வாறு எச்சரிக்கிறது எனலாம். கவிஞர் நினைத்தால் அறம் பாடி உயிரிழக்கும்படிச் செய்வர் என்ற நம்பிக்கை அல்லது வசைபாடி என்றென்றும் தமக்கு இகழ் உண்டாகும்படிச் செய்துவிடுவர் என்ற எண்ணம் அவரைப் பகைத்தல் கூடாது என்பதற்குக் காரணமாகலாம். ஆசிரியர் தெய்வத்திற்கு இணையாகப் போற்றப்படுதற்கு உரியராதலினாலும், மற்றும் தம்மின்

வலியாரைப் பகைக்கும் பொழுது வெற்றி உறுதியாக அவருக்கே யாதலினாலும் இப்பட்டியலமைகிறது போலும். சமுதாயத்தில் இடர்ப்பாடுகள் இல்லாத அமைதியான வாழ்க்கைக்கும் மாற்றாரால் தாழ்வாக மதிக்கப்படாதிருத்தற்கும் இதுவும் மிகவும் இன்றியமையாதது. ஆகவே சதகங்கள் இங்குச் சிறப்பளித்துள்ளன எனலாம்.

புலவர்

சமுதாயத்தில் மதிப்பு மிக்க தோரிடத்தைக் கவிவாணர்கள் பெற்றிருந்தமையாலும், பொது மக்களிடையே அவர்களுடைய தேவையை உணர்த்தும் சொற்பொழிவாளராக விளங்கியமையாலும் புலவோர் இச்சதகங்களுள் போற்றப்படுகின்றனர். இலக்கிய இலக்கணக் கடல் மடுத்து நாற்கவிகளையும் கொண்டலெனப் பொழியும் திறனுடையராய், அரை நொடியில் கலம்பகம் சந்தமாலை, பரணி, கோவை, பிள்ளைக் கவிதை முதலான சிற்றிலக்கியங்களை உயர்வான முறையிலே 'அரிதரிது இத்தகு நூல்' எனப் பலரும் போற்றும்படிப் பாடும் இயல்புடையோராய், அவையோர் வியந்து நிற்கும்படி இனிய சொற்பொழிவாற்றும் ஆற்றலுடையோரே புலவராதலுக்குப் பெருமையுடையோராகக் [கயிலாச: 7] கருதப்படுகின்றனர். புலவருக்கும் பொதுமக்களுக்குமிடையே தொடர்பிருத்தலை இங்குச் சிறப்பித்திருத்தல் நோக்கத்தக்கது. எவ்வளவுக்கெவ்வளவு புலவர் பெருமை மிக்கோராக விளங்கினரோ அதற்கு எதிர்நிலையில் பொருளாதாரத்தில் மிக்க வறியராகவே இருந்தனர் என்பதையும் இவை உணர்த்துகின்றன [அறப். 74]. எவ்வளவுதான் சிறப்புடன் கவிகள் பாடினும் அதனருமையை அறியாது புரவலர் மிகக் குறைவாகவே பொருளுதவி செய்தலைத் திருவேங்கட சதகம் [29] நகைச்சுவை படக் காட்டுகிறது. கோவைக்குப் பச்சடம், கலம்பகத்திற்குத் துப்பட்டி. பிள்ளைக் கவிக்குச் சோமன், உலாவானால் உருமாலை, மடலாயின் ஒரு நாணயம், வண்ணம் எனில் ஒரு சாப்பாடு, மாலை பாடின் தாம்பூலம் என்று கூறியிருப்பது புலவரின் இரங்கத் தக்க நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைகிறது. சில தமக்கு விருப்பப் புலவர் [கறுப்: 41] மற்றும் அவர் தம் சரிதையைச் சுருங்கியுரைத்தலும் [அண்ணாமலை: 22-25] காணப்படுகின்றது. நல்ல புலமையாளரிடையே நடிப்பாளரும் இருந்தமையைச் சுட்டும் தண்டலையார் சதகம் [40] இறைவனைப் பாடி இம்மை, மறுமையின்பம் பெறுதலே பாவாணர் கடனாம்; அதை விடுத்து மானிடரைப் பாடித்திரிதல் வீணானது [67] என்றும் மொழிகிறது.

இலக்கியம்

சிறந்த இலக்கியம் ஆனது எவ்வாறு அமைந்திருக்கவேண்டும் என்பதைச் சுட்டும் சதகங்கள் [குமரேச : 86; திருவேங் : 56), கறுப் : 100, செய்யுளின் வகை [கயிலாச : 2], இராமாயணத்தின் சிறப்பு [கறுப்: 16]: மூவர் தேவாரப் பாடல்களின் தொகை [அண்ணாமலை: 99] முதலியவற்றையும் தருகின்றன. புலவரைச் சுட்டும் பொழுது அவரது படைப்பையும் போற்ற வேண்டும் என்ற நிலையில் தம் இலக்கிய எண்ணங்களைத் தருகின்றன எனலாம். மக்களிடையே மதிப்புற்றிருந்த தன்மையால் மூவர் தேவாரமும், இராமாயணமும் விதந்தோதப்பட்டுள்ளன எனக் கருதலாம்.

நாடு

பல்வகைச் செய்திகளின் தொகுப்பு வாழ்வியற் சதகங்களின் இயல்பு என்ற நிலையில் தமிழ்நாட்டெல்லையாகக் கறுப்பண்ண சாமி சதகம் வடக்கே வேங்கடம் தெற்கே கன்னியாகுமரி மேற்கே மலையாளம் கிழக்கே கடல் என்பனவற்றைக் குறித்துள்ளது [98]. மேலும் இது, 'திராவிடம் மிகும் தன கொழுகு பாண்டி நாட்டில்' என்று சுட்டுவதன் மூலம் அன்று தமிழ், திராவிடம் என்றும் வழங்கி வந்தது என அறியலாம். பல்வேறு நாடுகள் பற்றித் திருவேங்கட சதகம் [97, 98] சுட்டுவதும் குறிப்பிடற்பாலது.

உலகியல்

உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடிய பொதுவான இயல்புகளை, பண்புகளை, நீதிகளை, வழக்கங்களை, வாழ்க்கை முறைகளை அதில் புலப்படும் நம்பிக்கைகளை உலகியல் என்பதோடு உலகப் பொருள் பற்றிய பொது அறிவுகளையும் அதனைச் சார்ந்ததாகக் கொள்ளலாம் என்பர் அறிஞர்.[4] வாழ்வியலும் உலகியலும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்ததாதலின் இச்சதகங்களில் உலகியலும் இடம் பெற்றுள்ளன.

உலகினை இயங்கச் செய்யும் காரணிகளுள் பணம் சிறப்பிடம் பெறுகிறது. இப்பணத்தால் உலகில் எதனையும் வெல்ல முடியும் [திருவேங்: 89]; பணம் மனிதரை எப்படியெல்லாம்

---

4. ச. வே. சுப்பிரமணியன்; கம்பனும் உலகியல் அறிவும்; தமிழ்ப் பதிப்பகம்; சென்னை; மு. ப. 1981; ப. 7.

மாறறும் [கயிலாச: 10] என்பனவற்றை இவை உணர்த்து கின்றன.

பணந்தானே யறிவாகும் பணந்தானே
வித்தையுமாம் பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும் பணமில்லா
தவர்பிணமாம் பான்மை சேர்வர்
பணந்தானே பேசுவிக்குந் தண்டலைநீ
ணெறியாரே பார்மீதிற்றான்
பணந்தானே பந்தியிலே குலந்தானே
குப்பையிலே படுக்குந் தானே (தண்டலை : 72)

என்று உலகில் பணம் பெற்றுள்ள செல்வாக்கு நவிலப்பட்டுள்ளது. இப்பணத்தை மிகுதியாகக் கொண்டுள்ள செல்வந்தர்கள் உலகில் பெறும் மதிப்பையும், அது இல்லாத வறுமையாளர்கள் பெறும் இகழ்வைய்ும் வெகு அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன (கறுப் : 29; தண்டலை: 96, 98). அப்பொருளை எவ்வாறு நேர்வழியில் பெற்று, நேர்மையாகச் செலவிட வேண்டுமென்றும் (அறப் : 7) தந்துள்ளமை குறிப்பிடற்பாலது.

உலகத்தோர் விரும்பி வேண்டுவனவற்றுள் ஒன்றாகப் 'புகழ்' அமைகிறது. புகழ்ச்சியில் மயங்குதல் உலகோர் இயல்பு. 'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்ப தொன்று இல்' (232) என்றுரைக்கும் வள்ளுவம். ஆகவே இதில் ஈடுபாடு கொள்கின்றனர். ஒருவருக்குப் புகழ் தரக் கூடிய வழிகளைத் திருவேங்கட சதகம் (19) காட்டுகிறது. புதல்வரால் பெற்றோர் என்றென்றும் பெருமை கொள்வதைக் கறுப்பண்ண சாமி சதகம் (82) புராணச் சான்று வழிச் சுட்டுகிறது. உலகில் பெருமையுடையோராய்த் திகழும் பெரியோர்க்கும் அவர் போன்று புகழ் பெற விழையும் சிறியோர் செயல்களையும் நயம்பட மொழிகின்றன. (திருவேங்: 61). 'இருவரையும் பகுத்துக் காணில் ஆராயு மகாதேவராடிடத்துப் பேய்களு நின்றாடுமாறே, (தண்டலை: 79) என்று இருவருக்கும் உள்ள வேறுபாடும் இயம்பப்படுகின்றது. உலகில் பிறந்தோர் பெற்றிருக்க வேண்டிய பதினாறு பேறு[5] களையும் அண்ணாமலைச் சதகம் [33] எடுத்துக் காட்டுகிறது.

---

5. நிலம், நவதானியம், நன்மனை, நன்மக்கள், கல்வி, ஞானம், இளமை, அழகு, உடல் நலம், வளமான நீண்ட வாழ்நாள், மெய்த்துணிவு, மிக்க புகழ், வெற்றி நல்லூழ், அறுசுவை நுகர்ச்சி, மிகுந்த செல்வம்.

நல்லதும் கெட்டதும் இணைந்ததுதான் உலகம் என்பதையும் திருவேங்கட சதகம் (90, 91) எடுத்துக் காட்டுகின்றது. ஒவ்வொருவரின் இயல்பிற்கேற்ப பண்புகள் அமைதலையும் இவை உணர்த்துகின்றன. துன்பத்திலிருப்போருக்கும், பசியுடனிருப்போருக்கும், விருந்தினருக்கும், விரகினருக்கும் நோயிலிருக்கும் தம்முடைய வருத்தத்தைத் தவிர பிறர் பெறும் துன்பம் தெரியாது [தண்டலை: 97); மற்றும் ஒவ்வொருவர் பண்பினையும் அவர் தம் நடக்கை கொண்டு உணரலாம்]அறப் : 31, குமரேச : 38] என்றும் மொழிகின்றன. உலகில் பல் நிலைகளில் உண்மையை விடப் பொய்ம்மையே பாராட்டப் படுதலையும் இவை சுட்டத் தவறவில்லை [அறப் : 30]. இதற்குக் காரணம் கலிகாலம் என்றுரைக்கும் திருவேங்கட சதகம் [27]. ஆசை மற்றும் காமம்அளவிடற்கரியன [திருவேங் : 21, அண்ணாமலை: 90, தண்டலை : 71] என்றுரைக்கும் இவை, நாள்பட நாள்பட எவையும் சலிப்புத் தரும் என்பதையும் [திருவேங் : 78, குமரேச : 72] உணர்த்துகின்றன. ஒன்றன் அழிவிற்குக் காரணமும் உலகியல் வழி [அறப் : 57] காட்டப்படுகிறது. உலகம் போற்றும் கலைகளின் சிறப்பினைத் திருவேங்கட சதகம் சுட்டியிருத்தல் [63-66] குறிப்பிடற் பாலது. உலகியற்கையறிந்து அதனோடு இயைந்து, அதன் நன்மை தீமை யுணர்ந்து அதற்கேற்ப செயலாற்றுதற்குத் துணை நிற்கும் வகையில் இவை இங்கு மொழியப்படுகின்றன போலும். நல்லோரைப் புரிந்து கொள்ளற்கும், தீயோர் இயல்பறிந்து எச்சரிக்கை பெறுதற்கும் எந்தச் சூழலில் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பதனைத் தெரிந்து கொள்ளற்கும் இது தேவை எனலாம். மற்றும் ஊரோடு ஒத்து வாழ்வதற்கும் இன்றியமையாததாகிறது.

மானிடரியல்பு

பண்பு நிலையிலும், தகுதியடிப்படையிலும் மானிடர் பல்வேறு வகையினராக அமைகின்றனர். அதற்கேற்ப அவர்களின் இயல்பும் அமைகிறது. அதற்குரிய இயல்பு வேண்டப்படுகிறது என்றும் கொள்ளலாம். இவற்றையும் இச்சதகங்கள் இயம்பியுள்ளன. மனைவி, நன்மக்கள், உடன்பிறப்பு, ஆசிரியர், மாணாக்கர் எனும் ஐவர் தம் இயல்புகளை அறப்பளீசுர சதகம் [2-6] தனித்து விதந்தோதுகின்றது. இதனைக் குமரேச சதகம்

கல்வியொடு கனமுறச் சபையின்மேல் வட்டமாக்
காணவைப் போன் பிதாவாங்
கற்றுணர்ந் தேதனது புகழாற் பிதாவைப்ர
காசஞ்செய் வோன் புத்திரன்

செல்வமிகு கணவனே தெய்வமென் றனுதினஞ்
சிந்தைசெய் பவள்மனைவி யாஞ்
சிநேகிதன் போலவே யன்புவைத் துண்மைமொழி
செப்புமவ னேசோ தரன்
தொல்வள மிகுந்தநூற் கரைதெரிந் துறுதிமொழி
சொல்லுமவ னேகுரவ னாஞ்
சொன்னநெறி தவறாமல் வழிபாடு செய்துவரு
துய்யனே யினிய சீஷன் [58]

என்று சுருக்கமாக உரைத்துள்ளது. இவர்களிடம் எதிர் பார்க்கப்படும் கடமைகள் என்றும் இவற்றைக் கொள்ளலாம். தொழில் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் சில தகுதிகள் வேண்டப்படுகின்றன. அவற்றையும் இங்குக் காண்கிறோம். [குமரேச : 11, 25] அரசு அலுவலரான தானாதிபதி, அமைச்சர், சேனாதிபதி, கணக்காயர் போன்றோர் தகுதிகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன [அறப்: 84, 85, திருவேங் : 8]. மருத்துவர் இயல்பும் [கயிலாச : 24, திருவேங்: 68] இவற்றால் சிறப்பிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது.

பண்படிப்படையில் மூர்க்கர், கயவர், பிறருக்குதவாதவர், பயனற்றோர், புல்லர், தீப்பெண்டிர், பரத்தையர், உத்தமர் முதலியோர் இயல்புகளையும் திருவேங்கட சதகம் [45-48; 69, 81-84, 95, 96] விளக்கிச் செல்கின்றது. ஞானிகளின் இயல்பை யும் கறுப்பண்ண சாமி சதகம் [77] வரையறுத்துள்ளது. ஒவ்வொருவரின் இயல்பிற்கேற்ப அவர் தம் பண்புகளமைதலை இவற்றால் உணரலாம். பிறவும் (குமரேச : 10, அறப் : 18) இவற்றைச் சுட்டியுள்ளன.

ஒருவரின் இயல்பிற்கேற்ப அவர்தம் மனநிலைகளும் வேறு பட்டு நிற்றலைக் குமரேச சதகம் (9) எடுத்துக் காட்டுகிறது. ஞான நெறியின் மனம் வீடுபேற்றில் நிலைத்திருப்பதும், நல்லோ ருக்கு அறம் புரிதலும், நாடாளுபவர்க்கு நாட்டின் மீதும், காமுகர்க்குப் பெண்கள்மீதும், திருடருக்குத் திருட்டின் மீதும், வணிகருக்கு வரும் லாபத்திலேயும், உழவருக்கு வேளாண்மை யின் கண்ணும் பரத்தையருக்குப் பொருள் தருவோர் மீதும் எண்ணம் நிலை பெற்றிருக்கும் என்று அது மொழிகிறது. மானிடரின் உளவியல்பை உணர்த்துவதாக இஃதமைகிறது. அவரவர்க்குரிய கடமை தவறாது நிற்றலையும், தானிருக்கும் நிலைக்கு அல்லது தொழிலுக்கு ஏற்ற தகுதியைப் பெறலையும், பிறரின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளலையும் இவை இதன் வழி வலியுறுத்துகின்றன எனலாம்.

இயற்கை

தம்மைப் பற்றி மட்டுமின்றித் தம்மைச் சூழ்ந்துள்ளவை பற்றியும் அறிந்திருத்தல் பொது அறிவு வளர்ச்சிக்குத் தேவை என்ற நோக்கில் சில சதகங்கள் மற்றும் பல செய்திகளைத் தருகின்றன. கயிலாசநாதர் சதகமும் [96, 97] அண்ணாமலைச் சதகமும் (80-88) குதிரைகளின் இலக்கணத்தைத் தருகின்றன. கறுப்பண்ணசாமிசதகம் பருத்தியின் மேன்மையையும் (36) நீரின் சிறப்பினையும் (81) நவின்றுள்ளது. சமயச் சடங்குகளில் இவை பயன்படுகின்ற தன்மையால் தனித்துப் புகழப்பட்டுள்ளன எனலாம்.

வாழ்க்கை எவ்வாறு இருக்கிறது எப்படி இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தும் இவ்வாழ்வியற் சதகங்களை நோக்கும் பொழுது தம் காலத்திய தேவையை நிறைவேற்றுதல் பொருட்டு எழுந்தனவாகத் தோன்றுகின்றன. அன்று மிக்க சிறப்புடன் விளங்கி இன்று சிறப்பிழந்துள்ள நிலை இவ்வெண்ணத்தைத் தருகிறது. தமிழரின் இவ்வாழ்வியற் சூழல் சங்க காலத்துடன் ஒப்பிடுகையில் மிகுந்த வேறுபாட்டுடன் திகழ்வதைக் காண்கிறோம். இன்றைய வாழ்வியலினின்றும் இவை மாற்றங் கொண்டு வருவதை உணர்கிறோம்.

சதகங்களி லமையும் வாழ்வியற் கூறுகள்

பொருட்கூறுகள்	குமரேசர்	அறப்பளீசுரர்	கயிலாசநாதர்	அண்ணாமலை	திருவேங்கட	தண்டலையார்	கறுப்பண்ணசாமி
இனப்பகுப்பு	2-5	81-84	3-6	9, 11, 13, 14, 27-29	2-5	38, 55,	3-6
மானிடரியல்பு	6-9, 11, 25,28	2-6, 18, 28, 85, 86	8, 23, 24	—	8, 22, 24, 43, 45-48, 59, 68, 69, 75, 76, 81-84, 95, 96	69, 74, 75, 76, 99	7, 44, 55, 77
பெருமை	13, 14, 16, 17, 31, 45, 53, 59, 64, 66, 74, 79, 84.	9, 23, 33, 48, 58 59, 97	12, 14, 17, 19, 36	31	6, 7, 9, 14, 23, 30, 33, 41, 52, 53, 55, 58, 70, 77, 93	5, 6, 25, 39, 54, 72, 93, 4, 7,	8, 13, 25, 26, 41 49, 62, 65, 78, 79, 82, 88, 89
சிறுமை	15, 21, 32, 37, 39, 47, 56, 63, 75, 80, 90, 91	35, 41, 66, 78	37, 50	—	25, 28, 34, 39, 44, 54, 62, 69, 79, 85, 88, 92	23, 41, 54, 63, 70, 85, 86, 94, 95	19, 25, 28, 69, 83, 85, 89
நல்லோர்	96, 99	16, 17, 46,	—	—	96	54, 56	18
தீயோர்	18, 23, 34, 40, 41, 42	27, 38, 47	13, 20	—	40, 42, 94	14, 16, 19, 20, 21, 29, 56, 57, 59, 80, 81, 100, 1	33, 34, 35, 45, 61
உடல்நலம் பேணல்	19, 30	50, 51. 73. 65,	25	59, 62, 64, 65, 71-73, 91	74	—	71, 72

நம்பிக்கை (நிமித்தம், ஊழ்)	7, 20, 35, 36, 44, 46, 67, 85	20, 21, 24, 41, 52, 53, 54, 61-64, 67, 68, 88, 90, 91	26-28, 39, 65-68, 70, 75, 76, 78-95, 98, 99,	10, 30, 34-38, 60, 66-68, 70, 79, 94	57, 87	1, 3, 22, 30, 50, 89, 5	31, 74, 75, 84, 96
உயர்ந்தவை	24, 49, 54, 76, 98	1, 14, 45, 55, 60, 72, 95	11, 49	69, 93	10, 50, 51	32, 35, 60	11, 12, 14, 17, 20, 38, 64, 67, 73
பயனற்றவை	26-28, 33, 50, 55, 93	22, 26, 34, 35, 44, 80	21, 32, 34	92	15, 20, 26, 36, 60	7, 13, 24, 26, 6	27, 48, 53, 60, 80, 90
துன்பந்தருவன	22, 29, 77	37, 92	15, 33	74	—	—	39, 57, 58, 76, 88, 92
செய்யவேண்டுவன	12, 43, 48, 52, 68, 69, 70	36, 39, 42, 76, 93, 94	22	34, 40, 41,	11, 16, 17, 35, 37, 49, 71	4, 8, 9, 27, 42, 44, 48, 51, 82, 83, 91	9, 32, 40, 59, 63, 66, 68, 93, 94, 95, 97
செய்யக் கூடாதன	56, 60, 78, 92, 95	8, 56	29, 31	—	12, 18, 31, 32, 38, 70, 73	4, 33, 43, 45, 52, 58, 61, 64, 65, 66, 78, 84, 87, 88	21, 46, 47, 50, 52, 54, 87
நற்பண்பு	61, 94, 97	29, 32,	—	—	—	2, 10, 12, 13, 17, 92	15
தீயபண்பு	62, 65	15, 35, 87	16, 18, 35, 38	—	—	15, 18, 31, 34, 80, 90, 92	23, 24, 30, 56, 86
நிலையாமை	71, 73, 82	19	—	—	86	—	—
புலவர்	83	74, 75	7	22-25	29	40, 67	41
இலக்கியம்	86	—	2	99	56	—	16, 100
வழிபாடு	8, 87, 88, 89	89, 98, 99	44, 46, 47,	3, 7, 8, 12, 32,	1, 101	11, 28, 36, 37, 46, 49, 67. 73	2, 70, 91, 99

				39,42-58, 61, 63,75, 89,95-98,100			
உலகியல்	38,51	25,30, 31, 57	10,41,43	33,90	19,21,27, 61, 63-66,78, 89-90	71, 72, 79,96-98	10,29,82
சோதிடம்	72	69-70, 77, 79	51-65, 67, 69, 71-74	76-78	91	—	43
புராணம்	—	96	30,40	16-21,26, 101	98,99,100	—	—
தலம்	—	—	—	2,5,6,15	—	62	—
இயறகை	—	—	9,45,96,97	80-88	—	—	36,37
நாடு	—	—	—	—	97	—	98

பக்தி

தமிழ் இலக்கிய வரலாற்றிலும் சமுதாய வரலாற்றிலும் வல்லாண்மை கொண்டு சமயங்கள் விளங்கிய காலத்தில் சதகங்களின் எழுச்சி அமைந்ததாதலின் சமயம் அதனுள்ளும் சிறப்புறலாயிற்று. புலவர் தம் பாமாலைகளைச் சதக வடிவில் இறைவனுக்குச் சூட்டினர். காரைக்காலம்மையாரால் தொடங்கி வைக்கப்பட்ட பக்தியியக்கத்தின் தொடர்ச்சியாக இவற்றையும் கொள்ளலாம். பக்தியியக்கம் மிக்க தீவிரமடைந்திருந்த காலத்தில் மாணிக்கவாசகரின் திருச்சதகம் முதலாவதாகத் தோற்றம் காட்ட, பல சதகங்கள் அதன் இறுதிக்கட்டத்தில் முகங்காட்டின. பொது நிலையில் பக்தியிலக்கிய மரபுகளே இவற்றிலும் பின்பற்றப்பட்டுள்ளன. எனவே பொருண்மையில் மாற்றம் காண்பதற்கில்லை.

ஒன்றன்பால் கொள்ளும் ஆழ்ந்த பற்றினைப் பக்தி எனக் கொள்ளலாம். பற்று என்பது பத்து < பத்தி < பக்தி என்பதாக மாறியுள்ளது எனக் கருதலாம். எற்று, அற்று போன்றன முறையே எத்து, அத்து எனத் திரிதல் போன்று இதுவும் அமைவதாகக் கொள்ளலாம். பத்து எனும் வினை, பெயராகுங் காலம் பத்தி எனவாகி, பக்தியாகிப் பின் மாற்றம் காண்கிறது எனலாம். இறைவன்மீது கொண்ட நம்பிக்கையுணர்வும் அதன் வாயிலாகப் பிறக்கும் பற்றுணர்வும் உள்ளத்தினின்று சொற்களாக உருவெடுத்து இலக்கியமாக மலர்கின்றன. அக்காலையில் அவை பக்திப் பொருளாகின்றன.

இறைவனைப் போற்றுதல் (மெய்கண்ட வேலாயுத சதகம்); தன்னிலைக்கிரங்கி இறைவனை வேண்டி நிற்றல் (திருச்சதகம், அவையாம்பிகை சதகம்) இறைவன் எழுந்தருளியிருக்கும் தலங்களைச் சிறப்பித்தல் (காசிவிசுவேச சதகம்); புராணங்களின் வழி இறைவனின் பெருமையுணர்த்தல் (இராமாயண சதகம்); சமயக் கொள்கைகளுக்கு விளக்கமளித்தல் (அமலகுரு சதகம்) எனப் பல நிலைகளில் இச்சதகங்கள் பக்திப் பொருண்மையைக் கையாண்டுள்ளன. இறைவனைப் போற்றுதல், அடியார் புகழ்

பேசுதல், புலவர் தன்னைப் பாடுதல், உலகோருக்கு உரைத்தல் என்பன இங்கு முதன்மை பெறுகின்றன. இவற்றில் அமைந்துள்ள பொருட்கூறுகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம். அவை பற்றிய விளக்கங்கள் உடன் தொடர்கின்றன.

பக்தி

இறை	அடியார்	புலவர்	உலகம்
இயல்பு	இயல்பு	இறைப்பற்று	அறிவுரை
வண்ணனை	பெருமை	இரங்கல்	சமயச் சடங்கு
கொள்கை	இறையருள்	வேண்டல்	வாழ்த்து
போற்றல்	வரலாறு	இறையருள்	
தலம்		அகத்துறை	
புராணம்		சமயப்பொறை	
		சமயக்காழ்ப்பு	

இறை

பக்திப்பனுவல்களில் இறைவன் பாடற்றலைவனாகச் சிறப்புப் பெறுகின்றான். அஞ்ஞான்று இறைவனைப் பற்றியும் அவனோடு தொடர்புடைய ஏனைய பிற கூறுகளைப் பற்றியும் உணர்த்தப்படுகிறது.

இயல்பு : இறைவன் எப்படிப்பட்டவன் என்பது அவரவர் சார்ந்த சமயத்திற்கேற்ப புலவரால் போற்றப்படுகின்றது. அவனது சிறப்புத் தன்மைகளே அவனது இயல்புகளாக இவண் எண்ணப்படுகின்றன. பொதுவாக எல்லாப் புலவர்களாலும் போற்றப்படும் கூறுகளுள் ஒன்றாகவும் இஃதமைகிறது. இறைவன் முரண்பட்ட இயல்பிற்குரியன் என்பதனை மாணிக்க வாசகர், வானாகி மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி, உண்மையாகி இன்மையுமாகி, கோனாகி, உயிர்களை ஆட்டுவிப்பவனுமாகி அமைகிறான் எனக் காட்டுகிறார் (15). உலகில் தாய் தந்தையற்ற யாருமிலிகளுக்குத் தாயாகவும் தந்தையாகவும் நிற்பான்; உறவினரும் நண்பரும் என்று தமராகக் கொள்பவர் யாருமில்லாதவர்க்குத் தமராகுவான்; செல்வத்துட் செல்வமான மக்கட் செல்வம் அற்றவர்க்குச் சேயாகுவான்; வலியோர் முன் எதிர் நிற்கும் வலிமையற்ற வாயற்ற எளியோருக்கு வாயாகி வலிமை தருவான் நாராயணன், என்று அவன் இயல்பு வடவேங்கட நாராயண சதகத்துள் எடுத்துக் காட்டப்படுகிறது. பாவிகளை மீட்க பூமிக்கு வந்த இறைவன் இயேசுவின் இயல்புகளை வேத நாயகர்,

பாவிகளை ரட்சிக்கக் கிறிஸ்தேசு மனுவாகப்
படிவந்த பொருள் யாது என்னில்
பரம ஆசாரியான் ஆக ஒருபலிதந்து
பாவத்தைத் தீர்ப்பது ஒன்று;
ஆவியும் தேவனும் அனுப்பின தீர்க்கனாய்
அவர்சித்தம் நமக்குஓ தியுமே
ஆயனாய் நீதியின் வழிஎமை நடத்தியே
ஆபத்தில் காப்ப (து) ஒன்று;
தேவன்து ராச்சியத் (து) ஏகசெங் கோலனாய்
செயகெம் பீரமு டையனாய்
சீசர்களின் இதயத்தை ஆசனம் ஆக்கியே
செகமெங்கும் ஆள்வது ஒன்றாம்

(அமலகுரு : 12)

என்பர். மஸ்தான் சாகிபு இறைவனின் இயல்பினை மொழிதற்கு முதல் பத்துப் பாடல்களை முகியித்தீன் சதகத்தில் கொண்டுள்ளார்.

வண்ணனை: உருவ வழிபாடு மேற்கொள்ளும் வைதீக சமயங்களில் புலவோர் இறைவனின் திருவுருவை முன்னிறுத்தி வண்ணனை செய்வதில் மகிழ்ச்சி கொள்கின்றனர். சங்கப் புலவர் இயற்கையை வண்ணிப்பதில் கொண்ட மகிழ்வைப் பக்திப்புலவர் இயற்கையைப் படைத்த இறைவனில் காண்கின்றனர். அழகு முத்துப்புலவர் தம் இதயத்துள் குடி கொண்ட முருக வேளைப் பொன்பூத்த நூபுரப் பாதத்தானாகவும், முப்புரி நூல் பூத்த மார்பனாகவும் ஈராறு தோளுடன் பன்னிரு விழிகளும் ஓராறு முடியும் கையில் வடிவேலுடையவனாகவும் காட்டுகிறார் (மெய் கண்ட : 1). நாம் துதிக்கும் தேவி அவையாம்பிகையைப் பாதாதி கேசமாக வண்ணித்து இன்பங் காண்கிறார் கிருஷ்ணையர். இறைவியின் திருமேனியால் அழகு பெறும் அணிமணிகளை ஒவ்வொன்றாகச் சுட்டுகிறார். பாதாம் புயத்தில் சிறு சதங்கைப் பணியும், சிலம்பும், கிண்கிணியும், பாடகமும், தண்டையும், கொலுசும் சிறப்புப் பெறுகின்றன. துவள்கின்ற இடையிலே பீதாம்பரமும், அரைஞாண் மாலைகளும் பிரியாது நிற்கின்றன. இருபுயத்திலும் தரள நவமணி மாலைகள் பெருகியுள்ளன. இவையன்றி மதிமுகத்திலமைந்துள்ள போதாரமுத மொழி புகலும் குறுநகையும், கயல்விழியும், தாமரை மலரையொத்த நுதலும் பொன் போன்ற கேசமும் பேரின்பச் சுவையைப்பெருக்குகின்றன என்பர். இறைவனிடம் கொண்டுள்ள ஈடுபாட்டைப் புலவர் உணர்த்துவதற்கு இது பெரிதும் உதவக் காணலாம்.

கே. பீ. அறிவானந்தம், மூத்த பிள்ளையார் திருச்சதகத்தின் எட்டாம் பத்தில் விநாயகரின் பால கணபதி, நற்தருண கணபதி, பக்த கணபதி, வீரகணபதி, சக்தி கணபதி, துவச கணபதி, பிங்கள கணபதி, உச்சிட்ட கணபதி, விக்கின ராச கணபதி, க்ஷிப்பிர கணபதி, ஏரம்ப கணபதி, லட்சுமி கணபதி, மகா கணபதி, புவனேச கணபதி, நிருத்திய கணபதி, ஊர்த்துவ கணபதி எனும் 16 வடிவங்களின் பெருமையை எடுத்துரைக்கிறார். உருவ வழிபாட்டில் இசுலாமிய சமயத்திற்கு உடன்பாடில்லை யாதலின் இங்கு இறைவருணனையைக் காண்பதற்கில்லை.

மானிட வடிவினை இறைமகன் இயேசுவிற்குக் கிறித்தவர் நல்கிய பொழுதிலும் உருவ வழிபாட்டிற்கு வைதிக சமயத்தவர் அளிக்கும் சிறப்பினை அளிக்கவில்லை எனலாம். தேவன் மனுவானதும், திருநாமம் பெற்றதும், திருப்போதனை செய்ததும், தீயோனுக்கு இடம் அற்றுச் சுத்தத்தில் நடந்ததும், திவ்ய கிரியை செய்ததும், பாவி போல் சிலுவையில் அடிபட்டு மரித்ததும், பலி உதிரமாய்ப் பெய்ததும், பாதலத்து இறங்கியே உயிரோடு எழுந்ததும், பரமேறி வலம் இருந்ததும், தேவாவி பெற்று நரர் மேலே சொரிந்ததும், தேவ வரங்கள் தந்ததும் தீ அலகைக் கை நின்று மனிதரை மீட்கவும், தீவினைகளைப் போக்கவும், மேவு பரிசுத்தத்தில் நடத்தவும் உலகத்தின் வெளிச்சமாய் இருந்து பரனை மேன்மைப் படுத்தவும் சேணுலகர் ஆக்கவும் விரும்பியே ஆகும் (அமல ; 28). எனவே எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை ஒரு வடிவில் அடக்குதல் பொருத்தமன்று [18] என்பர் வேத நாயகர். எனவே கிறித்தவரிலும் ஒருசாராரால் உருவ வழிபாடு கண்டிக்கப்படுவதால் இங்கும் இறைவனின் வண்ணனைச் சிறப்பு அமைதற்கில்லை.

இறைக்கொள்கை: இறைவனைப் போற்றுதலையும், தண்ணருள் வேண்டுதலையும் புலவர், உலகோர் உய்தி பெறும் பொருட்டும் நவில்கின்றனர். இறைப்பற்றை, நம்பிக்கையை வலியுறுத்துவதும் ஒரு நோக்கமாதலின் தம்தம் சமயத்தின் கொள்கைகளைச் சிறப்பித்துரைக்கக் காண்கிறோம். எல்லாச் சமயங்களுமே இறைவனை அடைவதைப் பெரு நோக்காகக் கொண்டுள்ளனவாதலின் அதற்குரிய வழிமுறைகளையும் உணர்த்துகின்றன. அவற்றைப் புலவர் தம் பாடல்களில் சிறப்பிக்கின்றனர்.

மூத்த பிள்ளையார் திருச்சதகம் முதல் பத்துப் பாடல் இறைவனின் திருவுருவத்துக்குரிய தத்துவங்களைச் சுட்டுகிறது. உருவ வழிபாட்டைப் போற்றும் வைதிக சமயங்கள் இறைவன்

வியப்பு தரும் தோற்றம் கொண்டுள்ளமைக்கு அமைதிகாணுமுக மாகத் தத்துவங்களைக் கற்பிக்கின்றன. புராணங்கள் இதற்குத் துணை நிற்கின்றன. விநாயகப் பெருமானின் பெருவயிற்றிற்கு,

'கணப்பொழுதில் நமக்குற்ற கவலையெலாம் தீர்த்
தெதையும்
இணக்கமுறச் செய்தருளும் இமயவல்லித் திருக்குமரன்
புணரிமுதல் புவியனைத்தும் பொருந்த பெரு வயிற்றடக்கிக்
குணமுடனே உயிரினங்கள் குலம் விளங்கக் காத்தனனே (4)

என்று பொருளுரைப்பர். உலகில் வடிவெடுத்துள்ள உயிரினங் கள் அனைத்திற்கும் அருள் அளித்து தன்னுள் அடக்கியவன்; இறைவனுக்குள் இவ்வுலகம் யாவும் பொருந்தியுள்ளன என்ப தனை உணர்த்துமுகமாகவே பெருவயிறு வாய்த்துள்ளது என்ற உண்மை இங்கு விளக்கம் பெறுகிறது. இது போன்றே மூவினத் திற்குமுரிய தெய்வமாய் விளங்குவதால் கரிமுகமாய், நரவடி வாய் கழறுதேவ வடிவானாய் அமைகின்றான் (2); பாரில் எவர் அழைத்திடினும் அன்புடன் அறிகின்ற நெறியை உணர்த்துவ தால் நீள்செவியாகிறது; ஆணவம், கன்மம், மாயை எனும் மும் மலங்களை உயிர்களிடத்திருந்தகற்றுவதால் பெருகும் மும்மதங் களதாய் ஈசனருள் யானையென இங்குற்றான் கணபதியே (3) என ஒவ்வொன்றிற்கும் தத்துவ விளக்கம் தரல் சுட்டற்பாலது.

ஐம் பூதங்களுமாய்த் திருமால் திகழ்வதை எம்பிரான் சதகம் (4) காட்டுகிறது. திருமாலின் திருவுடல் நிலமாகும்; சிவந்த வாய் நீராகும்; ஒளிவிடுகின்ற கண்கள் நெருப்பாகும்; வலிமை பொருந்திய மூச்சு காற்றாகும்; நினைவு முற்றும் ஆகாய மாகிறது; மற்றும் உயிர்களின் உணர்வுகளில் எல்லாம் விளங்கு பவனும் அவனே என்பது இந்நூல் தரும் வைணவசமயக் கொள்கையாகிறது. யாகங்கள், விரதங்கள், புனிதப்பயணங் கள், பொன், கன்னி முதலான தானங்கள், ஐம்புலன் அடக்குதல் எனும் இவற்றைவிட 'நாராயணா' எனும் நாமத்தைக்கணப் பொழுது நவின்று பெறும் புண்ணியம் பெரிது என்பதும் (வடவேங் : 9) உணர்த்தப்படுகிறது.

உலகோர் போற்றும் இறைவியானவள் ஆறு சமயங்களை யும் கடந்து நிற்கும் அருள் நிதியாவாள்; உலகயின்பங்களை ஒழித்தவர் பால் ஒளிர்கின்ற அருந்ததியாவாள்; பதினெண் புராணங்களாயும் அவற்றைவிளக்கித் தெளிவிப்பவளுமாய் நிற்பவள்; திசைக்கு ஓர் வடிவமாய் நிற்பவள்; இப்பூமியாயும் நிற்கின்றாள்; ஐம்பத்தொருகோடியும் அதற்கும் மேற்பட்ட மந்திரங்களால் குறிக்கப்படுபவளாகவும், வேதங்களாகவும்

நிற்கும் உலகத் தாயாவாள் (96). தில்லையுள் நடனமிடுந் திருவாகவும், தெளிந்த சிவபரமாகவும், உயிர்களின் இன்னல் களையும் அருமருந்தாகவும், ஆனந்தக் கடற்பெருக்காகவும், அறிவுக்கு அறிவாகவும், அனைத்து உயிர்களின் வழிபடு பொருளாகவும், எல்லை கடந்த பரவெளியாகவும், முழுமை யாகவும், இரவுபகலாக ஒளிதருபவளாகவும் அம்பிகை அமை கின்றாள் (98) என்பர்.

இறைவனின் திருவடிகள் யாராலும் காண்பதற்கு எட்டாதன (17); இறைவன் எத்தகைய எளியோரையும் தம் பால் அண்டினாரென்றால் ஆட்கொண்டுவிடுவான் (23), ஐந்தெழுத்தாகிய புணை பிடித்தோரைப் பிறவிக்கடலினின்றும் கரையேற்றுபவன் (27); பரம்பொருள் உண்டு என்று உணர் பவரால்கூட இறைவன் ஆணா, பெண்ணா, அலியா என்றறிதற் கியலாது, ஆயின் அவன் தொண்டரால் உள்ளபடி அவனை உணரவியலும் (42) என்று சைவ சித்தாந்தம் தன்னடியாருக்கு இறைவன் மிகவிரைந்தருளுவான் என்றுரைக்கும். மணிவாசகர்

எந்தை யாயெம்பி ரான்மற்று மியாவர்க்கும்
தந்தை தாய்தம்பி ரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தையாலும் மறிவருஞ் செல்வனே [47]

என அவனது அனாதிப் பழமையையும் காட்டுவார்.

ஒளியாய், இருசுடராய், உடல் உயிராய், அளியாய், மலை கடல் ஆறுகாடு அகமாய், அணுவாய், மகமேடுவாய், வளியாய், அனல் புனல் எண்திசை வடிவாய், மறைமுடியாய், பரவெளி யாய், எலாப் பொருளுமாய் [வேலா : 18] இறைவன் அமை கிறான் என்பது பொதுவாக எல்லாச் சமயங்களின் கருத்து மாகும்.

இறைவனிடம் பற்றுக் கொண்டு நீங்காத நம்பிக்கை கொள் வதைக் கிறித்தவசமயம் 'விசுவாசம்' என மொழியும். அவ்விசு வாசம் யாது என்பதற்கு அமலகுரு சதகம், இயேசுபிரானைக் கடவுள் என்று ஏற்றுக் கொள்வது உறுதிப்பாடு, என்னை அவர்க் கடிமை யாக்கினார் என்று எண்ணுவதும் அவர் திருக்குருதியால் என் பாவங்கள் நீங்கின என்று எண்ணுவதும் உறுதிப்பாடாம். மேலும் குற்றமுள்ள உள்ளம் நல்வழிக்குத் திரும்புவதும், ஆத்துமா மாறிப் பிறப்பதும், புதிய பிறப்பின் உயிரில் வளரு வதும், கிறிஸ்து பெருமானது தெய்வீகச்சாயலை அடைதலும் சோதனைகளை வெல்வதும், தீய சிந்தனைகளை விரட்டுவதும்

தூய்மையில் தவறிவிழாமல் எல்லாம் வல்ல எம்பெருமான் என்னைச் சுற்றி நின்று காப்பார் என்று அஞ்சாமல் அறிக்கை செய்த அனுபவங் கண்டறிவதும், உலகின் ஒளியாக, குருடருக்கு வழிகாட்டுவது ஆகிய திருப்பணிகளும் உறிதிப்பாடாம்', என்று சிறப்பித்துரைக்கிறது. இவ்வாறு செயல்கள் அனைத்தும் இறைவனின் செயல்களே என்று அவனில் ஆழ்ந்த, அழியாத நம்பிக்கை கொள்வதை எல்லாச் சமயங்களின் பொதுக்கொள்கை யாகக் காணலாம்.

எங்கும் அருள் வடிவாகி யங்கிங் கெனாதாகி
என்றன்பி ரானு மாகி
எண்ணரிய அண்டபகி ரண்டங்க ளாகிநின்று
இகபர மிரண்டு மாகிப்
பொங்கிவழி கொண்டுபல் கடமெலாம் பெருகுபரி
பூரணா னந்தமாகிப்
புனிதமெய்ஞ் ஞானவா னந்தமழை மாரியைப்
பொழிகருணை முகிலு மாகிக்
கங்குல்பக லில்லிரவி மதியாகி யெங்குமெழ
கங்கற்ற கங்கையாகி

(முகியித்தீன் : 21)

கவியும் ஒளியாக இறைவனைக் காண்பது இஸ்லாமிய சமயக் கோட்பாடாக அறிய முடிகிறது.

போற்றல் : இறைவனைப்பற்றிய புகழ் மொழிகள் போற்றுதலா கின்றன. இறை மீது புலவருக்குள்ள ஆழமான அன்பினைப் புலப்படுத்துவதாக இது அமைகிறது. பக்திப் பொருண்மையுள் இது, பொதுவாக எல்லாப் புலவராலும் போற்றப்படும் பொருட் கூறாகும்.

ஒருவனே போற்றி ஒப்பில்
அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருக நின்பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே (72)

என்று மாணிக்கவாசகர் தமக்கருள் வேண்டிடுதலை முன்வைத்து இறைவனைப் போற்றியிருக்கக் காணலாம். இதுபோன்று இறைவனின் பெருமையைச் சுட்டி (மெய்கண்ட : 5); பண்பு

நலன் காட்டி (வட்வேங்கட : 24); இறையருளின் திறம்வியந்து (அவையாம்பிகை ; 5); புராணக் கதைகளின் வழி (மூத்த : 58) இறைவனின் திருநாமங்களை அடுக்கி (எம்: 9) எனப் பலவாறாக இப்போற்றுதல் அமைதலைக் காண்கிறோம்.

தலம் : இறைவன் வீற்றிருக்கும் புண்ணியப் பதிகளைத் 'தலம்' எனும் சிறப்புப் பெயரால் குறிப்பிட்டு அவற்றைப் புகழ்ந்துரைத்தல் இங்குக் காணப்படுகிறது. தமிழில் பன்னூறாக எழுந்துள்ள தலபுராணங்களை இங்கு நினைவு கூரலாம். அந்தந்த தலங்களில் இறைவன் நடத்திய திருவிளையாடல்கள் இதில்சிறப்பிக்கப்படுகின்றன. இறை உறை தலங்களை ஒருங்கே போற்றும் நோக்கோடு தலச்சிறப்பிற்கு முதன்மையளித்துத் தோன்றிய காசிவிசுவேச சதகம் இங்குச் சுட்டற்பாலது. இந்நூல் திருவாரூரைச் சிறப்பித்து,

அமலால யங்களிடை ஆரூர்பெ றும்பெருமை
அளவற்ற தாகுமெனலாம்
ஆரூரின் வீதிகள் அரன்பெருமை நன்கறிய
ஆங்குதிகழ் சாறு கூறும்
விமலால யத்தையன் வன்மீக நாதனும்
வெற்றியருள் கமலைத்தானும்
வீதியிலு லாவரும் விடங்கத் தியாகேச
வேடமும்வி ளங்கு தலமே
கமலால யத்தீர்த்த மகிமையொடு தலமகிமை
காதலாற் கேட்கவுரிய
கமலைத் தியாகப்பி ரான்லீலை வகைகளோ
கணித்தமுந் நூற்றறுபதாம்
கமலால யத்தினது மகிமைசுந் தரமூர்த்தி
கண்டுபா டியதுண்டுகாண்
காசினியை வாழ்விக்க வரநதி பெருக்கியருள்
காசிவிசு வேசசிவமே (36)

என்று பாடியிருப்பதைச் சான்றாக்கலாம். புலவர் ஊரின் புராணச் சிறப்புடன் அவ்வூரைச் சிறப்பித்துப் பாடியுள்ள பிற பக்திப்புலவரையும் இணைத்துக் காட்டியிருப்பது நோக்கத் தக்கது. இதனால் பாடல்பெற்ற தலங்கள், அவற்றைப் பாடிய புலவோர் முதலானவற்றையும் இந்நூல் கொண்டுணரமுடிகிறது. எம்பிரான் சதகம் அத்திகிரியையும் (3), வேலாயுத சதகம் திருத்தணிகையையும் (30) போற்றியுரைத்திருக்கக் காணலாம். வளர் கார்த்திகை மாதந்தோறும் வரும் கார்த்திகை நாளில் அன்பர்கள் விருப்புடன் ஏத்தித் தொழுமாறு கிளர் மாமலைதனில் ஒளி கெழு

சோதியாய் இறைவன் காட்சி தருதலை அருணாசல சதகம் (26) போற்றும். முருகன் உறைவிடங்களைச் சிவகிரி குமரேச சதகம் (18) சிறப்பித்திருப்பதும் சுட்டற்பாலது. இறையருள் சிறக்கும் தலம் தோறும் சென்று இறைவனைப் போற்றும் வைதிக சமய உணர்வு பிற சமயத்தாரிடையே மிகக் குறைவாதலின் இப் பொருட்கூறினை அவற்றுள் காணலரிது.

புராணம் : இறை நம்பிக்கைகளுடன் கூடிய பழங்கதைகளைப் புராணம் என்கிறோம். இறைவனை, இறை தத்துவத்தைச் சிறப்பிப்பதற்குப் புலவருக்கு இப்புராணங்கள் பெரிதும் உதவியாய் அமைகின்றன. செயங்கொண்டார் சதகம் பழமொழிகளின் விளக்கத்திற்கு முழுமையும் புராணக்கதைகளையே கொண்டுள்ளமை முன் சுட்டப்பட்டுள்ளது. திருமாலின் திருவவதாரச் சிறப்புகளையும், அடியாருக்கருளிய பழங்கதைகளையும் போற்றியுரைப்பதையே வைகுந்த சதகம் எம்பிரான் சதகம் என்பன தம் சிறப்பு நோக்காகக் கொண்டுள்ளமையும் அறிதற்பாலது. இராமாயண, மகாபாரத, கந்தபுராண கதைச் சதகங்களையும் இணைத்து எண்ணலாம். புராணங்களை எடுத்துரைக்காத, எவ்வகையிலேனும் பயன்கொள்ளாத பக்திப் பனுவலே இல்லையென்று துணியுமளவிற்கு இதன் ஆளுமை அமைகிறது. விநாயகரைச் சிறப்பித்து எழுந்துள்ள 'மூத்த பிள்ளையார் திருச்சதகமும்' விநாயகர் பற்றிய புராணக்கதைகள் அனைத்தையும் தர முனைந்துள்ளது எனலாம். விநாயகர் பிறப்பும் அசுரனை வதைத்தமையும் (20—40) விரிவாக மொழிந்துள்ளமையும் இவண் குறிப்பிடற்பாலது.

காரானமே னியன்வாசவன் கஞ்சாசன னஞ்சானன்
னாராலுமே முடியாவணம் யாவுமே முடிந்தருள்வோமெனச்
சூராதிசூரனை வென்றுவிண் டொடுகுக்கிடத் துவசம்பெறு
வீராதி வீரனும் நீயலவோ வேலாயுதா வேலாயுதா

(மெய்கண்ட : 45)

என்று முருகப்பெருமானின் சூரபத்மன் வதையைச் சிறப்பிப்பது போன்று இவை நூலுள் இடம் பெறுகின்றன.

அடியார்

இறைப்பற்றாளரை இறையின்பமே வாழ்வின் பேரின்பமாகக் கொண்டாரை, இறைமீது அசையாத நம்பிக்கை கொண்டாரை அடியார் எனச் சமயங்கள் சிறப்பிக்கின்றன. இவ்வடியாரைப் போற்றுமுகமாகவும், இவர் வழிப் பிறருக்கும் இறை நம்பிக்கையை வளர்க்குமுகமாகவும் புலவர் பல நிலைகளில் இப்பொருட்கூறினை மேற்கொண்டுள்ளனர்.

இயல்பு : இறைவனையே எந்நேரமும் குறையாத அன்போடு எண்ணிக்கொண்டிருப்பதையும், சமயச்சின்னங்களை அணிவதை யும் அடியார் தம் இயல்பாக மணிவாசகர் (24) சுட்டுவர். தொழுகை உறுதிப்பாட்டுடையோராய், தீய இச்சைகள், சாத்தானின் செயல்கள், உலகின் தீவினைகள், மயக்கம், பொறாமை, பெருமை, உலகின் மேன்மை, சூது, வாது, வன்மம், சினம், வசைகள், சுடுசொற்கள், தன்னயத்தல் எனுமிவற்றை யெல்லாம் கடந்தவர்கள் இறையருள் பெற்றவராகிய தூய ஆவி நிரம்பப் பெற்றவர்கள் என்று அமலகுகு சதகம் (55) காட்டும். இறைவனில் மட்டுமே நம்பிக்கை வைத்து அதில் அசைவு பெறாதவர்களைச் சிறந்த அடியார்களாக எல்லா சமயத்தவரும் கொள்வது பொதுநிலையாம்.

பெருமை : இவ்வடியார்களின் பெருமைகளை அவர்தம் செயல் வழியும் இறையருள் பெற்ற சிறப்பு வழியும் சமயப்புலவர் எடுத்துக்காட்டுகின்றனர். இவர்களைப் பெருமைப்படுத்துதலின் ஒரு நிலையாகப் பாட்டுடைத் தலைவராக்கிச் சிறப்பித்தலையும் கொள்ளலாம். தண்டபாணி சுவாமிகளின் சடகோபர் சதகத்தந்தாதி, அப்துல்காதிர் மரைக்காயரின் முனாஜாத்து சதகம், போன்றவற்றை இவண் எண்ணலாம். பிற சதகங்களும் இவற்றிற்கு முக்கியத்துவமளித்துள்ளன. இவர் பெற்ற பெருமை கண்டு ஏனையோரும் இறைவழிநாட வேண்டுமென்பதும் இப் பொருட் கூறின் நோக்கமாகிறது. இவ்வடியார் பெற்ற சிறப்பைத் தாம் பெறவில்லையே என்று மயங்கும் புலவரும் உண்டு.

இவ்வுலகம் யாவையும் தம் குடையின் கீழ்க்கொணர்ந்து நல்லாட்சி தருமவர் மகிழ்கின்ற செல்வம், தேவர் தலைவனான இந்திரனின் பெருமைதரும் பொருள், செல்வத்திற்கு அதிபதியான திருமகளையே தன்னிடம் கொண்டிருக்கும் திருமாலின் செல்வம் எனும் இவை எல்லாம் உள்ளன்போடு இறைவனைத் தொழுதிடும் அடியாரின் அடிப்பொடிக்கு இணையாகாது என்று இவர் தம் பெருமையைப் பறைசாற்றுகிறது அருணாசல சதகம் [31] மற்றும்,

வாசிப்பதுன் னடியார்புகழ் வந்திப்பதுன் னடியார்பதம்
நேசிப்பதுன் னடியார்பதம் நினைகிற்பதுன் னடியார்பதம்
பூசிப்பதுன் னடியார்பதம் புனைகிற்பதுன் னடியார்பதம்
ஆசிப்பதுன் னடியார்பதம் அருணாசலா! அருணாசலா! [87]

என்று இறையடியாரை இறைவனாகவே கொள்ளும் இயல்பை யும் சுட்டுகிறார். இந்நிலையைச் சடகோபர் சதகத்தந்தாதி யிலும் காணலாம். திருமாலை இகழுவோர் கூடச் சடகோபரைப்

பழித்திடார் என்றுரைப்பது [89] சுட்டத்தக்கது. ஆனந்தமாய் அழுவார் முன், அலர் சூடியே தொழுவார் முன், மோனத்தில் கரைவார் முன், முகிலென்னவே புகழ்வார் முன், தானந்தவம் புரிவார் முன், தருகல்வியால் மிகுவோர் முன் நானென் செய்கேன் இவை யொன்றிலேன்' என்று நாராயணனின் திருவடியாரைச் சிறப்பிக்கு முகமாகத் தம்மை இகழ்ந்து நிற்றலும் ஒரு உத்தியாக [வடவேங்கட : 42] இங்குப் பயன் கொள்ளப் பட்டுள்ளது. அடியாரின் படைப்புகளும் பெருமையுறலை, 'திருவாசக மொன்றுண்டு நற்றேவாரமு முண்டாங்கவை கருவாய் வழி வாரா நெறி காட்டும் மெனச் சான்றோர் சொல்' என்பதன் வழி [அருணாசல : 56] அறியலாம்.

இறையருள் : இவ்வடியார்களுக்கு இறைவன் அருளிய பெருமைகளையும் இங்குப் பேசக் காண்கிறோம். கந்தப்பையர்,

'கண்பாவு கானகவேடன் ஆய், கை அம்புவில்லொடு மேவியே
பண்பாவும் என்பெயர் முட்டை, நீபாடாய் ஒருகவி'
என்னலும்
புண்பாவு வெஞ்சுர வண்மையால் பொய்யாமொழிப்
புலவோன் சொலும்
வெண்பா உகந்து அணிமார்பனே! வேலாயுதா! வேலாயுதா!
[89]

என்று பொய்யாமொழிப் புலவருக்குத் திருமுருகன் காட்சி கொடுத்தருளியதை, பாடவைத்துப் பெருமைப்படுத்தியதைக் காட்டுவார். ஆமையாய்ப் பெருமகரமாய்ப் பன்றியும் ஆய திருமால், குருகூர்ப்புளியின் நிழலின் கீழ் வீற்றிருக்கும் சடகோபனிடம் உள்ளான் [சடகோபர் :92] என்று இறைவன் தன்னை முழுமையாக அவருக்கு அளித்துவிட்டதைக் காட்டுவர்.

வரலாறு: இறைவனுக்கு அளிக்கும் சிறப்பினை முழுநிலையில் அவனடியவருக்கும் அளித்தலைத் திருவாதவூரடிகள் புராணம், அருணகிரிநாதர் புராணம், சீறாப்புராணம், தேம்பாவணி போன்ற இலக்கியங்கள் உணர்த்துகின்றன. முழுநிலையில் அடியவரின் வரலாற்றைத் தருவனவாக இந்நூல்கள் அமை கின்றன. இறைவனை வழுத்தும் நூல்களும் அவனருள் பெற்ற அடியாரின் வரலாற்றைச் சுட்டிச் செல்வதை ஆங்காங்கே காண் கிறோம். தம்மைக் கவர்ந்த அடியாருக்குப் புலவர் இச்சிறப்பளிக் கின்றனர்.

கரகத்தில் உற்பவம்ஆகி, ஏழ்கடல் உண்டு, காவிரிதந்துபைந்
துரகத்தை முட்டிய விந்தையைத் துகள் செய்து, வில்வலன்
ஆவி உண்டு

உரகத்தின் ஆபரணத்தினான் உதவும் தமிழ்க்கு இறை ஆயினோன்
விரகத்தை நீக்கிய தேசிகா! வேலாயுதா! வேலாயுதா! (80)

என்று கந்தப்பையர், அகத்தியரின் வரலாற்றினைப் பாடியுள்ளமையை இதற்குச் சான்றாக்கலாம். எம்பிரான் சதகம், பெரியாழ்வார், அண்டாள் என வைணவப் புலவர் பலரின் வரலாறு சுட்டுகிறது.

திருநாவுக்கரசைப் போற்றிப் பெருவாழ்வடைந்த அப்பூதியடிகள், நம்மாழ்வாரைப் புகழ்ந்தோதியே முக்தி பெற்ற மதுரகவியாழ்வார் எனும் இவர்களின் வழி, சமுதாயத்தில் அடியவர் பெற்றிருந்த பெருமையை நன்குணரலாம். தம் சமய வாழ்விற்கு வழிகாட்டிகளாக இறையடியார்கள் நிற்றலின் இச்சிறப்பினைப் பெற்றுள்ளனர். இறைவனைப் போற்றுதலும் இறையடியாரைப் போற்றலும் ஒன்றே வேறுவேறல்ல; இறைவனுள் அடியாரும், அடியாருள் இறைவனும் உள்ளனர் எனும் உணர்வின் வடிகாலே பக்திப்பனுவல்களின் அடியவரின் இப்பெருமைக்குக் காரணமாம்.

புலவர்

தனிப்பாடல்கள் பல தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைகின்றன; காப்பியங்களிலும் புலவர் இடைப்புகுதல் உண்டு. தம்மைக் கவர்ந்த ஒன்றினையே இலக்கியமாகப் படைக்கின்றனர். அவ்வகையில் பிற பொருண்மைகளை விட பக்திப் பொருண்மையுள் புலவர் தம்மைப் புகுத்திப் பாடியுள்ளமை அதிகமாகத் தெரிகிறது. இறைவனின் அருளைப் பெற வேண்டும்; அவன் புகழினை ஓத வேண்டும்; உலகினை அவன்பால் திருப்பவேண்டும் என்ற மூன்று நோக்கங்களுள் முதலாவது மற்றிரண்டினைவிட மேலோங்கி நிற்பது, தன்னுணர்வுப் பாடல்களின் மிகுதிக்குக் காரணமாகும். பக்திச் சதகங்களிலும் இந்நிலை சிறப்பிடம் கொண்டுள்ளது. பலவாறாகத் தாம் இறைவனிடம் கொண்டுள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்தியுள்ளனர்.

இறைப்பற்று : தாம் இறைவனிடம் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பினை, நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக அமையும் கூற்றுகள் இதன் பாற்படுகின்றன. 'மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து, கைதான் தலை வைத்து, கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம் பொய் தான் தவிர்ந்து, சய சய போற்றி என்னும் கை தான் நெகிழ விடேன்' என்று மாணிக்கவாசகர் (1) தம் இறைப் பற்றை உணர்த்துகின்றார். அழுது அடியடைந்த அன்பரான இம் மாணிக்கவாசகர் போன்று, வேத நாயகர் இயேசு கிறிஸ்து

வின் பால் மனம் ஒன்றி நிற்பதைக் காணமுடிகிறது. 'என்ன விலையில் என்ன நிறத்தில் எவ்வடிவில் எனக்கு உடுப்பது என்பதைக்கூட ஆண்டவராகிய உமையே கேட்டு நீர் சொல்லுகிற உடுப்பை எடுப்பேன். அம்முயற்சி உமக்கு ஒவ்வாததாயிருந்தால் அதனை இம்மியும் நாடேன்; என்ன உண்பது, என்ன பருகுவது என்பதையும் இயேசு மருத்துவரிடமே கேட்பேன்; என் ஆன்ம நலத்தைக் கெடுக்கும் பத்திய முறிவான பாவங்களை மறந்தும் உண்ணேன்; வீடு அதன் பணி முட்டுகளும், வேறு எவ்விதப் பொருள்களும், கடவுள் சித்தத்திற்கு எதிரானவைகளாயிருந்தாலும், மேலும் எனக்குப் பயன்படாதனவற்றையும், வேறு ஒருவருக்குத் தேவை; அவருக்குப் பெரிய நன்மை பயக்கக் கூடியன என்று இயேசுபிரான் தெரிவித்தால், அவற்றை நான் எனக்காக வைத்திரேன்; இவ்வுறுதியை நிறைவேற்றப் பலம் தாரும்' என்று தமக்கு உடற் பொருள் ஆவி என மூன்றுமாக இறைவனே அமைவதை வெளிப்படுத்துகிறார்.

எனைக் கொண்டு நீர்செய்யும் நன்மைகள் யாவிலும்
ஏழைபேர் மறைந்து விடவும்
இயேசுவை உயர்த்தி என் தலைசற்றும் நீட்டாமல்
எளிதாய் ஒளிந்து விடவும்
கனல்மூண்ட இரும்புபோல் உன்சாயல் இலங்கஇக்
கசடன் காணாது ஒழியவும்
காலாணி என்சிரசில் ஊடுருவிக் குருசில் உன்
காலடியில் நான் பதியவும்
தினம்உமைச் சுமந்திடும் கத்தைநான் என்றுணரும்
சீரிலே நின்றுவிடவும்
செய்கையும் சொற்களும் கனவுநினைவு எல்லாம்உன்
திருஉளத்து இருந்துவரவும்
உனில்உறும் கொடியாக உன்சாரம் பெற்று என்றும்
உன்னதக் கனிபெருகவும்
உடைத்து என்தன் இதயத்தை உன்சித்தப் படிவனைந்து
உருவாக்கும் அமலகுருவே (81)

என்று அவர் பாடியிருப்பது உன்னுந்தொறும் வியப்பைத் தருகிறது. இறைவன் மீது கொண்டுள்ள மாற்றவியலாப் பற்றின் எதிரொலியே இது என்பதில் ஐயமில்லை. இப்பற்றே பக்தியிலக்கியங்களின் எழுச்சிக்கு முதன்மைக் காரணமெனலாம்.

இரங்கல் : இறைவன் மீது கொண்ட பற்றின் காரணமாக அவனை அடைதற்குத் துடிக்கின்ற நிலையை இதில் காண்கிறோம். தம்முடைய இயல்பும், செயலும் அதற்குத் தடை

யாய் நிற்றல் குறித்து இரங்குதலாக இப்பொருட்கூறு அமை-கிறது. பரவலாகக் காணப்படும் பொருட்கூறுகளுள் இதுவும் ஒன்றாகும்.

செய்வ தறியாச் சிறு நாயேன்
 செம்பொற் பாத மலர்க்காணாப்
பொய்யர் பெறும் பேறத்தனையும்
 பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
 மேவக் கண்டும் கேட்டிருந்தும்
பொய்ய னேனான் உண்டுடுத்திங்
 கிருப்ப தானேன் போரேறே (52)

என்று திருச்சதகம் பிறவற்றிற்கு வழிகாட்டி நிற்கின்றது. 'பெரியோரெவரைப் பழித்தேனோ, பிரம தவத்தை யழித்-தேனோ, பெற்ற தாயார் பசித்திருக்கப் பேணி வயிற்றை வளர்த்தேனோ அரிய தவத்தோர்க் கிடைஞ்சல் செய்தே அற்பரிடத்தில் சேர்ந்தேனோ, அறியாமையினால் என்ன குற்றம் ஆர்க்குச் செய்தேனோ அறியேன் வாலாம்பிகையே' என்று இன்னும் தமக்கு அம்மையின் அருள் கிடைக்காமை குறித்து ஏங்குகிறார் கிருஷ்ணையர். தம்மீது அவளின் அருட் பார்வை காட்டி தம் கரியவினைகளனைத்தையும் ஒழிக்குமாறு இரங்கி நிற்கின்றார்(31).

பிறரைப் புறங் கூறுவேன், வசைமொழிவேன், குறை சொல்லுவேன், முறை சொல்லுவேன், மிகை சொல்லுவேன், ஆயின் உன் நாமத்தை ஓர் நாள் கூடச் சொல்வதில்லையே நாராயணா (35) என வருந்துகிறார் நாராயணதாசர். தவம் புரிதற்குப் பிறவியெடுத்தேனில்லை, தரித்திரத் தோற்றத்துடன் துன்பப்படுதற்கும் ஆசையாகிய நோய்க்கும், குற்றம் புரிதற்கும், பிறர் பழிப்புக்கும் பிறவியெடுத்துள்ளேன்; என்றைக்கு உய்வு பெறுவேன் வேலாயுதா (30) என்று அழகுமுத்துப் புலவர் ஏங்கு-கிறார். 'துதியாமலும் பணியாமலும் துகள்தீரும் நின்பத பங்கயம் மதியாமலும் திரிகின்ற என்மனம் என்று நின்வசம் ஆகுமோ?' என்று மயங்குகிறார் (7) கந்தப்பையர். தம்மிடம் இல்லாக் குற்றங்களையும் தம்பாலதாகக் காட்டி வருந்துகின்ற நிலையைக் காண்கிறோம். இம்மரபினைப் பக்திக்கவிஞர் பெரும்பாலானரிடம் பார்க்கவியலும். உலகத்தவர் குற்றங்-களையெல்லாம் தம்மீது ஏற்றிக் குறையிரப்பதன் வழி இறைவ-னிடம் அவர்களுக்காக வருந்திநிற்பதாகக் கொள்ளலாம்; அன்றி-யும் அக்குறைபாடுடையோரைத் தம் குறையை உணர்ந்து இறை-

நெறி பின்பற்ற அழைப்பதாகவும் எண்ணலாம். இறையருள் வேண்டி அது கிடைக்காத நிலையில் அதற்குரிய காரணத்தை உன்னும் பொழுது இவ்வாறு கற்பித்திருக்கலாம்.

வேண்டல் : இறைவனிடம் நேரிடைத் தொடர்பு கொள்ளுதற்குரிய வாயிலாகப் பக்திப் புலவர் தம் படைப்புகளைப் பயன் கொள்கின்றனர். இதனால் தம் உளத்தை முழுநிலையில் இறைவனுக்கும் பிறருக்கும் உணர்த்துகின்றனர். இவ்வாறு அவர் தம் உள்ளத்தைப் புரிந்து கொள்வதற்கு, இறைவன்பால் அவர் விடுக்கும் வேண்டல்கள் காரணியாகின்றன. தாம் விழைந்த ஒன்றை உரியவரிடம் கேட்டு நிற்றல் வேண்டலாகும். இதனை விண்ணப்பம் என்றும் நவிலலாம். மானிடரது எண்ணங்களை நிறைவேற்றுபவர் இறைவனாக அடியார்களால் கருதப்படுதலின் பக்திப் பாடல்களில் வேண்டல் இடம் பெறுகிறது. தமக்காக வேண்டல், பிறருக்காக வேண்டல் என இஃது இருவகைப் படுகிறது. தமக்காக வேண்டல் இவ்வுலக வாழ்விற்குத் தேவையானவையாகவும், இறையுடன் கலத்தற்கு வேண்டப்படுவனவாகவும் அமைகின்றது. உன்னதமான வாழ்வு வேண்டுவோர் தமக்கு மட்டுமின்றிப் பிறரும் அதனைப் பெறுதலை விரும்புவர். ஆன்றோர் உலகின் மேனிலைக்கு விரும்பி நிற்றல் இயல்பு. இவ்வாறு உயிர்களுக்காக இறைவனிடம் வேண்டி நிற்றல், பிறருக்காக வேண்டுதலின் கண் அடங்கும்.

> சூழாமலே கலிதீவினை தொடராமலே படர்நல்வினை
> பாழாமலே யயனாருருப் பண்ணாமலே பெண்ணாசையா
> லாழாமலே யமதூதர்வந் தணுகாமலே நரகத்தின்வாய்
> வீழாமலே யெனையாளுவாய் வேலாயுதா வேலாயுதா
>
> (மெய்கண்ட : 25)

என்ற அழகுமுத்துப்புலவரின் வேண்டலே பொதுவாக அனைவரின் விண்ணப்பமாகவும் அமைகிறது எனலாம். 'கனிந்து கனிந்துன்றனைப்பாடிக் கசிந்தேயிருகண் புனல் பெருக்க, காதுன்னுபயத் திருவருளாங் கதையைக் கேட்க வகை புரிவாய்; இரவும் பகலும் நினதருளை நினைந்தபடியே சிந்தை செய்ய நெறியை யுதவி யெனைக் காப்பாய் நித்யானந்தப் பழம் பொருளே' (48) என்று தம் பிறவி பெருமையுறக் கிருஷ்ணையர் அவையாம்பிகையை வேண்டுகிறார். படியாளு மன்னவர், கவிவாணர், அடியார் என யாவரும் வாழ்வதற்கு அருள்புரிய இறையை இறைஞ்சுகிறார் (101) காஞ்சிபுரம் சபாபதிமுதலியார்.

'மாசம் தொறும் வரும் கார்த்திகை வரம் வேண்டியே உனை நம்பி இத்
தேசங்கள் எங்கணும் உற்றபேர் சிந்தாகுலம் தனை நீக்கி, நல்
வாசம் கமழ் குழலாரொடு மிகவும் பெருமையும் ஈகுவாய்
வீசும் கலா மயில் ஏறிடும் வேலாயுதா! வேலாயுதா! (29)

என்று இம்மையுலக யின்பங்களை இறையைப் போற்றிடும் அடியாருக்கு வழங்கும்படி வேலாயுதனிடம் விண்ணப்பிக்கிறார் கந்தப்பையர். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்ற தாயுமானவ ரின் கூற்று இவண் ஒப்பு நோக்கத்தக்கது. தம் பிறவிப்பிணி தீர்த் தல், இறைவனை என்றும் எப்பொழுதும் மாறாதிருந்து நேர்வழி நடந்து விரைவில் அவனருள் பெறல், உலகம் இம்மாய வாழ்வினின்று உய்திபெறல் வேண்டும் எனும் இவையே இவர் தம் பொதுவான வேண்டுதலாகின்றன. 'போகம் வேண்டி வேண்டிலேன்' (திருச் : 72); 'வேண்டும் நின்கழற்கணன்பு' (திருச் : 74) என்றவர் தம் வேண்டல்களினின்றும் இறைவன் மீது கொண்டுள்ள அவர்தம் அன்பின் ஆழத்தை அளவிட முடிகிறது.

இறையருள் : தம் வேண்டுதலுக்கு இரங்கி, இறைவன் தன் தண்ணருளைத் தமக்குக் காட்டியதையும் தம் பாடல்களில் சிறப்பிக்கின்றனர். இறைவன் தமக்கருளியது சுட்டிக் கற்பாரை யும் தம்வழி நடக்கத் தூண்டுதற்குரிய உத்தியாகவும் இதனைப் பயன் கொண்டனர். தம்முடைய ஆன்மா இறையை அடைய விடாது தடுத்திருந்ததளைகளை யெல்லாம் அறுத்தெறிந்துவிட்டு அடியார் யாவருங்காணவே ஏதுமறியாத் தம்மைப் பட்டி மண்டபம் ஏற்றிப்போற்றியதாக (49) மணிவாசகர் மகிழ்கிறார்.

'கோதுஇல்லாத்தாதையே நன்மையை அன்றி ஒரு குறை, எனக்கு அளித்தது உண்டோ? குன்றாத சுகவாழ்வு உடை. உணவுதந்து எனக்கு உற்ற துயரங்கள் மாற்றி ஆதரித்தாய். உன்றன் அன்புக்கு மாறாய அநேக பாவங்கள் செய்தேன். அசடன் என் துரோகத்தைப்பொறுத்த உன் வல்லமை ஆச்சரியம் அமலகுருவே (45) என்று வேதநாயகர் தமக்கு இறைமகன் அருளியமை குறித்து வியந்து நிற்கின்றார்.

தம்மை மிகவும் தாழ்த்திக்கொண்டு, அவ்வாறு மிகத் தாழ்ந்த நிலையில்கூட இறைநம்பிக்கை என்ற ஒன்றினால் இறையருள் தமக்குக் கிட்டியதை இவ்விருவரும் சிறப்பித் திருக்கக்காணலாம். இதன்வழி இறையருள் தமக்குக் கிட்டுமோ என்ற ஐயத்தை யாவரும் கொளத்தேவையில்லை. உண்மையான

அன்பின் வழி அனைவரும் பெறலாம் என்பதனையும் உள்ளுறுத்து கின்றனர். மற்றும் இறையைப் போற்றுதற்கும் இதனைப் பயன் கொள்கின்றனர்.

அகத்துறை: இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவி யாகவும் கொண்டு, தலைவனை அடையத்துடிக்கும் தலைவி யின் நிலையாகப் பக்திப்புலவர் தம்மைக் காண்பதுண்டு. இம்மர பினை அமலகுரு சதகத்துள் வேதநாயகர் கையாண்டுள்ளார். அறிந்தவரையில் பிறசதகப்புலவரிடம் இதனைக் காணவில்லை. நூறுபாடல்கள் எனும் வரையறையில் பக்தியின் பல்வேறு பொருட்கூறுகளுக்கும் இடமளிக்க வேண்டிய சூழலில் ஒதுக்கி யிருக்கலாம் அல்லது அகத்துறை இணைவை விரும்பாது இருந்திருக்கலாம். ஆயின் வைதிக சமயப்புலவரால் சிறப்பிக்கப் பட்டகூறுகளுள் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இறைவனைத் தலைவனாகவும் அவனுள் அடங்க வேண்டிய ஆன்மாவைத் தலைவியாகவும் காணல் பொதுவியல்பு.

'உன் முகத்தை நானும் என் முகத்தை நீயும் ஓயாமல் நோக்கி மகிழ உன்னியோர் கன்னிபோல் என்னை உன் அடி யாக்கி உடன்படிக்கை பண்ணினை' (49) என்று இறைவன் தம்மைத் தன் மணப்பெண்ணாகக் கொண்டமையைச்சுட்டி, மணப்பரிசமாகத் 'தீது இலா உதிரமே' (58) ஈந்தமையை இயம்புகின்றார். இவ்வாறு தம்மை ஆட்கொண்ட தலைவனை நோக்கி,

மணவாளனே நீவிர் வரும் அளவும் என் கண்கள்
வானமே பார்த்து நிற்கும்
மண்மாமிசம் பசாசு என்மாயம் பண்ணினும்
மறுமுகம் பார்த்திடாது
க்ஷணமும் உனை மறந்திடேன்; கனவுநினைவதும் என்றன்
சந்ததத் தியானம் அதுவும்
சாமிஉனது உருவுஅன்றி, வேறுஉருத் தோன்றிடில்
சத்தம் இட்டு அலறி அழுவேன்;
மணமாலை நன்றியோ வாடாது; ஜெபகந்தம்
மயல்கீதம் ஓய்ந்திடாது;
வரஇட்ட கடிதமாம் வேதமே மடங்காது;
வாசித்து முந்தி வருவேன்;
துணைவந்த பரிசுதத ஆவியை என்நெஞ்சத்து
உட்கொண்டு அடங்கி அவரைத்
துக்கப்படுத்தாது எதிர்க்காது அவிக்காது
ஒழுகுவேன் அமலகுருவே [59]

என்று தம் இதய தாகத்தை மொழிகின்றார். வேதநாயகர் இவ்வாறு பாடியிருப்பது கிறித்தவ இலக்கியப் பாடல்களுள் புதுமையாகத் தோன்றுகிறது. தீவிர வைணவராக இருந்து பின் ஹென்றி ஆல்பர்ட்ஆன கிறித்தவக் கம்பன் கிருஷ்ணபிள்ளை போன்றுஇவரும் முதலில் சைவராக இருந்து பின் கிறித்தவரானவர்போலும். இறையடி நீழலில் உறைய விழைதல் சைவவடியார் பிறவாப்பேரின்பமாகிய முக்தியடைய விரும்பலை உணர்த்தும்; வேதநாயகரும் இயேசு பெருமானின் திருவடி தம் தலையை அலங்கரிக்க வேண்டுதலும் [81]; மற்றும் மாவேதம் இது என்ற பொய் வேதம் நம்பியே மாபாவியாய் வளர்ந்தேன்; மனரம்மியம் அற்று நான் மயல் விண்டுகிறிஸ்துவின் மார்க்கத்தில் சரணடைந்தேன்' எனும் அவர் வாய் மொழியும் [5] இவ்வெண்ண எழுச்சிக்குக் காரணமாகின்றன.

சமயப் பொறை: தமக்குக் குறிப்பிட்டதொரு சமயத்தின் மீது ஆழ்ந்த பற்றிருப்பினும் அதற்காகப் பிறசமயத்தாரைத் தாழ்வாகக் கருதி எதிர்க்காத நிலையைச் சமயப் பொறை எனலாம். சமயப்புலவர் அனைவரிடமும் இதனைக் காணமுடியாது. சிலரிடமே காணப்படுவதாம். திருவருள் சதகம், காசிவிசுவேச சதகம் என்பன இதற்குச் சிறந்த சான்றுகளாக அமைகின்றன. அணிகலன்கள் பலவாயினும் அது செய்வதற்குப் பயன்படும் பொன் ஒன்றேயாம்; பாண்டங்கள் பலவகையாகப் பல பெயர் பெறினும் அதனை ஆக்குவது மண் ஒன்றேயாம்; எழுபிறப்பாயினும் ஆன்மா ஒன்றே அது போன்று நண்ணுமறு சமயங்கள் பேர் வேறு அல்லால் நாதன் நீ யொருவனே. அவர்கள் தம்மை எண்ணியே செய்யும் தொண்டர் விருப்பத்திற் கெல்லாம் எம் பிரானே நீ இரங்கி வரந்தருகின்றாய்' [எம்: 6] என்று கோபால கிருஷ்ணதாசரும் இச்சமயப் பொறையை வலியுறுத்துகின்றார். சமயச்சச்சரவுகளும், வெறியும் ஒருவரை அழித்துவிடா திருப்பதற்கு இப்பொறை மிகவும் வேண்டற்பாற்று என்பதால் இவர் போல்வர் இதற்குச் சிறப்பளிக்கின்றனர். சிவனையும் பாடி [திருவாமாத்தூர் அழகியநாதர் பதிகச் சதகம்], திருமாலையும் போற்றி, [சீரங்க நாராயண சதகம்] அவனடியாரையும் ஏத்தும் [சடகோபர் சதகத்தந்தாதி] தண்டபாணி சுவாமிகள் இவற்றின் வழித்தம் சமயப் பொறையை உணர்த்துகிறார்.

சமயக் காழ்ப்பு: முன்னதற்கு எதிரான நிலையில் இஃதமைகிறது. தமது சமயந்தான் உயர்ந்தது, பிற பொருளற்றன எனும் நினைவால் இது தோன்றுகின்றது. சமயப் பிரச்சாரத்தை, சமயப் பரப்புதலை மட்டுமே நோக்கமாகக் கொண்டோரிடம் இது

அமைந்துள்ளது. இதற்குச் சமயப் பொறையின்மையே முதற் காரணமாகும். இது, எல்லாச் சமயத்தாரிடமும் பொதுவாகக் காணக்கூடியதொன்றாகவும் நிற்கிறது. உறித்தவ மதகண்டன சதகம் முழுநிலையில் இதனைப் பின்பற்றியுள்ளதை அதன் தலைப்பே உணர்த்தும்.பிற பக்திச் சதகங்களுள் அமல குரு சதகத்துள்இதனை மிகுதியாகக் காண்கிறோம்.'விபசாரம்அதில்மாண்ட தேவரை வணங்குவோர் விபசாரராய் வாழலாம்; வெளிகளவு பொய் கொலை செய்திட்ட தேவரை வேண்டுவோர்க்கு அது ஆகலாம்; அபசார தூஷணம் சண்டை செய்தவர்கள் அருச்சகருக்கு அதுவாகலாம்; அக்கிரம நூல்களை வேதமாய்க் கொள்ளுவோர் அவ்வாறு சீவிக்கலாம்' (3,4) என்று மிக வன்மையாகப் பிறசமயத்தவரை இவர் சாடியிருப்பது நோக்கற்பாலது. தம் வாழ்வில் சமயமாற்றம் மேற்கொண்டவராதலால் தாம் சேர்ந்த சமயத்திற்குப் பெருமை சேர்க்கும் பொருட்டும், தம் சமய மாற்றம் சரியே என்று உறுதிப்படுத்துதற் பொருட்டும் இவ்வாறு மொழிந்துள்ளார் எனக் கருதலாம்.

மாறாவரந் தருவோமென வைகுந்தனும் மலர்த்தேவனும்
நூறாயிர முறைவந்தெதிர் நுவல்கிற்கினும் நின்னன்பர்கள்
பேறாயதை நினைவார் கொலோ பிறவிக்கடலதுநீந்தவே
ஆறாறுநீத்தவர் வாழ்த்துறும் அருணாசலா! அருணாசலா!
(15)

என்று சபாபதி முதலியாரும் பக்தி இயக்கம் தொடங்கிய காலந் தொட்டே நிலவிவரும் சைவ, வைணவ சமயங்களுக்கிடையேயான காழ்ப்புணர்வைக் காட்டியுள்ளார். எச்சமயத்தவராயினும் சமயப் பொறையை மேற்கொள்ளாது காழ்ப்பினைப் பின்பற்றுதல் அவருக்கும் அவர் சார்ந்த சமயத்திற்கும் இகழேயன்றிப் புகழ் சிறிதும் இலவாம். பக்திப்பனுவல்களில் படிந்துள்ள மிகப் பெரியதொரு கறையாகவே இதனைக் கொள்ளலாம். நிலவின் முயற்கறையென நீங்காக் களங்கமாகவே இது அனைத்துச் சமயத்தவரிடமும் அமைந்துள்ளது.

உலகம்

இறையைப் புகழவேண்டும் எனும் பொது நோக்கில் எழுந்துள்ள சமய நூல்களில் புலவர் தம்மை உணர்த்துவதில், தமக்கு வேண்டுவதில் முன்னிற்பினும், அறவிலக்கிய அறவோர் போன்று உலகோர் நலம் பெறுவதிலும் தம் சிந்தையைச் செலுத்தியுள்ளனர். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனும் உணர்விலும், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பேரறிவிலும் உலகோர் நலம் பெற தம் பாடல்வழி முயன்றுள்ள

னர். நேரிடையான அறிவுரைகளாலும், தம்மனுபவங்கள், பெரியோர் மொழி, அவர் தம் வாழ்வு, இறைவனின் இயல்பு எனப் பல வழிகளின் வழி, உலகோரை இவ்வுலக வாழ்வினின்றும் விடுபட்டுப் பிறவாப் பேரின்ப பெருநிலையடைய வேண்டு; கின்றனர். சமுதாயத்திற்குப் பயன்படாத இலக்கியங்களாலும் பயனில்லையாதலின் சமயக் கவிஞர் உலகோருக்கு வழிகாட்டு தல் மூலமாகத் தம் படைப்பையும் பயனுடையதாக்குகின்றனர். அவ்வகையில் சதகப் புலவர் உலகத்தவருக்கு அருளியுள்ளவை இவண் எண்ணப்படுகின்றன.

அறிவுரை: நல்லதொரு வாழ்க்கையை இம்மையில் அமைக்கும் வழி மற்றும் இறைவனை அவ்வாழ்வின் வழி அடைந்து முக்தி யடையும் சிறப்பு இவையே இவர்களால் மிகுதியாகச் சிறப்பிக்கப் படுகின்றன. இம்மை வாழ்வுச் சிறப்பிற்கு இவை வலியுறுத்து வனவற்றுள் ஈகைப் பண்பு முதலிடம் பெறுகிறது.

> பட்டிக்கடாமிசை அந்தகன் பாசம் கொடுவரு முன்னமே,
> வட்டிக்கு வைத்திடு காசு எலாம் வறியோர்க்கு அளிப்பவர்
> உய்குவார்
> எட்டிக்கனி என அண்டினோர்க்கு ஈயாத லோபிகள்,
> வேசைபால்
> விட்டிற்கு இசைந்திட மாய்வரே; வேலாயுதா!
> வேலாயுதா! (65)

என்று கந்தப்பையர் பாடியுள்ளதைச் சான்றாக்கலாம். பிறரின் துன்பங் கண்டு இரங்குவோரிடத்து ஈகைக் குணம் மலருகின்றது. இல்லாருக்கு ஈவது இறைவன் செயல்; கோட்டார்க்குக் கேட்டபடி யருளுதலும் அவன் பண்பாதலின் ஒருவர் மனதில் ஈகை குடிகொள்ளும் பொழுது உடன் இறைவனும் புகுகின்றான் என்பதை வலியுறுத்துமுகமாக இங்கு ஈகை சிறப்பிக்கப்படுகிறது எனலாம்.

பொறுமையின் பெருமையை மெய்கண்ட வேலாயுத சதகம் (7) பகரும். ஒறுத்தாருக்கு ஒருநாளை யின்பம், பொறுத்தாருக் குப் பொன்றும் துணையும் புகழ் (குறள்:156) என்பதனைச் சுட்டி அறிவுறுத்துகிறது. மனிதருக்குப் பொறுமை மிகத் தேவை யென்பதை அமலகுரு சதகமும் (37) வலியுறுத்தும். பிறர் செய்யும் தீங்கினைப் பொறுத்துக் கொள்ளும் பொறுமை இடம் பெறும் மனதில் தீயகுணங்கள் ஒன்றியிருக்கயியலாது ஆதலின் அம்மனம் தூய்மை பெறுகிறது. தூய்மையான இடத்தில்தான் இறைவன் இடங் கொள்ளுவான்; மன்னிக்கத் தெரிந்த

மனிதனைத் தெய்வமாகவே உலகம் கொள்ளும், எனவே பொறுமை இங்குப் போதிக்கப்படுகிறது.

ஒருவரின் நற்பண்பிற்கும், தீயபண்பிற்கும் அவர் நட்பு கொண்டுள்ள இடமும் முக்கியமான காரணியாதலின் நல்வழிக்கு இட்டுச் செல்லும் நட்பினைப் புலவர் வேண்டுகின்றனர். கல்லா தவர் உறவு ஆவதின் கற்றாருடன் பகை நல்லதே என்று (வேலா: 14) உணர்த்துகின்றனர். ஆக்கவும் அழிக்கவும் செய்யும் வல்லமை படைத்தது நட்பாதலின், ஆக்கத்திற்கு வழி வகுக்கும் நட்பைப் போற்றி அதனை மேற்கொள்ளத் தூண்டுகின்றனர். உயிர் களிடத்து அன்பும், இரக்கமும், செருக்கற்ற பணிவும் தேவை நல்லுயிர்களுக்கு என்று வேதநாயகர் (அமல குரு: 17) மற்றும் சில நற்பண்புகளைப் போதிக்கக் காண்கிறோம்.

இறைவனையடைதற்குரிய வழிகளையும் இச்சதகங்கள் காட்டுகின்றன. 'என் மாடு, என் வீடு, என் பிள்ளை, என் மனைவி; என் காணி, என் மண், என் சொத்து, என்று தன்னுரிமை கொள்ளாது அனைத்தும் இறைவனால் அளிக்கப் பட்ட மாயைகள், இன்றிருந்து நாளை மாறக்கூடியன அல்லது அழியக் கூடியன என்று நன்குணர்ந்து இறைவனை அடைக்கலம் புகுவதே முக்திக்கு வழி (வடவேங்: 85) என்பர் நாராயணதாசர்.

இறைவனை அடைவதற்கு மிகப் பெரிய தடையாய் நிற்பவற்றுள் முதன்மையானது சிற்றின்பத்தின் பால் கொள்ளும் ஆழ்ந்த பற்று அதனை முழுமையாக அகற்றும் பொழுதுதான் இறையை உணரமுடியும் எனவே அதனை ஒழிக்க வேண்டுவர் அழகுமுத்துப் புலவர் (மெய்கண்ட : 14). இவ்வுலக வாழ்வு நிலையாதது என்பதை யறிந்தால் உலகப்பற்றொழித்து இறையை அடையலாம் என்பதில் உள்ள நம்பிக்கையையும் இவர் (81) காட்டுவர். 'நீர்மேற்குமிழியாமுடலை நிலையா மெனவே கயவரெலாம் நின்று புவியிற்றனந்தேடி நீள மயக்கான் மிக வாடிப்பார்மேற்பெரியோர் தமைப்பழித்துப் பண்ணும் வினைகள் வெகுகோடி' என்று நிலையாமையை உணராமையால் வரும் இழிவினைச் சுட்டிக் கிருஷ்ணையரும் (அவையாம்பிகை: 50) 'அப்பாவியர்கள்பால் சேராதுன் பதமே கதியாய்ப் பொருந்தி வைப்பாய்' என வேண்டுகிறார்.

'அறக்கொடிய பவமெடுத்தா லதினூ றாண்டில்
ஐம்பதுநித் திரைபோய்மற் றைம்ப தாண்டில்
சிறுக்குழந்தை பேதையொடு பால னென்றே
திரிந்து பசி பிணிமூப்புத் துன்ப மேவிக்

கறுத்தமயிர் வெளுத்துடலங் கூனிப் பல்போய்க்
காதுகெட்டுக் கண்மூடிக் குழறிப் பேசி
இறக்கமுற்றுக் கிடந்திறக்கும் பிறவி வேண்டேன்
இனிக்கரையேற் றச்சுதனே யெம்பி ரானே [13]

என்று இவ்வுலகில் பிறவி யெடுப்பதால் வரும் துன்பங்களைச் சுட்டிப் பிறவாப் பேரின்ப மடைதற்கு, இறைநம்பிக்கை கொள்ளும்படி எம்பிரான் சதகம் வேண்டுகிறது. 'ஆடுகின்றிலை, கூத்துடையான் கழற்கன்பிலை, என்புருகிப் பாடுகின்றிலை, பதைப்பதுஞ் செய்கிலை, பணிகிலை, பாதமலர் சூடுகின்றிலை, சூட்டுகின்றதுமிலை, என்று மணிவாசகர் [31] தம் நெஞ்சைக் குறித்து வருந்தியுரைத்து இறைவழிபாட்டை வேண்டுவதும். உலகோரை முன்னுறுத்தியே எனவும் கொள்ளலாம்.

இறைவனைப் புலவர் தம் வேண்டுகோட்படி, பணிந்து ஒழுகும் பொழுது மறுமை இன்பம் மட்டுமல்ல இம்மையின்பமும் பெறுதற்கூடும் என்ற நம்பிக்கையையும் உணர்த்துதலை இங்குக் காண்கிறோம். ''குடல் வாதம், தலைநோய், குருடு, செவிடு, உடல் கோணல், மலடு, உழல்பித்தம், பெருவிக்கல், முடம், குன்மம், விடம், ஊமை எனும் எப்பிணியும் இறைவனை வழிபடுவதால் ஒழியும்'' எனும் வேலாயுத சதகமொழி [11] இம்மைப்பயன் நம்பிக்கையை ஊட்டி அதன் வழி இறைவழி பாட்டின் தேவையை வலியுறுத்தக்காணலாம். இம்மையின் பத்தின் வழி மறுமையின்பத்தையும் எளிதாகப் பெறலாம் என்பது இதன் உட்கிடை. உடற்பிணி இம்மையில் தீர, உடம் பெடுத்தலாகிய பிறவிப்பிணி மறுமையில் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையை இது வளர்க்கிறது.

முன்னோரின் மொழியைக் கொண்டும், அறிவுறுத்துதலைக் காணகிறோம். தம் கூற்றிற்கு வலிமை சேர்த்தலாகவும், அவருக்குப் பெருமை சேர்த்தலாகவும் இருநிலைப் பயன்பாட்டை இதனால் கொள்கின்றனர். இறைவனை அடைக்கலம் புகுதலால் மரணபயத்தை வெல்லவியலும் என்ற உண்மையை, அருணகிரி நாதர் மொழிந்ததைக் [கந்தரலங்காரம் 87] கந்தப்பையர்,

''குமரா சரண் சரண் என்று உனைக் கோடித்த பேர்தமை
நாடியே
எமராசன் வந்திடில், அங்கு அவன் இருதாளுமே
அறவெட்டுவார்
அமராபதிக்கு இறைதேவி ஆம் அயிராணி மங்கலியம் தரும்
விமலா திருத்தணிகைக்குள் வாழ் வேலாயுதா!
வேலாயுதா! [42]

என்று மொழிந்திருப்பதைக் காட்டலாம்.

இவ்வறிவுரைகளைப் புலவோர் உலகோரை முன்னிறுத்தி மொழிதல் என்று வெளிப்படையாக அமைத்தல், இங்கு மிகச் சிறுபான்மையாகவே அமைகிறது. பொதுநிலையில் இவ்வறிவுரைகள் இச்சதகங்களில் கற்பார் தமக்குமாகவே மொழியப் பட்டுள்ளன; உலகோரை முன்னிறுத்து முகமாகத் தங்களையே நிறுத்தியுள்ளனர் என்று உய்த்துணருமாறே யமைந்துள்ளன. புலவோரின் தன்னடக்கம் இதற்குக் காரணமாகிறது எனலாம்.

சமயச் சடங்கு: எல்லாச் சமயத்தவரும் இறைவழிபாட்டில் தமக்கென்று சில விழாக்களைக் கொண்டாடுகின்றனர். அவ்வேளையில் அங்குப் பின்பற்றப்படுகின்ற சடங்குகளையும் அன்றாடம் மேற்கொள்ள வேண்டிய சில நடை முறைகளையும் அவை உறுதியாகப் பின்பற்றப் படவேண்டும் என்ற கண்டிப்புடன் புலவர் மொழியக் காண்கிறோம், மூத்த பிள்ளையார் திருச்சதகம் [59] விநாயகருக்கு உகந்த சதுர்த்தி விரதத்தினைச் சுட்டிச் செல்கிறது. அவ்விரதத்தால் பயனுற்ற ஆதிசேடனைக் காட்டி அடியவர்களை அவ்விரதம் மேற்கொள்ளத் தூண்டுகிறது. விநாயகருக்கு உகந்த பொருட்களாகக் கொழுக்கட்டை, அப்பம், அதிரசம், அவல் பொரி, கடலை முதலானவற்றைத் தருகிறது. இறைவனுக்குச் செய்யும் தின வழிபாட்டில் வைத்து வழிபடற்குரியதாக [41, 42] அதன் வழி இயம்புகிறது. இந்து மதம் இத்தகு வழிபாட்டு முறை ஒவ்வொன்றிற்கும் தத்துவ விளக்கமளித்தலின் அம்முறைப்படி வழிபாடு நிகழ்வதை இவ்வாறாக இதுபோன்றன வலியுறுத்துகின்றன எலைாம். திருமாலுக்குகந்த ஏகாதசி விரதத்தினை எம்பெருமான் சதகம் [49] விதந்தோத காணலாம். இதனால் திருமாலின் திருவடியை அடைதலைச் சுட்டுவர். பல்வித நன்மைகளும் இன்பமும் பெறத் திருக்கார்த்திகை விரதத்தினை மேற்கொள்ளும்படி வேண்டுகிறது [44] மெய்கண்ட வேலாயுத சதகம். திருநாவுக்கரசர் திருநீற்றுப்பதிகம் பாடிச் சிறப்பித்தது போன்று அழகுமுத்துப் புலவர் சமயச் சின்னமாக விளங்கும் அத்திருநீற்றின் பெருமையைப் புகழ்ந்து [74] அதனை அணிய வேண்டுகிறார்.

வாழ்த்து: பக்திப் பனுவல்கள் தமக்கும் பிறருக்குமாகப் பயன்படு நிலையில் கற்பாரை வாழ்த்தி நிற்றலையும் தம் பொருட் கூறுகளுள் ஒன்றாகக் கொண்டுள்ளன. தாம் மட்டுமின்றி உலகோரும் உய்தி பெறலையும் தம் நோக்கங்களுள் ஒன்றாகக்

கொண்டுள்ளமையின் அவரை வாழ்த்தி நிற்றல் இயல்பாயமை கிறது. தமிழிலக்கிய மரபாகவும் பிறவற்றிலும் இஃது காணப் படுதல் எண்ணற்பாலது. பாட்டுடைத் தலைவருக்குக்கூடுதல் சிறப்பளிக்கும் வகையில் இவ்வாழ்த்து அமைந்து நிற்றலைப் பல சிற்றிலக்கியங்களிலும் காணலாம். பொதுவாகச் சதகங்களின் இறுதிப்பாடலாக, முடிபுத்தியாக இவ்வாழ்த்து அமைந்து நிற்கக் காண்கிறோம்,

குகவாழி செந் தூராவினன் குடிவாழிபுட் கொடிவாழி சண்
முகவாழிசூர்ப் பகைவாழியுன் முன்வாழி நீ பஞ்சேருமார்
பகவாழியிச் சதகந்தனைப் படித்தோர்களுங் கற்றோர்களு
மிகவாழிவேல் மயில் வாழியே வேலாயுதா வேலாயுதா
[மெய்கண்ட: 100

என்பதுபோன்று இறை வாழ்த்துடன் இணைந்தும் அமைதலுண்டு.

பொதுவாகப் பக்திச் சதகங்கள் பக்தியிலக்கிய மரபினை முழுவதுவாக ஒட்டிச் செல்கின்றன. புராணக் கதைகளைப் புது நோக்கில்தரும் [61—65] மூத்தபிள்ளையார் திருச்சதகம் நூறு பாடல்களுள் விநாயகர் பற்றிய செய்திகளை ஓரளவு முழுநிலை யில் தரமுனைந்து அதில் வெற்றியும் பெற்றுள்ளது எலைாம். பக்திப்பனுவல்களும், மரபுக்கவிதைகளும் குறைந்துவரும் இந் நாளிலும் மரபுநிலையில் சிறந்த பக்திப்படைப்புகளை உருவாக்க முடியும் என்பதற்கு இந்நூல் ஓர் சான்றாகிறது. திருவாசகத்தில் மாணிக்க வாசகர் சிவபெருமானுக்காக உள்ளம் கரைந்து உருகிய நிலையை அமலகுரு சதகத்தில் உணரமுடிதல் குறிப்பிடற் பாலது. கிறித்தவக் கம்பன் என்று இரட்சணிய யாத்திரிகப் புலவரைச் சுட்டல் போன்று கிறித்தவ மாணிக்க வாசகர் என்று இதன் நூலாசிரியர் ஜி. எஸ். வேதநாயகரைப் போற்றுமளவிற்கு இயேசு பக்தியின் உருக்கத்தைக் காணலாம். இறைத்தத்துவ விளக்கமாக அமையாது இறையைப் பரவும் நூலாக அமையும். இசுலாமிய சதக நூல்கள் ஆய்வாளரின் பார்வைக்குக் கிட்டாமையின் இங்கு அவற்றின் சிறப்பினை உணர்த்துவதற்கியல வில்லை.

இன்னும் அச்சில் வராத வைகுந்த சதகம் திருமாலின் இராம, கிருஷ்ணாவதாரச் செயல்களை விதந்தோதுவது குறிப் பிடந்தக்கது. முருகப்பெருமான் பற்றிய முழுஉணர்வினைத்

தருவதில் சிவகிரிகுமரசதகம் முன்னிற்கிறது.* பக்தியும் தத்துவமும் இணைந்து இந்நூலை அணிசெய்கின்றன. அடியாருக்கு, மிகுந்த சிறப்பளித்துள்ளமையும் சுட்டற்பாலது. முருகவழிபாட்டின் பல கூறுகளை இந்நூலால் அறிய இயலும் என்பது குறிப்பிடத்தக்கது. சதக இலக்கியத்துள் பெரும் பான்மையானவையாக அமையும் பக்திச் சதகங்கள் முழுமையை யும் நோக்கும் பொழுது அவற்றின் சிறப்புக்கூறுகள் மற்றும் பல வெளிப்படக்கூடும் என்பது உறுதி.

நிறைவுரை

தமிழில் இதுவரை எழுந்துள்ள சதகங்களாக அறிய வருவன இருநூற்றுப் பதினேழாகும். இவற்றுள் வடமொழி, தெலுங்குச் சதகங்களின் மொழிபெயர்ப்புகளாகச் சுமார் பதினொரு சதகங் கள் உள. ஆறு மருத்துவ நூல்களும் உள. இவற்றுள் மிகப்பல நூல்கள் இன்னும் ஏட்டுச்சுவடியாகவே நிற்றல் குறிப்பிடத் தக்கது. இவை அனைத்தும் வெளிவரும் பொழுதுதான் தமிழிலக்கிய உலகிற்கு மிகுந்த பயன் விளையும். சதகம் பற்றிய ஆய்வுகளில், சதக இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் அமைந்த ந. வீ. செயராமனின் சதக இலக்கியங்கள் எனும் நூலும், இசுலாமியச் சதகங்களுக்கொரு கண்ணோட்டம் தரும் பீ. மு. அஜ்மல்கானின் கட்டுரையும், பொதுநிலையில் இவற்றின் நோக்கங்களையும் பயனையும் ஆய்ந்த மு. சுப்புலெட்சுமியின் கட்டுரையும் குறிப்பிடத்தக்கன.

சிற்றிலக்கிய வகைகளுள் சிறப்பு வாய்ந்ததொன்றாகச் சதக இலக்கியங்கள் விளங்குதலைக் கோடிட்டுக் காட்டும் முயற்சி இங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் மூன்று நூற்றாண்டு கள் (17, 18, 19) மிக்க சிறப்புடன் திகழ்ந்த இச்சதக இலக்கியம் பிற்காலத் தமிழ்ச் சமுதாயத்தைக் காட்டும் கலங்கரை விளக்க மாக ஒளிவிடுவதும் வரலாற்றுணர்விற்குச் சிறப்பளித்ததும் குறிப்பிடத்தக்க பெருமைகளாகும். கூறியது கூறலாகவே பல சதகங்கள் அமைந்துள்ளன எனும் குறைபாடிருப்பினும் பொது மக்களுக்குப் பயன்படும் கையேடுகளாக, வாழ்வியற் களஞ்சியங்

---

* இந்நூல் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தட்டச்சு வடிவில் உள்ளது. சுவடியியல் பட்டமேற்படிப்புச் சான்றிதழுக்காக மெய். சந்திரசேகரன் பதிப்பித் துள்ளார். 1984.

களாக விளங்கித் தம் தோற்றத்தின் பயனையும் நிலைநாட்டி யுள்ளன. மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரிதென்பதை, நூறு பாடல்களில் உலகையே உள்ளடக்கிக் காட்டி, குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், தண்டலையார் சதகம், கொங்கு மண்டல சதகம், கார்மண்டல சதகம் போன்றன இலக்கிய உலகில் நிலைத்த இடம் கொண்டுள்ளன. திருச்சதகம், அமலகுரு சதகம், அகத்தீசர் சதகம் முதலானவை சமய உலகில் தமக்கெனத் தனியிடம் பெற்றுள்ளன.

சதக இலக்கியத்தின் ஒரு சில கூறுகள் மட்டுமே இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. வரலாறு காட்டும் மண்டலச் சதகங்கள் பற்றிய ஆய்வும் மிகத் தேவையானதொன்று. இன்னும் முறையான ஆய்வு அவற்றின்மீது நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. கல்வெட்டுகள், வரலாற்றுச் சான்றுகள், பழமை இலக்கியங்கள் போன்றவற்றின் துணையுடன் இவற்றை அணுகும் பொழுது பல உண்மைகள் வெளிப்படக்கூடும். திராவிடமொழி களுக்கும் வடமொழிக்கும் பொதுவானதொரு இலக்கிய வகையாக இஃது நிற்றலின் ஒப்பியல் ஆய்வும் இங்குச் சிறக்க இடமுண்டு. ஏட்டில் உள்ள சதகங்கள் பதிக்கப்படலும், ஆய்விற்குட்படலும் இன்றியமையாத் தேவைகளாம். இவை யனைத்தும் நிறைவேறும் பொழுதுதான் தமிழ் இலக்கிய வரலாற்றில் சதக இலக்கியங்களின் தனிச்சிறப்பு நன்கு ஒளிவீசும்.

சதக வரிசை

எண்	நூல்	ஆசிரியர்	காலம்	பாடல் தொகை	யாப்பு	பொருள்	பதிப்பு	இருப்பிடம்/ பதிப்பாளர்
1	அகத்தீசர் சதகம்	மஸ்தான் சாகிப்	19	102	ஆசிரிய விருத்தம்	தத்துவம்	1977	ஞானவள்ளல் பதிப்பகம்
2	அடைக்கலச் சதகம்	வைரவநாதன் கவிராயர்	18-19	—	—	—	—	—
3	அண்ணாமலைச் சதகம் (வசந்தராயச் சதகம்)	திருச்சிற்றம்பல நாவலர்	19	105	ஆ. விருத்தம்	வாழ்வியல்	1899	தி. சபாபதிப் பிள்ளை
4	அத்தியூர் எம்பெருமான் சதகம்	—	—	—	—	—	—	பாண்டிச்சேரி, பிரஞ்சிந்திய கலைக்கழகம்
5	அநுமார் சதகம்	—	—	100	—	பக்தி	—	—
6	அப்துறகுமானறபிச் சதகம்	பவானிப்புலவர் /செய்யதுபுகாரி புலவர்	19	100	ஆ. விருத்தம்	வாழ்வியல்	1895	கண்ணகுமது மதுசுமுகம் மதுப் புலவர்
7	அமலகுரு சதகம் (சுத்த ஜீவியம்)	ஜி. எஸ். வேத நாயகர்	20	102	ஆ. விருத்தம்	பக்தி	1902	எஸ். பி.ஸி. கே. பிரஸ்
8	அர்ச் தேவமாதா பேரிற் சதகம்	அ. பொன்னு சாமி முதலியார்	19	117	வெண்பா	பக்தி	1890	செய்யப்பமுதலி யார்
9	அரபிச் சதகம்	அப்துல்ரகுமான்	19	—	—	—	1895	—
10	அருண்மொழி விளக்கம் என்னும் திருநசரையார் சதகம்	எல். எஸ். ஸ்டீபன்ஸ்	20	—	—	தத்துவம்	1907	எல். எஸ். ஸ்டீபன்ஸ்
11	அருணாசல சதகம்	காஞ்சிபுரம்சபாபதி முதலியார்	19	100	கலிவிருத்தம்	பக்தி	1913	மதராஸ்,ரிப்பன் பிரஸ்
12	அவிநாசிக் கருணாம்பிகை சதகம்	வாசுதேவமுதலியார்	19	100	—	வாழ்வியல்	1891	ஆர். சபாபதிப் பிள்ளை

13	அவையாம்பிகை சதககம்	கிருஷ்ணையர்	19	100	ஆ. விருத்தம்	பக்தி	1876	அருணாசல முதலியார்
14	அழகிய மணவாள சதகம்	—	—	—	—	—	—	துறையூர் விருத்தாசல குமார தேவமடம்
15	ஆத்மபோத சதகம்	நாராயண...	—	—	—	—	—	—
16	இயேசுநாதர் திருச்சதகம்	ஆணல். சதாசிவம் பிள்ளை	19	—	—	—	—	—
17	இராகவ சதகம்	—	—	100	கட்டளைக் கலி	பக்தி	—	உ.வே.சா. நூல் நிலையச்சுவடி
18	இராமலிங்க சதகம்	சங்கர மூர்த்திப் புலவர்	19	100	—	—	1895	சிதம்பரநாதக் கவிராஜர்
19	இராமாயண சதகம்	பொ. மு. கேசவ சுப்பராயசெட்டியார்	19-20	100	—	பக்தி	1905	வே. கி. நாராயணசாமிப் பிள்ளை & எ.ரத்தினவேலு செட்டியார்
20	இராமாயண சதகம்	சிவசங்கரையர் + வீரமாஹேசர்	20	106	ஆ. விருத்தம்	பக்தி	1910	சுப்பையர் + வீரமாஹேசர்
21	இராமாயண சதகம்	முருகேசச் செட்டியார்	19	—	—	பக்தி	?	—
22	இலக்குமி காந்த சதகம்	சீனிவாச ஐயர்	—	—	—	—	—	—
23	இறசூழ் சதகம்	ஈழம். அப்துல் காதர் லெப்பை	20	100	ஆ. விருத்தம்	வாழ்வியல்	1966	—
24	ஈழமண்டல சதகம்	கணபதிப் பிள்ளை	19	—	—	வரலாறு	—	—
25	ஈழமண்டல சதகம் (சந்திர மௌலீசர் சதகம்)	க. வேற்பிள்ளை	19-20	—	—	வரலாறு	1930	திருஞான சம்பந்த பிள்ளை

26	உசிலைவனம் ஐயனார் சதகம்	—	—	—	—	—	—	—
27	உத்தம நீதி—முதற் சதகம்	வெங்கடசாமி ஐயர் (மொழி)	20	100	—	வாழ்வியல்	1908	எஸ். பி. ஸி.கே. பிரஸ்
28	உமாயேசுர சதகம்	க. வேற்பிள்ளை	—	—	—	தத்துவம்?	—	—
29	எதார்த்த சதகம்	மச்சரேகை சித்தர்	19-20	102	ஆ. விருத்தம்	வாழ்வியல்	1928	ச. கந்தசாமி முதலியார்
30	எதிராஜ சதகம்	புதுவை.இராமாநுஜ நாவலர்	19	100	—	பக்தி	1886	ஜக்கையார் + இராமநுஜ தாசர்
31	எம்பிரான் சதகம்	கோபால கிருஷ்ண தாசர்	18	105	ஆ. விருத்தம்	பக்தி	1839	வேங்கடாசல முதலியார் + பொ. ராமசாமி நாயகர்
32	ஏகாம்பரநாதர் சதகம்	இரகுநாதையர்	19-20	—	—	—	—	—
33	கஞ்சகிரி சித்தேசர் சதகம்	சேலம், அநந்த நாராயணசர்மா	19	10+102	—	வாழ்வியல்	1902	சரவணப் பிள்ளை
34	கந்தபுராண சதகம்	முத்துக்குமார தாசர்	20	—	—	பக்தி	—	—
35	கபிலர் சதகம்	—	—	—	—	—	?	—
36	கயிலாசநாதர் சதகம்	சேலம்சிதம்பரப் பிள்ளை	18	102	ஆ. விருத்தம்	வாழ்வியல்	1878	ஆறுமுக சுவாமிகள்
37	கருணாம்பிகை சதகம்	—	—	—	—	—	—	—
38	கருணையம்மன் சதகம்	—	—	—	—	—	—	கேரளப் பல்கலைக்கழகம்
39	கலிவிடம்பன் சதகம்	கலியாண சுந்தர சாஸ்திரி (தொகு)	—	—	—	—	1904	கலியாணசுந்தர சாஸ்திரி

40	கழுகாசல சதகம்	—	19	41	—	பக்தி	1908	பட்டாபிராமப் பிள்ளை
41	காசிவிசுவேச சதகம்	நா. கனகராஜ ஐயர்	20	137	ஆ. விருத்தம்	பக்தி	—	உலகத்தமிழா ராய்ச்சி நிறுவனம்
42	காதல் அருவி (சிருங்கார சதகம்)	அரங்க. சீனி வாசன் (மொழி)	20	—	—	அகம்	1977	திருச்சி, கலைப் பண்ணை
43	காந்தி சதகம்	கா.மு. சுந்தர முதலியார்	20	—	—	வரலாறு	—	—
44	கார் மண்டல சதகம்	ஆறைக்கிழார்	11	107	கட்டளைக் கலி	வரலாறு	1930	முத்துத்தாண்ட வராயபிள்ளை
45	காரண சதகம்	மச்சரேகை சித்தர்	19-20	—	பல்வகை	பக்தி	1928	அ. கந்தசாமி முதலியார்
46	காருண்ய சதகம்	மச்சரேகை சித்தர்	19-20	100	ஆ. விருத்தம்	பக்தி	1928	அ. கந்தசாமி முதலியார்
47	கானாட்டுச் சதகம்	—	15?	42?	—	வரலாறு	—	உலகத்தமிழா ராய்ச்சி நிறுவனம்
48	கிறிஸ்துமதகண்டன சதகம்	—	19	—	—	தத்துவம்	—	—
49	கீர்த்தநமாலை (முதல் சதகம்)	பாபநாசம்சிவன்	20	—	—	பக்தி	1964	—
50	குதுபு சதகம்	கிதுறு முகம்மது மரைக்காயர்	19	—	—	பக்தி	1893	—
51	குருநாத சதகம்	கருணையா நந்தசுவாமி	18-19	—	கலிவிருத்தய	—	1863	ஆறுமுக ஞானி யார்

52	குருநாத சதகம்	சேலம்சிதம்பரம் பிள்ளை	—	—	—	—	—	—
53	குருவிக்குளம் ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்வரர் சதகம்	புரசை. சபாபதி முதலியார்	19	—	—	—	1892	பு.த.குப்புசாமி முதலியார்
54	கேசவர் சதகம்	வெங்குபிள்ளை	19	—	—	—	1870	பாலுபிள்ளை + மாணிக்கம் பிள்ளை + குமாரசாமி முதலியார்
55	கைலாசநாதர் சதகம்	கைலாசநாதர்	18	—	—	—	—	—
56	கைலாசநாதர் சதகம்	சிதம்பரவாணர்	—	—	—	—	—	—
57	கொங்குமண்டல சதகம்	கார்மேகக் கவிஞர்	18	103	கட்டளைக் கலி	வரலாறு	1923	தி.அ.முத்துச் சாமி கோனார்
58	கொங்குமண்டல சதகம்	வால சுந்தரக் கவிராயர்	—	—	—	வரலாறு	—	—
59	கோகுல சதகம்	—	—	—	கட்டளைக் கலி	பக்தி	—	உ.வே.சா. நூலகம்
60	கோகுல சதகம்	பாலூர் அமிர்த கவிராயர்	1	102	கட்டளைக் கலி	—	1914	—
61	கோதண்டராம சதகம்	இராமதாசர்	19	101	—	வாழ்வியல்	1877	இராசுநாயகர்
62	கோபிநாத சதகம்	கிருஷ்ணமூர்த்தி	—	—	—	—	—	—
63	**கோவிந்த சதகம்**	**நாராயண பாரதி**	18	102	**கட்டளைக் கலி**	**வாழ்வியல்**	1861	**சீநிவாச முதலியார்**

64	கோவிந்த சதகம்	அம்பலவாணக் கவிராயர்	—	—	—	—	—	—
65	சங்கர சதகம்	வா. சி. சுப்ர மண்ய செட்டியார்	20		—	—	—	—
66	சங்கரநாராயணசாமி கோயில் ஸ்ரீமதிகோமதி யம்பிகை சதகம்	திருக்கமலப் புலவர்	—	—	—	—	1913	அ. கந்தசாமிப் புலவர்
67	சடகோபர் சதகத்தந்தாதி	தண்டபாணி சுவாமிகள்	19	110	பல்வகை	பக்தி	1963	—
68	சத்த சதகம்	தண்டபாணி சுவாமிகள்	19	—	—	—	—	—
69	சதானந்த சதகம்	பொன்னுசாமி	19	—	—	—	—	—
70	சதுர்லிங்க தசகோத்ர சதகம்	ஆறுமுக மெய்ஞ் ஞான சிவாசாரி யர்	17-18	—	—	—	—	—
71	சதுரகிரி அறப்பளீசுர சதகம்	அம்பலவாணர்	18	100	ஆ. விருத்தம்	வாழ்வியல்	1837	சுப்பராயவை யர்
72	சதுரலிங்க சதகம்	—	—	—	—	—	—	—
73	சயவரதர் சதகம்	வே. கி. நாரா யணசாமிப் பிள்ளை	19	—	—	—	—	—
74	சருவவீசுவரன் சதகம்	ஞானப் பிரகாசம்	—	—	—	—	—	பாரிஸ் தேசிய நூலகம்
75	சல்லாசர் சதகம்	சி. கண்ணுசாமி முதலி	19	—	—	—	1899	சி. கண்ணுசாமி முதலி
76	சலவாத்து சதகம்	மீரான் நயினாப் புலவர்	—	—	—	பக்தி	—	—

77	சற்குரு சதகம்	ஜி. எஸ். வேத நாயகர்	20	—	—	—	—	கிறித்தவ இலக்கியசங்கம்
78	சன்மார்க்க சதகம்	வேதகிரி முதலியார்	19	—	—	தத்துவம்	—	—
79	சிங்கார வேலர் சதகம்	முத்துசாமி கவிராயர்	20	—	—	—	—	—
80	சிதானந்த சதகம்	மச்சரேகை சித்தர்	19 - 20	101	—	தத்துவம்	1928	ச. கந்தசாமி முதலியார்
81	சிருங்கார சதகம்	ஈசான சுவாமி நாத தேசிகர்	17	—	—	அகம்?	—	—
82	சிவகங்கை சீமை பூங்கொன்றை வேலங்குடியில் எழுந்தருளியுள்ள கறுப்பண்ணசுவாமி சதகம்	இராமசாமிக் கவிராயர்	19	100	ஆ. விருத்தம்	வாழ்வியல்	1897	கீழைச்சிவல் பட்டி நகரத்தார்
83	சிவகாமியம்மை சதகம்	மாயூரம் கிருஷ்ணையர்	19	—	—	—	—	—
84	சிவகிரி குமர சதகம்	குப் பையன்	18 / 19	113?	ஆ. விருத்தம்	பக்தி	—	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
85	சிவசங்கர சதகம்	வீராசாமி உபாத்தியாயர்	19	103	—	பக்தி	1887	ஊ. புஷ்பரத செட்டி
86	சிவசங்கர சதகம்	எம். துலுக்காண ஆசாரி		—	—	பக்தி	1891	கார்டியன் பிரஸ்
87	சிவபெருமான் சதகம்	தண்டபாணி சுவாமிகள்	19	—	—	—	—	—
88	சிவலிங்க சதகம்	—	—	35	—	—	—	கேரளப் பல்கலைக் கழகம்

89	சிற்சுகவாரிதிச் சதகம்	மாதுரு பூதம் பிள்ளை	19	105	—	பக்தி	1885	சி. சுப்பிரமணிய பிள்ளை
90	சிரங்க நாராயண சதகம்	தண்டபாணி சுவாமிகள்	19	100	ஆ. விருத்தம்	பக்தி	—	தி.மு. பிசந்தி னாயகம் பிள்ளை
91	சீறாச்சதகம்	முகமத் சுல்தான் இபின் அகமத் உமர்	19 - 20	—	—	—	—	—
92	சீனிவாச சதகம்	அனந்தநாத சுவாமிகள்	19	—	—	—	—	—
93	சுப்பிரமணிய சுவாமி பிரபாவ சதகம்	மு. அனந்தபத்ம நாபபிள்ளை	20	100	—	பக்தி	1909	பி. வ. குத்தால லிங்கம்பிள்ளை
94	சுமதி சதகம்	சாந்தலிங்கம் கவிராயர் (மொழி)	19	—	—	வாழ்வியல்	1874	பி. சோமநாயுடு
95	சுமதி சதகம்	சமரபுரி முதலி யார் (மொழி)	20	—	—	வாழ்வியல்	1904	எதிராசுலு நாயுடு
96	செயவரதர் சதகம்	வெங்குப் பிள்ளை	19	—	—	—	1870	தி. பாலுப் பிள்ளை + தி. மாணிக்கம் பிள்ளை + வே. குமார சுவாமி முதலி யார்
97	செல்லாண்டியம்மன் சதகம்	சக்கரபாணி ஆச்சாரியார்	19	—	—	—	—	—
98	சேசுநாதர் சதகம்	ந. சவரிமுத்து உடையார்	20	100	ஆ. விருத்தம்	பக்தி	1977	எஸ். தாமஸ் உடையார்

99	சேரமண்டல சதகம்	ஆறுமுகம் பிள்ளை	19-20	—	—	—	—	—
100	சொக்கலிங்கக் கடவுள் தோத்திர சதகம்	சோமசுந்தர சுவாமிகள்	—	—	—	பக்தி	1971	—
101	சோழ மண்டல சதகம்	ஆத்மநாத தேசிகர்	17-18	103	விருத்தம்	வரலாறு	1916	சோமசுந்தர தேசிகர்
102	தசரதராம சதகம்	இ. மாவலிங்கப் பிள்ளை	19	102	—	பக்தி	1876	பு. ஆறுமுக முதலியார்
103	தட்சிணாமூர்த்தி நாடி சதகம்	தட்சிணா மூர்த்தி	—	101	விருத்தம்	மருத்துவம்	—	கீழக்கியல் சுவடி நூலகம், சென்னை
104	தண்டலையார் சதகம் (பழமொழி விளக்கம்)	படிக்காசுப் புலவர் சாந்தலிங்கக் கவிராயர்	17-18	109	ஆ. விருத்தம்	வாழ்வியல்	1838	மகாலிங்கையர்
105	தணிகை வேலாயுத சதகம்	தி. கந்தப்ப தேசிகர்	18	102	—	பக்தி	1880	அ. இரத்தின சபாபதி
106	தயா சதகம்		—	—	—	—	—	கிழக்கியல் சுவடி நூலகம்
107	தரிசனமாலை சதகம்	மீறான் சாகிபு	—	—	—	...	1923	...
108	தவச் சதம்	—	19	—	...	...	1865	கிறித்தவக் கல்விக் கழகம்
109	தியாகராச சுவாமி சதகம்	ப. சோமசுந்தர தேசிகர்	20	—	...	...	...	...
110	திருக்குறுங்குடிநம்பி சதகம்	வரராமயோகி	12	—	...	...	...	...
111	திருச்சதகம்	மாணிக்க வாசகர்	9	100	கட்டளைக் கலி	பக்தி	1897	ரிப்பன்பிரஸ், சென்னை

112	திருச்செங்கோட்டுச் சதகம்	சதாசிவபண்டிதர்	19	101	...	பக்தி	1883	கிருஷ்ணசாமி முதலியார்
113	திருச்செங்கோட்டுச் சதகம்	கிருட்டிண சாமி முதலியார்	19	—	...	—	...	...
114	திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் தண்டாயுதசதகம்	—	—	—	...	—	...	தெய்வசிகாமணி
115	திருச்செந்தூர் சண்முக சதகம்	வரராமயோகி	12	—	...	—	...	...
116	திருச்செந்தூர் செந்தினாயக சதகம்	தண்டபாணி சுவாமிகள்	19	—	...	பக்தி	...	...
117	திருநபியின் சதகம்	அப்துற்றகுமான்	20	—	...	வாழ்வியல்	...	...
118	திருப்புகழி விசயராகவ சதகம்	விசயராகவப் பிள்ளை	19	—	—	—	1960	...
119	திருப்புல்வய்ல் குமரேசர் சதகம்	குருபாததாசர்	18	100	ஆ. விருத்தம்	வாழ்வியல்	1868	கருணானந்த சுவாமிகள்
120	திருப்போரூர் சதகம்	புரசை சபாபதி முதலியார்	19	—	—	...	...	...
121	திருப் போரூர் சதகம்	கே. எம். பால சுப்பிரமணியம்	20	—	—	...	...	...
122	திருப்போரூர் பிராண வாசல சதகம்	புரசை சபாபதி முதலியார்	19	...	—	...	...	...
123	திருமாணிக்க மாலை திருத்தொண்டர்சதகம்	மலைக் கொழுந்து நாவலர்	...	...	விருத்தம்	—	1914	ரிப்பன் பிரஸ், சென்னை
124	திருமுகம்மது நபி சதகம்	பகீர் முகம்மது	20	...	—	வாழ்வியல்	1911	மாதார்சா முரைக்காயர்

125	திருவரத்துறை நாதர் சதகம்	அரங்கசாமி ஐயங்கார்	20	...	—	...	...	...
126	திருவருள் சதகம்	மெய்யப்பச் செட்டி	19	102	—	பக்தி	1899	சுப்பிரமணிய ஐயர்
127	திருவாமாத்தூர் அருள்மிகு அழகியநாதர் பெருமாள் பதிகச் சதக நூல்	தண்டபாணி சுவாமிகள்	19	1000	பல்வகை	பக்தி	...	உ.த.நி.
128	திருவாய் மொழி வாசக மாலை எனும் விவரண சதகம்	திருக்கோனேரி தாஸ்யை	—	...	...	பக்தி	1952	...
129	திருவேங்கட சதகம் (மணவாள நாராயண சதகம்)	நாராயண பாரதியார்	18	102	ஆ. விருத்தம்	வாழ்வியல்	1868	கருணானந்த சுவாமிகள்
130	திருவேங்கட நாத சதகம்	?		102	விருத்தம்	பாடாண்	...	உ.வே. சா நூலகம்
131	தில்லைக் கற்பக விநாயகர் சதகம்	சிதம்பரம் செட்டியார்	20	...	...	...	1937	ஆனந்தா அச்சுக் கூடம் சென்னை
132	தில்லைச் சிவகாம சுந்தரி சதகம்	ஐயாத்துரை ஞானியர்	19	...	...	...	1866	துரைச்சாமிக் கவிராயர்
133	தில்லை நடராசர் சதகம்	மாயூரம் இராமையர்	19	...	...	...	...	...
134	தில்லை நடராய சதகம்	ஐயாத்துரை ஞானியர்	19	...	—	...	1866	ஐயாத்துரை ஞானியார்
135	தொண்டை மண்டல சதகம்	படிக்காசுப் புலவர்	17-18	101	கட்டளைக் கலி	வரலாறு	1855	சிதம்பரம் ராமலிங்கப் பிள்ளை
136	தேவநாத சதகம்	எஸ். கிருஷ்ண மாச்சாரி	20	...	...	பக்தி	1909	எஸ். கிருஷ்ண மாச்சாரி

137	தேவராஜ சதகம்	இளையவல்லி லக்ஷ்மி நரஸிம் மாச்சாரியர்	20?	100	...	பக்தி	1918	...
138	தேவீகிளித்தூது சதகம்	காமாட்சி தாசன்	...	...	...	...	...	...
139	நடராச சதகம்	சிதம்பரநாத முனிவர்	18	...	...	...	1946	ச. தண்டபாணி தேசிகர்
140	நந்தமண்டல சதகம்	காஞ்சி. மாத்ரு பூதையர்	19	...	...	பக்தி?	...	...
141	நந்தமண்டல சதகம்	தெய்வநாயகப் பெருமாள் நாவலர்	19	...	...	பக்தி?	1895	கா. இராமா நுஜம் பிள்ளை
142	நந்தீசர் சதகம்	மஸ்தான் சாகிப் ?	19	...	...	...	...	...
143	நரசிம்ஹ சதகம்	கன்னையநாயுடு (மொழி)	...	...	...	...	1910	ஸ்ரீநிகேதனம் பிரஸ் சென்னை
144	நன்மதி வெண்பா	எம்.ஆர். சீனி வாச ஐயங்கார் (மொழி)	20	109	வெண்பா	வாழ்வியல்	1910	வைஜயந்தி பிரஸ் சென்னை
145	நாதாந்த சதகம்	மச்சரேகை சித்தர்	19-20	100	...	தத்துவம்	1928	அ. கந்தசாமி முதலியார்
146	நானிலைச் சதகம்	தண்டபாணி சுவாமிகள்	19	...	...	...	1951	தி. செ. முருக தாச பிள்ளை
147	நியாயச் சதகம்	மஸ்தான் சாகிப் / தண்டபாணி சுவாமிகள்?	19	...	...	...	...	...
148	நீதிச் சதகம்	ஈசான சுவாமி நாத தேசிகர்	17	...	...	வாழ்வியல்	...	...

149	பர்த்ருஹரி சிருங்கர சதகம்	ம. மாணிக்க வாசகம்பிள்ளை (மொழி)	20	...	...	அகம்	1925	ரிப்பன் பிரஸ்
150	பர்த்ருஹரி நீதி சதகம்	ஓ. என். அப்பா சாமி ஐயர் (மொழி)	...		...	வாழ்வியல்	1967	சரசுவதி மகால் வெளியீடு
151	பர்த்ருஹரி நீதி சதகம்	ம. மாணிக்க வாசகம்பிள்ளை (மொழி)	20	...	...	வாழ்வியல்	...	...
152	பர்த்ருஹரி வைராக்கிய சதகம்	வீரசுப்பைய ஞானதேசிகர் (மொழி)	19 - 20	...	...	தத்துவம்	...	...
153	பவானி வேதநாயகி சதகம்	...	...	...	...	...	...	...
154	பழனியாண்டவர் சதகம்	ஐயம் பெருமாள்	...	105	...	...	...	...
155	பழனியாண்டவர் சதகம்	குமாரசுவாமி முதலியார்	...	...	...	...	...	...
156	பாண்டிமண்டல சதகம்	ஐயம்பெருமாள்	...	...	கலித்துறை	வரலாறு	1932	முத்துச்சடை நாத வள்ளல்
157	பார்த்தசாரதி வருக்க சதகம்	...	...	...	...	...	...	...
158	பிரதான சதகம்	வேதாந்த தேசிகர்	...	...	...	...	...	...
159	புவனேசுவரி சதகம்	...	...	...	...	...	...	...

160	பூரண சதகம்	மச்சரேகை சித்தர்	19-20	101	பல்வகை	பக்தி	1928	அ. கந்தசாமீ முதலியார்
161	பூவைச் சிங்கார சதகம்	பூவை கலியாண சுந்தரமுதலியார்	19-20	...	...	அகம்	1904	முருகேச முதலி யார்
162	பூவை சிங்கார சதகம்	மனோன்மணி யம்மாள்	20	...	...	அகம்	...	...
163	பேரின்ப சதகம்	மச்சரேகை சித்தர்	19-20	101	...	தத்துவம்	1928	அ. கந்தசாமி முதலியார்
164	பேரூர் பச்சை நாயகி சதகம்	...	...	...	...	...	...	...
165	பொய்யா மொழீசர் சதகம்	...	...	...	...	...	...	...
166	மகாபாரத சதகம்	கிருட்டிண மூர்த்தி ஐயர்	20	...	...	...	பிரமோதூத	தியாகராச பிள்ளை
167	மங்களாம்பிகை சதகம்	சிவ. மாசிலா மணி தேசிகர்	...	...	...	...	1976	ஆனந்தா அச்சகம், திருச்சி
168	மதலைச் சதகம் (முதற் பாகம்)	பார்த்தசாரதி முதலியார்	20	41	...	வாழ்வியல்	1900	தாம்ஸன் கம்பெனி, சென்னை
169	மதினமாநகர் தோத்திரச் சதகம்	கருணை அகமது நாஸ்	...	...	...	பக்தி	...	...
170	மநுநீதி சதகம்	இராசப்பஉபாத் தியாயர்	19	...	...	வாழ்வியல்	1928	அ. மகாதேவ செட்டியார்
171	மயிலாசல சதகம்	நமசிவாய நாவலர்	18-19	...	...	...	...	
172	மழவைச் சிங்கார சதகம்	மகாலிங்கையர்	19	...	...	அகம்	1856	இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடம்

173	மனுநீதிச் சதகம்	வேதகிரி முதலியார்	19	...	...	வாழ்வியல்	...	...
174	மனுவியாக்கியான சதகம்	வேதகிரி முதலியார்	19	...	...	வாழ்வியல்	...	...
175	மாந்தை நகராதிபதி சதகம்	திருவேங்கடம் பிள்ளை	—	...	...	பாடாண்	1890	ஐயாசாமி பிள்ளை
176	மிழலைச் சதகம்	சர்க்கரைப் புலவர்	18	?	கட்டளைக் கலித்துறை	வரலாறு	...	உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
177	மீனாட்சி(யம்மை) சதகம்	மீனாட்சி சுந்தரம்பிள்ளை/முத்துப்பழனிமால்	19	?	விருத்தம்	வாழ்வியல்	...	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
178	முகியித்தீன் சதகம்	மஸ்தான் சாகிப்	19	100	ஆ. விருத்தம்	தத்துவம்	1977	ஞானவள்ளல் பதிப்பகம்
179	முகியித்தீன் சதகம்	பேகம்பூர் அப்துல்காதர்	19	...	...	வா. வரலாறு	...	...
180	முத்துக்குமார ஞானியார் சதகம்	எஸ். ஆதிமூலப் பெருமாள்	20	...	...	...	1947	ஞானியார் திருப்பணிக் கழகம், கோட்டாறு
181	முனாசாத்து சதகம்	சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயர்	20	100	கட்டளைக் கலித்துறை	வா. வரலாறு	1914	கலாரத்னாகம் அச்சு, சென்னை
182	மூத்த விநாயகர் திருச் சதகம்	கே. பி. அறிவானந்தம்	20	100	பல்வகை	பக்தி	1982	எந்தைபிரான் பதிப்பகம், சென்னை
183	மெய்கண்ட வேலாயுத சதகம்	அழகு முத்துப் புலவர்	18-19	100	கலிவிருத்தம்	பக்தி	1957	குணாலயஅச்சுக்கூடம்கீழ்வேளூர்
184	மெய்கண்ட வேலாயுத சதகம்	ஜி. சதாசிவம் பிள்ளை	19	100		பக்தி	1900	...

185	மெய்ஞ்ஞான சதகம்	தக்கடி ஷெய்கு பஸீர் லெப்பை கலீபா	19	100	—	பக்தி	...	...
186	மெய்ஞ்ஞான சதகம்	மச்சரேகை சித்தர்	19-20	105	—	பக்தி	1928	அ. கந்தசாமி முதலியார்
187	மெய்வரோதய சதகம்	தண்டபாணி சுவாமிகள்	19	...	—	...	...	...
188	மோக்ஷ சதகம்	மச்சரேகை சித்தர்	19-20	...	ஆ. விருத்தம்	பக்தி	1928	அ. கந்தசாமி முதலியார்
189	வடவேங்கட நாராயண சதகம	நாராயண தாசர்	18	100	கலிவிருத்தம்	பக்தி	1875	இராமானுஜ சுவாமிகள்
190	வடிவேலர் சதகம்	முத்துசாமி கவிராயர்	19	...	...	...	...	...
191	வயித்திய சதகம்	மழுக்குமுதலி புலவர்	19?	101	...	மருத்துவம்	?	...
192	வரதராசப் பெருமாள் சதகம்	வேங்கடரமண ஐயங்கார்	19	—	...	...	...	...
193	வரவரமுனி சதகம்	...	...	—	...	...	...	...
194	வானமாமலைச் சதகம்	சோ. தெய்வநாயகப்பெருமாள் நாயகர்	19	104	...	பக்தி	1873	கோ. இராசகோபால் பிள்ளை & இராமானுஜலு நாயகர்
195	விச்வகுரு சதகம்	ஷண்முகசார்யர்	18-19	102	...	...	1871	கலாரத்னாகர அச்சு
196	விநாயகர் சதகம்	சீ. இராமசுவாமி ஐயங்கார்	...	—	...	வாழ்வியல்	1909	அ. மாமுண்டியா பிள்ளை

197	விரிஞ்சேசர் சதகம்	சுப்பராய் செட்டியார்	19	...	...	...	1857	இலட்சுமிவிலாச அச்சுக்கூடம் சென்னை
198	விரிந்தீஸ்வரர்சதகம்	சுப்பராயப் புலவர் வாணியம்பாடி	20	103	...	வாழ்வியல்	1910	வயிரக்கண் பார்த்தசாரதி புலவர்
199	வீரபத்திரர் சதகம்	சின்னத்தம்பி	19	...	...	...	...	...
200	வீரராகவ சதகம் (நீதி சதகம்)	நா. வீரராகவ தாஸ்	19	...	...	வாழ்வியல்	1911	அ.மாமுண்டியா பிள்ளை
201	வேங்கடசுவர சதகம்	...	...	...	...	...	...	மதுரைத் தமிழ்ச் சங்க நூலகம்
202	வேணுகோபால சதகம்	...	19	...	...	...	...	...
203	வேதாந்த சதகம்	மச்சரேகை சித்தர்	19-20	100	...	தத்துவம்	1928	அ. கந்தசாமி முதலியார்
204	வேளுக்குறிச்சிக் கவுண்டர் சதகம்	...	...	...	...	வா. வரலாறு	...	பேரூர் ஆதீனம்
205	வைகுந்த சதகம்	வரதராச பிள்ளை	...	...	...	பக்தி	...	கிழக்கியல் சுவடி நூலகம்
206	வைத்திய சதகம்	...	...	...	...	மருத்துவம்	1917	முகம்மது அப்துல்சாயபு
207	வைத்திய சதகம்	ஆர். தட்சிணா மூர்த்தி	...	...	...	மருத்துவம்	...	கிழக்கியல் சுவடி நூலகம்
208	வைத்திய சதகம்	செங்கல்வராய சுவாமிகள்	...	...	...	மருத்துவம்	...	...

209	வைத்தியநாடி சதகம்	...	...	100	...	மருத்துவம்	...	கேரளப் பல்லைக் கழகம்
210	வைராக்கிய சதகம்	சாந்தலிங்க சுவாமிகள்	18	100	...	தத்துவம்	1875	விவேக விளக்க அச்சுக்கூடம்
211	வைராக்கிய சதகம்	ஈசான சுவாமி நாத தேசிகர்	17	...	...	தத்துவம்	...	...
212	வைராக்கிய சதகம் (தொகுப்பு)	?	...	...	...	...	...	...
213	ஸ்ரீசிவகுரு சதகம்	சிவாநந்த சரஸ்வதி	20	...	...	...	1930	சு. ஞானாம்பாள்
214	ஸ்ரீதேவி கருமாரியம்மன் சதகம்	கருமாரி தாசர்	20	...	...	பக்தி	1970	சூப்பர் பவர் பப்ளிகேஷன்ஸ்
215	ஸ்ரீவெங்கடேச தயா சதகம்	கீழாத்தூர் சீனிவாசாச்சாரி (மொழி)	20	...	...	பக்தி	1956	ஸ்ரீதயா, சென்னை
216	ஸலவாத்து சதகம்	எஸ். கே. முகம்மது காதிர் பாவா ராவுத்தர்				பாடாண்	1901	எம்.டி. முகம்மது அப்துல்காதிர் + மீரா ஆலிம் சாகிப்
217	ஜெயங்கொண்டார் சதகம்	முத்தப்ப செட்டியார்	19	100	...	பக்தி	1941	பாகனேரி, த. வை. இ. தமிழ்ச் சங்கம்

கருவி நூற்பட்டியல்

1. அமலகுரு சதகம்; ஜி. எஸ். வேதநாயகர்; கிறித்தவ இலக்கிய சங்கம்; சென்னை; மு. ப. 1982.

2. கறுப்பண்ணசாமி சதகம்; ச. வே. சுப்பிரமணியன் (பதி); மெய்யம்மை பதிப்பகம்; காரைக்குடி; மு. ப. நவ. 1982.

3. சடகோபர் சதகத் தந்தாதி; தண்டபாணி சுவாமிகள்; இடைப்பாளையம் திரு. எஸ். ரங்கசாமி நாயுடு அவர்கள் நினைவு மலர்; 1963.

4. திருச்சதகம்-திருவாசகம்; சித்பவானந்தர் (உரை); ஸ்ரீராம கிருஷ்ண தபோவனம்; திருப்பராய்த்துறை; 1970.

5. பன்னிரு சதகத்திரட்டு; வல்லை. சுப்பிரமணியம் (பதி) பி. இரத்தின நாயகர் அண்ட்சன்ஸ்; சென்னை; (குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், கயிலாசநாதர் சதகம், அண்ணாமலைச் சதகம், அவையாம்பிகை சதகம், திருவேங் கட சதகம், தண்டலையார் சதகம், அருணாசல சதகம், எம்பிரான் சதகம், வடவேங்கட நாராயண சதகம்.)

6. மூத்த பிள்ளையார் திருச்சதகம்; கே. பி. அறிவானந்தம்; எந்தைபிரான் பதிப்பகம்; சென்னை; மு. ப. நவ. 1982.

7. மெய்கண்ட வேலாயுத சதகம்; அழகுமுத்துப் புலவர்; நா. வீரப்பச்செட்டி சன் & பிரதர்; நாகப்பட்டினம்; 1957.

8. வேலாயுத சதகம்-திருத்தணிகைச் சந்நிதிமுறை; மு. சண் முகம் பிள்ளை (பதி); தி. கி. நாராயணசாமி; கடலூர்; மு.ப. 1980.

துணைநூற் பட்டியல்

1. இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்; பீ.மு. அஜ்மல்கான் பாவலர் பதிப்பகம்; கம்பம்; மு. ப, டிச. 1982.

2. காசிவிசுவேச சதகம்; நா. கனகராஜையர்; தி. இராஜேஸ்வரி (பதி); உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை; கையெழுத்துப் பிரதி.

3. கானாட்டுச் சதகம்; இராதா. செயலக்குமி (பதி): உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை; கையெழுத்துப்பிரதி.

4. குணங்குடி மஸ்தான் சாஹிபு பாடலும் உரையும்; திருத்தணி என். ஏ. ரஷீத் (உரை); ஞானவள்ளல் பதிப்பகம்; சென்னை; மு. ப. 1977.

5. சதக இலக்கியங்கள்; ந. வீ. ஜெயராமன்; மணிவாசகர் நூலகம்; சிதம்பரம்; மு. ப. 1978.

6. சிவகிரி குமர சதகம்; மெய். சந்திரசேகரன் (பதி); உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை; 1984; தட்டச்சுப்படி.

7. சிற்றிலக்கியப் புலவர் அகராதி; ந. வீ. செயராமன்; பாரி நிலையம்; சென்னை; மு. ப. நவ. 1983.

8. சீரங்க நாராயண சதகம்; திருவரங்கத் திருவாயிரம் தண்ட பாணி சுவாமிகள்; தி. மு செந்திநாயகம் பிள்ளை (பதி); பி. ஆர். ராமய்யர் அச்சுக் கூடம்.

9. சேசுநாதர் சதகம் ந. சவரிமுத்து உடையார்; ஒளிநிலையம்; தஞ்சாவூர்; 1977.

10. தமிழ் இலக்கிய வகையும் வடிவும்; ச. வே. சுப்பிரமணியன்; தமிழ்ப்பதிப்பகம்; சென்னை; மு. ப. 1984.

11. திராவிட மொழி இலக்கியங்கள்; ச. வே. சுப்பிரமணியன்; உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை; மு.ப.டிச.1983;

12. நோக்கமும் பயனும்-சதக இலக்கியம்; மு. சுப்புலட்சுமி; (தமிழ் இலக்கியக் கொள்கை-126) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை; 16-3-85; உருட்டச்சுப்படி.

13. வடமொழி இலக்கிய வரலாறு; நாவலியூர். சோ. நடராஜன்; சங்கீதா பதிப்பகம்; சென்னை; 1979.

சொல்லகராதி